# தேவனுடைய சத்தத்தை அறிதல்

**சர்வதேச அறுவடைநேர நிறுவனம்**

இப்பாடமானது **சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின்** செயல்திட்டங்களில் ஒரு பகுதியாக இருக்கின்றது. இத்திட்டம் விசுவாசிகள் தாக்கமுள்ள ஆவிக்குரிய அறுவடையை செய்யும்படியாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள், வரிவசூலிப்பவர்கள் போன்றோருக்கு இயேசு கற்பித்து, அவர்களை மீள உருவாக்கும் கிறிஸ்தவர்களாக்கி, அவர்கள் வாழ்ந்த உலகத்தை சுவிஷேசத்தை ஆளுமையின் வல்லமையால் மாற்றியமைத்ததைப்போன்று உங்களுக்கும் கற்பிப்பதே இப்பயிற்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

பாடத்திட்டத்திலுள்ள பல பாடங்களில் இக்கையேடும் ஒன்றாகும். சுவிஷேச மயமாகுக்கும் இலக்கை நிறைவேற்ற, விசுவாசிகள் பெருக, பிரதிநிதிகளாக செயல்பட, ஆயத்தம் செய்யப்படவும் இப்பாடம் உதவும்.

© Harvestime International Institute

# பொருளடக்கம்


இக்கையேட்டை பாவிப்பது எவ்வாறு . . . . . . 03

குழுவாக கற்பதற்கான ஆலோசனைகள் . . . . . . . 04

அறிமுகம் . . . . . . . . . . 05

பாடத்தின் நோக்கங்கள் . . . . . . . . 07

1. தேவனுடைய சத்தத்தை அறிதல் . . . . . . . 08

2. "யாரேனும் ஒரு மனிதன் செய்தால்.... அவர் அறிவார்" . . 19

3. தேவனுடைய சித்தம் . . . . . . . 32

4. தவறான திசையிற்கான தலையங்கம் . . . . . 44

5. தேவனுடைய சித்தத்தின் மாதிரி . . . . . . 54

6. தேவன் மனிதர்களோடு எவ்வாறு பேசுகின்றார் . . . . 71

7. இன்னும் எரியும் புதர் . . . . . . . 86

8. கேள்வி கேட்கக்கூடிய கிரியைகள் . . . . . 99

9. தீர்மானம் மேற்கொள்வதற்கான வேதாகமத்தின் மாதிரி . . 110

10. முயற்சித்தலும் தோல்வியடைதலும்? . . . . . 115

11. தேவனுடைய சித்தமும் துன்பப்படுதலும் . . . . . . 124

12. வெளிப்படுத்தலின் ஆறு படிமுறைகள் . . . . . 145

சுய பரீட்சைக்கான விடைகள் . . . . . . . 151

# இக்கையேட்டை பாவிப்பது எவ்வாறு

### கையேட்டின் வடிவமைப்பு

ஒவ்வொரு பாடத்திலும் அடங்குபவை:

**குறிக்கோள்கள்:** அதிகாரத்தை கற்று முடித்ததும் இலக்கை நிறைவேற்ற முற்படுவீர்கள். பாடத்தை ஆரம்பிக்க முன்னர் அவைகளை வாசியுங்கள்.

**திறவுகோள் வசனம்:** அதிகாரத்தின் முக்கிய விடயத்தை இவ்வசனம் பிரபலிக்கும். மனனம் செய்யுங்கள்.

**அதிகாரத்தின் பொருளடக்கம்:** ஒவ்வொரு பகுதியையும் கற்கவும். வேதாகமத்தை பாவித்து கையேட்டில் இல்லாத வசனங்களையும் கவனிக்கவும்.

**சுயபரீட்சை:** அதிகாரத்தை கற்று முடித்ததும் இப்பரீட்சையை செய்யவும். வேதாகமத்தையும் கையேட்டையும் பாராமல் வினாக்களுக்கு விடையளிக்க முயற்சி செய்யுங்கள். விடையளித்து முடிந்ததும் இப்புத்தகத்தின் கடைசி பக்கத்திலுள்ள விடைகளுடன் ஒப்பிட்டு பாருங்கள்.

**மேலதிக படிப்பினைக்கு:** தேவனுடைய வசனத்தை தொடந்தேர்ச்சியாக கற்றுக்கொள்ளவும், கற்றல் திறனை அபிவிருத்தி செய்யவும், உங்கள் வாழ்விலும், ஊழியத்திலும், கற்றதை பிரயோகிக்கவும் இப்பகுதி உதவும்.

**இறுதி பரீட்சை:** நீங்கள் மதிப்பெண்களை பெறும்படியாக இப்பாடத்தை பதிவு செய்து கற்பீர்கள் என்றால் இப்பாடத்தின் இறுதியில் பரீட்சை எழுத வேண்டும். பரீட்சையை செய்து முடித்த பின்னர் மதிப்பெண்ணை பெற பரிசோதனைக்காக விடைத்தாளை திருப்பி அனுப்பி வைக்கவும்.

#### மேலதிகமாக தேவைப்படுபவை

**King James** வேதாகமம் மேலதிகமாக தேவைப்படும்.

# குழுவாக கற்பதற்கான ஆலோசனைகள்

### முதல் கூடுகையில்

**ஆரம்பம்:** ஜெபத்தோடும் அறிமுகத்தோடும் ஆரம்பியுங்கள். நன்கு அறிமுகமாகி மாணவர்களை பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தொடர்ந்து செயலாற்றகூடிய குழுவை நியமியுங்கள்:** கூட்டத்தை வழிநடத்துவது யார், நேரம், இடம், திகதி என்பற்றை முடிவு செய்யுங்கள்.

**துதியும் ஆராதனையும்:** உங்கள் பயிற்சியின் வேளையில் பரிசுத்த ஆவியானவர் பிரசன்னமாயிருக்க அவரை அழையுங்கள்.

**கையேடுகளை மாணவருக்கு பகிர்ந்தளித்தல்:** கையேட்டின் தலைப்பையும், முதல் நான்கைந்து பக்கங்களிலுள்ள குறிக்கோள்களையும் அறிமுகப்படுத்துங்கள்.

**முதலாவது ஒப்படை:** மாணவர்கள் இப்பாடத்தை ஒதுக்கிக்கொடுக்கப்பட்ட முறையில் வாசிக்கவும், அடுத்த கூடுகைக்கு முன்னால் சுயமாக பரீட்சை செய்திருத்தல் வேண்டும். ஒவ்வொரு குழு கூடுகையின் போது அதிகாரங்களை முடிக்கும் எண்ணிக்கையானது அதிகாரத்தின் நீளத்திலும், உள்ளடக்கத்திலும், குழுவின் இயலுமையிலும் தங்கியிருக்கும்.

### இரண்டாவதும் தொடரும் கூட்டங்களும்

**ஆரம்பம்:** ஜெபியுங்கள். வரவேற்ற பின்னர் புதிதாக வந்த மாணவர்களை பதிவு செய்த பின் கையேட்டை வழங்குங்கள். வரவை பதிவு செய்யுங்கள். துதி ஆராதனையை நடத்துங்கள்.

**மீட்டல்:** கடந்த வகுப்பில் கற்றவற்றை சுருக்கமாக முன் வையுங்கள்.

**பாடம்:** அதிகாரத்திலுள்ள தடித்த எழுத்துகளிலுள்ள தலைப்புகளின் சகல பகுதிகளையும் கலந்து உரையாடுங்கள். மாணவருக்கு தாங்கள் கற்றுக்கொண்ட பகுதிகளில் கேள்விகள் அல்லது விமர்சனங்கள் இருப்பின் கூறச் சொல்லவும். ஜீவியத்திலும், ஊழியத்திலும் கற்றவற்றை பிரயோகிக்கும்படி மாணவரை கேட்டுக் கொள்ளுங்கள்.

**சுயபரீட்சை:** சுய பரீட்சையை செய்திருப்பின் மீட்டல் செய்யுங்கள். (சுய பரீட்சைக்கான பதில்கள் கையேட்டில் இருக்க வேண்டியதில்லை என நீங்கள் தீர்மானித்தால் கடைசி பக்கங்களிலுள்ள அவற்றை அகற்றிவிடலாம்)

**மேலதிக படிப்பினைக்கு:** இத்திட்டத்தை குழுவாகவோ அல்லது தனிப்பட்ட விதத்திலோ செய்யலாம்.

**இறுதிப்பரீட்சை:** உங்கள் குழுவினர் மதிப்பெண்களை பெறுவதற்காக கற்பார்களாயின், இப்பாடத்திற்கான கேள்விப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளலாம். அதை பிரதிபண்ணி, மாணவரிடம் பரீட்சை எழுத கொடுத்து கண்காணிக்கவும்.

**தொகுதி: பிரதிநிதி**
**பாடம்: தேவனுடைய சத்தத்தை அறிதல்**

# அறிமுகம்

"எனக்கான தேவனுடைய சித்தம் என்ன?"

இந்த கேள்வியானது விசுவாசிகளினால் அதிகமாக கேட்கப்படும் ஓர் கேள்வியாகும். கிறிஸ்தவ தலைவர்கள் என்றவகையில் மக்கள் தீர்மானம் எடுப்பதற்கு வழிகாட்டியாக அவர்களிடம் திரும்பும் போது பொதுவாக தாக்கமுள்ள கேள்வியாகவும் கூட இது அமைகின்றது.

வாழ்க்கையின் ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் விசுவாசிகள் தேவனுடைய சரியான சித்தத்தை செய்கின்றார்களா அல்லது இல்லையா என அறியும் தீர்மானத்தை தொடர்ந்தும் எடுக்கின்றார்கள். ஒவ்வொரு நாளும் சரியான தீர்மானத்தை எடுத்து, தேவனுடைய சித்தத்தை விளங்கி, அவருடைய சத்தத்தை அறிதல் தேவையான ஒன்றாகும். இது மிகவும் முக்கியமானது, ஏனென்றால் ஒவ்வொரு சிறு தீர்மானங்களும் வாழ்க்கை நேரத்தில் தேவனுடைய சித்தத்தை அறிவதில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

தேவனுடைய சித்தத்தின்படியான உறவிற்கு மனிதன் தீர்மானம் எடுக்க வேண்டும். ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் வைக்கப்படும்போது தேவனால் இந்த திட்டம் ஏற்படுத்தப்பட்டது (ஆதியாகமம் 1-3). ஆதாம் ஏவாளுக்கான தேவனுடைய சித்தமானது மிருகங்களுக்கு பெயரிட்டு, தோட்டத்தை கவனித்து, ஒருவருக்கொருவர் உறுதுணையாயிருந்து, உலகத்திற்கு ஜனத்தை பெருக்குதல் ஆகும். அதிகம் முக்கியமாக, தேவனுடனான ஐக்கியத்தை தொடர்ந்தும் அவர்கள் பேண வேண்டும். ஆதாமும் ஏவாளும் கூட எது தேவனுடைய சித்தமல்ல என்பதுகுறித்து எச்சரிக்கப்பட்டனர். அவர்கள் நன்மை தீமையை அறியும் மரத்தின் தடைசெய்யப்பட்ட கனியை புசித்தனர்.

ஆதாம் மற்றும் ஏவாளின் கதை உள்ளடக்கமாக, முழு வேதாகம வரலாறானது தனிப்பட்டவர்களுக்கும், ஜாதிகளுக்கும் தேவனுடைய சித்தத்தின் உறவினால் ஏற்படுத்தப்பட்டதாகும். இந்த மக்களின் வெற்றிகளையும் தோல்விகளையும் நீங்கள் கற்றுக்கொள்ளலாம்.

வேதாகமத்தில் மிகவும் ஆச்சரியமான ஓர் வெளிப்படுத்தலானது ஒவ்வொரு தனிப்பட்டவர்களின் இந்த வாழ்க்கையிலும், நித்தியத்திலும் தேவனிடம் ஓர் தெளிவான திட்டம் இருக்கின்றது என்பதாகும். இந்த திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ளுவதற்கு நீங்கள் தேவனுடைய சத்தத்தை அறிந்து கொள்ள வர வேண்டும். கடந்த காலங்களில் அவர் எவ்வாறு தொடர்பில் இருந்தார் எனவும், இன்று அவர் எவ்வாறு பேசுகின்றார் எனவும் நீங்கள் கற்ற வேண்டும்.

தேவன் எவ்வாறு மனிதர்களோடு பேசுகின்றார் எனவும், உங்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய சித்தத்தை எவ்வாறு அறிதல் எனவும் இந்த பாடம் விபரிக்கும். தேவனுடைய சத்தத்தை அறிதலுக்கும், அவருடைய சித்தத்தை விளங்கிக்கொள்ளுவதற்கும் வழிகாட்டல்கள் தரப்பட்டுள்ளன. தேவனுடைய திட்டத்தின் மாதிரிகளும், தேவன் அவருடைய சித்தத்தை எவ்வாறு வெளிப்படுத்துகின்றார் என்பதற்கான வேத வசன உதாரணங்களும் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளன.

தீர்மானம் எடுத்தலின் வசன மாதிரி விபரிக்கப்பட்டுள்ளது. தேவனுடைய திட்டத்தை நீங்கள் தவற விட்டால் என்ன செய்வது, கேள்விகளினுடனான பயிற்சிகளை கையாளுதல், தவறான தீர்மானங்களை எடுத்தலிற்கான வழிகாட்டல்கள் தரப்பட்டுள்ளது. தேவனுடைய திட்டத்தின் ஆறு படிமுறைகளின் வெளிப்படுத்தல் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின் பாடமானது உலகத்தின் மக்களுக்கு சுவிசேஷத்தால் இடைப்பட இயேசு என்ன போதித்தார் என்பதை நோக்காக கொண்டுள்ளது. தேவன் மனிதர்களோடு கூட பேசுகின்றார் என்ற ஓர் மாபெரும் உண்மையை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

> **நானே நல்ல மேய்ப்பன், பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும்,**
>
> **இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு, அவைகளையும் நான் கொண்டுவர வேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்.**
>
> **என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது, நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது. (யோவான் 10:14,16,27)**

மனிதகுலத்தோடு தொடர்ந்ததான உறவிற்கான திட்டத்தை தேவன் கொண்டுள்ளார். மனிதன் தேவனால் அறியப்பட்டவனாகவும், அவன் தனிப்பட்ட முறையில் அறியப்பட்டவனாகவும் இருக்கின்றான்.

நீங்கள் தேவனுடைய சத்தத்தை அறிய முடியும்!

# பாடத்தின் நோக்கங்கள்

இப்பாடத்திட்டத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ தேவனுடைய சத்தத்தை அறிந்து, அவருடைய சித்தத்தை தெரிந்து கொள்வதற்கு இடையி-லான தொடர்பை விபரிக்கவும்,
- ☐ தேவனுடைய சித்தத்ததை அறிதலின் முக்கியத்துவத்தை கலந்தாலோசிக்கவும்,
- ☐ தேவன் அவருடைய சித்தத்தை எவ்வாறு வெளிப்படுத்துகின்றார் என்பதை விபரிக்கவும்,
- ☐ வசனத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவனுடைய சித்தத்தை விளங்கிக்கொள்ளவும்,
- ☐ வசனத்தோடு குறிப்பிட்டு சம்பந்தப்படாமல் தேவனுடைய சித்தத்திற்கான காரியத்தை அறியவும்,
- ☐ தீர்மானம் எடுத்தலிற்கான வேத வசன முறைகளை பயன்படுத்தவும்,
- ☐ தவறான தீர்மானங்களை சரிபடுத்தவும்,
- ☐ வெளிப்படுத்தலின் ஆறு படிமுறைகளை விபரிக்கவும்,
- ☐ தேவனுடைய சத்தத்தை அறிதலுக்கான வேதாகம வழிகாட்டல்களை மற்றவர்களோடும் பகிர்ந்து கொள்ள முடியும்.

# தனிப்பட்ட நோக்கங்கள்

தேவனுடைய சத்தத்தையும், அவருடைய சித்தத்தையும் அறிதலோடு இந்த பாடம் சம்பந்தப்படுவதால், பாடத்திற்காக தனிப்பட்ட நோக்கங்களை நீங்கள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப் படுகின்றது. தேவனுடைய சித்தத்தை அறிதலின் உங்களுடைய நோக்கமானது குறிப்பிட்ட விதமாய் இருத்தல் வேண்டும், ஓர் பிரச்சினைக்கான தேவனுடைய பதிலை கண்டுபிடியுங்கள் அல்லது உங்களுடைய வாழ்க்கையில் அல்லது ஊழியத்தில் கிரியைகளுக்காக தேவனுடைய சித்தத்தை அறியுங்கள். கீழே கொடுக்கப்பட்டுள்ள வெற்றிடத்தில் உங்களுடைய தனிபட்ட நோக்கங்களை பட்டியலிடுங்கள். நீங்கள் படிக்கும்போது, பட்டியலிடப்பட்டுள்ள ஒவ்வொரு பிரச்சினைகளுக்கும் நீங்கள் கற்றவற்றை பிரயோகியுங்கள்.

இந்த வாக்கியத்தை பூர்த்தி செய்யுங்கள்: “நான் தேவனுடைய சத்தத்தை கேட்டு, அவருடைய சித்தத்தை குறித்து அறிய வேண்டும்.....”

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

## அதிகாரம் ஒன்று

# தேவனுடைய சத்தத்தை அறிதல்

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ தேவன் மனிதர்களோடு பேசுகின்றார் என்பதற்கு வசனங்களினால் நிரூபிக்கவும்,
- ☐ தேவனுடைய சத்தத்தை அறிதல் மற்றும் அவருடைய சித்தத்தை விளங்குதலிற்கு இடையில் உள்ள தொடர்பை விபரிக்கவும்,
- ☐ தேவனுடைய வசனமாகிய "ரேமா" மற்றும் தேவனுடைய வசனமாகிய "லோகோஸ்" இடையில் வித்தியாசப்படுத்தவும்,
- ☐ "தேவனுடைய சித்தம்" என்பதின் அர்த்தம் என்ன என்பதை விபரிக்கவும் முடியும்.

**திறவுகோல் வசனம்:**

> **என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது, நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது. (யோவான் 10:27)**

### அறிமுகம்

இந்த பாடத்தின் தலையங்கமான, "தேவனுடைய சத்தத்தை அறிதல்," பல்வேறுப்பட்ட காரியங்களோடு சம்பந்தப்படுகின்றது:

| | |
|---|---|
| **முதலாவது:** | தேவன் இருக்கின்றார். |
| **இரண்டாவது:** | அவர் மனிதர்களோடு பேசுகின்றார். |
| **மூன்றாவது:** | அவர் பேசும் போது அவருடைய சத்தத்தை மனிதர்களால் விளங்கிக் கொள்ள முடியும். |
| **நான்காவது:** | தேவன் ஏதோவொன்றை கூற வைத்திருக்கின்றார். |

இந்த ஒவ்வொரு வாக்கியங்களையும் நாம் பரீட்சைக்குட்படுத்துவோம்:

**முதலாவது:** இந்த பாடமானது பரிசுத்த வேதாகமம் என்னும் எழுதி பதிவு செய்யப்பட்ட வசனத்தின் மூலம் தேவன் இருக்கின்றார் என்றும், அவர் மனிதர்களுக்கு வெளிப்படுத்துகின்றார் என்றும் உண்மையின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது.

**இரண்டாவது:** வேதாகமமானது மனிதனுடன் தொடர்புபடுவதற்காக தேவனால் ஏவி பதிவு செய்யப்பட்டதாகும். தேவன் மனிதர்களோடு பேசினார் என்றும், தேவனுடைய சத்தத்திற்கு ஜாதிகளும், தனிப்பட்டவர்களும் பிரதியுத்தரவு செய்தார்கள் என்றும் இது விபரித்து கூறுகின்றது. வேதாகமம் பொதுவாக திரும்பதிரும்ப கூறும் வாக்கியமானது "தேவனாகிய கர்த்தர் கூறினார்..." என்பதோடு மனிதனோடு அவர் பேசிய சம்பவமாகும். இது தேவன் மனிதர்களோடு தொடர்புபடுகின்றார் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

உதாரணத்திற்கு, எண்ணாகமம் 22ம் அதிகாரத்தில் பிலேயாமின் கதையை வாசியுங்கள். தேவன் பிலேயாமோடு பேசினார், ஆனால் அவன் கேட்க மறுத்துவிட்டான். தேவன் இந்த மனிதனோடு அதிகம் தொடர்புபட வேண்டி இருந்தது, ஆகவே அவர் அந்த இடத்தில் கழுதையை பயன்படுத்த வேண்டியதாயிற்று. பிலேயாம்:

> **தன்னுடைய அக்கிரமத்தினிமித்தம் கடிந்துகொள்ளப்பட்டான், பேசாத மிருகம் மனுஷர் பேச்சைப் பேசித் தீர்க்கதரிசியினுடைய மதிகேட்டைத் தடுத்தது. (2 பேதுரு 2:16)**

**மூன்றாவது:** தேவனுடைய சத்தத்தை விசுவாசிகள் அறியலாம் என வேதாகமம் உறதிப்படுத்துகின்றது. இயேசு கூறினார்:

> **நானே நல்ல மேய்ப்பன், பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும்,**
>
> **இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு, அவை-களையும் நான் கொண்டுவர வேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்.**
>
> **என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது, நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது. (யோவான் 10:14,16,27)**

**நான்காவது:** தேவனிடம் மனிதகுலத்திற்கு முக்கியமாக கூறுவதற்கு ஒன்று உள்ளது. நாம் எச்சரிக்கை படுத்தப்பட்டுள்ளோம்:

> **ஆகையால், பரிசுத்தஆவியானவர் சொல்லுகிறபடியே: இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனாந்தரத்திலே கோபமூட்டினபோதும், சோதனைநாளிலும் நடந்தது போல, உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்.**
>
> **இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், கோபமூட்டுதலில் நடந்ததுபோல உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள் என்று சொல்லியிருக்கிறதே.. (எபிரெயர் 3:7,15)**

"வனாந்தரத்திலே கோபமூட்டினதுபோதும்" மற்றும் தேவனை "கடினப்படுத்தாதிருங்கள்" என்று இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை இஸ்ரவேல் ஜாதியாரின் கீழ்ப்படிவின்மையை குறிக்கின்றது.

எகிப்திய சிறையிருப்பிலிருந்து இஸ்ரவேலர் விடுவிக்கப்பட்டபின், தேவன் அவர்களோடு பேசும் போது தொடர்ச்சியாக கீழ்ப்படியாது இருந்தார்கள். இந்த வசனத்திலிருந்து தேவன் எமக்கு பிரதியுத்தரவாக எச்சரிப்பதாவது அவர் பேசும் போது, இஸ்ரவேலர்கள் செய்தது போல் கீழ்படியாது இருத்தல் கூடாது என்பதாகும்.

"இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகின்" என்று வாக்கியம், கடந்த காலத்தில் அவர் செய்தது போல் தற்காலத்திலும் மனிதர்களோடு இன்னும் தேவன் பேசுகின்றார் என்பதை உறுதிப் படுத்துகின்றது. கேட்பதற்கான எச்சரிப்பின் உறுதிப்படுத்தலானது அவர் என்ன கூறுகின்றார் என்னும் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்துகின்றது.

## அநேக சத்தங்கள்

கவனத்தை ஈர்க்கும்படியான அநேக சத்தங்கள் உலகத்தில் இருப்பதாக வேதாகமானது வெளிப் படுத்துகின்றது:

> **உலகத்திலே எத்தனையோவிதமான பாஷைகள் உண்டாயிருக்கிறது, அவைகளில் ஒன்றும் அர்த்தமில்லாததல்ல. (1 கொரிந்தியர் 14:10)**

உலகத்திலுள்ள இந்த சத்தங்கள் என்ன?

### மனிதனுடைய சத்தம்:

மனிதனுடைய சத்தத்தை இலகுவில் அடையாளம் காணலாம். இது மற்ற மனிதனின் ஒலியிலான சத்தமாகும்:

> **அதற்குப் பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும்: மனுஷருக்குக் கீழ்ப்படிவதைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது. (அப்போஸ்தலர் 5:29)**

சிலசமயங்களில் மனிதனுடைய சத்தமானது அறிவுபூர்வமான ஞானத்தை தரலாம், ஆனால் எந்த நேரத்திலும் மனிதனுடைய சத்தம் தேவனுடைய சத்தத்திற்கு பிணக்கை ஏற்படுத்தலாம். நீங்கள் தேவனுக்கு கீழ்ப்படிய வேண்டும்.

### சாத்தானுடைய சத்தம்:

சாத்தானுடைய சத்தமானது முதன்முறையாக ஏதேன் தோட்டத்தில் ஏவாளோடு பேசியபோது மனிதனால் கேட்கப்பட்டது (ஆதியாகமம் 3:1,4,5). சாத்தானுடைய சத்தம் பொய்யாகவும், ஏமாற்றுவதாகவும், தேவனிலிருந்து மனிதனை பாவத்திற்கு எப்பொழுதும் நடத்துவதாகவும் இருக்கின்றது. மத்தேயு 4:1-13ல் சாத்தானால் இயேசுவிற்கான சோதனையை குறித்து நீங்கள் வாசிக்கும்போது இலகுவாக அடையாளம் கண்டு கொள்ளலாம். நீங்கள் தேவனுடனான சாத்தானின் உரையாடல்களின் உதாரணங்களாக யோபு 1:7-12 மற்றும் 2:1-6ல் படிக்கலாம்.

தீய ஆவிகளிடமும் (சாத்தானின் ஆவிகள்) அநேக சத்தங்கள் காணப்படுகின்றன:

> **அநேகரிலிருந்து அசுத்தஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது. (அப்போஸ்தலர் 8:7)**
>
> **ஜெபஆலயத்திலே அசுத்த ஆவிபிடித்திருந்த ஒரு மனுஷன் இருந்தான்.**
>
> **அவன்: ஐயோ! நசரேயனாகிய இயேசுவே, எங்களுக்கும் உமக்கும் என்ன? எங்களைக் கெடுக்கவா வந்தீர்? உம்மை இன்னார் என்று அறிவேன், நீர் தேவனுடைய பரிசுத்தர் என்று உரத்தசத்தமிட்டான். (லூக்கா 4:33-34)**

மனிதனிடம் பீடிக்கப்பட்டு அவனுடைய சத்தத்தை சாத்தான் உபயோகிக்கும்போது சில சமயங்களில் சாத்தானுடைய சத்தம் கேட்ககூடியதாக ஒலியினுடையதாக இருக்கும். எவ்வாறாயினும் அதிகமாக சாத்தான் ஒலியல்லாத சத்தத்தினூடாகவே பேசுகின்றான். அவன் உங்கள் மனதில் பொய், ஏமாற்றுதல், பாவமான எண்ணங்களினால் பேசுகின்றான்.

**சுய சத்தம்:**

மனிதனுடைய சுயசத்தம் என்பது தனக்குத்தானே பேசிக்கொள்ளுவதாகும். இதற்கான உதாரணங்களை லூக்கா 16:3, 18:4 மற்றம் யோனா 4:8ல் தீர்க்கதரிசி தன்னில் மரிப்பதற்கு விரும்புவதை குறித்து நீங்கள் வாசிக்கலாம். சுய சத்தத்தை தொடர்பாக வேதாகமம் எச்சரிக்கின்றது:

> **கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன். (எரேமியா 10:23)**

## தேவனுடைய சத்தம்:

தேவனுடைய சத்தத்தை விசுவாசிகள் அறிய முடியும் எனவும், மற்ற சத்தங்களிலிருந்து அதை வேறுப்படுத்தவும் முடியும் எனவும் இயேசு கூறினார்:

> **வாசலைக் காக்கிறவன் அவனுக்குத் திறக்கிறான், ஆடுகளும் அவன் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறது. அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக் கொண்டுபோகிறான்.**
>
> **அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்து போகிறான், ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின் செல்லுகிறது.**
>
> **அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்குப் பின்செல்லாமல், அவனை விட்டோடிப்போம் என்றார். (யோவான் 10:3-5)**

விசுவாசிகள் ஆடுகளுக்கு ஒப்பிடப்பட்டுள்ளனர். ஆடுகளின் குணாதிசயம் தாம் எங்கு செல்கின்றோம் என அறிவதில்லை. அவைகள் நடத்தப்படவேண்டும். இயேசு அவர் மேய்ப்பர் எனவும் அல்லது ஆடுகளின் தலைவர் எனவும் கூறினார். அவர் ஆடுகளானது மனிதனுடைய சுய அல்லது சாத்தானுடைய சத்தத்திற்கு பதிலாக தன்னுடைய சத்தத்தை அறிந்து, தன்னை பின்பற்றும் என கூறினார்.

## தேவனுடைய சத்தத்தை அறிதல்

உங்களுடைய வேதாகம புத்தகத்தை திறந்து ஆதியாகமம் 1-3 அதிகாரங்களை வாசியுங்கள். இந்த அதிகாரங்கள் உலகத்தின் சிருஷ்டிப்பையும், முதல் மனிதனான ஆதாம் மற்றும் ஏவாளையும் பதிவு செய்யும். முதல் சிருஷ்டிப்பிலிருந்து, தேவன் மனிதகுலத்தோடு அவருடைய சித்தத்தை குறித்து பேசினார். அவர் ஆதாம் மற்றும் ஏவாளுக்கு விசேட அறிவுறுத்தல்களை கொடுத்தார். அவர்கள் மிருகங்களுக்கு பெயர் சூட்டி, தோட்டத்தை பாதுகாத்து, ஒருவருக்கொருவர் ஒத்தாசையாக இருந்து, உலகத்திற்கு மனித இனத்தை விருத்தி செய்வதுமாக கொடுக்கப்பட்டனர். எல்லாவற்றிற்கும் அதி-

கம் முக்கியமாக, அவர்கள் தேவனோடு தொடர்ந்து உறவில் பேணப்படல் வேண்டும். இந்த தேவனுடனான தொடர்ச்சியான உறவானது அவர்களுக்கு தேவனுடைய சத்தத்தை அறிய உதவுகின்றது. தேவன் பேசும்போது, அவர்களோடு தனது திட்டத்தை பேசினார்:

> **தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம்.**
>
> **ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார். (ஆதியாகமம் 2:16-17)**

தேவனுடைய சத்தத்தின் மூலமாக தேவனுடைய சித்தம் ஆதாம் மற்றும் ஏவாளுக்கு வெளிப்படுத்தப்பட்டது. அவர்கள் தோட்டத்தில் சுதந்திரமாக நன்மை தீமை அறியும் மரத்தை தவிர, எல்லா மரங்களையும் சாப்பிடலாம்.

ஆதாமும் ஏவாளும் தேவனுடைய திட்டத்தை பின்பற்றவில்லை. அவர்கள் சாத்தானுடைய சத்தத்தை கேட்டு விலக்கப்பட்ட மரத்தை புசித்தனர். அவர்கள் என்ன செய்தார்கள் என அறிந்தபின், அவர்கள் தேவனிலிருந்து தங்களைத்தாங்கள் ஒழித்துக்கொண்டார்கள்:

> **பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக் கொண்டார்கள்.**
>
> **அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு: நீ எங்கே இருக்கிறாய் என்றார். (ஆதியாகமம் 3:8-9)**

இந்த பாவம் தேவனிடமிருந்து மனிதனை பிரித்தது. தேவன் தமது பிரசன்னத்தை மனிதனிடமிருந்து விலக்கவில்லை. பாவத்தின் காரணமாக, தேவனுடைய பிரசன்னத்திலிருந்து மனிதன் ஒளிந்து கொண்டான். பாவம் கடினமுள்ள இருதயத்தை தோற்றுவித்தது. வேதாகமம் எச்சரிக்கின்றது:

> **இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில்... இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்.. (எபிரெயர் 3:15)**

தேவன் மனிதனோடு பேச விரும்புகின்றார், ஆனால் தொடர்பாடலுக்கு உறவு அவசியமாகின்றது. பாவம் மனிதனிலிருந்தான தேவனுடைய உறவை தொடர்ச்சியாக பிரிக்கின்றது, இது அவனுடைய இருதயத்தை கடினப்படுத்தி, தேவனுடைய சத்தத்தை அறிவதிலிருந்து தன்னை தடைசெய்கின்றது.

## சத்தமும் சித்தமும்

விசுவாசிகள் பொதுவாக கேட்பது, "எனக்கான தேவனுடைய சித்தம் என்ன?" தேவனுடைய சித்தத்தை நாம் அறிந்து கொள்ள வேண்டும் என நாம் கூறும்போது நாம் பொதுவாக எதை அர்த்தப்படுத்து கிறோம்? இதன் அர்த்தமானது எமது வாழ்க்கையில் அவருடைய பொதுவான திட்டங்களை நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஞானமுள்ள தேர்ந்தெடுத்தல்களை நாம் செய்வதற்கு விசேட தீர்மானங்களில்

அவருடைய வழிகாட்டல்கள் எமக்கு அவசியமாகும். வாழ்க்கையின் சூழ்நிலைகளில் அவருடைய வழிகாட்டலை நாம் வாஞ்சிக்கின்றோம். நாம் கேட்க வேண்டிய கேள்வியானது, "தேவனுடைய சத்தத்தை நான் எவ்வாறு அறிவது?" தேவனுடைய சத்தத்தை அறியும் விளைவானது தேவனுடைய சித்தத்தை கண்டுபிடிக்க வழிவகுக்கிறது.

தேவன் அவருடைய சித்தத்தை நீங்கள் அறிய விரும்புகின்றார்:

> **ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள். (எபேசியர் 5:17)**

நீங்கள் அவருடைய சத்தத்தை அறிந்தால், அவர் உங்களில் பேசும்போது, அவருடைய சித்தத்தை நீங்கள் விளங்கிக்கொள்ளலாம். தெய்வீக வழிகாட்டலை பெறுவதற்கு கற்பதானது, தேவனுடனான தொடர்ச்சியான உறவில் நடப்பதற்கு கற்பதாகும். வேதாகமம் கூறுகின்றது:

> **மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார். (மத்தேயு 4:4)**

"புறப்படுகிற" என்றும் வார்த்தை தொடர்ச்சியான செயற்பாட்டை குறித்து பேசுகின்றது. இதன் அர்த்தமானது கடந்த காலத்தில் நடைபெற்ற ஏதோவொரு காரியம், தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் காரியம், மற்றும் எதிர்காலத்தில் நடைபெற வேண்டிய காரியம் ஆகும். தேவன் அவருடைய சித்தத்தை மனிதகுலத்தோடு தொடர்புபட்டு பேசுகின்றார். இதன் காரணமாகவே தேவனுடைய சத்தத்தை அறிதல் மிகவும் முக்கியமானது.

## தேவன் எப்போது பேசுகின்றார்

வேதாகமத்தின் "வசனமானது" இரண்டு கிரேக்க வார்த்தைகளினால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. "லோகோஸ்" மற்றும் "ரேமா" ஆகியவையே கிரேக்க வார்த்தைகளாகும். "லோகோஸ்" எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையை பிரதிபலிக்கின்றது. "ரேமா" வாழுகின்ற அல்லது ஜீவனை தரும் தேவனுடைய வார்த்தையை பிரதிபலிக்கின்றது. பெரோயா பட்டணத்திலிருந்த விசுவாசிகளுக்கு கூறப்பட்டுள்ளது:

> **அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப்பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள். (அப்போஸ்தலர் 17:11)**

இந்த வசனமானது "லோகோஸ்" மற்றும் "ரேமா" ஆகிய வசனங்களின் தொடர்பை காட்டுகின்றது. "லோகோஸ்" அல்லது எழுதப்பட்ட வார்த்தையானது எப்பொழுதும் "ரேமா" அல்லது பேசப்பட்ட, ஜீவனை தரும் வார்த்தையை ஏற்றுக்கொள்ளுகின்றது. இதனாலேயே சத்தமானது தேவனிடமிருந்து கேட்கின்றீர்கள் என நீங்கள் அறிந்து கொள்ளுகின்றீர்கள். தேவனிடமிருந்தான வார்த்தை "ரேமா" என்பது குறிப்பிட்ட சூழ்நிலைகள், தனிப்பட்ட தேவைகளை சந்தித்தல், தனிப்பட்ட வழிகாட்டலை ஏற்படுத்தல் போன்றவற்றில் பொதுவாக பிரயோகிக்கப்படுகின்றது. நீங்கள் வசனத்தை விளங்கிக்கொண்டு குறிப்பிட்ட தேவைக்கு அல்லது உங்களுடைய வாழ்க்கையின் சூழ்நிலைக்கு பிரயோகிக்கும்போது, அது உங்களுக்கு ஜீவ வார்த்தையை தருவதாக மாறுகின்றது.

“ரேமா” வசனமானது கூட்டத்தின் மூலம் அல்லது வேதாகமத்தின் ஓர் வசனமானது மாபெரும் அர்த்தத்தினால் உங்களை தீடிரென தாக்கமுறச்செய்யும்போது தொடர்பாடல் செய்யப்படலாம். இது ஆவிக்குரிய வரங்களை பயன்படுத்துவதின் மூலம் தேவனுக்கூடாக உங்களில் பேசப்படலாம். இது தேவனால் உங்கள் உள்ளான ஆவியிலும் பேசப்படலாம். (தேவன் எவ்வாறு ஆவிக்குரிய வரங்களின் மூலமும், உங்கள் ஆவியிலும் பேசுகின்றார் என்பதை குறித்து அதிகம் பிற்பாடு அதிகாரங்களில் நீங்கள் கற்பீர்கள்).

ஆனால் ஞாபத்தில் கொள்க: “ரேமா” என்னும் வார்த்தை எப்பொழுதும் தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையை ஏற்றுக்கொள்ளுகின்றது. தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையானது பூரணமானது. எதுவும் சேர்க்கப்படவும் இல்லை, எடுத்துக்கொள்ளப்படவும் இல்லை (வெளிப்படுத்தல் 22:18-19). “ரேமா” வசனத்தின் மூலம் தேவன் பேசும் போது, இது எப்பொழுதும் எழுதப்பட்ட வார்த்தையோடு ஒத்துப்போகின்றது.

## கேட்போரின் வகைகள்

கேட்போரின் இரண்டு பிரதான வகைகளை குறித்து வேதாகமம் பேசுகின்றது:

> **ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு. இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்.**
>
> **நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக்கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான். (மத்தேயு 7:24-26)**

புத்தியில்லாத மனிதன் தேவனுடைய சத்தத்தை கேட்டு, ஆனால் அதன்படி கிரியை செய்யாதிருக்கின்றான். புத்தியுள்ள மனிதன் அதை கேட்டு, தேவனுடைய செய்தியின் படி கிரியை செய்கின்றான். கேட்போரில் ஒரு வகையினர் “வசனத்தை கேட்பவராக” மட்டுமே இருக்கின்றனர். மற்றவர் “கேட்டு அதன்படி செய்கின்றவராக” இருக்கின்றனர்.

நீங்கள் தேவனுடைய சத்தத்தை கேட்பதற்காக மாத்திரம் வர கூடாது, அந்த சத்தத்திற்கு கீழ்ப்படிவின் பிரதியுத்தரவை கொடுக்கவும் நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும்:

> **அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்தரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்.**
>
> **என்னத்தினாலெனில், ஒருவன் திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாதவனானால், கண்ணாடியிலே தன் சுபாவ முகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான்,**
>
> **அவன் தன்னைத்தானே பார்த்து, அவ்விடம்விட்டுப் போனவுடனே, தன் சாயல் இன்னதென்பதை மறந்துவிடுவான்.**
>
> **சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான். (யாக்கோபு 1:22-25)**

பலவிதமான நிலத்தில் விதைக்கப்பட்ட விதையை குறித்து இயேசு ஓர் கதையை கூறினார், இது பல்வேறுப்பட்ட வகையான கேட்பவர்களை எடுத்துக்காட்டுகின்றது. மத்தேயு 13:1-9ல் கதையை வாசியுங்கள். இயேசு இந்த கதையை மத்தேயு 13:18-23ல் விபரித்து கூறினார். அவர் வித்தியாசமான நிலங்களை கேட்போரோடு ஒப்பிட்டதோடு, தேவனுடைய வார்த்தையின் அவர்களுடைய பிரதிபலிப்பை கூறினார்.

### வழியருகே விழுந்த விதை:

சில விதைகள் வழியருகே விழுந்தன, ஆனால் அதை முளைபெறும்முன்பே ஆகாயத்து பறவைகள் பட்சித்து போட்டன. இது தேவனுடைய சத்தத்தை கேட்டு தன்னுடைய இருதயத்திலே வசனத்தை முளைவிடாமல் இருக்கும் மனிதனுக்கு உதாரணமாக கொள்ளப்படுகின்றது. தேவனுடைய வசனத்தை சாத்தான் பட்சித்துப்போடுகின்றான்.

### கற்பாறையருகே விழுந்த விதை:

சில விதைகள் கற்பாறையருகே விழுந்து, உடனடியாக முளை விட்டது. ஆனால் சூரியனின் அனல் வந்த போது, முளை வாடி இறந்துபோனது. இது தேவனுடைய வார்த்தையை கேட்டு, அதை மகிழ்ச்சியுடன் பெற்று, தங்களுடைய வாழ்க்கையில் உண்மையிலேயே முளைவிடாத கேட்போர்களை இது குறிக்கின்றது. வாழ்க்கை சூழ்நிலைகள் வரும்போது, அவன் குற்றம் செய்து, தேவனுடைய சத்தத்தை பிரதிபலிக்க நிறுத்தி விடுகின்றான்.

### முள்ளுள்ள இடங்களில் விழுந்த விதை:

சில விதைகள் முள்ளுள்ள இடங்களில் விழுந்தன, இவைகளின் வளர்ச்சி மற்ற தாவரங்களால் நசுக்கப்பட்டன. இது உலகத்தின் ஆசை, பொருள் போன்றவற்றால் தேவனுடைய சத்தமானது நசுக்கபடுதலுக்கு உதாரணமாக இருக்கின்றது.

### நல்ல நிலத்தில் விழுந்த விதை:

சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தன, அவைகள் மாபெரும் அறுவடையை கொண்டு வந்தன. தேவனுடைய வார்த்தையை பெற்று, அவருடைய சத்தத்தை கேட்டு, அந்த வெளிப்படுத்தலின் தன்னை வேரூன்றிய கேட்போரை இது உதாரணமாக கொள்ளப்படுகின்றது. இந்த நபர் ஆவியில் முதிர்ச்சியடைந்து, பலன்கொடுக்கும், கனிகொடுக்கும் நபராக மாறுவர்.

## தேவனுடைய சத்தத்தை நீங்கள் எவ்வாறு அறிவது?

தேவனுடைய சத்தத்தை அறிவதற்கான இயலுமைக்கு நீங்கள் விருப்பமுள்ளவராக இருக்கின்றீர்களா? உங்களுடைய வாழ்க்கையில் அவருடைய சித்தத்தை அறிந்துகொள்ள நீங்கள் விருப்பமுள்ளவராக இருக்கின்றீர்களா? தேவனுடைய சத்தத்தை கேட்பதை குறித்தும், உங்களுடைய வாழ்க்கையில் அவருடைய சித்தத்தை கண்டுபிடிப்பதற்கும் ஆயத்தமாக்குதவற்கு அவசியமானவற்றை குறித்து அடுத்த பாடத்தில் நீங்கள் கற்பீர்கள்.

## சுய பரிசோதனை

1. திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்.

.................................................................................................................................................

.................................................................................................................................................

2. தேவனுடைய வசனமாகிய “ரேமாவின்” அர்த்தம் என்ன?

.................................................................................................................................................

3. தேவனுடைய வசனமாகிய “லோகோஸின்” அர்த்தம் என்ன?

.................................................................................................................................................

4. தேவனுடைய சத்தத்தை அறிதல் உங்களுடைய வாழ்க்கையில் அவருடைய சித்தத்தை அறிதலோடு எவ்வாறு தொடர்புபடுகின்றது?

.................................................................................................................................................

5. தேவன் கடந்த காலத்தில் மனிதரோடு பேசினார் எனவும், இன்றும் பேசுகின்றார் எனவும் உறுதிப்படுத்தும் எபிரெயர் புத்தகத்திலிருந்தான வசனங்களை தருக.

.................................................................................................................................................

6. “தேவனுடைய சித்தம்” என்பதின் அர்த்தம் என்ன?

.................................................................................................................................................

.................................................................................................................................................

7. தேவனுடைய வசனமாகிய “ரேமா” எப்பொழுதும் எதனோடு ஒத்துக்போகின்றது?

.................................................................................................................................................

8. தேவனுடைய பிரசன்னத்திலிருந்து மனிதனை பிரிப்பது என்ன? .............................................

9. நீங்கள் வசனத்தை ...................... மாத்திரமல்ல ............................... இருத்தல் வேண்டும்.

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. தேவனுடைய சத்தத்தை விபரிக்கும் பல்வேறுப்பட்ட வசனங்கள் வேதாகமத்தில் காணப்படுகின்றன. ஒவ்வொரு வசனங்களையும் பார்த்து, தேவனுடைய சத்தங்களை விபரிக்கும் வசனங்களை பதிவு செய்க. நீங்கள் தொடருவதற்காக முதலாவது உதாரணமாக செய்யப்பட்டுள்ளது. வேதாகமத்தின் உங்கள் சொந்த கற்றலிலிருந்தும், இந்த அட்டவணையில் தேவனுடைய சத்தத்தின் விபரித்தல் களிலிருந்தும் மேலதிக வசனங்களை நீங்கள் சேர்க்கலாம்.

| **வசனம்** | **தேவனுடைய சத்தத்தின் விபரித்தல்** |
|---|---|
| 2 சாமுவேல் 22:14 | பரலோகத்திலிருந்தான இடி |
| 1 இராஜாக்கள் 19:12-13 | |
| சங்கீதம் 18:13 | |
| சங்கீதம் 29:3-9 | |
| சங்கீதம் 68:33 | |
| தானியேல் 10:6-9 | |

2. தேவன் இயேசுவை குறித்து பேசுகின்றார். கீழ்வரும் வசனங்களில் அவர் என்ன பேசகின்றார் என்பதை குறித்து நீங்கள் வாசிக்கலாம்: 2 பேதுரு 1:17-18; மத்தேயு 3:17; மாற்கு 1:11

3. எதிர்காலத்தில் வரவேண்டிய தேவன் பேசியவைகள் என்ன? எசேக்கியேல் 12:25-28 பார்க்க.

4. மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் புத்தகத்தில் இயேசுவினுடைய வார்த்தைகளை படியுங்கள். கேள்விகள், பதில்கள், உதாரணங்கள், இணைப்புக்கள், உவமைகள் மற்றும் கூட்டங்களில் இயேசு எவ்வாறு பேசினார் என கவனியுங்கள்.

5. தேவன் தனிப்பட்டவர்களிடம் மாத்திரம் பேசுவதில்லை அவர் ஜாதிகளோடும் கூட பேசுகின்றார். எரேமியா 18:7-10ஐ பாருங்கள்.

6. கீழ்வரும் வசனங்களில் தேவனுடைய சத்தத்தை கீழ்ப்படியாமையின் விளைவை குறித்து வாசியுங்கள். அட்டவணையில் கீழ்ப்படியாமையின் விளைவை பதிவு செய்யுங்கள்:

| வசனம் | கீழ்ப்படியாமையின் விளைவு |
|---|---|
| யாத்திராகமம் 15:26 | |
| உபாகமம் 28:15-68 | |
| 1 சாமுவேல் 12:15 | |

7. கீழ்வரும் வசனங்களை வாசித்து, தேவனுடைய சத்தத்திற்கு கீழ்ப்படிந்ததின் விளைவை குறித்து நீங்கள் என்ன கற்றீர்கள் என்பதை பதிவு செய்யுங்கள்.

உபாகமம் 28:1-14: ..................................................................................................

1 சாமுவேல் 12:14:..................................................................................................

8. தேவனுடைய சத்தத்திற்கு எவ்வாறு தனிப்பட்டவர்களும் ஜாதிகளும் பிரதிபலித்தனர் என முழு வேதாகமத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. தேவனுடைய சத்தத்திற்கு மனிதனின் பிரதிப்பில் நீங்கள் கற்றவற்றை கீழ்வரும் அட்டவணையில் பூர்த்தி செய்க. நீங்கள் தொடருவதற்காக முதலாவது உதாரணமாக செய்யப்பட்டுள்ளது. அட்டவணையை பூர்த்தி செய்வதற்கான தகவல்களை பெறும் பொருட்டு கொடுக்கப்பட்ட வசனங்களின் முன்னும் பின்னும் நீங்கள் வாசிக்க வேண்டும். முன்னர் உள்ள அட்டவணையைபோல, தேவனுடைய வசனத்தின் உங்களுடைய சொந்த கற்றலிலிருந்து வசனங்களை நீங்கள் தொடர்ந்து சேர்க்கலாம்.

| **வசனம்** | **மக்கள்** | **பிரதியுத்தரவு** | **விளைவு** |
|---|---|---|---|
| ஆதியாகமம் | ஆபிரகாம் | கீழ்ப்படிவு | அவனுடைய வித்தும், உலகத்தின் ஜாதியும் ஆசீர்வதிக்கப்படல் |
| ஆதியாகமம் 22:18 | | | |
| உபாகமம் 8:20 | | | |
| நியாயாதிபதிகள் 2:2,4,20-23 | | | |
| நியாயாதிபதிகள் 6:10 | | | |
| 1 சாமுவேல் 15:1,19,22,24 | | | |
| 1 சாமுவேல் 28:18 | | | |
| சங்கீதம் 106:25 | | | |
| எரேமியா 32:23 | | | |
| தானியேல் 9:10-14 | | | |
| செப்பனியா 3:2 | | | |
| ஆகாய் 1:12 | | | |

## அதிகாரம் இரண்டு

# "யாரேனும் ஒரு மனிதன் செய்தால்.... அவர் அறிவார்"

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ "முன் நிபந்தனை" என்னும் வார்த்தையை வரைவிலக்கணப்படுத்தவும்,
- ☐ தேவனுடைய சத்தத்தை அறிதலுக்கான முன் நிபந்தனைகளை பட்டியல்படுத்தவும்,
- ☐ மறுபடியும் பிறத்தல் என்றால் அதின் அர்த்தம் என்ன என்பதை விபரிக்கவும்,
- ☐ தேவனுடைய சத்தத்தை அறிவதற்கு பரிசுத்த ஆவியானவரின் முக்கியத்துவத்தை விளங்கவும்,
- ☐ "ஆவிக்குரிய பூரணப்படுத்தல்" மற்றும் "மாற்றமடைதல்" என்பதை விளங்கிக்கொள்ளுவதற்கான மெய்ப்பித்தலையும் செய்ய முடியும்.

**திறவுகோல் வசனம்:**

> **அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன், இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.**
>
> **நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். (ரோமர் 12:1-2)**

## அறிமுகம்

தேவனுடைய சத்தத்தை அறிவதற்கு நீங்கள் வரும்போது சில அவசியமான முன் நிபந்தனைகள் காணப்படுகின்றன. முன் நிபந்தனை என்பது ஒரு காரியத்தை செய்வதற்கு முன்னர் நீங்கள் செய்ய வேண்டிய சில காரியமாகும். இது குறிப்பிட்ட இலக்கை நீங்கள் அடைவதற்கு முன்னர் செய்ய வேண்டிய சிலவாகும்.

இந்த பாடத்தின் உங்களுடைய இலக்கானது தேவனுடைய சத்தத்தை அறிதலுக்கு வருவதாகும். இந்த பாடமானது (வேண்டிய காரியங்கள்) இந்த நோக்கத்தை நீங்கள் அடைவதற்கு முன்னரான முன் நிபந்தனைகளை விபரிக்கின்றது. இயேசு கூறினார்:

> **அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்துகொள்ளுவான். (யோவான் 7:17)**

இந்த பாடத்தின் திறவுகோல் வசனமானது ரோமர் 12:1-2 ஆகும். நீங்கள் செய்ய வேண்டிய தேவனுடைய

சித்தத்தின் சில காரியங்களை பட்டியல்படுத்துங்கள். இந்த முன் நிபந்தனைகளை நீங்கள் சந்தித்தால், பின் உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய சித்தத்தையும், அவருடைய சத்தத்தையும் அறிய வருவீர்கள்.

## மறுபடியும் பிறத்தலின் அனுபவம்

> **அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. (ரோமர் 12:1)**

கடைசி அதிகாரத்தில் நீங்கள் கற்ற விதம், பாவம் உங்களை தேவனுடைய பிரசத்தனத்திலிருந்து பிரிக்கின்றது. பாவத்தின் காரணமாக, தேவனுடைய சத்தத்தை கேட்க கடினமாக உள்ளதோடு, நேர்மறையான பிரதியுத்தரவை செய்ய முடியாதிருக்கும்.

இயற்கையான உலகில் பலவானின் சத்தத்தை நீங்கள் உணர முடியாது. நீங்கள் அறிந்தவர்களின் மற்றும் உங்கள் உறவை வளர்த்தவர்களின் சத்தத்தை கேட்கின்றீர்கள். ஆவிக்குரிய நிலையிலும் இதுவே உண்மையாகும். நீங்கள் தேவனுடைய சத்தத்தை கேட்க வந்தால், நீங்கள் முதலாவது தேவனை அறிய வேண்டும், உங்கள் வாழ்க்கையின் பாவத்தோடு அவரில் தொடர்ச்சியான உறவை நீங்கள் அபிவிருத்தி செய்ய முடியாது.

ரோமர் 12:1ன்படி உங்கள் வாழ்க்கையை தேவனுக்கு நேராக நடத்த வேண்டியது அவசியமாகின்றது. இந்த உறவை நீங்கள் அபிவிருத்தி செய்யும்பொருட்டு அவருடைய எழுதப்பட்ட வார்த்தையிற்கூடா-கவும், அவருடைய சித்தத்தை வெளிப்படுத்தலிற்கூடாகவும் தேவன் ஏற்கனவே பேசியுள்ளார்:

> **தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். (2 பேதுரு 3:9)**

தேவன் உங்கள் வாழ்க்கையை பாவத்தில் செலவிடுவதில் விரும்பவில்லை. அவர் அவருடைய திட்டத்தின்படி வாழ விரும்புகின்றார்:

> **ஏனென்றால் மாம்சத்தில் பாடுபடுகிறவன் இனி மாம்சத்திலிருக்கும் காலம்வரைக்கும் மனுஷருடைய இச்சைகளின்படி பிழைக்காமல் தேவனுடைய சித்தத்தின்படியே பிழைக்கத்-தக்கதாகப் பாவங்களை விட்டோய்ந்திருப்பான். (1 பேதுரு 4:2)**

தேவன் உங்கள் வாழ்க்கை கதவில் நின்றுகொண்டு உள்ளே வருவதற்கு வாஞ்சிக்கின்றார் என்பது போல் எண்ணுங்கள். ஆகவே அவர் உங்களினுடனான உறவை விருத்தி செய்து கொள்ள முடியும்:

> **இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன், ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான். (வெளிப்படுத்தல் 3:20)**

இயேசு கிறிஸ்துவின் ஞானத்தில் சகல மக்களையும் கொண்டுவருவதை குறித்து உலகத்தின் ஆரம்பத்திலேயே தேவன் தமது குறிக்கோளை குறிப்பிட்டார்:

**காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்று,**

**தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார். (எபேசியர் 1:9-10)**

நீங்கள் தேவனுடைய குடும்பத்தில் பகுதியாக மாறியபடியால் "கிறிஸ்துவிற்குள் ஒன்றாகியுள்ளீர்கள்". இயற்கையான குடும்பத்தில் நீங்கள் பிறந்ததுபோல, இந்த ஆவிக்குரிய குடும்பத்திற்குள் ஆவியில் "மறுபடியும் பிறக்க" வேண்டும்.

யோவான் 3ம் அதிகாரத்தை வாசியுங்கள். மறுபடியும் பிறத்தல் என்றால் என்ன அர்த்தம் என்பதின் விபரத்தை இந்த அதிகாரம் விபரிக்கும். புதிய பிறப்பை அனுபவிப்பதற்கு நீங்கள்:

1. நீங்கள் பாவி என ஒத்துக்கொள்ள வேண்டும்:

**எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி, (ரோமர் 3:23)**

2. பாவத்தின் சம்பளம் மரணம் என உணர்ந்துகொள்ள வேண்டும்:

ஆதாமும், ஏவாளும் பாவம் செய்தால், அவர்கள் மரிப்பார்கள் என தேவன் எச்சரித்தார். இதன் அர்த்தமானது ஆவிக்குரிய மற்றும் பௌதீகம் (தேவனுடைய பிரசன்னத்திலிருந்து பிரிக்கப்படுதல்) ஆகிய இரு மரணங்களாகும். இயேசு உங்களுக்காக சிலுவையில் மரிக்கும்போது அவர் உங்களுடைய இடத்தில் மரித்தார். அவர் உங்களுடைய பாவத்திற்காக மரித்தபடியால் நீங்கள் நித்திய வாழ்க்கையை வாழலாம்:

**பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன். (ரோமர் 6:23)**

உங்களுடைய பாவத்தின் பலியாக நீங்கள் ஏற்றுக்கொள்ளும்போது, மரணத்தின் ஆக்கினையின் கீழ் நீங்கள் ஒருபோதும் இல்லை.

3. உங்களுடைய பாவத்தை அறிக்கையிட்டு, மன்னிப்பு கேட்டு, இயேசு உங்களுக்கு மரித்தார் என விசுவாசியுங்கள்:

**நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.**

**நாம் பாவஞ்செய்யவில்லையென்போமானால், நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் இராது. (1 யோவான் 1:8-9)**

**தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். (யோவான் 3:16)**

இவ்விதம் உங்கள் வாழ்க்கையை தேவனுக்கு கொடுக்கும்போது, நீங்கள் ஆவியிற்குள் "மறுபடியும்-பிறக்கின்றீர்கள்":

> **இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான், பழை-யவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின. (2 கொரிந்தியர் 5:17)**

நீங்கள் மறுபடியும் பிறக்கும்போது தேவனுடைய ஆவிக்குரிய குடும்பத்தில் நீங்கள் ஓர் பகுதியாளர் ஆகின்றீர்கள். நீங்கள் தேவனுடைய பிரசன்னத்திலிருந்து ஒருபோதும் பிரிக்கப்பட முடியாது. நீங்கள் பௌதீக ரீதியாக மரித்தால், நீங்கள் அவரோடு கூட நித்தியமாக வாழுகின்றீர்கள்.

நீங்கள் தேவனோடு இயேசு கிறிஸ்துவிற்கூடாக ஓர் உறவை ஏற்படுத்தியுள்ளீர்கள். நீங்கள் உண்மையான சுவிசேஷத்தின் சத்தத்தை கேட்டு அதற்கு பிரதியுத்தரவு பண்ணியுள்ளீர்கள். தேவ-னுடைய சத்தத்தை எவ்வாறு அறிந்துகொள்ளலாம் என கற்கும் தகுதியில் நீங்கள் நிற்கின்றீர்கள்:

> **சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார். (யோவான் 18:37)**

## பரிசுத்த ஆவியாவர் வாசம் செய்தல்

தேவனுடைய சத்தத்தை அறியும்படியாக நீங்கள் வருவதற்கு உதவும் இன்னொரு முன் நிபந்தனை இதுவாகும். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் என அழைக்கப்படும் அனுபவத்தை குறித்து வேதாகமம் பேசுகின்றது. இந்த அனுபவமானது பரிசுத்த ஆவியாவனர் உங்கள் வாழ்க்கையில் வாசம் செய்வதின் விளைவின் அனுபவத்தை ஏற்படுத்துவதோடு, தேவன் ஏற்றுக்கொள்ளும்படியாக தூய வாழ்க்கை வாழ்வதற்கு வல்லமையளிக்கும்.

இந்த பாடத்தில் விசுவாசியின் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவரின் ஊழியம் குறித்து கலந்-தாலோசிப்பது மிகவும் அதிகமாகும். சர்வதேச அறுவடை நேர வலையமைப்பின் பாடமான "பரிசுத்த ஆவியானவருடைய ஊழியம்" இந்த பொருளில் தியானிக்கப்பட்டுள்ளது. அத்தோடு பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகத்தை எவ்வாறு பெற்றுக்கொள்ளுவது என்னும் அறிவுறுத்தல்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

பரிசுத்த ஆவியானவரின் வாசம் செய்வதின் போதான மிகவும் ஓர் முக்கியமான ஊழியமானது விசுவாசிகளை தேவனுடைய சித்தத்திற்குள் வழிநடத்துவதாகும்:

> **சத்தியஆவியாகிய (பரிசுத்த ஆவியாவனர்) அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார், அவர் என்னுடையதில் எடுத்து (தேவனுடைய சித்தம்) உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். (யோவான் 16:13-14)**

வேதாகமம் கூறுகின்றது:

> **எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். (ரோமர் 8:14)**

தேவனுடைய பிள்ளையாயிருத்தல் (மறுபடியும் பிறத்தல்) மற்றும் பரிசுத்த ஆவியானவரினால் நடத்தப்படுதல் என்பதற்கிடையில் எல்லையற்ற உறவு காணப்படுகின்றது. இயற்கையான மனிதன் (மறுபடியும் பிறக்காதவன்) பரிசுத்த ஆவியானவரை பெற்று வழிகாட்டலை பின்பற்ற மாட்டான். புதிய பிறத்தலின் அனுபவத்திற்கூடாக "ஆவிக்குரிய மனிதனாக" அவன் மாறாதபடியால், தேவனுடைய சத்தத்தை அவன் உணர்ந்துகொள்ள மாட்டான்:

> **ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான், அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும், அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான். (1 கொரிந்தியர் 2:14)**

விசுவாசிகளினுடைய வாழ்க்கையில் பரிசுத்த ஆவியாவரின் நடத்துதலை காட்டும் அப்போஸ்தலர் புத்தகத்தின் உதாரணங்கள் கீழ்வருமாறு:

### பிலிப்பு:

பிலிப்பு என்னும் பெயர் கொண்ட ஓர் சபையின் அதிகாரியானவர் பரிசுத்த ஆவியானவரினால் நடத்தப்பட்டு, காசாவின் வனாந்திர வழியில் அவர் பார்த்த இரதத்தோடு சேர்ந்து கொண்டார்:

> **ஆவியானவர்: நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்துகொள் என்று பிலிப்புடனே சொன்னார். (அப்போஸ்தலர் 8:29)**

பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலை பிலிப்பு கீழ்ப்படிந்தார். இதன் விளைவாக இரதத்தை ஓட்டிய எத்தியோப்பிய மனிதன் இரட்சிப்பையும், தண்ணீர் ஞானஸ்நானத்தையும் பெற்றுக்கொண்டார்.

### பேதுரு:

செசரியாவிலிருந்து வந்த மூன்று மனிதர்களோடு போகும்படி பரிசுத்த ஆவியாவனர் பேதுருவிடம் கூறினார். பேதுரு கூறினார்:

> **நான் ஒன்றுக்கும் சந்தேகப்படாமல் அவர்களோடேகூடப் போகும்படி ஆவியானவர் எனக்குக் கட்டளையிட்டார். (அப்போஸ்தலர் 11:12)**

பரிசுத்த ஆவியானவருடைய வழிநடத்துதலை பேதுரு உணர்ந்து கொண்டார். தேவனுடைய சித்தத்தை அவனிடம் வெளிப்படுத்தி, அவனுடைய உள்ளான நிலையில் ஆவியானவரின் பேசுதலை அவன் சந்தேகம் கொள்ளவில்லை. அவன் கீழ்ப்படிந்தான் அத்தோடு இதன் விளைவானது புறஜாதியின் கலாச்சாரத்தில் ஊழியம் செய்யும்படியான முதலாவது நிலையை ஏற்படுத்தியது.

### பவுல்:

பவுல் கூட பரிசுத்த ஆவியானவருடைய தூண்டுதலினால் தன்னுடைய சுவிசேஷ அட்டவணையை மாற்றி அமைத்தார்:

**மீசியா தேசமட்டும் வந்து, பித்தினியாநாட்டுக்குப் போகப் பிரயத்தனம் பண்ணினார்கள், ஆவியானவரோ அவர்களைப் போகவொட்டாதிருந்தார். (அப்போஸ்தலர் 16:7)**

பவுல் மீசியாவிற்கு செல்ல திட்டமிட்டிருந்தார், ஆனால் பரிசுத்த ஆவியாவனர் அவருக்கு வித்தியாசமான திசையை காட்டினார்.

தேவனுடைய சத்தத்தை நீங்கள் கேட்பதற்கு எவ்வாறு பரிசுத்த ஆவியானவர் இயலுமை அளிக்கின்றார் என்பதை காட்டும் வேதாகமத்தின் அநேக சம்பவங்களில் இந்த மூன்று உதாரணங்களும் கொஞ்சமாகும். இயேசு வாக்குறுதியளித்ததுபோல, பரிசுத்த ஆவியாவனர் தேவனுடைய சித்தத்தை எடுத்து, உங்களில் அதை வெளிப்படுத்துகின்றார்.

## ஆவிக்குரிய முதிர்ச்சி

**நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், (ரோமர் 12:2)**

இயற்கையான உலகத்தில் ஓர் குழந்தை பிறக்கும்போது தன்னுடைய உறவினர்களின் சத்தத்தை உணர ஆரம்பிப்பதற்கு முன்னர் குறிப்பிட்ட படிமுறையான முதிர்ச்சியை அடைந்திருக்க வேண்டும். ஆவிக்குரிய உலகத்திலும் இதுவே உண்மையாகும். நீங்கள் மறுபடியும் முதலாவது பிறந்ததும் தேவன் உங்களோடு பேசுபவற்றையும், அவருடைய சத்தத்தையும் உங்களால் உணர்ந்துகொள்ள முடியாது. நீங்கள் முதலாவது பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொள்ளும்போது, ஆவியானவர் உங்களில் வெளிப் படுத்தும் தேவனுடைய சித்தத்தை எப்பொழுதும் உங்களால் விளங்கிக்கொள்ள முடியாது. ஆனால் பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய சித்தத்தை தொடர்ந்து வெளிப்படுத்தி உங்களை வழிநடத்துவார். நீங்கள் ஆவியில் முதிர்ச்சியடையும்போது, உங்களுடைய ஆவியில் இந்த சத்தத்தை உணர்ந்து கொள்ள ஆரம்பிப்பீர்கள்.

இயற்கையான மற்றும் ஆவியிற்குரியதற்கு இடையிலான இந்த சமாந்திரத்தை வேதாகமம் கூறுகின்றது:

**பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவ-னாயிருக்கிறான்.**

**பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானோந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும். (எபிரெயர் 5:13-14)**

இந்த வசனங்களில் குறிப்பிடப்படும் “பால்” மற்றும் “பலம்” பரிசுத்த வேதாகமமாகிய தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையை குறிக்கின்றது. நீங்கள் முதலாவது பிறந்தபோது தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையின் சாதாரண சில உண்மைகளை (பால்) கற்க ஆரம்பிக்கின்றீர்கள். நீங்கள் முதிர்ச்சியடையும்போது, தேவனுடைய வசத்தின் ஆழமான (பலம்) உண்மைகளை கையாள முற்படுவீர்கள்.

தேவனுடைய எழுதிய வார்த்தையை நீங்கள் தொடர்ந்தும் படிக்கும்போது, உங்களுக்குரிய

ஆவிக்குரியு உணர்வு முதிர்ச்சியடையும். நன்மையையும், தீமையையும் அறியும்பொருட்டு அவைகளில் நீங்கள் பயிற்சி பெறுவீர்கள். இதன் அர்த்தமானது தேவனுடைய சித்தத்திற்கும், வாழ்க்கையில் அவருடைய வழிகளிலிருந்தான பிழையான வழிகளிற்கும் இடையில் வேறுபாட்டை செய்ய உங்களால் முடியும். இதன் காரணமாகவே தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையை படிப்பது மிகவும் முக்கியமானதாகும்.

ஆவிக்குரிய ரீதியில் நீங்கள் முதிர்ச்சிடையும்போது, உலகத்திற்கு நீங்கள் "உறுதி"யாக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை. உறுதிப்படுத்தல் என்பது பாவனைப்படுத்திக்கொள்ளுதல் அல்லது தரத்திற்கு ஏற்ப அமைத்துக்கொள்ளுதல் ஆகும். ஆவிக்குரிய முதிர்ச்சி பூலோக தராதரங்களை விட கிறிஸ்துவின் சாயலை உங்களில் உறுதிப்படுத்தும்.

உணர்வுரீதியிலான முதிர்ச்சியை அடைவதற்கு ஆவிக்குரிய முதிர்ச்சி கூட உதவும். உங்களிடம் உணர்வுரீதியிலான முதிர்ச்சி இல்லாமல் இருந்தால், முக்கியமான தீர்மானங்கள் கோபத்தினால் அல்லது சுய இரக்கத்தினால் மேற்கொள்ளப்படும். இது நீண்டகால நாசகரமான விளைவை ஏற்படுத்தும்.

நீங்கள் ஆவியில் முதிர்ச்சியடையும்போது "பரிசுத்த ஆவியின் கனியை" நீங்கள் அபிவிருத்தி செய்து கொள்ளுவீர்கள், ஆவிக்குரிய முதிர்ச்சியின் அடையாளத்தின் விளைவு உணர்வுரீதியான முதிர்ச்சியாகும்:

> **ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம். இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை. (கலாத்தியர் 5:22-23)**

## மாற்றமடைதல்

> **உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். (ரோமர் 12:2)**

ஆவிக்குரிய முதிர்ச்சி இறுதியாக மாற்றமடைதலுக்கு நேராக வழிநடத்தும், இது தேவனுடைய சத்தத்தை நீங்கள் அறிவதற்கு இயலுமைப்படுத்தும் மற்றொரு முன் நிபந்தனையாகும். இயற்கையான மனிதன் (இயற்கை மனிதம்) என்ன செய்வதற்கு தீர்மானிக்கின்றானோ, உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய தீர்மானமானமானது வித்தியாசமாகும். இது ஆவியிற்கும் (ஆவியிற்குரிய மனிதன்) மாம்சத்திற்கும் (இயற்கை மனிதன்) மோதலை ஏற்படுத்துகின்றது.

இந்த மோதலை பவுல் எழுதியிருக்கின்றார்:

> **மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது, நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது. (கலாத்தியர் 5:17)**

தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றிக்கொள்ளும் காரியம் தொடர்பாக ஆவியிற்கு எதிராக மாம்சம் தொடர்ந்து தளம்பலை கொண்டுள்ளதை பவுல் ஏற்றுக்கொள்ளுகின்றார். இந்த தளம்பலானது மனதில் ஏற்படுவதாக அவர் அடையாளம் காணுகின்றார்:

**ஆகிலும் என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன், அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக் கொள்ளுகிறது. (ரோமர் 7:23)**

இதன் காரணமாக அவர் வாதாடுகின்றார்:

**அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன், இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.**

**நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். (ரோமர் 12:1-2)**

“வேண்டிக்கொள்கின்றேன்” என்னும் வசனத்தின் அர்த்தமானது தயவுசெய்து, கெஞ்சுதல் அல்லது பிச்சை கேட்டல் ஆகும். “உங்கள் சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க” என்னும் வாக்கியம் குறிப்பது தேவனுக்கு எல்லையற்ற ரீதியில் சரணடைதல் ஆகும்.

பலியிற்காக ஒன்றை செலுத்துவதின் அர்த்தமானது முற்றுமுழுவதுமாக ஒப்புக்கொடுத்தலாகும். பழைய ஏற்பாட்டு காலத்தில் பலி செலுத்தப்பட்டபின், நெருப்பினால் எரியூட்டுவதினூடாக தேவனுக்கு அது முற்றாக செலுத்தப்படும் அல்லது ஆசாரியரால் நியாயப்பிரணமானத்தில் குறிப்பிட்டுள்ளப்படி எடுத்துக் கொள்ளப்படும். பலியை கொடுப்பவர் பிற்பாடு அதை உரிமைகோர முடியாது.

ஆகவே நாம் தேவனுக்கு முற்றாக சரணடைதல் வேண்டும். இயற்கையான மனிதனானவன், உலகத்திற்கும், மாம்சத்திற்குமான பழைய சுய சுபாவத்தை மரணத்திற்கொள்ள வேண்டும். “மாற்ற மடைதல்” என்பதின் அர்த்தம் இதுவாகும். இயேசு கிறிஸ்துவிற்கு பிற்பாடு இது வேறொரு மாதிரியாக மாற்றமடைந்து உள்ளது:

**கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன். (கலாத்தியர் 2:20)**

**கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். (கலாத்தியர் 5:24)**

**மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன். (1 கொரிந்தியர் 9:27)**

**ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக் கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக. (ரோமர் 6:12)**

**இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்**

**கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம். (2 கொரிந்தியர் 7:1)**

**அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும்... (ரோமர் 6:11)**

இயேசு அனுபவம் அடைந்த, பொதுவான பௌதீக சிலுவையிலறைதல் ஓர் இயற்கைக்கு மாறான மரணமாகும். சுய இயற்கையிலான அறைதலுக்கு மரணம் ஏற்படுத்தப்படுவதான காரணியின் ஓர் அர்த்தம் உள்ளது. மனிதனுடைய மாமிச குணாதிசயமானது இயற்கையான மரணத்தில் ஒருபோதும் மரணியாது. இது தற்காலியமாகவும் மரணியாது. இயற்கையான உலகத்தில் சிலுவையில் அறைதல் போல் அழுத்தமாக அதனை மரணிக்கச்செய்ய வேண்டும்.

ரோமர் 12:1-2ல் படி, தேவனுடைய சித்தத்தின் ஞானத்தை இந்த சரணடைதல் முன்னிருத்துகின்றது. தேவனுடைய சத்தத்தையும், அவருடைய சித்தத்தையும் நீங்கள் அறிய வேண்டுமாயின், நீங்கள் முதலாவது சரணடைய வேண்டும். நாமும் செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டும். அவருடைய சித்தத்தை நாம் அறிதல் வேண்டும், பிற்பாடு அதற்கு நாம் சரணடைவோமா என நாம் தீர்மானிக்க வேண்டும். ஆனால் ரோமர் 12:1-2 சரணடைதல் வருவதாக குறிப்பிடுகின்றது.

நாம் சரணடைதல் குறித்து தயங்குவதற்கான காரணமானது தேவனுடைய சித்தமானது எப்பொழுதும் ஏற்றுக்கொள்ளக்கூடியது, நல்லது, பூரணமானது என நாம் விளங்கிக்கொள்ளாதிருப்பதாகும். நாம் தேவனுக்கு முழுவதுமாக சரணடைய பயப்படுகின்றோம் ஏனென்றால் இந்த அடிப்படை கொள்கையை நாம் பற்றிக்கொள்ளவில்லை:

**நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே. (எரேமியா 29:11)**

## உங்களுடைய மனதை புதுபித்தல்

உங்களுடைய மனமானது இயற்கையிலேயே உங்களை சுற்றியுள்ள இயற்கையின் கொள்கைகளோடு ஒத்துப்போயிருக்கும். இது உங்களுடைய அடிப்படை பாவ சுபாவத்தினால் ஏற்படுகின்றது. இது உங்களுடைய கலாச்சாரத்தின் செல்வாக்கினால் ஏற்படுகின்றது.

நீங்கள் உலகத்தோடு ஒத்துப்போகவில்லை ஆனால் மாற்றமடைந்திருக்கின்றீர்கள் என தேவன் கூறுகின்றார். "மாற்றமடைதல்" என்னும் வசனத்தின் அர்த்தமானது மாறுதல் அல்லது புதிய தோற்றத்திற்குள் செல்லுதல் ஆகும். இந்த மாதிரியிற்கான அமைப்பானது தேவனாகிய இயேசு கிறிஸ்து ஆகும்:

**நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறது போலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம். (2 கொரிந்தியர் 3:18)**

ரோமர் 12:2ன் படி, உங்கள் மனதை புதுப்பித்தலிற்கூடாக மாற்றமானது வருகின்றது. இந்த

அர்த்தமானது உலக தரங்கள் மற்றும் கொள்கைகளினால் நீங்கள் எச்சரிக்கைப்பட்டு, அதில் வெளிப்படுத்தப்பட்ட கொள்கைகளில் மாற்றமடைதல் ஆகும்.

தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தை.

கிறிஸ்துவின் மனதை நீங்கள் அபிவிருத்தி செய்யும்போது உங்களுடைய மனமானது மாற்றமடை-கின்றது:

**கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது, (பிலிப்பியர் 2:5)**

"சிந்தையே" என்னும் வார்த்தை கிறிஸ்துவின் மனதை பெறும்படிக்கு நீங்கள் தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும் என குறிப்பிடுகின்றது. நீங்கள் உங்கள் மனதில் ஏற்படும் மாற்றத்தை நடைபெறுவதற்கு அனுமதிக்க வேண்டும். மனதை மாற்றுவதிற்கான அபிவிருத்திற்கு உங்களிடம் பொறுப்பு உள்ளது. இது தேவனால் உங்களுக்கு தானாகவே செய்யப்படமாட்டாது:

**ஆகையால், நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு.... (1 பேதுரு 1:13)**

மனதின் "அரையைக் கட்டிக்கொண்டு" என்பது ஆடையணிதல் அல்லது உங்களுடைய மனதின் வல்லமைகளை பாதுகாத்தல் என்னும் அர்த்தமாகும். மனதை மாற்றுதல் அல்லது அரையை கட்டுதலுக்கு, அதை தேவனுடைய வார்த்தைக்கு செலுத்துவதற்கு அவசியமாகின்றது. கிறிஸ்துவின் மனதின் வகையை வேதாகமத்தில் தேடி கண்டுபிடியுங்கள். (இதை நீங்கள் செய்ய உதவும்பொருட்டு இந்த அதிகாரத்திலுள்ள "மேலதிக படிப்பினைக்கு" பகுதி உதவும்)

தேவன் அவருடைய பிரமாணங்களை அதற்குள் வைக்கும்போது உங்களுடைய மனமானது மாற்று-தலடைகின்றது:

**என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து... (எபிரெயர் 8:10)**

தீய எண்ணங்களினால் பீடிக்கப்படுதலுக்கு கொண்டு வருதல் மற்றும் அதை வீழ்த்துவதற்கு மனதின் வல்லமையை பயன்படுத்துங்கள்:

**அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம். (2 கொரிந்தியர் 10:5)**

உங்களுடைய வாழ்க்கையின் எண்ணங்களை கட்டுப்படுத்துதல் உங்களுடைய கடமையாகும்:

**கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள். (பிலிப்பியர் 4:8)**

பின்பு நீங்கள் பவுலோடு கூட சொல்லலாம்:

**எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது. (1 கொரிந்தியர் 2:6)**

கிறிஸ்துவின் சிந்தையானது தேவனுடைய சித்தத்தை ஏற்படுத்தி அதை செய்ய அறியப்படுகின்றது.

## தேவனுடைய சித்தத்தை ஏற்படுத்துதல்

கீழ்வரும் அட்டவணையை படியுங்கள். ரோமர் 12:1-2ல் இந்த பாடத்தில் கலந்துரையாடப்பட்ட ஒவ்வொரு முன் நிபந்னைகளையும் உள்ளடக்கமாக இருப்பதை நீங்கள் கண்டு கொள்வீர்கள்:

| | |
|---|---|
| அப்படியிருக்க, சகோதரரே, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்; | உங்கள் பாவத்திற்கான இயேசுவின் பலி மூலம் விரிவாக்கப்பட்ட அவருடைய இரக்கங்களுக்கூடாக தேவனிடம் நீங்கள் வருகின்றீர்கள். |
| நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்கவேண்டுமென்று, | உங்களுடைய வாழ்க்கையில் பரிசுத்த ஆவியா-னவருடைய கிரியையினால் ஆவிக்குரிய முதிர்ச்சி ஏற்படுகின்றது. |
| நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்-தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத் தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். | நீங்கள் வசனத்தினால் மாற்றமடைகின்றீர்கள், உங்களுடைய மனம் புதிதாகின்றது. |

மறுபடியும் புதிய பிறத்தலின் அனுபவம், பரிசுத்த ஆவியாவரின் வாசம் செய்தல், ஆவிக்குரிய முதிர்ச்சி, மனதை மாற்றுதல்-- இவைகள் தேவனுடைய சித்தத்தை அறிதலோடு எவ்வாறு தொடர்பு படுகின்றன? ரோமர் 12:1-2ன் படி அவைகள் அவருடைய சித்தத்தை அறிவதற்கு நடத்தும் முன் நிபந்தனைகளாகும்:

> **நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். (ரோமர் 12:2)**

“பகுத்தறிய” என்னும் வசனம் கண்டுகொள்ளல், உறுதிப்படுத்தல் அல்லது ஏதோவொன்றில் உறுதியாய் இருத்தல் என அர்த்தப்படுகின்றது. இந்த முன்நிபந்தனைகள் தேவனுடைய சித்தத்தினான வழிகாட்டலுக்கு நடத்தும்.

ஆனால் “தேவனுடைய சித்தம்” என்பதின் உண்மையான அர்த்தம் என்ன? தேவனுடைய நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான சித்தம் எவை? தேவனுடைய சித்தத்தை “பகுத்தறிதல்” அல்லது கண்டு கொள்ளுதல் ஏன் முக்கியமானதாகும்?

இந்த கேள்வியிற்கான பதில்களை தொடரும் அதிகாரங்களில் நாம் கண்டு கொள்ளுவோம்.

## சுய பரிசோதனை

1. திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்.

..........................................................................................................................................

..........................................................................................................................................

2. “முன் நிபந்தனை” எனும் வார்த்தையின் அர்த்தம் என்ன?

..........................................................................................................................................

3. தேவனுடைய சித்தத்தை அறிவதற்கு அவசியமாக இந்த பாடத்தில் கொடுக்கப்பட்ட முன் நிபந்தனைகள் என்ன?

..........................................................................................................................................

4. தேவனுடைய சத்தத்தை அறிதல் தொடர்பாக பரிசுத்த ஆவியானவரின் முக்கிய ஊழியம் என்ன?

..........................................................................................................................................

5. மறுபடியும் பிறத்தல் என்றால் என்ன அர்த்தம்?

..........................................................................................................................................

6. தேவனுடைய சத்தத்தை அறிந்து வருவதற்கு மறுபடியும் பிறத்தல் ஏன் அவசியமாகின்றது?

..........................................................................................................................................

7. ஆவியிலான முதிர்ச்சி என்பதின் அர்த்தம் என்ன?

..........................................................................................................................................

8. இந்த அதிகாரத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள “மாற்றமடைதல்” என்னும் வார்த்தையை வரை விலக்கணப்படுத்துக.

..........................................................................................................................................

9. இந்த வாக்கியம் சரியா அல்லது தவறா? ரோமர் 12:1-2ன்படி தேவனுடைய சித்தத்தின் அறிவு சரணடைதலை மேற்கொள்ள வழிவகுக்கின்றது. இந்த வாக்கியம்: ......................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. புதிய பிறப்பு மற்றும் ஆவிக்குரிய முதிர்ச்சி ஆகியவற்றிற்கு மேலதிகமாக கற்க, சர்வதேச அறுவடை நேர நிறுவனத்தின் பாடமான "விசுவாசத்தின் அஸ்திபாரம்" என்பதை பெற்றுக் கொள்ளுங்கள். பரிசுத்த ஆவியானவரை குறித்த மேலதிக படிப்பிற்கு சர்வதேச அறுவடை நேர நிறுவனத்தின் பாடமான "பரிசுத்த ஆவியானவரின் ஊழியங்கள்" என்பதை பெற்றுக கொள்ளுங்கள்.

2. மனதின் மாற்றத்திற்கான அவசியத்தை இந்த அதிகாரம் பேசும். விசுவாசிகள் கொள்ள கூடாத மனங்களாக வசனங்கள் குறிப்பிடுபவைகள்:

| | |
|---|---|
| கடினம்: | தானியேல் 5:20 |
| கேடு: | ரோமர் 1:28 |
| மாம்சம்: | ரோமர் 8:6 |
| சந்தேகம்: | லூக்கா 12:29 |
| கடினம்: | 2 கொரிந்தியர் 3:14; 4:14 |
| உண்மையினின்று விலகுதல்: | 2 கொரிந்தியர் 11:3 |
| மாம்சம்: | எபேசியர் 2:3; கொலோசெயர் 2:18 |
| வீண்: | எபேசியர் 4:17 |
| பூமிக்கடுத்தவைகள்: | பிலிப்பியர் 3:19 |
| துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும்: | கொலோசெயர் 1:21 |
| இருமனமுள்ளவன்: | யாக்கோபு 1:8; 4:8 |
| அசுத்தமுள்ளவர்கள்: | தீத்து 1:15 |

3. விசுவாசிகளுடைய மாற்றமடைந்த மனங்கள் கொண்டிருக்க வேண்டியவை என வேதாகமம் கூறுபவை:

| | |
|---|---|
| ஆவியின் சிந்தை: | ரோமர் 8:6 |
| உற்சாகம்: | 1 பேதுரு 5:2 |
| உண்மை: | 2 பேதுரு 3:1 |
| உறுதி: | ஏசாயா 26:3 |
| சமாதானம்: | பிலிப்பியர் 4:7 |
| புதிதான: | எபேசியர் 4:23 |
| மனத்தாழ்மை: | கொலோசெயர் 3:12 |
| தெளிவு: | தீத்து 2:6 |
| புத்தி: | 2 தீமோத்தேயு 1:7 |
| அன்பு: | மத்தேயு 22:37 |
| ஊழியம்: | ரோமர் 7:25 |
| முழு நிச்சயம்: | ரோமர் 14:5 |
| ஐக்கியம்: | 1 பேதுரு 3:8; 4:1; ரோமர் 15:6<br>1 கொரிந்தியர் 1:10 |
| உத்தமும் உற்சாகமும்: | 1 நாளாகமம் 28:9 |
| வேலைசெய்தவற்கான ஒழுங்கு: | நெகேமியா 4:6 |

## அதிகாரம் மூன்று

# தேவனுடைய சித்தம்

### நோக்கங்கள்:

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ "சித்தம்" என்னும் வார்த்தையை வரைவிலக்கணப்படுத்தவும்,
- ☐ இன்று உலகத்தில் கிரியை செய்யும் மூன்று வகையான சித்தங்களை இனங்காணவும்,
- ☐ தேவனுடைய சித்தங்களின் மூன்று அர்த்தங்களை விபரிக்கவும்,
- ☐ தேவனுடைய சித்தத்தை செய்வது ஏன் முக்கியமானது என்பதின் காரணங்ளை பட்டியலிடவும்,
- ☐ தேவனுடைய சித்தத்தை செய்வதற்கான சரியான உந்துதல்களை இணங்காணவும் முடியும்.

### திறவுகோல் வசனம்:

> **என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கிவந்தேன். (யோவான் 6:38)**

## அறிமுகம்

இன்றைய உலகில் செயற்படும் மூன்று வகையான சித்தங்களை இந்த அதிகாரம் அடையாளம் காணும். இது "தேவனுடைய சித்தத்தின்" வெளிப்படுத்தலை வரைவிலக்கணப்படுத்தி, அந்த சித்தத்தை இயேசுவின் ஜீவியத்தோடு தொடர்பாய் உதாரணப்படுத்தி, தேவனுடைய சித்தத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும்.

## "சித்தம்" என்பதின் அர்த்தம்

சித்தத்தின் அடிப்படையிலேயே "சித்தம்" என்னும் வார்த்தையின் பொதுவான அர்த்தமானது அறியப்படும் அல்லது தீர்மானிக்கப்படும். தேர்ந்தெடுக்கும் வல்லமையே சித்தமாகும். இன்றைய உலகில் மூன்று வகையான சித்தங்கள் செயற்படுகின்றது.

### சுய-சித்தம்:

இது மனிதனுடைய சித்தமாகும், இது சொந்த வழியில் நடப்பதற்கான வாஞ்சையின் அடிப்படையில் சுய இயல்பை கொண்டதாகும். நீங்கள் உங்கள் வாழ்க்கையை சுய சித்தத்தினால் வழிகாட்டும் போது, தேவனிடமிருந்தல்லாத உங்களுடைய சித்தத்தின் அடிப்படையில் தீர்மானம் மேற்கொள்ளுகின்றீர்கள். சுய சித்தத்தை குறித்து வேதாகமம் எச்சரிக்கின்றது:

> **கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன். (எரேமியா 10:23)**

மனிதனுடைய மாம்சிக இயல்பினால் சுய-சித்தமானது செயற்படுகின்றது:

**விசேஷமாக அசுத்த இச்சையோடே மாம்சத்திற்கேற்றபடி நடந்து, கர்த்தத்துவத்தை அசட்டைபண்ணுகிறவர்களை அப்படிச் செய்வார். இவர்கள் துணிகரக்காரர், அகங்காரிகள், மகத்துவங்களை தூஷிக்க அஞ்சாதவர்கள். (2 பேதுரு 2:10)**

சுய சித்தத்தின் விளைவை வேதாகமமானது பதிவு செய்துள்ளது:

**ஆகையால் அவர்களை அவர்கள் இருதயத்தின் கடினத்திற்கு விட்டுவிட்டேன், தங்கள் யோசனைகளின்படியே நடந்தார்கள். (சங்கீதம் 81:12)**

இன்றைய உலகில் தேவனுடைய சித்தத்தின் கீழ்ப்படிவின்மையினாலேயே மனித ஜீவியத்தின் அனைத்து விளைவுமான பாவத்திற்கும், துன்மார்க்கத்திற்கும், கஷ்டங்களுக்கும் காரணமுமாகும். துன்மார்க்கனுடைய மனிதனின் ஜீவியத்தில் சுய-சித்தம் செயற்படுவதாக தாவீது பேசுகின்றார்:

**என் சத்துருக்களின் இஷ்டத்துக்கு என்னை ஒப்புக்கொடாதேயும், பொய்ச்சாட்சிகளும் ஆக்கிரமித்துச் சீறுகிறவர்களும் எனக்கு விரோதமாய் எழும்பியிருக்கிறார்கள். (சங்கீதம் 27:12)**

சபையின் தலைவன் சுய-சித்தத்தில் இருக்க கூடாது என வேதாகமம் குறிப்பிடுகின்றது:

**ஏனெனில், கண்காணியானவன் தேவனுடைய உக்கிராணக்காரனுக்கேற்றவிதமாய்... தன் இஷ்டப்படி செய்யாதவனும்.... (தீத்து 1:7)**

## சாத்தானுடைய சித்தம்:

சாத்தானிடம் ஒரு சித்தமுண்டு. உங்களுடைய வாழ்க்கையின் நல்லவைகள் அனைத்தையும் அவன் அழிக்க வாஞ்சிக்கின்றான். இதை குறித்து பேதுருவிடம் இயேசு எச்சரித்தார்:

**பின்னும் கர்த்தர்: சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறது போலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். (லூக்கா 22:31)**

உங்களுடைய வாழ்க்கையின் அனைத்து நல்லவற்றையும் வெளியேற்றுவதற்கு சாத்தான் வேண்டு-கின்றான். இயேசு கூறினார்:

**திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன். (யோவான் 10:10)**

சாத்தானுடைய சித்தத்தினால் சில விசுவாசிகள் சிறைப்பட்டுப்போகலாம் என பவுல் கூறினார்:

**பிசாசானவனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிபட்டிருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கந்தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும், சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்கவேண்டும். (2 தீமோத்தேயு 2:26)**

### தேவனுடைய சித்தம்:

உலகில் செயற்படும் மூன்றாவது சித்தம் தேவனுடைய சித்தமாகும். எமது பாடத்தின் பொருள் இதுவே.

## தேவனுடைய சித்தத்தின் அர்த்தம்

புதிய ஏற்பாடானது கிரேக்கம் பாஷையிலேயே மூலப்பிரதியாக எழுதப்பட்டது. தேவனுடைய சித்தத்தை காட்டுவதற்கு "சித்தம்" என்னும் வார்த்தையானது இரண்டு பதங்களில் கிரேக்கத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளது.

ஒரு வசனம் "புளுலீமா", இது தேவனுடைய ஆளுகையின் சித்தத்தை காட்டுகின்றது. இது இப் பிரபஞ்சத்தில் நடைபெறும் எல்லாகாரியங்களுக்குமான அவருடைய முன்தேர்ந்தெடுக்கப்பட்ட திட்டத்தை குறிக்கின்றது. மனிதர்களுடைய தீர்மானங்கள் அல்லாமல் இந்த வகையான "தேவனுடைய சித்தம்" நிறைவேறுகின்றது. உலகத்திற்கான அவருடைய முதல் திட்டம் இதுவாகும்.

"புளுலீமா" என்னும் தேவனுடைய சித்ததிற்கு மனிதனுடைய கூட்டுறவு அவசியமல்ல. "புளுலீமா" என்னும் தேவனுடைய சித்தம், அதற்கான வெளியீடு ஏற்கனவே திட்டமிடப்பட்டது. "புளுலீமா" என்னும் தேவனுடைய சித்தம் அவருடைய வார்த்தையில் எழுதப்பட்டுள்ளதோடு, அது தெளிவானது. இந்த சித்தத்தை தேட வேண்டியது அவசியம் இல்லை, ஏனென்றால் இது வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மற்ற வார்த்தையான "தெலீமா" மனிதன் அவனுடைய சித்தத்தில் வாழ்ந்து அனுபவப்படுவதற்கான தேவனுடைய விருப்பத்தை குறிப்பிடுகின்றது. இது ஒவ்வொரு தனிப்பட்ட மனிதர்களுக்கும் அல்லது தனிப்பட்ட அவருடைய திட்டத்தையும் குறிப்பிடுகின்றது. தேவனுக்கு "தெலீமா" என்னும் அவருடைய சித்தத்தை நிறைவேற்ற, உங்களுடைய ஒத்துழைப்பு அவசியமாகும். உங்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய தனிப்பட்ட சித்தமா அல்லது "தெலீமா" சித்தத்தில் நீங்கள் நடப்பதா அல்லது இல்லையா என தேர்ந்தெடுக்கும் வல்லமை உங்களுக்கு உண்டு. இது "தெலீமா" சித்தமா அல்லது உங்களுடைய தனிப்பட்ட தேவனுடைய சித்தமா என்று நாம் அர்த்தப்படுத்தி பேசுவது தேவனுடைய சித்தத்தை தேடுதல் ஆகும்.

தேவனுடைய சித்தத்தின் இன்னொரு வகை "நீதியான" தேவனுடைய சித்தமாகும், இது விசுவாசிகள் எவ்விதம் வாழ வேண்டும் என உபதேசிக்கும் தேவனுடைய வார்த்தையில் எழுதப்பட்டு வெளிப்படுத்தப்பட்ட கட்டளைகளாகும். தனிப்பட்ட மற்றும் மனிதனுக்கான தேவனுடைய ஆளுகையின் சித்தமானது அவருடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய சித்தமாகிய நீதியோடு ஒருபோதும் தாக்கமுற செய்யாது. "தேவனுடைய சித்தத்தின்" பல்வேறுப்பட்ட அர்த்தங்களை கீழ்வரும் அட்டவணை சுருக்கமாக தரும்:

| ஆளுகை (புளுலீமா) | தனிப்பட்ட (தெலீமா) | நீதி |
|---|---|---|
| தேவனால் பிரபஞ்சத்தற்கு ஏற்கனவே செய்யப்பட்ட திட்டம் | ஒவ்வொரு தனிப்பட்டவர்களுக்காகவும் தேவனுடைய விரிவான திட்டம் | நாம் எவ்வாறு விசுவாசித்து வாழ வேண்டும் என போதிக்கும் தேவனுடைய வார்த்தையில் எழுதப்பட்டு வெளிப்படுத்தப்பட்ட நீதியான கட்டளைகளாகும். |
| மனிதனுடைய தீர்மானத்தினால் தாக்கமுற செய்யாது | மனிதனுடைய திட்டத்தினால் தாக்கமுறச்செய்யும். | தேவனுடைய தனிப்பட்ட சித்தமானது அவருடைய நீதியான சித்தத்தோடு இணக்கமாகும். |

## இயேசுவும் தேவனுடைய திட்டமும்

இயேசு அவருடைய பூலோக ஊழியத்தில்போதான முதன்மையான கவனம் தேவனுடைய சித்தமாகும். அவர் அறிவித்தார்:

> **அவர் எனக்குத் தந்தவைகளில் ஒன்றையும் நான் இழந்துபோகாமல், கடைசி நாளில் அவைகளை எழுப்புவதே என்னை அனுப்பின பிதாவின் சித்தமாயிருக்கிறது. (யோவான் 6:39)**

தேவனுடைய சித்தமானது மனிதனை அவருடைய சரியான தொடர்பில் கொண்டுவருவதாகும்:

> **என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கிவந்தேன். (யோவான் 6:38)**

> **குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்திய ஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது என்றார். (யோவான் 6:40)**

கிறிஸ்துவின் ஜீவியத்தின் நோக்கமானது தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதே. சிறுபிள்ளையாய் இருக்கும்போது கூட, தேவனுடைய சித்தத்தை செய்வதையே இயேசு கவனம் செலுத்தினார். அவர் தேவாலயத்தில் இருந்து, அவருடைய உறவினவர்கள் அவரை பார்க்க வந்தபோது, இயேசு கூறினார்:

> **என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்கவேண்டியதென்று அறியீர்களா என்றார். (லூக்கா 2:49)**

அவருடைய ஆவிக்குரிய பலத்தின் ரகசியமானது தேவனுடைய சித்தத்தை செய்வதிலேயே காணப்பட்டது:

> **இயேசு அவர்களை நோக்கி: நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின் படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது. (யோவான் 4:34)**

அவருடைய வாழ்க்கை மற்றும் ஊழியத்திற்கூடாக தேவனுடைய வேலையை முடிப்பதின் கரிசனை-யை இந்த வசனம் வெளிப்படுத்துகின்றது.

கிறிஸ்துவினுடைய பூலோக ஊழியத்தின் வல்லமையின் ஆதாரமானது தேவனுடைய சித்தத்தை தொடர்புபடுத்துகின்றது:

> **நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை, நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன், எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது. (யோவான் 5:30)**

கிறிஸ்துவினுடைய வார்த்தைகளும், செயல்களும் அவருடைய சொந்தமானதல்ல. தேவனுடைய சித்த்தின் அடிப்படையிலேயே அவர் பேசி கிரியை செய்தார்:

> **என் உபதேசம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது. (யோவான் 7:16)**

> **நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயி ருக்கிறது. (யோவான் 14:26)**

> **நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா எனக்குப் போதித்தபடியே இவை-களைச் சொன்னேன் என்றும் அறிவீர்கள். (யோவான் 8:28)**

> **எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதை-தயே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது. (யோவான் 5:30)**

சிலுவையின் மரணத்தை அவர் முகங்கொடுத்தபோதும் கூட, இயேசு ஜெபித்தார்:

> **என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும், ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார். (மத்தேயு 26:39)**

இயேசு மரிப்பதற்கு செய்யும்படியான அவருக்கான தேவனுடைய சித்தமா என அறிய சித்தம்கொண்டார். தேவனுடைய ஆளுகை, நீதி மற்றும் தனிப்பட்ட முற்றிலும் உறுதியான சரியான உதாரணமாக இயேசுவினுடைய வாழ்க்கை அமைகின்றது.

## தேவனுடைய சித்தத்தின் முக்கியத்துவம்

தேவனுடைய சித்தம் முக்கியமானது ஏனென்றால்...

### உங்களுடைய நித்திய விதியை இது தீர்மானிக்கின்றது:

தேவனுடைய சித்ததை செய்வதின் அடிப்படையிலேயே உங்களுடைய நித்திய விதி இருக்கின்றது.

உங்களுடைய வாழ்க்கையின் மீட்பிற்கு தேவனுடைய திட்டத்தை நேர்மறையாக நீங்கள் பிரதிபலிக்க வேண்டும்....

> **ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது, அதைக் கண்டு பிடிக்கிறவர்கள் சிலர். (மத்தேயு 7:14)**

> **பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. (மத்தேயு 7:21)**

> **உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம், தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான். (1 யோவான் 2:17)**

## தேவனுடைய உங்களின் உறவின் அடிப்படை இதுவே:

உங்களுடைய இயேசுவின் உறவானது அவருடைய சித்தத்தை செய்வதிலேயே அடிப்படையாயுள்ளது:

> **தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ அவனே எனக்குச் சகோதரனும், எனக்குச் சகோதரியும், எனக்குத் தாயுமாய் இருக்கிறான் என்றார். (மாற்கு 3:35, மத்தேயு 12:50ஐயும் பார்க்க)**

## இது வழிகாட்டலை ஏற்படுத்துகின்றது:

உங்களுடைய சொந்த வழிகாட்டலை செய்யமுடியாமையால் தேவனுடைய சித்தம் முக்கியமானதாகும்:

> **கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன். (எரேமியா 10:23)**

உங்களுடைய சொந்த படிமுறைகளை வழிகாட்டும் இயலுமை உங்களிடம் இல்லை. தேவனுடைய வழிகாட்டல் இல்லாமல் உங்களுடைய சொந்த வழியில் உங்களால் சென்று, தேவனுடைய திட்டத்திலிருந்து ஒதுங்கியிருக்க முடியும்:

> **நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம், கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார். (ஏசாயா 53:6)**

## எதிர்காலத்தின் ஞானத்தை இது ஏற்படுத்துகின்றது:

எதிர்காலத்தின் ஞானத்தை அறிந்தவர் தேவன் ஒருவரே. சாத்தான் உங்களுக்கு வைத்திருக்கும் கண்ணிகளை அவர் அறிந்திருக்கின்றார். எதிர்காலத்தின் பொருளாதார, அரசியல் திட்டங்களை அவர் அறிந்திருக்கின்றார். எதிர்காலத்தில் உங்களுக்கு காத்திருக்கும் சம்பவங்களை அவர் அறிந்திருக்கின்றார்:

> **நானே தேவன், வேறொருவரும் இல்லை, நானே தேவன், எனக்குச் சமானமில்லை. அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற்கொண்டும், இன்னும் செய்யப்படாதவைகளைப் பூர்வகாலமுதற்கொண்டும் அறிவிக்கிறேன். (ஏசாயா 46:9-10)**

மனிதனால் நிகழ்காலத்தில் கிரியை செய்ய முடிவதோடு, எதிர்காலத்தை அழைப்பிக்க கூடியவனாகவும் இருக்கின்றான். அவனால் எதிர்காலத்தில் திட்டத்தை தீட்ட முடியும். ஆனால் தேவனே எதிர்காலத்தின் உண்மையான ஞானத்தை கொண்ட ஒரே ஒருவர் ஆவார்.

சில மக்கள் சாத்தானுக்கு எதிர்கால அறிவு இருப்பதாக எண்ணுகின்றார்கள். ஆனால் அவனிடம் இல்லை. இருக்குமாயின், இயேசுவின் சிலுவைமரணத்தை குறித்து கரிசனையற்றிருப்பான். அவனால் சில எதிர்காலத்தை குறித்து பார்க்க முடிவதோடு, இந்த கிரியை பாவத்திலிருந்தான விடுதலையில் இருந்து உண்மையிற்கு கொண்டுவரும் என பார்க்க முடிந்தது. சாத்தானால் தேவன் எதிர்காலத்தை குறித்து வெளிப்படுத்தியவைகளை தீர்மானிக்க மட்டுமே அறிந்திருக்கின்றான். உதாரணத்திற்கு, சாத்தானுக்கு அவனுடைய நித்திய தலைவிதியானது நரகம் என அறிந்துள்ளார், ஏனென்றால் தேவன் அதை வெளிப்படுத்தியுள்ளார்.

## அது கட்டளையிடப்பட்டுள்ளதால் நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள்:

தேவனுடைய சித்தத்தை அறிதல் முக்கியமானது ஏனென்றால் அதை அறியவும் செய்யவும் கட்டளையிடப்பட்டுள்ளீர்கள்:

> **ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள். (எபேசியர் 5:17)**
>
> **கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள். (எபேசியர் 6:6)**

தேவனின் உங்களுக்கான பலி மற்றும் துதியின் அவருடைய வாஞ்சை விட அவருடைய சித்தத்திற்கு அதிகம் கீழ்ப்படிவதே அவர் வாஞ்சிக்கின்றார்:

> **அதற்குச் சாமுவேல்: கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம்.**
>
> **இரண்டகம்பண்ணுதல் பில்லிசூனியப்பாவத்துக்கும், முரட்டாட்டம்பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரகாராதனைக்கும் சரியாய் இருக்கிறது. (1 சாமுவேல் 15:22-23)**

தேவன் நீங்கள் பூரணமாக நின்று, அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதை வாஞ்சிக்கின்றார்:

> **எப்பாப்பிராவும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறான், உங்களைச் சேர்ந்தவனும் கிறிஸ்துவின் ஊழியக்காரனுமாகிய இவன், நீங்கள் தேவனுக்குச் சித்தமானவைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாயும் பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலைநிற்கவேண்டுமென்று, தன் ஜெபங்களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறான். (கொலோசெயர் 4:12)**

## அது கொள்கையின் சத்தத்திற்கு விளைவாய் இருக்கின்றது:

இயேசு கூறினார்:

> **அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்துகொள்ளுவான். (யோவான் 7:17)**

உங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவனுடைய சித்தத்தை நீங்கள் செய்வீர்களாயின், கொள்கையின் சத்தத்தை நியாயம் தீர்ப்பதிற்கான ஆவிக்குரிய முதிர்ச்சியை நீங்கள் விருத்தி செய்து கொள்ளுவீகள். இது தவறான போதனையின் ஏமாற்றுதலிலிருந்து உங்களை தப்ப பண்ணும்.

## அது பதிலளிக்கப்பட்ட ஜெபத்தின் விளைவை ஏற்படுத்தும்:

நீங்கள் தேவனுடைய சத்தத்தின் ஜீவிக்கும்போது, நீங்கள் நம்பிக்கையுடன் ஜெபிக்கும்போது உங்களுடைய விண்ணப்பங்கள் கேட்கப்படும்:

> **அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்குமுன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக்கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம். (1 யோவான் 3:22)**

> **பாவிகளுக்குத் தேவன் செவிகொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம், ஒருவன் தேவபக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவி கொடுப்பார். (யோவான் 9:31)**

> **நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். (1 யோவான் 5:14)**

## அது ஆவிக்குரிய ஆசீர்வாதத்தை கொண்டு வரும்:

தேவனுடைய சத்தத்தை நீங்கள் செய்தால் ஆவிக்குரிய ஆசீர்வாதம் வாக்குப்பண்ணப்பட்டுள்ளது:

> **நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது. (எபிரெயர் 10:36)**

ஆசீர்வாதம் பொதுவாக உங்களை துரத்தும்:

> **இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின்படியெல்லாம் செய்ய நீ கவனமாயிருக்கும்படிக்கு, அவர் சத்தத்திற்கு உண்மையாய்ச் செவி கொடுப்பாயானால், உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார்.**

**நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்துக்குச் செவிகொடுக்கும்போது, இப்பொழுது சொல்லப்படும் ஆசீர்வாதங்களெல்லாம் உன்மேல் வந்து உனக்குப் பலிக்கும். (உபாகமம் 28:1-2)**

## அது உங்களை தண்டிப்பதிலிருந்து தவிர்ப்பதற்கு உதவும்:

தண்டித்தல் என்பது ஒழுக்கம், மீள்பரீட்சித்தல், சரிப்படுத்தல் என அர்த்தமாகும். தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட சித்தத்திலிருந்து திரும்பியவர்கள் அனைவரும் தண்டிக்கப்படுவார்கள்:

**இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய எல்லாக் கற்பனைக-ளின்படியும் கட்டளைகளின்படியும் நடக்கக் கவனமாயிருக்கிறதற்கு, அவர் சத்தத்திற்குச் செவிகொடாதேபோவாயாகில், இப்பொழுது சொல்லப்படும் சாபங்களெல்லாம் உன்மேல் வந்து, உனக்குப் பலிக்கும். (உபாகமம் 28:15)**

**அன்றியும்: என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்துகொள்ளப்படும்போது சோர்ந்துபோகாதே.**

**கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக் கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறது போல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள்.**

**நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார், தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ?**

**எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயி ராமல் வேசிப்பிள்ளைகளாயிருப்பீர்களே.**

**அன்றியும், நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும்போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்கவேண்டுமல்லவா? (எபிரெயர் 12:5-9)**

இயேசு கூடவும் எச்சரித்தார்:

**தன் எஜமானடைய சித்தத்தை அறிந்தும் ஆயத்தமாயிராமலும், அவனுடைய சித்தத்தின் படி செய்யாமலும் இருந்த ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான். (லூக்கா 12:47)**

பூரண வாழ்க்கை வாழ்ந்து, தண்டனையை தவிர்க்க வாஞ்சையுள்ளோருக்கு தேவனுடைய சித்தத்தை அறிதல் மிகவும் முக்கியமான காரியம் ஆகும்.

## அது வெற்றியின் விளைவை தரும்:

இஸ்ரவேல் ஜாதியிற்கு தலைவனாக யோசுவா ஏற்படுத்தப்படும்போது அவனுக்கு கொடுக்கப்பட்ட

ஓர் அறிவுறுத்தலானது தேவனுடைய கட்டளைகளை வைத்திருந்து, அவருடைய வழியில் நடப்பதா-கும். இதை அவன் செய்தால், இந்த உத்தரவாதத்திற்கு யோசுவா உரித்துடையவராவார்:

**அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய். (யோசுவா 1:8)**

தேவனுடைய வழியில் நடக்கும் மனிதன் சித்தி பெறுவான் எனவும், "அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்" (சங்கீதம் 1:3) எனவும் சங்கீதம் பதிவு செய்துள்ளது. தோல்வியினால் நிறைந்த உலகத்-திலிருந்து, தேவனுடைய சித்தத்தை அறிந்து செய்தல் வாழ்க்கையின் வெற்றிற்கான இரகசியமாகும்.

## சரியான உந்துதல்

நீங்கள் தேவனுடைய சித்தத்தை செய்தல் வேண்டும் ஏனென்றால் நீங்கள் அவரை நேசிக்கின்றீர்கள். அன்பு நேசிக்கப்படும் ஒரு பொருளை வேண்டுவதற்கு வாஞ்சையாய் இருக்கும்:

**நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள். (யோவான் 14:15)**

**நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்.**

**என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான், நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்-துவேன் என்றார். (யோவான் 14:21)**

**இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார், நாங்கள் அவ-னிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம். (யோவான் 14:23)**

## சுய பரிசோதனை

1. திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்.

..........................................................................................................................................................

2. தேவனுடைய சித்தத்தை செய்தவதற்கான சரியான உந்துதல் என்ன?

.........................................................................................................................................................

3. தேவனுடைய சித்தத்தை செய்வது ஏன் முக்கியம் என்னும் காரணங்கள் 10 பட்டியலிடுக?

............................. ............................. ............................. ............................. ..............................

............................. ............................. ............................. ............................. ..............................

4. “சித்தம்” என்னும் வார்த்தையை வரைவிலக்கணப்படுத்துக:....................................................

5. தேவனுடைய சித்தத்திற்கான மூன்று அர்த்தங்களை இனங்காணுங்கள்:

..........................................................................................................................................................

6. இன்றைய உலகில் கிரியை செய்யும் மூன்று வகையாக சித்தங்கள் என்ன?

..........................................................................................................................................................

7. கீழ்வரும் வாக்கியங்களை வாசிக்கவும். வாக்கியம் உண்மையானால், அதற்கு முன்னால் உள்ள இடைவெளியில் ச என்னும் எழுத்தை எழுதவும், வாக்கியம் தவறானால், அதற்கு முன்னால் உள்ள இடைவெளியில் பி என்னும் எழுத்தை எழுதவும்?

அ................ தேவனுடைய சித்தத்தை செய்வதற்கு இயேசு கரிசனை செலுத்தவில்லை.
ஆ................. மனிதனிடத்தில் தன்னுடைய சொந்த வழியை சரியாக வழிநடத்துவதற்கான இயலுமை இல்லை என வேதாகமம் குறிப்பிடுகின்றது.
இ................. தேவனுடைய நீதியான சித்தத்தை சிலசமயங்களில் தேவனுடைய தனிப்பட்ட சித்தம் ஏற்றுக்கொள்ளாது.
ஈ................. எதிர்காலத்திற்கான பூரண அறிவை தேவன் மாத்திரமே கொண்டுள்ளார்.
உ................ உங்களுடைய சொந்த சித்தத்தில் நடப்பதினால் மாபெரும் ஆவிக்குரிய ஆசீர்வாதத்தை நீங்கள் அனுபவம் பெற முடியும்.

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. தேவனுடைய சித்தத்தின் மாபெரும் வலியுறுத்தலை அப்போஸ்தலனாகிய பவுல் வைக்கின்றார். கீழ்வரும் வசனங்களை படியுங்கள்:

   அப்போஸ்தலர் 16:6-10; ரோமர் 1:10; 15:32; 1 கொரிந்தியர் 1:1; 4:19; 16:7; 2 கொரிந்தியர் 1:1; எபேசியர் 1:1; கொலோசெயர் 1:1; 2 தீமோத்தேயு 1:1

2. இந்த அதிகாரத்தில் கொடுக்கப்பட்ட அட்டவணையான "தேவனுடைய சித்தத்தின் மூன்று அர்த்தங்கள்" மேலதிக வேதாகம வசனங்களோடு விரிவாக்கப்பட்டுள்ளன. தேவனுடைய ஆளுகை, தனிப்பட்ட மற்றும் நீதியான சித்தத்தின் மேலதிக விளக்கங்களுக்கு இந்த வசனங்களை படியுங்கள்.

### "தேவனுடைய சித்தத்தின்" மூன்று அர்த்தங்கள்

| ஆளுகை (புளூலீமா) | தனிப்பட்ட (தெலீமா) | நீதி |
|---|---|---|
| தேவனால் பிரபஞ்சத்தற்கு ஏற்கனவே செய்யப்பட்ட திட்டம் | ஒவ்வொரு தனிப்பட்டவர்களுக்காகவும் தேவனுடைய விரிவான திட்டம் | நாம் எவ்வாறு விசுவாசித்து வாழ வேண்டும் என போதிக்கும் தேவனுடைய வார்த்தையில் எழுதப்பட்டு வெளிப்படுத்தப்பட்ட நீதியான கட்டளைகளாகும். |
| மனிதனுடைய தீர்மானத்தினால் தாக்கமுற செய்யாது | மனிதனுடைய திட்டத்தினால் தாக்கமுறச்செய்யும். | தேவனுடைய தனிப்பட்ட சித்தமானது அவருடைய நீதியான சித்தத்தோடு இணக்கமாகும். |
| ரோமர் 11:33-36<br>அப்போஸ்தலர் 2:23<br>அப்போஸ்தலர் 4:27-28<br>ரோமர் 9:19<br>நீதிமொழிகள் 16:33<br>எபேசியர் 1:11<br>வெளிப்படுத்தல் 4:11<br>நீதிமொழிகள் 21:1<br>தானியேல் 4:35 | ஆதியாகமம் 24<br>நீதிமொழிகள் 16:9<br>சங்கீதம் 32:8<br>நீதிமொழிகள் 3:5-6<br>எபேசியர் 5:17<br>எபேசியர் 6:6<br>ரோமர் 12:2<br>கொலோசெயர் 1:9<br>கொலோசெயர் 4:12 | உதாரணங்கள்:<br>2 கொரிந்தியர் 6:14<br>ரோமர் 2:18<br>1 தெசலோனிக்கேயர் 5:18<br>1 தெசலோனிக்கேயர் 4:3<br>(தேவனுடைய வசனத்தில் எழுதப்பட்ட அனைத்து மற்ற கட்டளைகள்) |

## அதிகாரம் நான்கு

# தவறான திசையிற்கான தலையங்கம்

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ வழிகாட்டலை எதிர்பார்ப்பதிற்கான வேதாகம முறையல்லாதவற்றை இணங்காணவும்,
- ☐ தேவனுடைய உண்மையான மற்றும் தவறான தீர்க்கதரிசிகளிற்கிடையில் வேறுபாட்டை காணவும்,
- ☐ "போட்டியிடுதல்" என்னும் வார்த்தையை வரைவிலக்கணப்படுத்தவும் முடியும்.

**திறவுகோல் வசனம்:**

> **கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன். (எரேமியா 10:23)**

### அறிமுகம்

ஒரு காரியத்தை செய்ய அறிந்திருக்கும்போது அதை எவ்வாறு செய்யாமல் இருப்பது என அறிந்திருத்தல் அதைப்போல முக்கியமானதாகும்.

ஐக்கிய நாடுகளை சேர்ந்த தோமஸ் எடிசன் என்னும் பெயருடைய மாபெரும் கண்டுப்பிடிப்பாளர் மின்குமிழை பூர்த்தி செய்தவதற்கு முன் 1,000 முறைகளில் பரீட்சையில் தோல்வியுற்றார். அதற்கான அனைத்து நேரங்களை நீங்கள் வீணாக்கினீர்களா என கேட்டபோது அவர் "இல்லை, அதில் செய்ய முடியாத 1000 வழிகளை நான் கண்டுபிடித்தேன்" என்றார். எதிர்காலத்தில், வேலைசெய்ய முடியாத முறைகளில் நேரத்தை செலவிட அவருக்கு அவசியம் இல்லை.

உங்களுடைய வாழ்க்கையில் வழிகாட்டல்களை எதிர்பாக்கக்கூடாத வழிகளை குறித்து வேதாகமம் எச்சரிக்கின்றது. இந்த எச்சரிப்பை நீங்கள் கவனித்தால், தேவன் ஏற்றுக்கொள்ளாத வேதம் முறையற்ற வழிகாட்டல்களில் நீங்கள் உங்களுடைய நேரத்தை வீணாக்க மாட்டீர்கள். இது வாழ்க்கையில் தவறான வழிகாட்டல்களை செய்வதற்கும், தவறான தீர்மானங்களை எடுப்பதிலிருந்தும் உங்களை தவிர்க்கும்.

மற்ற அதிகாரத்தில் கடந்த காலத்தில் தேவன் அவருடைய சித்தத்தை எவ்வாறு வெளிப்படுத்தினார் என்றும், தற்காலத்தில் மனிதரோடு அவர் எவ்வாறு பேசுகின்றார் என்றும் நீங்கள் கற்பீர்கள். ஆனால் முதலில், நாம் மறையானவற்றை நீக்க வேண்டும். இந்த முறைகளில் நீங்கள் வழிகாட்டலை எதிர் பார்க்க கூடாது.

### மந்திரீகம்

மந்திரீகத்திற்கு கீழ் அநேக சாத்தானின் வேலைகளை செய்யும் குழுக்கள் காணப்படுகின்றன. அநேக

இந்த கிரியைகளானது வழிகாட்டலை கண்டறிவதற்கான பயன்படுகின்றது. மாந்திரீகத்தின் வேலையானது ஜாதிக்கு ஜாதி வேறுபடுகின்றது, ஆனால் அவைகள் பொதுவாக மந்திரவாதிகள், சூனியக்கரார்கள், மாயவித்தைக்காரர்கள், எதிர்காலத்தை கூறுவோர், சாஸ்திரம், ஜோதிடம், தேயிலை இலைகள் வாசிப்பு, படிகங்கள், அட்டைகள் மற்றும் உள்ளங்கை முறைகளையும் உள்ளடக்குகின்றது. மாந்திரிக கிரியைகளானது தேவனல்லாத எவ்விதமான இயற்கைநிலையை உள்ளடங்கும். இந்த கிரியைகள் சாத்தானின் உந்துதல்களால் ஏற்படுத்தப்படுகின்றன.

மாந்திரிக கிரியைகளோடு சம்பந்தப்படவேண்டாம் என தேவன் தமது மக்களுக்கு எச்சரிக்கின்றார். நீங்கள் இந்த எச்சரிப்புக்களை உபாகமம் 18:9-14 மற்றும் யாத்திராகமம் 22:18 வாசிக்கலாம்.

மாந்திரிக கிரியைகளானது கறுப்பு வெள்ளை மந்திரம், பில்லிசூனியம், ஜோதிடம், வூடோ, மருந்துக்கள், மயக்கம், ஏனைய மருந்து, மயக்க பொருட்கள், போதைப்பொருட்களின் பயன்பாடுகள் போன்ற மந்திரிகங்களை உள்ளடக்கும். இது இதையொத்த அனைத்து சாத்தானிய கிரியைகளையும், துதிகளையும் உள்ளடக்கும். மாந்திரிகமும், ஏனைய சாத்தானிய கிரியைகளும் தேவனுக்கு எதிரான ஆவிக்குரிய கலகங்களாகும்:

> **இரண்டகம்பண்ணுதல் பில்லிசூனியப்பாவத்துக்கும்... (1 சாமுவேல் 15:23)**

சுவிசேஷத்திலிருந்து மக்களை திருப்புவதற்கு மாயவித்தைக்காரன் முயற்சித்தாக வேதாகமம் பதிவு செய்துள்ளது:

> **மாயவித்தைக்காரன் என்று அர்த்தங்கொள்ளும் பேரையுடைய அந்த எலிமா என்பவன் அதிபதியை விசுவாசத்தினின்று திருப்பும்படி வகைதேடி, அவர்களோடு எதிர்த்துநின்றான். (அப்போஸ்தலர் 13:8)**

மாந்திரீகம் மக்களை ஏமாற்றுகின்றது:

> **உன் சூனியத்தால் எல்லா ஜாதிகளும் மோசம்போனார்களே.... (வெளிப்படுத்தல் 18:23)**

தேவனுடைய இராஜ்ஜியத்தில் சூனியக்காரர்கள் பிரவேசிப்பதில்லை:

> **சூனியக்காரரும்..... புறம்பே இருப்பார்கள். (வெளிப்படுத்தல் 22:15)**

சாத்தானின் கிரியைகளை உபயோகிப்போரின் இறுதியை வெளிப்படுத்தல் புஸ்தகம் வெளிப்படுத்துகின்றது:

> **சூனியக்காரரும், இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார். (வெளிப்படுத்தல் 21:8)**

வழிகாட்டல் மற்றும் வேறு மற்ற காரணங்களுக்கான குறிக்கோளுக்காக மாந்திரிக கிரியைகளை எதோ ஒரு வகையில் தேவனுடைய உண்மையான பிள்ளைகள் உள்ளடக்குவதில்லை.

## வாய்ப்பு முறைகள்

பழைய ஏற்பாட்டில் வழிகாட்டலை எதிர்பார்த்து உபயோகிக்கப்பட்ட ஓர் முறை சீட்டு போடுதல் ஆகும். நீங்கள் இந்த முறை பயன்படுத்துவதை குறித்து லேவியராகமம் 16:7-10; எண்ணாகமம் 26:55; 27:21; யோசுவா 18:10ல் வாசிக்கலாம்.

சீட்டு போடுதல் ஓர் வாய்ப்பு முறையாகும். சீட்டு போடுதலின் வெளியீடானது தேவனுடைய கட்டுப் பாட்டின் உள்ளது என விசுவாசிக்கப்படுகின்றது. தாயக்கட்டையை உருட்டுதல் அல்லது சில்லறை காசை சுண்டிவிடுதல் இன்றைய காலத்தில் சீட்டுப்போடுதலுக்கு ஒத்ததாகும்.

பழைய ஏற்பாட்டில் இந்த முறையில் தேவனிடம் வழிகாட்டலை எதிர்பார்த்தல் ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தது. புதிய ஏற்பாட்டில் சீட்டுப்போடுதலின் உபயோகம் விசுவாசிகளால் பரிசுத்த ஆவியானவரின் வருகைக்கு முன் இருந்தது. இயேசுவை காட்டிக்கொடுத்து, பின்பாடு தற்கொலை செய்துகொண்ட யூதாசால் விட்டுசென்ற வெற்றிடத்தை நிரப்புவதற்காக இயேசுவின் அப்போஸ்தலர் எதிர்பார்த்தனர். இந்த வெற்றிடத்திற்கு இரண்டு பேர் பரிந்துரைக்கப்பட்டனர்:

> **பின்பு, அவர்களைக்குறித்துச் சீட்டுப்போட்டார்கள், சீட்டு மத்தியாவின்பேருக்கு விழுந்தது, அப்பொழுது அவன் பதினொரு அப்போஸ்தலருடனே சேர்த்துக்கொள்ளப்பட்டான். (அப்போஸ்தலர் 1:26)**

யூதாவின் இடத்திற்கு எடுக்கப்பட்ட மனிதனான மத்தியா, புதிய ஏற்பாட்டு பதிவில் மீண்டும் ஒரு போதும் குறிக்கப்படவில்லை. அப்போஸ்தலர்கள் மத்தியில் வெற்றிடத்தை பொதுவாக அப்போஸ்தலனாகிய பவுலே நிரப்பினார். மத்தியா சீட்டின் மூலம் மனிதனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர். அப்போஸ்தலனாகிய பவுல் பரிசுத்த ஆவியாவனவரால் தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

பரிசுத்த ஆவியின் வருகையிற்கு பிற்பாடு (அப்போஸ்தலர் 2ல் பதிவு செய்யப்பட்டுள்ளது) வழிகாட்டலை அறிந்து கொள்ளுவதற்காக விசுவாசிகளினால் சீட்டு உபயோகிக்கப்படவில்லை. பரிசுத்த ஆவியின் வழிகாட்டுதலானது இந்த பழைய ஏற்பாட்டு முறையை மாற்றியமைத்தது. தேவ-னுடைய சித்தத்தை அறிந்து கொள்ளுவதற்கு எந்த வாய்ப்பு முறையையும் நீங்கள் பயன்படுத்த முடியாது. நீங்கள் தேவனுடைய சத்தத்தை அறிந்து, பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட வேண்டும்.

## தோல்

தேவனுடைய சித்தத்தை அறிய “தோல்” என அழைக்கபடும் ஒன்றை பயன்படுத்தியதாக பழைய ஏற்பாட்டில் ஓர் பதிவு உள்ளது. கிதியோனின் தோல் தொடர்பான கதையை நியாயாதிபதிகள் 6:36-40ல் நீங்கள் வாசிக்கலாம்.

தேவன் கிதியோனோடு பேசி அவருடைய சித்தத்தை வெளிப்படுத்தினார். தேவன் சொன்னதை உறதிப்படுத்த, கிதிதோன் தோலை தரையிலே போடுவித்தார். ஒரு நாள் தோலை தவிர சுற்றிலும் பனியை பெய்விக்கும்படி அவன் தேவனிடம் கேட்டான். அடுத்த நாளில் சுற்றிலும் காய்ந்திருந்து, தோலில் மாத்திரம் பனி பெய்யும்படி அவன் தேவனிடம் கேட்டான்.

ஜாதியின் நெருக்கடியான நேரத்தில், கிதியோன் மேலுள்ள மாபெரும் பொறுப்பின் சமயத்தில் அவன் செய்ததுபோல விசுவாசிகளுக்கான ஆலோசனையில் வேதாகமத்தில் எந்தவொரு வசனத்திலும் இல்லை. புதிய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியாவனவரின் ஊற்றுதலுக்கு முன்னர் மாத்திரம் பயன்படுத்திய சீட்டு போடுதலை போல் வேதாகமத்தில் இச்சம்பவம் ஓர் தடவை மாத்திரமே நடைபெற்றுள்ளது.

தோலை போடுவதின் மூலம் நாம் தேவனுடைய சித்தத்தை எதிர்பார்க்க கூடாது. “குறித்த காரியம் நடைபெற்றால், அது தேவனுடைய சித்தம் என நான் அறிந்து கொள்வேன்” என கூறுவதிலிருந்து நவீன தோல் மூலமான காரியங்கள் நடைபெறுகின்றன -- ஆனால் எமது தோல் சம்பந்தமான காரியங்கள் இயற்கையான நடைபெற கூடியவையாகும்.

வேதாக பதிவில் “தோல்” சம்பந்தமான காரியத்தில், கிதியோன் தேவனுடைய சித்தத்தை ஏற்கனவே அறிந்திருந்தான். அவன் தேவனுடைய சத்தத்தை கேட்டான். தோல் உறுதிப்படுத்தலுக்கு பயன் படுத்தபட்டதே தவிர, வழிகாட்டுதலுக்கு அல்ல. இயற்கைசக்திகளால் மாத்திரம் பதிலளிக்கப்பட கூடிய ஏதோ ஒன்றும் கூட ஆகும்.

புதிய ஏற்பாட்டு நாட்களில் யோவான் ஸ்நானகனின் பிறப்பு குறித்தான தேவனுடைய செய்தியின் உறுதிப்படுத்தலுக்கான அடையாளத்தை சகரியா கேட்டபோது, அவன் செவிடனானான். இது காரணமானது அவன் தேவனுடைய சத்தத்தை விசுவாசியாமல், அடையாளத்தை எதிர்பார்த்ததினால் ஆகும் (லூக்கா 1:18-20)

“இந்தப் பொல்லாத விபசாரச் சந்ததியார் அடையாளத்தைத் தேடுகிறார்கள்” (மத்தேயு 12:39) என இயேசு கூறினார். தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட சித்தத்தை செய்வதற்கான அவிசுவாசம் அல்லது சித்தமின்மையே தோலின் அடையாளமாக கூட இருக்கலாம். இயற்கையிற்கூடாக பதிலளிக்கப்படும் தோலானது ஏமாற்றுதலாகவும், தவறான வழிநடத்துதலாகவும் இருக்கலாம்.

சில சமயங்களில், தோல் அல்லது அடையாளங்களினால் அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதற்கான சில அடையாளங்களை கேட்டவர்களுக்கு தேவன் கிருபையினால் பதிலளித்துள்ளார். எவ்வாறாயினும் இந்த கிரியையானது, தேவனுடைய மாபெரும் புனிதர்களின் வாழ்க்கையில் வழிகாட்டலை எதிர்பார்த்ததைவிட இன்னுமொர் ஒரு காரியமாகும். ஞாபத்தில் கொள்ளுங்கள்.. மனிதனுடைய விசுவாசத்தையே தேவன் வேண்டுகின்றார், தோல் அல்ல. மனிதர்கள் அவர் பேசும் போது அவர் சத்தத்தை கேட்டு, அடையாளங்களின் மூலம் அதை பரீட்சிக்காத நிலையை அவர் வேண்டுகின்றார்.

## தவறான தீர்க்கதரிசிகள்

தேவனுடைய அநேக தீர்க்கதரிசிகளின் கதைகளை வேதாகமம் பதிவு செய்துள்ளது. தீர்க்கதரிசி எனப்படும் சபையின் தலைவர்களை தேவன் ஏற்படுத்தியுள்ளார் என இது வெளிப்படுத்துவதோடு, தீர்க்கதரிசனம் எனப்படும் பரிசுத்த ஆவியின் ஆவிக்குரிய வரத்தை விபரிக்கின்றது (எபேசியர் 4:11 மற்றும் 1 கொரிந்தியர் 12:12).

தேவனுடைய விசேட ஏவுதலின் கீழ் “தீர்க்தரிசனம்” பேசப்படல் வேண்டும். தெய்வீக வசன அபிஷேகத்திற்கூடாக தேவன் அவருடைய மக்களுக்கு உடனடியான செய்தியை பெற்று, தொடர்பாடல்

பண்ணுவதற்கான இது ஓர் விசேட இயலுமையாகும். தெய்வீக ஏவுதலின் கீழ் தீர்க்கதரிசிகளினால் பேசப்படும் வார்த்தைகள் தீர்க்கதரிசனம் என அழைக்கபடுகின்றது. புத்தி, பக்தி விருத்தி, ஆறுதல் போன்ற தேவனிடமிருந்தான வார்த்தைகளை திறந்த ரீதியில் அறிவித்தலின் அர்த்தமே தீர்க்கதரிசனம் ஆகும்.

**தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ மனுஷருக்குப்பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகத்தக்கதாகப் பேசுகிறான். (1 கொரிந்தியர் 14:3)**

தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையை தீக்கதரிசனம் ஒருபோதும் மீள் நிரப்பாது. தீர்க்கதரிசனம் ஒழிந்து போனாலும் தேவனுடைய வார்த்தை என்னென்றைக்கும் நிலைத்து நிற்கும் என வேதாகமம் கூறுகின்றது (1 கொரிந்தியர் 13:8, 1 பேதுரு 1:25)

பழைய ஏற்பாட்டு மக்கள் வழிகாட்டுதலுக்காக தீர்க்கதரிசிகளிடம் சென்றார்கள் ஆனால் பரிசுத்த ஆவியானவரின் வரமாகிய மீள்நிரப்பப்படுதல் இன்னும் கொடுக்கப்படவில்லை. ஆவிக்குரிய வழி காட்டுதலை பெறும்படியாக்கு தீர்க்கதரிசிகளிடத்தில் செல்ல ஒருபோதும் அவசியம் இல்லை. இது விசுவாசிகளின் வாழ்க்கையில் ஓர் செயற்பாடு ஆகும். தேவனுடைய ஆவியினால் வழிநடத்தப்பட ஒவ்வொரு விசுவாசிகளும் கற்றுக்கொள்ள வேண்டும்.

பரிசுத்த ஆவியின் வரம் கொடுக்கப்பட்ட பிற்பாடு தீர்க்கதரிசிகளிடமிருந்து விசுவாசிகள் வழிகாட்டுதல்களை எதிர்பார்த்த எந்தவொரு பதிவும் புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்படவில்லை, ஆனால் தேவன் எதிர் காலத்தை உறுதிப்படுத்த இந்த வரத்தை இன்னும் உபயோகிக்கின்றார். அப்போஸ்தலர் 21:1-14ல் இதற்கான உதாரணத்தை நீங்கள் படிக்கலாம். அகபு பவுலுக்கு தனிப்பட்ட தீர்க்கதரிசனத்தை கொடுத்தார், இங்கு இது பவுலுக்கு விசேடமாக கொடுக்கப்பட்டதாகும்.

பவுல் எருசலேமில் அவனுக்கு காத்திருந்ததை ஏற்கனவே அறிந்திந்தார். அங்கு என்ன நடைபெறும் என்பதை தீர்க்கதரிசனம் மட்டுமே உறுதிப்படுத்தும். பவுல் எருசலேமுக்கு போக வேண்டுமா அல்லது இல்லையா என்னும் வழிகாட்டுதலை சொல்லுவதற்கான தீர்க்கதரிசனம் இது அல்ல.

உலகத்தின் தவறான தீர்க்கதரிசிகளை குறித்து வேதாகமம் எச்சரிக்கின்றது (மத்தேயு 24:11, 24; மாற்கு 13:22). இதன் காரணத்தால், உண்மையான தீர்க்கதரிசனத்தை இனம்காண தேவன் வழி-களை ஏற்படுத்தி உள்ளார். வேதாகமம் குறிப்பிடுகின்றது:

**நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களான படியி-னாலே, நம்மில் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப்பிரமாணத்துக் கேற்றதாகச் சொல்லக்கடவன். (ரோமர் 12:6)**

“விசுவாசப்பிரமாணத்துக்கேற்றதாக” என்னும் வார்த்தையின் அர்த்தம் விசுவாசத்தின் சரியான தொடர்பு என்பதாகும். வேதாகமத்திற்கு இசைவாக உள்ளதா அல்லது இல்லையா என்பதின் மூலமே உண்மையான தீர்க்கதரிசனத்தை இனங்காணுவதற்கான வழி ஆகும். வேதாகமம் குறிப்பிடுகின்றது:

**தீர்க்கதரிசிகள் இரண்டுபேராவது மூன்றுபேராவது பேசலாம், மற்றவர்கள் நிதானிக்கக்-கடவர்கள். (1 கொரிந்தியர் 14:29)**

நாம் தீர்க்கதரிசனங்களை நியாயம்தீர்க்க அறிவிக்கப்பட்டுள்ளோம். நியாயம்தீர்ப்பின் உயர்தகுதி தேவனுடைய வசனமாகும்.

தேவன் தவறான தீர்க்கதரிசனங்களை அறிந்துகொள்ளுவதற்கு பல வழிகளை ஏற்படுத்தியுள்ளார். தவறான தீர்க்கதரிசியானவர்களை அவர்கள் பேசியவைகள் நிறைவேறாமலிருப்பதினூடாக அறியலாம்:

> **சொல்லும்படி நான் கட்டளையிடாத வார்த்தையை என் நாமத்தினாலே சொல்லத் துணியும் தீர்க்கதரிசியும், வேறே தேவர்களின் நாமத்தினாலே பேசும் தீர்க்கதரிசியும் சாகக்கடவன்.**
>
> **கர்த்தர் சொல்லாத வார்த்தை இன்னதென்று நான் எப்படி அறிவேன் என்று நீ உன் இருதயத்தில் சொல்வாயாகில்,**
>
> **ஒரு தீர்க்கதரிசி கர்த்தரின் நாமத்தினாலே சொல்லும் காரியம் நடவாமலும் நிறை வேறாமலும்போனால், அது கர்த்தர் சொல்லாத வார்த்தை, அந்தத் தீர்க்கதரிசி அதைத் துணிகரத்தினால் சொன்னான். அவனுக்கு நீ பயப்படவேண்டாம். (உபாகமம் 18:20-22)**

தவறான தீர்க்கதரிசிகளை இனங்காணுவதற்காக வேறு வழிகளை விபரிக்கும் வேதாகமத்தின் வசனங்களை கீழ்வருவனவற்றில் படியுங்கள்:

-இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்தை தவறான தீர்க்கதரிசிகள் அறிக்கை செய்ய மாட்டார்கள்: 1 யோவான் 4:1-3

-தவறான தீர்க்கதரிசிகள் தவறான போதனையை போதிப்பார்கள்: 2 பேதுரு 2:1-3

-தவறான தீர்க்கதரிசிகள் தேவனுடைய வசனத்தை கீழ்ப்படிவதல்லாத வழியில் மக்களை நடத்துவார்கள்: உபாகமம் 13:1-5

-தவறான தீர்க்கதரிசிகள் அற்புத அடையாளங்களினால் மக்களை ஏமாற்றுவார்கள்: மத்தேயு 24:11-24

-தவறான தீர்க்கதரிசிகள் தவறான அறிக்கைகளை ஏற்படுத்துவார்கள்: மத்தேயு 24:23-24

-அவர்களுடைய கனி அவர்களுடைய தவறை வெளிப்படுத்தும்: தவறான தீர்க்கதரிசிகளை நல்ல தீர்க்கதரிசிகளிலிருந்து வேறுப்படுத்தும் ஓர் நல்ல வழி அவர்களுடைய வாழ்க்கையை கவனித்தல் ஆகும். அவர்களுடைய "கனிகளினால்" அவர்களை நீங்கள் அறிவீர்கள் என வேதாகமம் கூறுகின்றது. தவறான தீர்க்கதரிசிகள் அவர்களுடைய வாழ்க்கையில் ஆவிக்குரிய கனியின் ஆதாரத்தை கொண்டிருக்க மாட்டார்கள். மத்தேயு 7:16

உலகத்தில் தவறான தீர்க்கதரிசிகள் இருப்பதின் காரணத்தினால், தீர்க்கதரிசனங்களை ஏற்றுக் கொள்ளுவதற்கான எச்சரிக்கையை நீங்கள் பயிற்றுவிக்க வேண்டும். விசுவாசிகளை வழிகாட்டி, கட்டுப்படுத்த தீர்க்கதரிசனம் தவறாக கூட பயன்படுகின்றது. தனிப்பட்ட தீர்க்கதரிசனங்கள கொடுக்கப்

படும்போது அது வசனங்களின் தொடர்பினால் பரீட்சிக்கப்படல் வேண்டுவதோடு, தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையோடு அது ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும். வழிகாட்டுதல் சம்பந்தமாக, வழிகாட்டுதலோ அல்லது கட்டுப்பாடு இல்லாமல், தீர்க்கதரிசனம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

இந்த ஆவிக்குரிய வரங்களை தவறாக உபயோகிப்பதின் காரணத்தினால், சில விசுவாசிகள் அதை முற்றாக புறக்கணிக்கின்றனர். தீர்க்கதரிசன வார்த்தையின் அற்புதமான வரத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆனால் நீங்கள் பரிசுத்த ஆவியாவரின் ஊழியத்தை புறக்கணிக்க கூடாது, ஏனென்றால் மனித பாத்திரங்களின் சில வாஞ்சைகளின் உதாரணங்களுக்கு நீங்கள் சாட்சியாக இருக்கின்றீர்கள்.

## தவறான ஆலோசனை

வேதாகமத்தில் விசேடமாக வெளிப்படுத்தப்பட்ட காரியங்களை தவிர ஒருவருடைய தேவனுடைய சித்தத்தை எந்த மனிதனாலும் அறிந்து கொள்ள முடியாது. உதாரணத்திற்கு, வேதாகமத்தின் போதிக்கப் பட்டுள்ளபடி அனைத்து மனிதர்களும் மனந்திரும்புதலுக்கூடாக வருவது தேவனுடைய சித்தம் என நாம் அறிந்துள்ளோம்.

ஆவிக்குரிய ஆலோசனைகளின்படியான விசுவாசிகளின் வழிநடத்துதலில் முக்கியமான இடத்தை தேவனுடைய தலைவர்கள் எடுக்கின்றார்கள், ஆனால் மற்ற நபரை கட்டுப்படுத்தும் உரிமை அல்லது வசனத்தின் சம்பந்தமான காரியம் இல்லாமல் அவனுக்கான தேவனுடைய சித்தத்தை அறிதல் எந்த ஆலோசகருக்கும் இல்லை.

அப்போஸ்தலனாகிய பவுல் எருசலேமுக்கு செல்லுவதற்கான தீர்மானித்த போது, செசரியாவிலுள்ள அவனுடைய நண்பர்கள் அதை செய்வதிலிருந்து தடுக்க முயற்சித்தனர். அங்கு அவன்மேல் விழும் பயங்கரமான உபத்திரவத்தை குறித்து அவர்கள் எச்சரித்தார்கள். பவுல் அவர்களுடைய ஆலோசனையை புறக்கணித்து, எருசலேமுக்கு சென்ற போது, அவனுடைய தீர்மானத்தை அவர்கள் இவ்வாறு கூறி ஏற்றுக்கொண்டார்கள்:

**கர்த்தருடைய சித்தம் ஆகக்கடவதென்று அமர்ந்திருந்தோம். (அப்போஸ்தலர் 21:14)**

அவர்கள் அவன் செல்லாதிருப்பது அவனுடைய தனிப்பட்ட தீர்மானம் என்று கூட உணர்ந்திருந்தார்கள், தனக்கான தேவனுடைய சித்தத்தை பவுல் அறிந்திருக்க வேண்டும்.

உங்களை குறித்தான தேவனுடைய சத்தத்தை அறிய வருதல் முக்கியமானதாகும். உங்களுடைய வாழ்க்கையை நடத்த மற்றவர்களை நீங்கள் நம்ப முடியாது, ஏனெனால் வஞ்சிக்கின்ற நோக்கமுடைய தீய ஆவிகள் உலகத்தில் காணப்படுகின்றது. நீங்கள் எச்சிக்கப்பட்டுள்ளீர்கள்:

**பிரியமானவர்களே, நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள். (1 யோவான் 4:1)**

நீங்கள் மற்ற நபரிடமிருந்து ஆலோசனையை பெறும்போது, அந்த வழிகாட்டல் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ளுவதற்கான மற்ற முறைகளினால் பரீட்சிக்கப்பட்டித்தல் வேண்டும். இது இந்த பாடத்தின் பின்னரான அதிகாரத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

## மனப்பான்மைகள்

மாம்சத்தின் ஓர் கிரியைகளாக கலாத்தியர் 5:20ல் மனப்பான்மைகள் பட்டியலிடப்படுத்தப்பட்டுள்ளன. மாம்சத்தின் கிரியைகளானது தேவனை பிரியப்படுத்தாத பல்வேறுப்பட்ட பாவ நிலைகளாகும்.

மனப்பான்மைகள் என்பது மற்றவர்களை போல் செய்தல் அல்லது சமப்படுத்தல் அல்லது சிறந்து விளங்குவதற்கான வாஞ்சை ஆகும். இது பொறாமையின் ஓர் வடிவத்திலிருந்தும், பகைமையின் ஆவியிலிருந்தும் கிளையெடுக்கின்றது. சில விசுவாசிகள் தம்முடைய சொந்த வாழ்க்கையின் தேவ-னுடைய திட்டத்தை தேடுவதிலிருந்து மற்றவர்களுடைய வெற்றியின் ஊழியத்தை செயற்படுத்தி காட்டுவர். ஒரே வேலையை இரண்டு விசுவாசிகளினால் செய்ய முடியாது. விசேட ஊழியத்திற்கு மக்களை பரிசுத்த ஆவியானவர் அழைக்கின்றார்:

> **அவர்கள் கர்த்தருக்கு ஆராதனைசெய்து, உபவாசித்துக் கொண்டிருக்கிறபோது: பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்து விடுங்கள் என்று பரிசுத்தஆவியானவர் திருவுளம்பற்றினார். (அப்போஸ்தலர் 13:2)**

விசுவாசிகளிடம் வித்தியாசமான ஆவிக்குரிய வரங்கள் கொண்டிருப்பதாக வேதாகமம் குறிப்பிடுகின்றது:

> **வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, இவைகளையெல்லாம் அந்த ஒரே அவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார். (1 கொரிந்தியர் 12:4,11)**

"முக்கியமான வரங்களை நாடுங்கள்" (1 கொரிந்தியர் 12:31) மற்றும் "ஞானவரங்களையும் விரும்புங்கள்" (1 கொரிந்தியர் 14:1) என நாம் கூறப்பட்டுள்ளோம், இது மற்ற ஊழிய அடையாளங்களை கொண்டவர்களை போல் நாம் பின்பற்ற வேண்டும் என அர்த்தம் இல்லை. யோவானுடைய ஊழியத்தை குறித்து பேதுரு கரிசனை சொல்லும்போது. இயேசு கூறுகின்றார்:

> **நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால், உனக்கென்ன, நீ என்னைப் பின்பற்றிவா என்றார். (யோவான் 21:22)**

தேவன் நோவாவிடம் கப்பல் தொடர்பான திட்டத்தை கொடுத்தார். அவர் மோசேயிடம் ஆசாரிப்புகூடாரம் தொடர்பான திட்டத்தை கொடுத்தார். அவர் சாலேமோனிடம் தொழுவதற்கான மாபெரும் தேவாலய திட்டத்தை கொடுத்தார். எருசலேம் மதில்களை மீள் கட்டும்படியான திட்டம் நெகேமியாவிற்கு கொடுக்கப்பட்டது. கப்பலை கட்டவோ, தேவாலயத்தை அமைக்கவோ, அல்லது எருசலேம் நகரை சுற்றி மதிலை அமைக்கவோ தேவன் உங்களுக்கு கூற வில்லை. ஆனால் உங்களுகான விசேட திட்டத்தை தேவன் கொண்டுள்ளார்! நீங்கள் பாவத்தின் மனப்பான்மையிலிருந்து விழுந்து, மற்றவர்-களைப்போன்று செய்தால், அவருடைய திட்டத்தை நீங்கள் இழந்து விடுவீர்கள்.

மற்றவர்களுடைய ஜீவியத்தை போல் உங்களுடைய வாழ்க்கையின் மாதிரியாக கொண்டால், மனித பாரம்பரியத்திற்குள் நீங்கள் மூழ்கி, தெய்வீக வெளிப்படுத்தலானது மனித பாரம்பரியத்தினால் மறைக்கப்பட்டு விடும்.

## சுய பரிசோதனை

1. திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்.

.................................................................................................................................................

.................................................................................................................................................

2. “மனப்பான்மை” என்னும் வார்த்தையின் அர்த்தம் என்ன?

.................................................................................................................................................

3. கீழ்வரும் வாக்கியங்களை வாசிக்கவும். வாக்கியம் உண்மையானால், அதற்கு முன்னால் உள்ள இடைவெளியில் ச என்னும் எழுத்தை எழுதவும், வாக்கியம் தவறானால், அதற்கு முன்னால் உள்ள இடைவெளியில் பி என்னும் எழுத்தை எழுதவும்:

அ................ மாந்திரீக கிரியைகளுக்கூடாக வழிகாட்டலின் எதிர்பார்ப்பை ஏற்றுக்கொள்ளும் படியாக வேதாகமம் போதிக்கின்றது.
ஆ................ உங்களுக்கான வழிகாட்டலை தேவனிடமிருந்து பெறமுடியாவிடத்து, உங்க-ளுடைய வாழ்க்கையை வழிக்காட்ட மற்ற மக்களை அடிப்படையில் கொள்ளுதல் பாது காப்பானதாகும்.
இ................ தீர்க்கதரிசி சொல்லபவற்றை எப்பொழுதும் உண்மையாகவும், உங்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய சித்தமாகவும் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.
ஈ................. தெய்வீக வெளிப்படுத்தலானது மனித பாரம்பரியத்தினால் மறைக்கப்பட்டு விடும்.
உ............... சீட்டு போடுதல் மற்றும் வாய்ப்புக்களின் வேறு முறைகள் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ளுவதற்கான நல்ல வழிகளாகும்.
ஊ.............. தேவனுடைய சித்தத்தை அறிய உறுதியான வழிகளின் ஒன்று தோலை போடு-தல் என வேதாகமம் போதிக்கின்றது.
எ.............. உண்மையான தீர்க்கதரிசியிலிருந்து தவறானவரை வேறுபிரிப்பதற்கான மிகவும் நல்ல ஓர் வழி அவர்களுடைய நடத்தையை அவதானித்தலாகும்.
ஏ.............. உண்மையான தீர்க்கதரிசனம் எப்பொழுதும் தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையை ஏற்றுக்கொள்ளுகின்றது.
ஐ.............. தனிப்பட்ட தீர்க்கதரிசனம் வழியிற்கும், ஆலோசனைகளுக்கும் அன்றி, உறுதிப் படுத்தலுக்கு மாத்திரமே ஆகும்.

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

தவறான வழிநடத்துதலின் செல்லப்பட்ட மாபெரும் தேவனுடைய மனிதர்களுடைய கதைகளை வேதாகமம் பதிவு செய்துள்ளது, ஏனென்றால் அவர்கள் தேவனுடைய சத்தத்தை கேட்கவில்லை. நீங்கள் கற்றவற்றை குறித்து வாசித்து சுருக்கமாக்குங்கள்......

வழிகாட்டுதலுக்கான சூனியக்காரியிடம் சென்ற சவுல் இராஜா: 1 சாமுவேல் 28

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

சூனியக்காரரிடம் ஆலோசனை பெற்ற மனாசே: 2 நாளாகமம் 33:16

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

தேவன் தனக்கு செய்ய சொன்னதிலிருந்து கீழ்ப்படிவதற்கு மாறாக தீர்க்கதரிசி என உரிமை கோரப்பட்ட மனிதனிடம் செவிகொடுத்த பெயரிடப்படாத தேவனுடைய மனிதன்: 1 இராஜாக்கள் 13.

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

மனிதர்களுடைய தவறான ஆலோசனையை செவிகொடுத்த பிலேயாம்: எண்ணாகமம் 22.

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

## அதிகாரம் ஐந்து

# தேவனுடைய சித்தத்தின் மாதிரி

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ தேவனுடைய சித்தத்தை கருத்திற்கொள்ளும் அடிப்படை காரணிகளை பட்டியலிடவும்,
- ☐ தேவனுடைய சித்தத்தின் இரண்டு பிரதான பிரிவுகளை இனம் காணவும்,
- ☐ வாழ்க்கை சூழ்நிலைகளில் தீர்மானங்களை எடுப்பதற்கு தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையை பயன்படுத்தவும்,
- ☐ தேவனுடைய சித்தத்தின் மாதிரியை விபரிக்கவும்,
- ☐ தேவனுடைய சித்தத்தின் உறுதிப்படுத்தலை விசுவாசிகள் விருத்தி செய்வதற்கு ஓர் மாதிரியை இனம்காணவும்,
- ☐ எழுதப்பட்ட வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய சித்தத்தை மேலதிகமாக கற்கவும் முடியும்.

**திறவுகோல் வசனம்:**

> **தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார்.**
>
> **மேலும் கிறிஸ்துவின்மேல் முன்னே நம்பிக்கையாயிருந்த நாங்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கும்படிக்கு,**
>
> **தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே, நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்துகொள்ளப்பட்டோம். (எபேசியர் 1:10-12)**

## அறிமுகம்

தேவன் அவருடைய சித்தத்தை வெளிப்படுத்தி மனிதர்களுக்கு பேச உபயோகிக்கும் முறைகளை நீங்கள் பரீட்சிப்பதற்கு முதல், தேவனுடைய சித்தத்தை குறித்தான அடிப்படை சில அறிவுகளை நீங்கள் கொண்டிருக்க வேண்டும். “தேவனுடைய சித்தம்” என்பதின் அர்த்தம் என்ன என்றும், தவறான வழிகாட்டலை எதிர்பார்க்கும் வழிமுறைகளை இனங்காணவும் கடந்த அதிகாரம் வரை விலக்கணப்படுத்தியது.

இந்த அதிகாரம் தேவனுடைய சித்தத்திற்கான அடிப்படை காரணிகளை கொடுப்பதோடு, அந்த சித்தத்தின் இரண்டு பிரதான பிரிவுகளை விபரித்து, தேவனுடைய சித்தத்தின் மாதிரியை உதாரணப்படுத்தி, தேவனுடைய சித்தத்தை அறிவதற்கான விசுவாசிகளின் விருத்தியை குறித்து கலந்தாலோசிக்கும்.

## தேவனுடைய சித்தத்தை குறித்தான காரணிகள்

தேவனுடைய சித்தத்தை குறித்தான அடிப்படை காரணிகள் இங்கு தரப்பட்டுள்ளது:

### தேவன் அவருடைய சித்தத்தை நீங்கள் அறிய வேண்டுகின்றார்:

தேவனுடைய சித்தத்தை அறிவதற்கு இயலுமான விசுவாசமானது இரண்டு அடிப்படையான காரணிகளில் தங்கியுள்ளது:

முதலாவது: உங்களுக்கான தேவன் கொண்டிருக்கும் திட்டத்தின் நம்பிக்கை.
இரண்டாவது: உங்களோடான தேவனின் தொடர்பாடும் இயலுமை.

மனிதர்களோடு தேவன் தொடர்பாடும் முறைகளானது பின்தொடரும் இரண்டு அதிகாரங்கள் விபரிக்கின்றது. முன்னைய அதிகாரத்தில் நாம் குறிப்பிட்ட விதம், ஒரு சந்தர்ப்பதில் தீர்க்கதரிசியோடு பேசுவதற்கு அவர் சாதாரண கழுதையை உபயோகித்ததுபோல் மனிதர்களோடு அதிகம் தொடர்பாட தேவன் விரும்புகின்றார். (எண்ணாகமம் 22).

வேதாகமம் கட்டளையிடுகின்றது:

> **ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள். (எபேசியர் 5:17)**

பவுல் கொலோசெயருக்கு எழுதியுள்ளார்:

> **இதினிமித்தம், நாங்கள் அதைக் கேட்ட நாள்முதல் உங்களுக்காக இடைவிடாமல் ஜெபம்பண்ணுகிறோம், நீங்கள் எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும் அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும்... (கொலோசெயர் 1:9)**

அப்போஸ்தலரில் பவுல் ஒரு மனிதனிடம் பேசி கூறுகின்றதாவது:

> **நம்முடைய முன்னோர்களின் தேவனுடைய திருவுளத்தை நீ அறியவும், நீதிபரரைத் தரிசிக்கவும், அவருடைய திருவாய்மொழியைக் கேட்கவும், அவர் உன்னை முன்னமே தெரிந்துகொண்டார். (அப்போஸ்தலர் 22:14)**

இந்த வசனங்களுக்கு மேலதிகமாக, அவனுடைய எழுதப்பட்ட வார்த்தைகளில் அநேகமான வாக்குறுதியான வழிகாட்டல்களை தேவன் கொடுத்துள்ளார். (இதில் சிலவற்றை பிற்பாடு நீங்கள் கற்பீர்கள்). இந்த வசனங்களின் அடிப்படையில் தேவன் அவருடைய சித்தத்தை நீங்கள் அறிந்து கொள்ள விரும்புகின்றார் என்ற முடிவுரைக்கு வரலாம்.

### தேவனுடைய சித்தமானது திட்டமிடப்பட்டுள்ளது:

தேவன் அவருடைய திட்டத்தின் அடிப்படையில் அனைத்து காரியங்களையும் செயற்படுத்துவதற்காக இந்த உலகத்தில் கிரியை செய்கின்றார்:

> **தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின் படியே, நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்-தரமாகும்படி தெரிந்துகொள்ளப்பட்டோம். (எபேசியர் 1:12)**

தேவன் இப்பிரபஞ்சத்திற்கான அனைத்து திட்டங்களையும் வைத்திருக்கின்றார், அதில் அவர் கிரியை செய்கின்றார். நாம் இதை அவருடைய முதல்தரமான திட்டம் என அழைக்கின்றோம். அவர் ஒவ்வொரு நபருக்கான தனிப்பட்ட திட்டங்களையும் கொண்டுள்ளார். இத்திட்டங்கள் அனைத்தும் அவருடைய ஆளுகையின் திட்டங்களுக்குள்ளும், அவருடைய நீதியின் திட்டங்களுக்குள்ளும் அடங்குகின்றன.

## தேவனுடைய திட்டமானது தனிப்பட்டதாயும், தனிப்பட்டவர்களுக்காகவும் உள்ளது:

தேவனுடைய ஒவ்வொரு தனிப்பட்டவர்களின் திட்டமானது விடுதலையின் அவருடைய ஆளுகையின் திட்டத்திற்குள் அடங்குகின்றது:

> **தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். (1 பேதுரு 3:9)**

ஆனால் தேவனுடைய திட்டமானது அவருடைய ஆளுகை மற்றும் நீதியின் திட்டங்களின் வெளிப்படுத்தலுக்கு கீழ் செல்லுகின்றது. தேவன் மனிதர்களோடு தொடர்பாடுவதற்காக ஒவ்வொரு நபரிடமும் தனிப்பட்ட திட்டங்களை கொண்டிருக்கின்றார். தனிப்பட்டவர்களின் வாழ்க்கையில் தேவனுடைய அநேக கிரியைகளிலான கதைகளுக்கூடாக வேதாகமானது இதை உறுதி செய்கின்றது. விசேட குறிக்கோளுக்காக சரியான நேர சூழ்நிலைகளில் அவர் மனிதர்களை பயன்படுத்துகின்றார். வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு வாழ்க்கை கதைகளும் ஒற்றுமையானவை.

தேவன் தீர்க்கதரிசியாகிய எரேமியாவிற்கு கூறினார்:

> **நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன், நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம்பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன் என்று சொன்னார். (எரேமியா 1:5)**

தனிப்பட்டவர்களுக்கான தேவனுடைய தனிப்பட்ட திட்டத்தின் காணப்படும் மாபெரும் சாட்சி என்ன?

யோவான் எவ்வகையான ஊழியத்தை கொண்டிருக்க வேண்டும் என்பதைகுறித்து அப்போஸ்தலனாகிய பேதுரு அதிகம் கரிசனை செலுத்தும் போது, இயேசு அவரிடம் கூறினார்....

> **நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால், உனக்கென்ன, நீ என்னைப் பின்பற்றிவா என்றார். (யோவான் 21:22)**

பேதுரு மற்றும் யோவானின் வாழ்க்கையில் வித்தியாசமான திட்டங்களை இயேசு கொண்டிருந்தார்.

இப்பிரப்பஞ்சத்தில் நாம் காணும் ஒவ்வொன்றிலும் ஞானமுள்ள திட்டம் வெளிப்படையானது. கோள்கள், நட்சத்திரங்களின் கட்டமைப்பு, ஒவ்வொரு பனி மற்றும் பூக்களின் தனிப்பட்ட வடிவமைப் பானது இந்த திட்டங்களை பிரதிபலிக்கின்றது. இந்த கொடுக்கப்பட்ட ஆதாரத்தின் படி, தேவனுடைய உயர்ந்த சிருஷ்டிப்பான மனிதனுக்கு தனிப்பட்ட திட்டங்களை தெய்வீக சிருஷ்டிப்பாளர் கொண்டுள்ளார் என நாம் முடிவுரைக்கு வரவேண்டும்.

தேவன் வாக்குப்பண்ணியுள்ளார்:

> **நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன், உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன். (சங்கீதம் 32:8)**

இந்த வசனத்தில் தனிப்பட்ட நபரின் வழியானது குறிப்பிடப்பட்டுள்ளது.

நீதிமானுடைய ஒவ்வொரு படிமுறையும் தேவனுடைய உறுதிப்படுத்தல் படியானது என சங்கீதம் 37 குறிப்பிடுகின்றது:

> **நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார். (சங்கீதம் 37:23)**

இங்கு பயன்படுத்தப்பட்ட "உறுதிப்படுத்தல்" என்றும் அதே வசனம், சங்கீதம் 8:3லும் பயன்படுத்தப் பட்டுள்ளது. இது தேவன் சிருஷ்டித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் தொடர்புபடுத்துகின்றது. பிரபஞ்சத்தை குறித்தான துல்லியமான ஆச்சரியங்களை வானியல் விஞ்ஞானம் பதிவு செய்துள்ளது.

கோள்களின் கட்டமைப்பின் அதே துல்லியமான திட்டங்களை விசுவாசிகளினுடைய படிமுறை கொண்டு உள்ளது. அவர் வாக்குறுதியளித்தார்:

> **நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும். (ஏசாயா 30:21)**

தேவன் வாழ்க்கையின் மிகப்பெரிதான காரியங்களை மத்திரமல்ல, ஒவ்வொரு படிமுறைகளையும் உறுதிப்படுத்துவார்.

## தேவனுடைய திட்டம் மனிதனுடையதான வழிகள் அல்ல:

தேவனுடைய சித்தம் மனிதனுடைய வழிகளுக்கு மாறாக இருக்கலாம்:

> **என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல, உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார்.**
>
> **பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள்**

**வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது. (ஏசாயா 55:8-9)**

நீங்கள் இயற்கையான தேர்ந்தெடுக்கும்வழிகள் எப்பொழுதும் தேவனுடைய திட்டமாக இருக்காது. இதன் காரணமாகவே தேவனுடைய சத்தத்தை உணர்தல் முக்கியமானதாகும். ஆனால் இது அடுத்த படிமுறையை வெளிப்படுத்துவதான, சந்தோஷமின்மையை கொண்டுவரும் ஏதோவொன்றான தேவனுடைய சித்தம் என அர்த்தம் ஆகாது.

## தேவனுடைய சித்தம் நல்லது:

தேவனுடைய சித்தம் எப்பொழுதும் நல்லது என வேதாகமம் போதிக்கின்றது. நீங்கள் தேர்ந்தெடுக்கும் ஒன்று அவருடைய வழி இல்லை என்றாலும் கூட, எது நல்லது என தேவன் அறிவார். சங்கீதம் 27:23 தேவனால் உறுதிப்படுத்தப்பட்ட வழிகளில் நீங்கள் மகிழ்ச்சியடைவீர்கள் என குறிப்பிடுகின்றது.

தேவனுடைய சித்தம் நல்லது என பவுல் உறுதிப்படுத்துகின்றார்:

**நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். (ரோமர் 12:2)**

## தேவனுடைய திட்டம் செயற்பாட்டு தன்மையுள்ளது:

“நாம் தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்” என எபேசியர் 2:10 குறிப்பிடுகின்றது. “இருக்கின்றோம்” என்றும் வசனம் நிகழ்காலத்திற்கு உரியது. தேவன் உங்களுடைய வாழ்க்கையில் தொடர்ந்து கிரியை செய்கின்றார். அவருடைய சித்தத்தை வெளிப்படுத்துவதற்கான செயற்பாடானது தொடருகின்றது.

**ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார். (பிலிப்பியர் 2:13)**

தேவனுடைய வாஞ்சை இதுவென எபிரெய விசுவாசிகளுக்கு பவுல் எழுதியுள்ளார்....

**இயேசுகிறிஸ்துவைக்கொண்டு தமக்குமுன்பாகப் பிரியமானதை உங்களில் நடப்பித்து, நீங்கள் தம்முடைய சித்தத்தின்படிசெய்ய உங்களைச் சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களாக்குவாராக, அவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. (எபிரெயர் 13:21)**

“நடப்பித்து” என்பது நிகழ்காலமாகும். தேவன் அவருடைய திட்டம் தொடர்பாக உங்களோடு தொடர்ந்து வழிநடத்தி, விருத்தி செய்து, பேசுகின்றார். நீங்கள் தொடர்ச்சியான வழிநடத்தலுக்கு உறுதிப்படுத்தபட்டுள்ளீர்கள்.

**கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி... (ஏசாயா 58:11)**

## தேவனுடைய சித்தத்தின் இரண்டு பிரிவுகள்

தேவனுடைய சித்தத்தை அறிவதை குறித்து நாம் பேசும் போது, தேவனுடைய சித்தத்தின் இரண்டு அடிப்படை பிரிவுகளை நாம் விளங்கிக்கொள்ளுதல் வேண்டும். ஒவ்வொரு பிரிவும் மற்றையதோடு ஒத்திசைவாய் உள்ளது:

### முதலாவது: எழுதப்பட்ட அவருடைய வசனத்தில் அது வெளிப்படுத்தப்பட்டுள்ளது:

தேவனுடைய சித்தத்தின் முதலாவது பிரிவானது வேதாகமத்தில் விசேடமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. "தேவனுடைய சித்தங்களை" குறித்தான மூன்று அர்த்தங்களை கடந்த அதிகாரத்தில் நாம் கலந்துரையாடினோம். தேவனுக்கு ஆளுகை, தனிப்பட்ட மற்றும் நீதியான சித்தம் உள்ளது என நாம் அங்கு கற்றோம். இவைகள் கீழ்வரும் அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ளன.

**தேவனுடைய ஆளுகையின் சித்தம்**

| |
|---|
| தேவனுடைய நீதியின் சித்தம் |
| தேவனுடைய தனிப்பட்ட சித்தம் |

வரைப்படம் காட்டுவதைப்போல், ஒவ்வொரு தனிப்பட்டவர்களிற்கான தேவனுடைய சித்தம் எப்பொழுதும் எழுதப்பட்ட அவருடைய வசனங்களிலிருந்து வெளிப்படுத்தப்பட்டுள்ளப்படி அவருடைய ஆளுகை மற்றும் நீதியின் சித்தத்திற்குள் உள்ளடங்குகின்றது. தேவனுடைய எழுதப்பட்டுள்ள நீதியின் முழு சித்தமும் தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையிற்குள் உள்ளடங்குகின்றது. நீங்கள் எவ்விதம் வாழ வேண்டும் என்ற அனைத்து கட்டளைகளையும் இது உள்ளடங்குகின்றது. வரைப்படத்தில் நீங்கள் பார்ப்பதை போல், தேவனுடைய நீதியின் சித்தமானது அவருடைய ஆளுகையின் சித்தத்திற்குள் உள்ளடங்குகின்றது. ஒவ்வொரு மனிதர்களும் அவருடைய எழுதப்பட்ட வார்த்தையின் நீதியின் தராதரத்தில் வாழுதலே அவருடைய ஆளுகையின் சித்தமாகும். தேவனுடைய எழுதப்பட்ட வசன-மானது எமக்கு வெளிப்படுத்த அவர் தேர்ந்தெடுத்துள்ள அவருடைய ஆளுகையின் சித்தத்தின் பகுதியாகவும், மனிதர்களுக்கு பொதுவாகவும், உலகத்திற்கு முதன்மையான திட்டமாகவும் பொதுவான மேலோட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் மிகச்சிறந்த சுருக்கம் இந்த அதிகாரத்தின் திறவுகோல் வசனமாகும்:

> **தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார்.**
>
> **மேலும் கிறிஸ்துவின்மேல் முன்னே நம்பிக்கையாயிருந்த நாங்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கும்படிக்கு,**
>
> **தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே, நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்துகொள்ளப்பட்டோம். (எபேசியர் 1:10-12)**

இந்த அதிகாரத்திலுள்ள “மேலதிக படிப்பினைக்கு” பகுதியில், எழுதப்பட்டுள்ள வசனத்தில் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய சித்தத்திற்கு உதாரணமாக விசேடமான வசனங்களை நாம் பட்டியலிட்டுள்ளோம்.

## இரண்டாவது: அவருடைய வசனத்தில் அது வெளிப்படுத்தப்படவில்லை:

இரண்டாம் பிரிவான தேவனுடைய சித்தமானது அவருடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்படவில்லை. இது ஒவ்வொரு விசுவாசியின் தனிப்பட்ட வாழ்க்கை திட்டத்தில் உள்ளடக்கப்படுகின்றது. உங்களுடைய விசேட ஊழிய வாழ்க்கை, வேலை, எந்த சபையில் நீங்கள் பங்கு கொள்ள வேண்டும், நீங்கள் யாரை திருமணம் செய்ய வேண்டும், நீங்கள் எங்கு வாழ வேண்டும் போன்றவை தேவனுடைய வசனத்தில் வெளிப்படுத்தப்படவில்லை. இன்னும் இந்த ஒவ்வொரு தீர்மானங்களும் முக்கியமானவை. இது போன்ற தீர்மானங்களுக்கு நீங்கள் தேவனுடைய சித்தத்தை எதிர்பார்க்க வேண்டும் அத்தோடு அவர் உங்களோடு பேசும்போது அவருடைய சத்தத்தை கேட்கும் இயலுமையை கொண்டிருக்க வேண்டும்.

## இரண்டும் ஒப்பிடப்பட்டுள்ளன:

குறிப்பிட்ட வாழ்க்கை சூழ்நிலை சம்பந்தாக தேவனுடைய திட்டத்தை அறிய முற்படும்போது, எழுதப்பட்ட தேவனுடைய வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ள விசேட வழிகாட்டலுக்கு ஏதேனும் வசனங்களை பார்க்க முடிகின்றதா என முதலாவது படியுங்கள். அவருடைய எழுதப்பட்ட வார்த்தையில் ஏற்கனவே பேசியிருந்தால் “தேவனுடைய சித்தத்தை எதிர்பார்க்கவோ” அல்லது அவருடைய சித்தத்தை உறதிப்படுத்த கேட்கவோ அவசியம் இல்லை. ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ள விசேட வழிகாட்டுதலுக்கான வசனங்களை கவனமாக பரீட்சிக்க. உங்களில் பேசும் எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையின் சத்தத்தை ஏற்றுக்கொள்ளுங்கள். தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையில் அவர் கொடுத்த வழிகாட்டலை நீங்கள் மறுத்தால், நீங்கள் உங்களாகவே ஏமாற்றத்திற்குள் உள்ளாக்கப் படுவீர்கள்.

அநேக சந்தர்ப்பங்களில் வேதாகமம் பொதுவான கொள்கைகளை தருகின்றது -- அதை விளங்கி பிரயோகிக்கும்போது -- தேவனுடைய சித்தத்தை தொடர்ச்சியாக தீர்மானிப்பதற்கு நடத்தி செல்லும். இந்த கொள்கைகளானது பல்வேறுப்பட்ட விசேட சூழ்நிலைகளில் பிரயோகிக்கப்படுகின்றது. உதாரணத்திற்கு பவுல் எச்சரிக்கின்றார்:

> **அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக, நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது?**
>
> **கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது (சாத்தான்)? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? (2 கொரிந்தியர் 6:14-15)**

விசுவாசியும், அவிசுவாசியும் ஒன்றாக பிணைக்கப்படகூடாதென பொதுவான கொள்கைளை வேதாகமம் இங்கு தருகின்றது. அநேக வாழ்க்கை சூழ்நிலைகளில் இந்த கொள்கைகளை பிரயோகிக்கலாம்: அவிசுவாசிகளை திருமணம் செய்தல், அவிசுவாசியோடு பங்காளராக வியாபாரத்தை செய்ய செல்லுதல், அவிசுவாசியை உங்கள் நெருங்கிய நண்பராக ஏற்படுத்தி கொள்ளுதல், போன்றவை.

உங்கள் சூழ்நிலைகளில் பிரயோகிக்க கூடிய வாழ்க்கை சம்பவ உதாரண வசனங்களை தேடுங்கள். பொதுவான சூழ்நிலைகளில் தீர்மானங்களை மேற்கொள்ள கூடியவற்றை பார்க்கும்படியாக வேதாக வாழ்க்கை குணாதிசயங்களை படியுங்கள், அத்தோடு தேவனுடைய சித்தத்திற்கு குறிப்பிட்ட தீர்மானங்கள் ஒத்திசைகின்றதா என பாருங்கள்.

எழுதப்பட்ட தேவனுடைய வசனத்தில் வழிகாட்டல்கள் கொடுக்கப்படாதிருக்கும் சூழ்நிலையில், மனிதர்களோடு பேசும் வேறு முறைகளை தேவன் கொண்டுள்ளார். இதை தொடரும் இரண்டு அதிகாரங்களில் நாம் கற்போம். ஆனால் ஞாபகத்தில் கொள்ளுங்கள்: எழுதப்பட்ட தேவனுடைய வசனமானது எப்பொழுதும் தனிப்பட்ட வாழ்க்கை சூழ்நிலைகளின் வழிகாட்டியாக ஏற்றுக்கொள்ளும். எழுதப்பட்ட வார்த்தைகளின் மட்டத்தில் தேவனுடைய சத்தம் வழிநடத்தும். தற்போது கலந்துரையாடிய தேவனுடைய சித்தத்தின் இரண்டு பிரிவுகளின் சுருக்கத்தை கீழ்வரும் அட்டவணை தரும்:

## தேவனுடைய சித்தத்தின் இரண்டு பிரிவுகள்

| **வெளிப்படுத்தப்பட்டவை** (எழுதப்பட்ட வசனம்) | **வெளிப்படுத்தப்பட்டாதவை** |
|---|---|
| அவருடைய எழுதப்பட்ட வார்த்தையில் நீதி மற்றும் ஆளுகையின் சித்தம் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. | ஒவ்வொரு விசுவாசிகளுக்குமான தனிப்பட்ட வாழ்க்கை திட்டம். |
| உலகத்திற்கான அவருடைய மேலான திட்டத்தையும், அனைத்து மனிதர்களுக்கான அவருடைய பொதுவான திட்டத்தையும் உள்ளடக்கும். | வாழ்க்கை, வேலை, ஊழியம், உறைவிடம், கற்றல், திருமணம் ஆகியவற்றின் விசேட தீர்மானத்தின் உள்ளடக்கம் மற்றும் மற்ற விசேட சூழ்நிலைகளின் போதான வழிகாட்டல்கள். |
| வாழ்க்கையை நடத்துவதற்கு விசேட கட்டளைகளையும் வாக்குறுதிகளையும் உள்ளடக்கும். | |
| விசேட தீர்மானங்களின் அடிப்படையில் பொதுவான கொள்கைகளை உள்ளடக்கும். | பொதுவான கொள்கைகளின் அடிப்படையின் மேல் எடுக்கப்படும் சில தனிப்பட்ட தீர்மானங்கள், உதாரணங்கள் மற்றும் தேவனுடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள விசேட கட்டளைகள். |

## தேவனுடைய சித்தத்தின் மாதிரி

ரோமர் 12:1-2ஐ இந்த பாடத்தின் முதலாவது அதிகாரம் நோக்கமாக கொண்டுள்ளது:

> **அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.**

**நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிற-தினாலே மறுரூபமாகுங்கள். (ரோமர் 12:1-2)**

"தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் என்றால் என்ன அர்த்தம்?" என்னும் கேள்வியை நாம் கேட்கின்றோம். இந்த கேள்வியோடு நாம் இப்பொழுது தொடர்புபடுவோம். இதை செய்யும் போது தேவனுடைய சித்தத்தின் மாதிரியை கண்டு கொள்ளலாம்.

## தேவனுடைய பரிபூரணமுமான சித்தம்:

ஓர் விசுவாசி அவருடைய வாழ்க்கையில் தேவனுடைய சித்தமான நீதி, ஆளுகை மற்றும் தனிப்பட்டவைகளுக்கு ஒத்திசையாகும்போது தேவனுடைய பரிபூரண சித்தம் நிறைவேற்றப்படுகின்றது.

ஓர் விசுவாசி புதிய பிறப்பின் மூலம் தனது இரட்சிப்பிற்கூடாக தேவனுடைய ஆளுகையின் திட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ளார். தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தைகளின் நீதியான கட்டளைகளுக்கு அவர் ஒத்திசைகின்றார். அவர் அவருடைய தனிப்பட்ட வாழ்க்கை திட்டத்திற்கான தேவனுடைய விசேட வழிகாட்டலை அறிந்துள்ளார்.

## தேவனுடைய நன்மையான சித்தம்:

தேவனுடைய நன்மையான சித்தத்தில், ஓர் விசுவாசி அவருடைய வாழ்க்கையில் பூரண திட்டத்தை கொண்டிருக்க மாட்டார், ஆனால் அவர் தேவனுடைய ஆளுகை மற்றும் நீதியின் சித்தத்திற்கு உட்பட்-டிருப்பார். அவர் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படியாமல் இல்லை, அவர் தொடர்ந்தும் தன்னுடைய வாழ்க்கைக்கான தேவனுடைய பூரண தனிப்பட்ட திட்டத்தை கண்டடைய எதிர்பார்க்கின்றார்.

## தேவனுடைய சித்தத்தை ஏற்றுக்கொள்ளுதல்:

இந்த விசுவாசி தன்னுடைய வாழ்க்கையில் தேவனுடைய பூரண சித்தத்தை தவறவிட்டுள்ளார், ஆனால் இப்பகுதியை தொடர்ந்தும் ஏற்றுக்கொள்ளுகின்றார். அவர் தேவனுடைய சித்தத்திற்கு வாழ்க்கையை இடம்கொடுக்கின்றார். அவர் இன்னும்கூட தன்னுடைய வாழ்க்கைக்கையில் தேவ-னுடைய சரியான திட்டத்தை குறித்து கரிசனையற்றவராக இருக்கின்றார். அவனுக்கான தேவனுடைய பூரண சித்தம் இல்லாதிருக்கும்போது கூட தேவன் இப்பகுதியில் அவன் வாழ்வதற்கு அனுமதிய-ளிக்கின்றார்.

## தேவனடைய சித்தத்தின் வெளிப்பக்கம்:

இப்பகுதியிலுள்ள விசுவாசி தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட சித்தத்தை நேரடியாக கிழ்ப்படியாமல் இருக்கின்றார்.

## வசனத்திலிருந்தான ஓர் உதாரணம்

எண்ணாகமம் 22ம் அதிகாரத்திலுள்ள பிலேயாமின் கதையானது இப்பகுதியிலுள்ள தேவனுடைய சித்தத்தை காட்டுகின்றது. இந்த பாடத்தை தொடருவதற்கு முன்னர் அந்த கதையை வாசியுங்கள்.

தேவனுடைய தீர்க்கதரிசியான பிலேயாம் என்னும் பெயருடைய நபரிடம் சில மோவாப்பிய மனி-தர்கள் சென்று தேவனுடைய ஜனங்களாகிய இஸ்ரவேலுக்கு எதிராக தீர்க்கதரிசனம் உரைக்கும்படி கூறினர். தேவன் பிலேயாமுடன் பேசி, போக வேண்டாம் என கூறினார்:

> **அதற்கு தேவன் பிலேயாமை நோக்கி: நீ அவர்களோடே போகவேண்டாம், அந்த ஜனங்களைச் சபிக்கவும் வேண்டாம், அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்றார். (எண்ணாகமம் 22:12)**

பிலேயாமுக்கான தேவனுடைய பூரண சித்தமானது மோவாப்பிய மனிதர்களுடன் செல்லாதிருத்தல் ஆகும். ஆனால் பிலேயாம் தேவனுடைய சத்தத்திற்கு கீழ்ப்படியாமல் அந்த மனிதர்களுடன் சென்றான். அவன் அவ்வாறு செய்யும்போது, தேவனுடைய சித்த்திற்கு வெளிப்படுத்தப்பட்டதிற்கு வெளியாக கீழ்ப்படியாமையினால் செயல்பட்டார்.

பிலேயாமுக்கு தன்னுடைய திட்டத்தை அதிகம் காட்ட தேவன் வாஞ்சித்தார், ஆகவே கழுதை அவனோடு பேசும்படியாக அதை அவர் பயன்படுத்தி, அவனுடைய பாவத்தை அவனுக்கு கண்டித்தார். இதற்கு பின்பாக தேவன் இஸ்ரவேலை சபிப்பதற்கு பதிலாக ஆசிர்வத்திக்க வேண்டும் என்ற உத்தரவோடு மோவாப்பிய மனிதர்களோடு செல்லும்படி பிலேயாமுக்கு தேவன் அனுமதித்தார். இப்பொழுது பிலேயாம் தேவன் அனுமதித்த சித்தத்தை செயற்படுத்துகின்றார்.

இந்த பயணத்தின் விளைவால் பாலாக் என்னும் பெயருடைய மனிதரோடு சந்திப்பதற்கான கடும் முயற்சிகள் நடைபெற்றன. முதல் தரமானதை தேர்ந்தெடுக்காமல் இருந்து தேவனுடைய சத்தத்தை பிலேயாம் கேட்டிருந்தால் இந்த காரியம் தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

இப்பொழுது இந்த கதையை “தேவனுடைய சித்தத்தின் மாதிரி” என்னும் வரைப்படத்துடன் ஒப்பிடுக. தேவனுடைய பூரண சித்தமானது மோவாப்பிய மனிதர்களுடன் செல்லாதிருத்தல் ஆகும். பிலோயாம் கீழ்ப்படியாமல், தேவனுடைய சித்தத்திற்கு வெளிப்புறம் சென்றார். தேவனுடைய நன்மையான திட்டத்தில் அவன் இருக்கவில்லை. விசுவாசிகள் பூரண சித்தத்தை தவற விடுகின்றார்கள், ஆனால் அதை எதிர்பார்க்கின்றார்கள். அவன் தேவனுடைய சத்தத்திற்கு பூரண கீழ்ப்படியாமையினால் இருந்தான். ஏற்றுக் கொள்ளுதல் அல்லது தேவனுடைய சித்தத்தை அனுமதித்தலானது அவனுக்கு தேவனுடைய பூரண சித்தம் இல்லாதிருப்பினும் கூட பிலேயாமுக்கும் பயணத்தை செய்யும்படியாக அனுமதித்தது.

## சித்தத்தில் நடத்தல்

மறுபடியும் பிறத்தலின் அனுபவம், தேவனுடைய அன்பால் உந்தப்படுதல், விசுவாசியினுடைய நோக்கமானது தேவனுடைய சித்தத்திற்கு ஒத்ததாய் நடத்தல் ஆகியயை கீழ்வருமாறு. விசுவாசிக-ளின் தேவனுடைய சித்ததிற்கு ஏற்பதான மாதிரியானது கீழ்வரும் வரைப்படத்தின் பதங்களுக்கூடாக உள்ளது:




தேவனுடைய சித்தமானது இந்த வரைப்படத்தில் நேரான உடைப்படாத கோட்டின் மூலம் காட்டப்படுகின்றது (----------------------------). அந்த சித்தத்திற்கான மனிதனுடைய நடத்தை அம்புக்குறி மூலம் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது.

மறுபடியும் பிறத்தலின் அனுபவத்திற்கு முன் மனிதன் தன்னுடைய சொந்த வழியில் நடந்தான், இது சரியாக தேவனுடைய சித்தத்திற்கு எதிரானதாகும். மறுபடியும் பிறத்தலின் அனுபவத்திற்கு பின், விசுவாசியானவர் தேவனுடைய சித்தத்திறகு பூரணமாக ஒத்துழைத்து நடப்பதற்கு கூட எதிர்பார்க்கப் படுகின்றார். அவர் கிறிஸ்துவிற்கு புதிய சிருஷ்டியாக இருப்பினும் கூட, தேவனுடைய சித்தத்திற்கு சரியான உறுதிப்படுத்துதலுக்கான இயலுமைக்கு அவர் எதிர்பார்க்கின்றார். ஆனால் உண்மையான தினசரி வாழ்க்கையில், அவருடைய மாதிரியானது அதிகம் இதற்கு ஏற்ப காணப்படுகின்றது:




தேவனுடைய சரியான சித்தத்திற்கு மாறாக, விசுவாசிக்கு “மேலும் கீழும் நோக்கியதான” அனுபவம் காணப்படுகின்றது. சில சமயங்களில் அவர் தேவனுடைய சத்தத்தை கேட்டு, அவருடைய சித்ததை செய்கின்றார். அவர் தவறு செய்யும்போதும், தேவனைடைய சித்தத்தை தவறும்போதும் மிகவும் அதைரியமடைகின்றார். சில சமயங்களில் கூட தேவனுடைய சத்தத்தை தேடுதலுக்கு அவர்கள் தவறுகின்றார்கள்.

இனால் இந்த வரைப்படத்தை மீண்டும் பாருங்கள். நாம் முக்கியமானதொன்றை இழந்துள்ளோம்! விசுவாசிகள் தேவனுடைய சத்தத்தை சில சமயங்களில் தவறும்போது இது உண்மையாகின்றது, மேல்நோக்கிய திசைகளில் காட்டப்பட்டுள்ள அம்புக்குறிகளானது அவருடைய வாழ்க்கை நடத்தை மேல்நோக்கியதை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது என்பதை குறித்து கொள்ளுங்கள். சில சமயங்களில் தேவனுடைய சித்தத்திலிருந்து அவன் கீழ்நோக்கி விழுந்தாலும், முழு மாதிரியும் ஓர் செயற்பாட்டை கொண்டது.

புள்ளிகளான கோடானது தேவனுடைய சித்தத்திலிருந்து அவன் எவ்விதம் மாறுபடுகின்றான் என காட்டுகின்றது, அதை உணர்ந்து கொள்ளுங்கள், இந்த அனுபவத்திலிருந்து படியுங்கள், தேவனுடைய திட்டத்திற்கு ஏற்ப அவன் மீண்டும் வருகின்றான். தோல்விகளும், வெற்றிகளும் இருப்பினும் கூட, விசுவாசி தேவனுடைய சத்தத்தை கேட்க இன்னும் கற்கின்றார். நேரான மற்றும் மறையான இரு அனுபவங்களுக்கூடாகவும் வாழ்க்கையில் வழிநடத்தப்பட்ட தேவனுடைய கொள்கைகளை விளங்கி அவர் தொடர்ந்து வளருகின்றார்.

இவ்விதமாக தேவனுடைய சித்தத்தை உணரும்போது, அவரோடு வாழும் பாக்கியத்தை பெற்று, சிறந்த எல்லையற்ற உறவுமுறையாக மாறி விடுகின்றது. தேவனுடைய சித்தமானது கட்டுப்பாடு அல்லது கட்டளைக்குள் வருவதற்கு ஏற்படுகின்றது. அவருடைய திட்டத்தோடு உங்கள் வாழ்க்கையை கொண்டு செல்ல கற்பதற்கு அது சவாலாக மாறுகின்றது.

## வேதாகம உதாரணம்

தாவீது இராஜாவின் உதாரணத்தை கொள்ளுங்கள். அவருடைய பூலோக வாழ்க்கையின் போதான வரைப்படமானது தேவனுடைய சித்தத்திற்கு ஏற்ப இவ்விதமாக காணப்பட்டது:




தாவீது முதலாவதாக இராஜாவானவுடன், தேவனுடைய சித்தத்திற்கு ஏற்ப நடந்தார். தேவன் தன்னுடைய சொந்த இருதயத்திற்கு அடுத்ததாக தாவீதை கூட அழைத்தார். ஆனால் தாவீது இன்னொருவரின் மனைவியிற்கூடாக பாவம் செய்தபோது முறையற்ற குழந்தை பிறந்தது. இது தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையின் நேரடியான கீழ்ப்படிவின்மையாகும். தாவீது மனந்திரும்பி தேவனுக்கு முன்பாக வந்து, மன்னிக்கப்பட்டு, தேவனுடைய சித்தத்தின் வழியில் மீண்டும் வந்தார்.

மனிதர்களோடு தேவன் பேசும் வழிகளை அடுத்த இரு அதிகாரங்களில் நாம் பரீட்சிக்கும்போது வரைப்படம் இரண்டை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். இது உங்களுக்கு முழுவதுமாக தேவனுடைய சித்தத்திற்கு ஏற்றான மாதிரியாகும். இது முக்கியமானதும் கூட.

தேவனுடைய சத்தத்தை அறிவதற்கு படிக்கும் ஒவ்வொரு அனுபவதிற்கூடாகவும் மற்றும் நேர், மறை ஆகிய இரண்டிலும், தேவனுடைய பூரணமான சித்தத்தை நீங்கள் அறியும் மேலதிகமான இயலுமையை தொடரலாம். அவ்வப்போதான தோல்விகள் ஏற்படுவதினாலும் கூட தொடர்ந்து போராடுங்கள். ஒரு போதும் விட்டு கொடுக்க வேண்டாம்!

## சுய பரிசோதனை

1. திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்.

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

2. கொடுக்கப்பட்ட இடைவெளியில் தவறவிடப்பட்ட வார்த்தையை நிரப்புவதின் மூலம் கீழ்வரும் வாக்கியத்தை நிரப்புங்கள் ?

இந்த அதிகாரத்தில் கலந்துரையாடப்பட்ட தேவனுடைய சித்தத்தின் இரண்டு பிரிவுகளானது ................ ................ ல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது ................ ................ ல் வெளிப் படுத்தப்படவில்லை.

3. கீழ்வரும் வாழ்க்கை சூழ்நிலைகளில் பிரயோகிக்க கூடிய வேதாக கொள்கையை தருக:

“நான் அவிசுவாசியான மனிதருக்கு நிச்சயிக்கப்பட்டுள்ளேன். அவர் இரக்கம், மரியாதை மற்றும் உயர்ந்த நீதியான தராதரம் உடையவர். நான் விசுவாசி என்றாலும், அவர் விசுவாசி அல்ல. திருமணத்திற்கு பின் சபைக்கு சமூகமளிப்பதற்கும், அவரும் கூட என்னோடு வருவதற்கும் பிரச்சனை அல்ல என அவர் என்னிடம் கூறினார். எமது நிச்சயிக்கப்பட்ட திருமணத்திற்கு சம்பந்தமான தேவனுடைய சித்தம் செய்யப்படுவதை குறித்து நான் ஜெபம் செய்கின்றேன்.”

இங்கு பிரயோகிக்கப்படும் வேதாகம கொள்கையானது....

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

4. இந்த அதிகாரத்தில் கலந்துரையாடப்பட்ட தேவனுடைய சித்தத்தை குறித்தான ஆறு காரணிகளை பட்டியலிடுக:

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

5. இந்த வாக்கியம் உண்மையா அல்லது தவறா: தேவனுடைய வசனத்தில் குறித்த காரியம் சம்பந்தமாக அவருடைய சித்தத்தை அவர் வெளிப்படுத்தியிருந்தால் நீங்கள் இன்னும் அவருடைய உறுதிப்படுத்தலை எதிர்பார்க்க வேண்டும். இந்த வாக்கியம் ............ .........................

6. விசுவாசிகளுக்கு தேவனுடைய சித்தத்தின் பொதுவானவையை கீழ்வரும் எந்த வரைப்படம் அதிகம் தத்துரூபமாக காட்டுகின்றது:

வரைப்படம் அ

**புதிய பிறப்பின் அனுபவம்** ➔ ➔ ➔ ➔ ↗ ↗ ↘ ➔ ➔ ➔ ➔

வரைப்படம் ஆ

**புதிய பிறப்பின் அனுபவம்** ➔ ➔ ➔ ➔

7. இந்த அதிகாரத்தில் தேவனுடைய சித்தத்தின் மாதிரியாக காட்டப்பட்ட நான்கு பகுதிகள் என்ன?

........................................................................... ...........................................................................

........................................................................... ...........................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

மனிதரோடு தேவன் அவருடைய சித்தத்தை தொடர்பாடுவதற்கு எழுதப்பட்ட வார்த்தைகளுக்கூடாக உதாரணங்களும் பொதுவான கொள்கைகளும் காணப்படுகின்றன. அநேக காரியங்களில் வெளிப்படுத்தப்பட்ட அவருடைய சித்தமான தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தைகளில் விசேட அறிவுறுத்தல்களாகவும்கூட இருக்கின்றது. இது வேதாகமத்தின் அனைத்து வாக்குறுதிகளையும் கட்டளைகளையும் உள்ளடக்குகின்றது. சில வசனங்களில். தேவன் மிகவும் குறிப்பிட்டு பொதுவாக குறிப்பிடுவார் "இது உனக்கான என்னுடைய சித்தம்...." இந்த வசனங்கள் உங்களுடைய கற்றலுக்காக பட்டியலிடப்பட்டுள்ளன. இந்த பட்டியலில் தேவனுடைய வசனத்தின் உங்களுடைய சொந்த படிப்பை நீங்கள் சேர்த்துக் கொள்ளலாம்.

தேவன் உங்களுக்கு அவருடைய சித்தமான வெளிப்படுத்தப்பட்டுள்ள சில காரியங்கள் என்ன? கீழ்வரும் வசனங்களை படியுங்கள்:

### உங்களுக்கான அவருடைய திட்டம்:

**குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்தியஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது என்றார். (யோவான் 6:40)**

**அவர் எனக்குத் தந்தவைகளில் ஒன்றையும் நான் இழந்துபோகாமல், கடைசி நாளில் அவைகளை எழுப்புவதே என்னை அனுப்பின பிதாவின் சித்தமாயிருக்கிறது. (யோவான் 6:39)**

**பிதாவானவர் எனக்குக் கொடுக்கிறயாவும் என்னிடத்தில் வரும், என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை. (யோவான் 6:37)**

**அவர் நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார். (கலாத்தியர் 1:4)**

**தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்துமூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திர-ராகும்படி முன்குறித்திருக்கிறார்.**

**காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்-திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்று,**

**தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார்.**

**தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின் படியே, நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்து கொள்ளப்பட்டோம். (எபேசியர் 1:6,9,10,12)**

அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜநிப்பித்தார். (யாக்கோபு 1:18)

## உங்களுக்கு அன்புக்குரிய ஒருவரின் அவருடைய சித்தம்:

தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். (2 பேதுரு 3:9)

## உங்களுடைய பரிசுத்தம் தொடர்பான அவருடைய சித்தத்தின் கரிசனை:

நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாகவேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி, நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்து... (1 தெசலோனிக்கேயர் 4:3)

## ஜெபம் மற்றும் நன்றி தொடர்பான அவருடைய சித்தம்:

இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள். எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள், அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது.
(1 தெசலோனிக்கேயர் 5:17-18)

பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன். பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார். (மத்தேயு 16:19)

## உங்களுடைய வாழ்க்கை தொடர்பான அவருடைய சித்தம்:

நீங்கள் நன்மைசெய்கிறதினாலே புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. (1 பேதுரு 2:15)

## பரிசுத்த ஆவி தொடர்பான உங்களுக்கான அவருடைய சித்தம்:

கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்கதரிசனஞ்சொல்லுவார்கள். உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள். உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்.

என்னுடைய ஊழியக்காரர்மேலும், என்னுடைய ஊழியக்காரிகள்மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தீர்கதரிசனஞ் சொல்லுவார்கள். (அப்போஸ்தலர் 2:17-18)

## கிறிஸ்தவ சாட்சி தொடர்பான உங்களுடைய அவருடைய சித்தம்:

இயேசு அவர்களை நோக்கி: என்பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்கு-வேன் என்றார். (மாற்கு 1:17)

பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப்போஸ்தலர் 1:8)

## கிறிஸ்துவிற்குள் குழந்தைகள் தொடர்பான அவருடைய சித்தம்:

இவ்விதமாக, இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல. (மத்தேயு 18:14)

## துன்புறுத்தல் தொடர்பான அவருடைய சித்தம்:

ஆகையால் தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மைசெய்கிறவர்களாய்த் தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுக்கக்கடவர்கள். (1 பேதுரு 4:19)

## பொருள் உடமை தொடர்பான அவருடைய சித்தம்:

முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும். (மத்தேயு 6:33)

கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும். (லூக்கா 6:38)

## உங்களுடைய நித்திய விதி தொடர்பான தேவனுடைய திட்டம்:

பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன். (யோவான் 17:24)

## அதிகாரம் ஆறு

# தேவன் மனிதர்களோடு எவ்வாறு பேசுகின்றார்

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ தேவன் மனிதர்களோடு பேசும் பல்வேறுப்பட்ட வழிகளை பட்டியலிடவும்,
- ☐ மனிதனோடு தொடர்பாடுவதற்கு தேவனுடைய இயலுமையானது எல்லையிற்குட்பட்டதல்ல என்பதை உணர்ந்துகொள்ளவும் முடியும்.

**திறவுகோல் வசனம்:**

> **ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள். (எபேசியர் 5:17)**

## அறிமுகம்

வேதாகமானது தேவன் மனிதரோடு தொடர்புபட்ட முறையின் வரலாறு எனவும், தேவனுடைய சத்தத்திற்கான மனிதனுடைய பிரதியுத்தரவு எனவும் இந்த பாடத்தின் அறிமுகத்தில் நாம் குறிப்பிட்டுள்ளோம். இந்த அதிகாரமானது மனிதனோடு தேவன் தொடர்புபட்ட முறைகளை கண்டுபிடிப்பதற்கான வேதாகம பதிவுகளை பரீட்சிக்கின்றது.

## எழுதப்பட்ட வார்த்தை

முன்னைய அதிகாரத்தில் நாம் கற்றபடி, தேவன் எழுதப்பட்ட வார்த்தைகளுக்கூடாக மனிதரோடு பேசுகின்றார். வசனங்களில் ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்ட காரியங்கள் தொடர்பாக நீங்கள் கரிசனை கொள்ளும்படி தேவனுக்கு பேசுவதற்கு அவசியம் இல்லை. மற்ற தொடர்பாடும் முறைகளை தேவன் பயன்படுத்தும்போது, அவைகள் ஒருபோதும் அவருடைய எழுதப்பட்ட வார்த்தைகளோடு முரண்படாது.

## ஜெபம்

ஜெபத்தின் விளைவாக தேவன் பேசும் பல வேதாகம உதாரணங்கள் காணப்படுகின்றன. ஜெபமும், உபவாசமும் பவுலையும், பர்னபாவையும் தேவனோடு பேசுவதற்கு விளைவாயிற்று:

> **அவர்கள் கர்த்தருக்கு ஆராதனைசெய்து, உபவாசித்துக் கொண்டிருக்கிறபோது: பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்து விடுங்கள் என்று பரிசுத்தஆவியானவர் திருவுளம்பற்றினார். அப்பொழுது உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை அனுப்பினார்கள். (அப்போஸ்தலர் 13:2-3)**

ஜெபமானது பூலோகத்தில் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கான விண்ணப்பத்தையும் உள்ளடக்கும். இயேசு அவருடைய சீடர்களுக்கு ஜெபம் செய்யும்படி உபதேசித்தார்:

> **உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக. (மத்தேயு 6:10)**

இயேசு அவருடைய சீஷர்களை தேர்ந்தெடுக்கும் முன்னர் தேவனிடம் வழிகாட்டும்படி ஜெபம் செய்தார்:

> **அந்நாட்களிலே, அவர் ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறி, இராமுழுவதும் தேவனை நோக்கி: ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார். பொழுது விடிந்தபோது, அவர் தம்முடைய சீஷர்களை வரவழைத்து, அவர்களில் பன்னிரண்டுபேரைத் தெரிந்து கொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார். (லூக்கா 6:12-13)**

இயேசு அவருடைய மரணத்திற்கு முன்பதாக தேவனுடைய சித்தத்திற்காக ஜெபித்தார்:

> **பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும், ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது... (லூக்கா 22:42)**

## ஆலோசனையாளர்கள்

கிறிஸ்தவ ஆலோசனையாளர்களோடு தேவன் அவருடைய சித்தத்தை தொடர்பாடுகின்றார். தேவனுடைய மனிதர்களிடமிருந்து வழிகாட்டலை மக்கள் எதிர்பார்ப்பதுதான் அநேக வேதாக உதாரணங்கள் காணப்படுகின்றன.

வேதாகமம் குறிப்பிடுகின்றது:

> **ஆலோசனையில்லாத இடத்தில் ஜனங்கள் விழுந்துபோவார்கள், அநேக ஆலோசனைக்காரர் உண்டானால் சுகம் உண்டாகும். (நீதிமொழிகள் 11:14)**
>
> **மதியீனனுடைய வழி அவன் பார்வைக்குச் செம்மையாயிருக்கும், ஆலோசனைக்குச் செவி கொடுக்கிறவனோ ஞானமுள்ளவன். (நீதிமொழிகள் 12:15)**

## சூழ்நிலைகள்

தேவன் சூழ்நிலைகளுக்கூடாக அவருடைய திட்டத்தை தொடர்பாடுகின்றார். இதற்கான பழைய ஏற்பாட்டில் மிகச் சிறந்த உதாரணம் ஆதியாகமம் 37-50ல் பதிவுசெய்யப்பட்டுள்ள யோசேப்பினுடைய வாழ்க்கை ஆகும்.

யோசேப்பினுடைய சகோதரர்கள் எகிப்தில் அடிமையாக அவனை விற்றார்கள் ஆனால் இதை தேவ-னுடைய வழிகாட்டலாக அவன் காண்பித்தான்:

**என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப்போட்டதினால், நீங்கள் சஞ்சலப்படவேண்டாம், அது உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம், ஜீவரட்சணை செய்யும்படிக்குத் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார்..... பூமியிலே உங்கள் வம்சம் ஒழியாமலிருக்க உங்களை ஆதரிக்கிறதற்காகவும், பெரிய ரட்சிப்பினால் உங்களை உயிரோடே காப்பதற்காகவும் தேவன் என்னை உங்களுக்கு முன்னமே அனுப்பினார். ஆதலால் நீங்கள் அல்ல, தேவனே என்னை இவ்விடத்துக்கு அனுப்பி...**
**(ஆதியாகமம் 45:5-8)**

தனிப்பட்ட ரீதியில் யோசேப்பினால் கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலைகளுக்கூடாகவும், கடும் பஞ்ச நேரத்தில் ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கையை காப்பாற்றுவதற்கு தேவன் அவனை உபயோகித்தார்.

1 தெசலோனிக்கேயர் 2:18ல் பவுல் சில சுவாரஸ்யமான சம்பவங்களை எழுதியுள்ளார். அவர் சாத்தானுடைய தடையால் அங்கு பிரவேசிப்பதற்கு அவரால் முடியவில்லை என தெசலோனிக்கேனியாவிலிருந்த விசுவாசிகளுக்கு கூறினார். அங்கு அவர் செல்லாதிருந்தாலும் கூட, அவர் தெசலோனிக்கேய சபைக்கு கடிதம் எழுதினார். சாத்தானுடைய தடை 1 தெசலோனிக்கேயர் புத்தகத்திற்கு விளைவாயிற்று, அத்தோடு சந்திப்பதைவிட அதிகம் தாக்கம் ஏற்பட்டுள்ளது என்பது பவுல் பகிர்ந்த முக்கியமான செய்தியாகும். இது அனைத்து விசுவாசிகளுக்கும் நன்மைக்காக நூற்றாண்டுகளாக கடந்து கொண்டு வருகின்றது.

தேவனுடைய ஞானத்திற்கு அப்பால் எதுவும் நடைபெறாது. தேவனுடைய சித்தத்தை நீங்கள் பெற்றுக் கொள்ளும்படியாக சூழ்நிலைகளின் தடைகள் ஏற்பட்டாலும் கூட, தேவன் இன்னும் கட்டுப்பாட்டில் இருக்கின்றார். சாத்தானுடைய அல்லது மனிதனுடைய தம்முடைய சொந்த குறிக்கோளை நிறைவேற்றும் பொருட்டு தேவன் எந்த காரியங்களையும் எடுக்கலாம். சூழ்நிலைகள் குறித்தான தேவனுடைய அற்புதமான வாக்குத்தத்தத்தை நாம் பெற்றுள்ளோம்:

**அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த்தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். (ரோமர் 8:28)**

(எச்சரிக்கையின் ஓர் வசனம்: சூழ்நிலைகள் சம்பந்தமாக தேவனுடைய சித்தத்தை அறிய கவனம் என்னும் வார்த்தை உபயோகப்படுகின்றது. உதாரணத்திற்கு, நினிவேயிற்கு சென்று பிரசங்கிக்கும்படி யோனா என்னும் பெயருடைய தீர்க்கதரிசிக்கு தேவன் கூறினார். அவர் கடற்கரையிற்கு வந்தபோது, தர்ஷீசுக்கு செல்லும் கப்பல் காணப்பட்டது. நினிவேயிற்கு செல்வதற்கு பதிலாக இந்த கப்பலை அவர் எடுத்தார். அவர் கூறியிருக்கலாம், “இந்த கப்பலில் எதிர்திசையில் செல்லுவற்கு எனக்கு ஓர் அறை திறந்திருக்கும், ஆகவே நான் செல்லுவது தேவனுடைய சித்தமாயிருக்கலாம்.”)

வாழ்க்கையின் சூழ்நிலைகளானது தேவன் வெளிப்படுத்தும் வேறு முறைகளிற்கூடான தொடர்பை காட்டுகின்றது. தேவன் ஏற்கனவே தம்முடைய சித்தத்தை குறித்து யோனோவிற்கு கூறினார். யோனா தனது சொந்த வாஞ்சைகளை நிறைவேற்றக்கூடிய சூழ்நிலைகளை உருவாக்கினார்.

## திறந்த மற்றும் மூடிய கதவுகள்

வாழ்க்கையின் சூழ்நிலைகளின் விளைவுகளானது “திறந்த மற்றும் மூடிய கதவுகளால்” இறுதியாக காணப்படும். கொரிந்தியருக்கு பவுல் எழுதுகின்றார்:

> **ஆகிலும் பெந்தெகொஸ்தே பண்டிகை வரைக்கும் எபேசு பட்டணத்தில் இருப்பேன். ஏனெ-னில் இங்கே பெரிதும் அநுகூலமுமான கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது. விரோதஞ் செய்கிறவர்களும் அநேகர் இருக்கிறார்கள். (1 கொரிந்தியர் 16:8-9)**

தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட சூழ்நிலைகள் காரணமாக எபேசுவில் தங்கியிருக்க பவுல் தீர்மா-னித்தார், அவருக்கு கிறிஸ்தவ ஊழியத்திற்காக அநேக திறந்த கதவுகள் இருந்தன. இதை அவர் திறந்த கதவு என அழைத்தார். சில சமயங்களில் குறிப்பிட்ட பகுதிகளில் ஊழியத்திற்கான அவரு-டைய வாஞ்சையின் போது கதவுலகள் மூடியிருப்பதாக அவர் பதிவு செய்தார்:

> **மீசியா தேசமட்டும் வந்து, பித்தினியாநாட்டுக்குப் போகப் பிரயத்தனம் பண்ணினார்கள், ஆவியானவரோ அவர்களைப் போகவொட்டாதிருந்தார்.**
>
> **அப்பொழுது அவர்கள் மீசியா பக்கமாய்ப் போய், துரோவாவுக்கு வந்தார்கள். (அப்போஸ்தலர் 16:6-7)**

மூடிய கதவு என்பது தேவனுடைய சித்தத்தை நீங்கள் தவறவிட்டீர்கள் என்று அர்த்தம் அல்ல. இது சில காரியத்தை செய்வதற்கு அவருக்கு சித்தமல்ல என்று அர்த்தம் ஆகாது. பவுல் பிற்பாடு ஆசியாவில் ஊழியம் செய்தார். தேவன் மூடிய கதவு மூலமாக உங்களை வழிநடத்துகின்றார். அவர் மூடிய மற்றும் திறந்த கதவுகளுக்கூடாக வழிநடத்துகின்றார். சில சமயங்களில் கதவு மூடப்பட்டிருக்கும், ஏனென்றால் தேவனுடைய திட்டத்திற்கான சரியான நேரம் அது அல்ல. இறுதியில், அதே கதவு உங்களுக்கு திறந்து காணப்படும்.

## தேவதூதர்கள்

லோத்து சோதோமில் அவருடைய வீட்டில் தோன்றிய தேவதூதனால் வழிநடத்தப்பட்டார். நகரத்தின் மேல் தேவனுடைய நியாயத்தீர்ப்பு விழும் காரணத்தினால் சோதோமைவிட்டு போகும் படியாக அவருக்கு கூறப்பட்டது (ஆதியாகமம் 19). ஓர் தேவதூதன் பிலிப்புவோடு பேசி சமாரியாவிற்கு செல்லும்படியாக அவருக்கு கூறினார் (அப்போஸ்தலர் 8:26). யோவான் ஸ்நானகன் மற்றும் இயேசுவின் பிறப்பு தேவதூதனால் அறிவிக்கப்பட்டது (லூக்கா 1).

மனிதர்களோடு தேவனுடைய சித்தத்தை தொடர்பாடுவதற்கு தேவதூதர்கள் தோன்றிய பதிவுகள் அதிகம் வேதாகமத்தில் காணப்படுகின்றது. உங்களுடைய சொந்த வேத படிப்பில் வேறு உதாரணங்களை நீங்கள் கண்டு கொள்ளுவீர்கள்.

## அற்புதங்கள்

மனித வல்லமையின் கிரியையிற்கு அப்பாற்பட்ட இயற்கையிலான சம்பவம் அற்புதம் ஆகும்.

1 இராஜாக்கள் 18ம் அதிகாரத்திலுள்ள சம்பவத்தில் அற்புதத்திற்கூடாக தேவன் பேசினார். தீர்க்கதரிசியாகிய எலியா தேவனுக்கு முன்பாக பலிபீடத்தை ஆயத்தமாக்கும்படி கூறினார். எலியா பலிபீடத்தை ஆயத்தம் செய்து, கூறியதாவது:

> **ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தேவனாகிய கர்த்தாவே, இஸ்ரவேலிலே நீர் தேவன் என்றும், நான் உம்முடைய ஊழியக்காரன் என்றும், நான் இந்தக் காரியங்களையெல்லாம் உம்முடைய வார்த்தையின்படியே செய்தேன் என்றும் இன்றைக்கு விளங்கப்பண்ணும்.**
>
> **அப்பொழுது: கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி இறங்கி, அந்தச் சர்வாங்க தகனபலி-யையும், விறகுகளையும், கற்களையும், மண்ணையும் பட்சித்து, வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப்போட்டது.**
>
> **ஜனங்களெல்லாரும் இதைக் கண்டபோது, முகங்குப்புற விழுந்து: கர்த்தரே தெய்வம் என்றார்கள். (1 இராஜாக்கள் 18:36,38,39)**

இந்த அற்புதத்தின் மூலம் விக்கிரகங்களை வணங்கிய மக்களோடு பேசுவதற்கும், தானே உண்மையுள்ள ஜீவனுள்ள தேவன் என வெளிப்படுத்துவதற்கும் உபயோகித்தார்.

தேவன் இயற்கையின் அற்புதங்களின் மூலமும் கூட அவருடைய சித்தத்தை வெளிப்படுத்தியுள்ளார். இஸ்ரவேல் ஜாதி வனாந்திரத்திற்கூடாக இரவிலும் பகலிலும் பயணம் செய்வதற்கு அக்கினி ஸ்தம்பமும், மேக ஸ்தம்பமும் வழிகாட்டியது:

> **அவர்கள் இரவும் பகலும் வழிநடக்கக்கூடும்படிக்கு, கர்த்தர் பகலில் அவர்களை வழிநடத்த மேகஸ்தம்பத்திலும், இரவில் அவர்களுக்கு வெளிச்சங்காட்ட அக்கினிஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன் சென்றார்.**
>
> **பகலிலே மேகஸ்தம்பமும், இரவிலே அக்கினிஸ்தம்பமும் ஜனங்களிடத்திலிருந்து விலகிப் போகவில்லை. (யாத்திராகமம் 13:21-22)**

அற்புதங்களினூடாக மனிதர்களோடு தேவன் தொடர்பாடும் வேறு அநேக வேதாகம உதாரணங்களை நீங்கள் கண்டுகொள்ளலாம். உங்களுடைய தனிப்பட்ட வேதாகம படிப்பிற்கு இவைகளை கவனியுங்கள்.

## சொப்பனங்கள்

தேவன் எம்மோடு அதிகம் தொடர்புபட வாஞ்சிக்கின்றார், ஆகவே நாம் தூங்கும்போதுகூட அவர் பேசுகின்றார்! தேவன் சொப்பனங்களில் பேசுகின்றார். இவைகள் எல்லோராலும் அனுபவிக்கப்படும் சாதாரன சொப்பனங்கள் அல்ல. அவைகள் தேவனால் கொடுக்கப்படும் இயற்கைக்குமாறான சொப்பனங்கள் ஆகும். அவைகள் தெளிவாகவும், குறிப்பிட்டும் அவருடைய சித்தத்தை வெளிப்படுத்துகின்றன.

கீழ்வருபவை அநேக வேதாகம உதாரணங்களில் சிலவாகும்:

-ஆபிரகாமின் மனைவியாகிய சாராளை எடுப்பதிலான பாவத்தை குறித்து அபிமெலேக்கிற்கு தேவன் எச்சரித்தார். ஆதியாகமம் 20:3

-தேவதூதன் யாக்கோபோடு சொப்பனத்தில் பேசி அவனுடைய தேவனின் உடன்படிக்கையை ஞாபகப்படுத்தினார். ஆதியாகமம் 31:11-13

-தேவன் யோசேப்புக்கு தன்னுடைய சித்தத்தை வெளிப்படுத்த சொப்பனத்தை உபயோகித்-தார். ஆதியாகமம் 37

-தேவன் சாலெமோனுக்கு சொப்பனத்தில் தோன்றி தான் வாஞ்சிக்கும் ஏதோனுமொன்றை கேட்பதற்கான சந்தர்ப்பத்தை அவனுக்கு கொடுத்தார். 1 இராஜாக்கள் 3:5

-தீய ராஜாவின் காரணமான ஞானிகளுக்கு தம்முடைய நாட்டிற்கு செல்லுவதற்குகான வேறு பாதையின் திசை காட்டுவதற்கு சொப்பனம் பயன்படுத்தப்பட்டது. மத்தேயு 2:12-13

இவைகள் தேவன் சொப்பனத்திற்கூடாக எவ்வாறு தொடர்புபடுகின்றார் என அநேக உதாரணங்களில் சிலவாகும். தேவனுடைய வசனத்தில் இந்த விதமான வழிகாட்டல்களை நீங்கள் தொடர்ந்து படிக்கும் போது வேறு உதாரணங்களை கண்டுகொள்ளலாம்.

## தரிசனம்

தரிசனம் சொப்பனத்திற்கு ஒத்தது ஆனால் வித்தியாசமாகும், ஏனென்றால் நீங்கள் விழித்திருக்கின்றீர்கள். இது தூக்கம் இல்லாமல் கனவு காண்பதை போலாகும். தரிசனங்களானது பௌதீக மற்றும் ஆன்மீக கண்களால் காணப்படும். இதன் அர்த்தம் பொதுவாக நீங்கள் இயற்கையிலான கண்களால் காண்பது அல்ல, ஆனால் உங்களுடைய ஆவியில் ஏதோவென்றான தோற்றத்தை தேவன் தருகின்றார்.

தேவன் மனிதர்களோடு தொடர்புபடுவதற்கு தரிசனம் எங்கு உபயோகப்பட்டது என்பதற்கான அநேக வேதாகம உதாரணங்களில் சில கீழ்வருமாறு:

-தேவன் ஆபிரகாமிற்கு தரிசனத்தில் தோன்றி மாபெரும் வாக்குத்தத்தத்தை கொடுத்தார். ஆதியாகமம் 15

-தானியேலின் புஸ்தகம் தரிசனங்களால் நிரம்பப்பட்டுள்ளது (சொப்பங்களும் கூட). தேவன் இவை-களை உலகத்தின் எதிர்காலத்தை குறித்து அநேக காரியங்களை வெளிப்படுத்த பயன்படுத்தி-னார். பழைய ஏற்பாட்டில் வேறு அநேக தீர்க்கதரிசிகளுக்கு தரிசனங்கள் மூலம் அவர் பேசினார்.

-தேவன் புறஜாதி தேசத்திற்கு சுவிசேஷத்தை எடுத்துசெல்வதற்கான அவசியத்தை குறித்து தரிசனத்தை பேதுருவிற்கு கொடுத்தார். அப்போஸ்தலர் 10

-தேவன் பவுலை தரிசனத்திற்கூடாக மக்கெதோனியாவுக்கு அழைத்தார். அப்போஸ்தலர் 16:9

-தேவன் தரிசனத்திற்கூடாக இரவில் பவுலோடு பேசினார். அப்போஸ்தலர் 18:9-10

-வேதாகமத்தின் இறுதி புஸ்தகமாகிய வெளிப்படுத்தல், அப்போஸ்தலனாகிய யோவான் கண்ட தரிசனத்தின் அடிப்படையாக உள்ளது.

## கேட்கக்கூடியதான சத்தம்

பவுல் தமஸ்குவுக்கு வழியாய் பயணத்தை மேற்கொண்டிருந்த போது கேட்கக்கூடியதான சத்தத்தில் தேவன் பேசினார். அப்போஸ்தலர் 9ல் இந்த கதையை நீங்கள் வாசிக்க முடியும்:

> **அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது: சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப் படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக்கேட்டான்.**
>
> **அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் யார், என்றான். அதற்குக் கர்த்தர்: நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே, முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார். (அப்போஸ்தலர் 9:4-5)**

தேவன் சாமுவேலோடு கேட்கக்கூடியதான சத்தத்தில் பேசினார்:

> **அப்பொழுது கர்த்தர் வந்து நின்று, முன்போல: சாமுவேலே என்று கூப்பிட்டார், அதற்குச் சாமுவேல்: சொல்லும், அடியேன் கேட்கிறேன் என்றான். (1 சாமுவேல் 3:10)**

"தேவன் சொன்னார்" என்னும் அறிவித்தலால் அல்லது தேவன் "பேசினார்", "கட்டளையிட்டார்" என்னும் காரணிகளை கொண்ட வசனங்களால் வேதாமம் நிரம்பியுள்ளது. இது கேட்கக்கூடியதான சத்தமாக கூட உள்ளது. ஆனால் இன்னொரு சத்தம் காணப்படுகின்றது அதில்

தேவன் பேசுகின்றதாவது....

## பரிசுத்த ஆவியானவரின் உள்ளான சத்தம்

தேவன் மனிதர்களோடு பேசுவதற்கு கேட்கக்கூடியதான சத்தத்திலும் அதிகமாக, பரிசுத்த ஆவியா-னவனரின் உள்ளான சத்தத்தை பயன்படுத்துகின்றார். இது "பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்தல்" என அழைக்கப்படுகின்றது:

> **மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவ-னுடைய புத்திரராயிருக்கிறார்கள். (ரோமர் 8:14)**

ஆவிக்குரிய வாழ்க்கையில் வழிநடத்தப்படுவதை "பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்தல்" காட்டுகின்றது. ஆவிக்குரிய வாழ்க்கை இல்லாத பாவத்தில் மரித்த ஓர் ஆத்துமா, பரிசுத்த ஆவியானவரினால் வழிநடத்தபட முடியாது. பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதல் என்பது உங்களை நீங்களே வழிநடத்த இயலாமையை காட்டுகின்றது. இது உண்மை என முன்னைய அதிகாரத்தில் நீங்கள் கற்றீர்கள்.

இரட்சிப்பின் புதிய பிறப்பை நீங்கள் அனுபவிக்கும்போது, தேவன் அவருடைய தொடர்பாடலை அடையும்பொருட்டு புதிய ஆவியை உங்களுக்கு தருகின்றார்:

**உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப் போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன். உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து... (எசேக்கியேல் 36:26-27)**

பரிசுத்த ஆவியானவரினால் நீங்கள் வழிநடத்தப்படும்போது, தேவனுடைய சித்தமானது பரிசுத்த ஆவியானவரினால் உங்களுடைய ஆவியிற்கு வெளிப்படுத்தப்படும். பரிசுத்த ஆவியானவரின் ஓர் ஊழியம் வழி நடத்துவதாகும்:

**சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். (யோவான் 16:13)**

மனிதனுடைய ஆவியானது இருதயத்தில் “மறைந்திருக்கிற குணமே” என பேதுருவினால் குறிப்பிடப்படுகின்றது (1 பேதுரு 3:4). உள்ளான மனிதனில் தேவன் பேசும்போது, உங்களுடைய ஆவியில் அவர் பேசுகின்றார். நீதிமொழிகளின் எழுத்தாளர் மனிதனுடைய ஆவியானது தேவனுடைய தீபமாயிருக்கின்றது என கூறுகின்றார்:

**மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது.... (நீதிமொழிகள் 20:27)**

இயற்கையான உலகில் தீபமானது இருளில் நீங்கள் பார்க்க உதவுகின்றது. ஆவிக்குரிய உலகில் உங்கள் படிமுறைகளை அவருடைய சித்தத்திற்கு ஏற்ப வழிநடத்த உங்கள் ஆவியின் தீபத்தை தேவன் பயன்படுத்துகின்றார். அவர் உங்களுடைய ஆவியிற்கூடாக வெளிச்சமூட்டி வழிநடத்து-கின்றார்.

பாத்திரத்தை குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் ஓர் கப்பல் பயனத்தில் எச்சரித்தார்:

**மனுஷரே, இந்த யாத்திரையினாலே சரக்குக்கும் கப்பலுக்கும் மாத்திரமல்ல, நம்முடைய ஜீவனுக்கும் வருத்தமும் மிகுந்த சேதமும் உண்டாயிருக்குமென்று காண்கிறேன் என்று சொல்லி, அவர்களை எச்சரித்தான். (அப்போஸ்தலர் 27:10)**

“எனக்கு தரிசனம் உண்டாயிற்று” என்று பவுல் கூறவில்லை. கனவு கண்டதாகவோ அல்லது தேவன் கேட்க கூடியதான சத்தத்தில் அவரோடு பேசினார் என்றோ அவர் உரிமை கோரவில்லை. அவருடைய ஆவி தேவனிடமிருந்த வந்ததான சாட்சியாயிருந்தது, அந்த சாட்சி சரியானவற்றை உறுதிப்படுத்-தியது.

உங்கள் ஆவியை தேவனோடு உணர்வுபூர்வமாக இருப்பதற்கு பயிற்றுவியுங்கள். கற்றல் மூலமான அறிவு விருத்தியிற்கு அதிக நேரத்தை செலவிடுங்கள். பயிற்சி மற்றும் விளையாட்டுக்கள் மூலம் பௌதீக அபிவிருத்தியிற்கு அதிக நேரத்தை செலவிடுங்கள். ஆனாலும் கூட, ஆவிக்குரிய அபிவிருத்திக்கு சிறிது நேரத்தை செலவிடுங்கள். உங்கள் மனது போல உங்கள் ஆவி பயிற்றுவிக்கப்படலாம். உங்கள் சரீரம் கட்டப்பட்டு பயிற்றுவிக்கப்படுவதைப்போல ஆவிக்குரிய பலத்தில் உங்கள் ஆவி அபிவிருத்தியை செய்ய லாம். தேவனுடைய வார்த்தையை தியானதிப்பதின் மூலம் உங்கள் ஆவியை நீங்கள் பயிற்றுவிக்கலாம்.

**இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக. இதில் எழுதியி-ருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக, அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய். (யோசுவா 1:8)**

உங்களுடைய மனச்சாட்சியை நெறிப்படுத்துவதற்கு பரிசுத்த ஆவியானவரின் உள்ளான சத்தத்தை தேவன் பயன்படுத்துகின்றார். தேவனால் தரப்பட்ட சரி மற்றும் பிழை தொடர்பான உள்ளான எச்சரிப்பே மனச்சாட்சி ஆகும்.

உணர்வு சரீரத்தினுடைய சத்தமாகும். உங்களை வழிநடத்த நீங்கள் எவ்வாறு உணருகின்றீர்கள் என தேவன் உபயோகப்படுத்துவதில்லை. மாம்சம் ஆவியின் எதிரியாகும், ஆகவே உணர்வு உங்களை ஏமாற்றக்கூடும்.

காரணம் மனதின் சத்தமாகும். மனித காரணத்திற்கு அப்பால் கூட தேவனுடைய வழி காணப்படும். அவருடைய நினைவுகளின் செயற்பாடானது உங்களை விட உயர்ந்ததாகும்.

மனச்சாட்சி என்பது தேவனுடைய சரியான சித்தத்திற்கு உங்களை கண்டித்து வழிகாட்டும், மனித ஆவியின் சத்தமாகும். உங்களுடைய ஆவியில் பரிசுத்த ஆவியானவர் பேசுகின்றார். மனச்சாட்சியை ஆவி கண்டிக்கும். இதற்கூடாக தேவனுடைய சித்தத்தின் உறுதியிற்குள் நீங்கள் கொண்டு வரப் படுகின்றீர்கள். பரிசுத்த ஆவியானவர் உங்கள் ஆவியில் பேசும்போது, மனச்சாட்சியானது கடிந்து கொள்ளும். ஆனால் அதை தொடர்ந்து நீங்கள் புறக்கணித்தால், மனச்சாட்சி “கடினமாகி” விடும். இதன் அர்த்தமானது பரிசுத்த ஆவியானவரின் நெறிப்படுத்தலுக்கு இது கடினமாகி விடும்.

**விசுவாசிகளும் சத்தியத்தை அறிந்தவர்களும் ஸ்தோத்திரத்தோடே அநுபவிக்கும்படி தேவன் படைத்த போஜனபதார்த்தங்களை விலக்கவும் வேண்டுமென்று அந்தப் பொய்யர் கட்டளையிடுவார்கள். (1 தீமோத்தேயு 4:2)**

உள்ளான உணர்வுகளை தேவன் கட்டுப்படுத்துகின்றார் எனவும், அவருடைய சித்தத்தின்படி மனச்சாட்சி அவனை வழிநடத்தும் என குறிப்பிடும் அநேக வசனங்களை நீதிமொழிகளின் புஸ்தகம் கொண்டுள்ளது:

**மனதின் யோசனைகள் மனுஷனுடையது, நாவின் பிரதியுத்தரம் கர்த்தரால் வரும். (நீதிமொழிகள் 16:1)**

**மனுஷருடைய இருதயம் அவனுடைய வழியை யோசிக்கும், அவனுடைய நடைகளை உறுதிப்படுத்துகிறவரோ கர்த்தர். (நீதிமொழிகள் 16:9)**

**ராஜாவின் இருதயம் கர்த்தரின் கையில் நீர்க்கால்களைப்போலிருக்கிறது. அதைத் தமது சித்தத்தின்படி அவர் திருப்புகிறார். (நீதிமொழிகள் 21:1)**

## பரிசுத்த ஆவியானவரின் வரங்கள்

மனிதனோடு தேவன் பேசுவதற்கு ஆவிக்குரிய வரங்களையும் கூட தேவன் உபயோகிக்கின்றார். ஆவிக்குரிய வரங்களானது பரிசுத்த ஆவியானவரினால் தரப்படும் விசேட இயலுமைகள் ஆகும்.

இந்த வரங்களின் பல தேவனிடமிருந்து தொடர்பாடலை பெறுவதற்கு உங்களை இயலுமைப்படுத்-தும்.

மனிதன் அறியாத பாஷையினால் தேவன் பேசும் வரங்களின் நாவு உள்ளது. தேவனுடைய வியாக்கியானம் செய்தியை மொழிபெயர்ப்பதிற்கூடாக தொடரும். தேவனுடைய சித்தத்தை நீங்கள் வழிகாட்டுவதற்கான ஆவி பரிசுத்த ஆவியானவரின் ஜெப மொழியாக (மற்ற பாஷை) கூட உபயோ-கிக்கபடுகின்றது. தேவனுடைய சித்தம் தொடர்பாக எவ்வாறு ஜெபிப்பது என நீங்கள் அறியா திருக்கும் போது, மற்ற பாஷையில் ஜெபியுங்கள்...

> **ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார். (ரோமர் 8:27)**

தேவனுடைய செய்தியை அவருடைய மக்களுக்கு உடனடியாக கொண்டுவரும் தீர்க்கதரிசன வரம் கூட உள்ளது. மற்றவர்களில் செயற்படும் ஆவிகள் சம்பந்தமாக தேவனுடைய தொடர்பாடுதலுக்கூடான அறிதலின் வரமும் கூட காணப்படுகின்றது. தேவன் ஞானம் மற்றும் அறிவின் வரங்களுக்கூடாகவும் தொடர்பாடுகின்றார். இந்த வரங்கள் மனிதர்களை குறித்தான உள்ளான தெய்வீகத்தையும், இயற்கை-யிலான மனதினால் அறியப்படும் சூழ்நிலைகளுக்கு அப்பாலுள்ளதையும் கொடுக்கும்.

## ஏனைய முறைகள்

சீட்டு போடுதல் மற்றும் தோலை பயன்படுத்துதல் வேதாகமம் வழிகாட்டும் வேறு இரண்டு முறைகளாகும். இந்த இரண்டையும் முன்னைய அதிகாரத்தில் நாம் கலந்துரையாடினோம். சீட்டு போடுதல் சந்தர்ப்பத்தின் முறை என நாம் கற்றோம். இது புதிய தீர்விற்காக பரிசுத்த ஆவியா-னவருக்கு முன்னுரிமை கொடுப்பதற்காக மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றது. பரிசுத்த ஆவியானவரின் வழிகாட்டலின் ஊழியம் கிடைத்த பிற்பாடு இதன் பயன்பாடு ஒருபோதும் மீள பதிவு செய்யப்பட வில்லை (அப்போஸ்தலர் 2). வேதாகமத்தில் ஒரு தடவை மாத்திரமே தோல் குறிப்பிடப்பட்டுள்ளது என நாம் கற்றோம். இது மாபெரும் தேசிய புரட்சியின் நேரத்தில் கிதியோனால் பயன்படுத்தப் பட்டது. இது வழிகாட்டுதலுக்கு அல்லாமல், உறுதிப்படுத்தலை பயன்படுத்துவதற்கான அற்புதமான அடையாளமாகும்.

## தேவன் எல்லைகுட்பட்டவர் அல்ல

தேவன் எப்பொழுதும் ஒரே வழியில் பேசுபவர் அல்ல. நாம் மாதிரியை அமைத்து தேவனை எல்லை குட்படுத்த முயற்சிக்கின்றோம். ஒரு தடவையில் குறித்த வழியில் தேவன் பேசியிருக்கின்றபடியினால், அதே வழியில் எப்பொழுதும் அவர் நடத்துவார் என நாம் விசுவாசிக்கின்றோம். ஆனால் இந்த அதிகாரத்தில் நாம் கற்ற விதமாக, மனிதரோடு தொடர்புபடுவதற்கு தேவன் அநேக வழிகளை வைத்திருக்கின்றார். குறித்த மாதிரிகளால் தேவன் எல்லைக்குட்பட்டவர் அல்ல. இந்த உதாரணங்களை கவனியுங்கள்:

### மோசே:

தேவன் வாக்களித்த தேசத்திற்கு வனாந்திரத்திற்கூடாக இஸ்ரவேல் ஜாதியை மோசே வழிநடத்தும்

போது, இரண்டு மில்லியன் மக்களுக்கு நீரை ஏற்படுத்துதல் பாரிய சவாலாகும். ஒரு தடவை தேவன் மோசேயிற்கு அவனுடைய தடியால் பாறையை அடிக்குமாறு தேவன் மோசேயிற்கு கூறினார். அவன் அவ்வாறு செய்தபோது, பாறையிலிருந்து வெளியே நீர் புறப்பட்டது. இன்னொரு தடவை இஸ்ரவேலர்கள் தாகமாயிருந்த போது பாறையுடன் பேசும்படி தேவன் மோசேயிற்கு கூறினார். இருப்பினும் முன்னர் செய்தது போல மோசே பாறையிற்கு அடித்தார். இது தேவனை விசனத்திற்கு உள்ளாக்கியது, அத்தோடு தேவன் மோசேயை தன்டித்தார். குறிப்பிட்ட சூழ்நிலைகளை சந்திக்கும் போது கூட தேவனிடமிருந்தான வழிகாட்டலை காத்திருப்பதின் முக்கியத்துவத்தை இந்த கதை காட்டுகின்றது. நீங்கள் அனுபவப்படாத எந்த முன்னைய மாதிரிகளுக்கும் தேவன் எல்லைக்-குட்பட்டவர் அல்ல.

(குறிப்பு: பாறையுடன் பேசுவதற்கு பதிலாக அதை அடித்தலானது சிறிய காரியம் ஆகவே மோசேயை தேவன் தண்டித்தது நீதியில்லை என நீங்கள் எண்ணலாம். பாறையானது விசேட அர்த்தத்தை கொண்டிருந்தது. அது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை பிரதிநிதித்துவப்படுத்துவதோடு, விடுதலையின் ஜீவ ஊற்றானது அவருடைய மரணத்தின் மூலம் நாற்திசையிலும் பரவுதலை காட்டுகின்றது. இயேசு அனைவருக்காகவும் ஓர் விசை அடிப்பட்டார். இன்னொரு விசை அடிப்படுதலுக்கு அவசியம் இல்லை. மோசேயினால் மேற்கொள்ளப்பட்ட மாபெரும் அவமதிப்பின் அடையாளத்தின் முக்கியத்துவமே இதுவாகும்.

**எலியா:**

தீர்க்கதரிசியாகிய எலியாவோடு தொடர்பாடுதவதற்கு அநேக இயற்கைக்கு மாறான முறைகளை தேவன் பயனபடுத்தினார். தேவனுடைய சத்தத்தை அறிதலுக்கான முக்கியத்துத்தை காட்டும் நேராக அனுபவத்தை எலியா அனுபவித்தார். எலியாவிற்கு ஓர் குறித்த மலையில் சென்று நிற்கும்படியா-கவும், தேவன் அவனோடு பேசுதலுக்கு காத்திருக்கும்படியாகவும் கூறப்பட்டது. இது தான் நடை-பெற்றது:

> **அப்பொழுது அவர்: நீ வெளியே வந்து கர்த்தருக்கு முன்பாகப் பர்வதத்தில் நில் என்றார். அப்பொழுது இதோ, கர்த்தர் கடந்துபோனார். கர்த்தருக்கு முன்பாகப் பர்வதங்களைப் பிளக்கிறதும் கன்மலைகளை உடைக்கிறதுமான பலத்த பெருங்காற்று உண்டாயிற்று. ஆனாலும் அந்தக் காற்றிலே கர்த்தர் இருக்கவில்லை. காற்றிற்குப்பின் பூமி அதிர்ச்சி உண்டாயிற்று: பூமி அதிர்ச்சியிலும் கர்த்தர் இருக்கவில்லை.**
>
> **பூமி அதிர்ச்சிக்குப்பின் அக்கினி உண்டாயிற்று, அக்கினியிலும் கர்த்தர் இருக்கவில்லை. அக்கினிக்குப்பின் அமர்ந்த மெல்லிய சத்தம் உண்டாயிற்று. (1 இராஜாக்கள் 19:11-12)**

இந்த சம்பவதோடு அநேக இயற்கைக்கு மாறான நிகழ்ச்சிகள் உள்ளன. காற்று, பூமியதிர்ச்சி மற்றும் அக்கினி காணப்படுகின்றது. எலியாவோடு முன்னர் தொடர்பாடுவதற்கு தேவன் பயன்படுத்திய முறைகள் இவைகளாகும். ஆனால் இந்த தடவை, நடைபெற்ற எல்லா மகிமையான காரியங்க-ளிலும் தேவன் பேசவில்லை. அவர் மெல்லிய சிறு சத்தத்தின் மூலம் பேசினார். இது எலியாவின் ஆவியில் கேட்க கூடியதான சத்தத்தின் மூலமாகவோ அல்லது அமர்ந்த சத்தத்தின் மூலமாகவோ காணப்படலாம்.

**பவுல்:**

அப்போஸ்தலனாகிய பவுலை அவனுடைய மிஷனரி ஊழியத்தின் போது வழிநடத்த தேவன் அநேக வழிகளை உபயோகித்தார்:

-தமஸ்குவின் வழியில் மாபெரும் வெளிச்சத்தினாலும், பரலோகத்திலிருந்தான சத்தத்தின் மூலமும் பவுல் வழிநடத்தப்பட்டார். அப்போஸ்தலர் 9:1-8
-பவுல் கொலைசெய்யப்படும்படி திட்டம் தீட்டப்பட்டபோது, அவன் தப்பித்து தேவன் உதவும் பொருட்டுவிசுவாசிகள் பயன்படுத்தப்பட்டனர். அப்போஸ்தலர் 9:20-25
-பவுலுக்கும் மற்ற சீஷர்களுக்கும் இடையிலான தொடர்பை ஏற்படுத்துவதற்கு பர்னபா தேவ-னால் பயன்படுத்தப்பட்டார். அப்போஸ்தலர் 9:20-28
-கோபமடைந்த கிரேக்கரிடமிருந்து பவுல் தப்பிப்பதற்கு உதவும்பொருட்டு தேவன் விசுவாசி-களை பயன்படுத்தினார். அப்போஸ்தலர் 9:29-30
-பவுல் மாயவித்தைக்காரனை சந்தித்தபோது, விடுதலையை கொண்டுவரும்பொருட்டு தேவன் அவனுக்கு வெளிப்படுத்ததை கொண்டுவந்தார். அப்போஸ்தலர் 13:6-12
-ஜெபமும் பரிசுத்த ஆவியானவரும் விசேட மிஷனரி ஊழியத்திற்கு பவுலை வழிநடத்தியது. அப்போஸ்தலர் 13:2-4
-அகபுவின் தனிப்பட்ட தீர்க்கதரிசனமானது எருசலேமில் பவுலுக்கு காத்திருந்த அனுபவத்தை உறுதிப்படுத்தியது. அப்போஸ்தலர் 21:10-14
-தேவன் பவுலுக்கு சொப்பனங்கள் மற்றும் தரிசனங்கள் ஊடாக பேசினார். அப்போஸ்தலர் 22:18; 26:19; 27:23-24
-தேவனுக்கான வல்லமையுள்ள ஊழியத்திற்கான கதவுகள் பவுல் தன்னுடைய தனிப்பட்ட திட்டங்கள் மாற்றியமைக்க ஏதுவாயிற்று. 1 கொரிந்தியர் 16:8-10

**பிலிப்பு:**

**பின்பு கர்த்தருடைய தூதன் பிலிப்பை நோக்கி: நீ எழுந்து, தெற்குமுகமாய் எருசலேமிலி ருந்து காசா பட்டணத்துக்குப் போகிற வனாந்தரமார்க்கமாய்ப் போ என்றான்.**

**அந்தப்படி அவன் எழுந்துபோனான். அப்பொழுது எத்தியோப்பியருடைய ராஜஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரியும் அவளுடைய பொக்கிஷமெல்லாவற்றிற்கும் தலைவனுமாயிருந்த எத்தியோப்பியனாகிய ஒருவன் பணிந்துகொள்ளும்படி எருசலேமுக்கு வந்திருந்து, ஊருக்குத் திரும்பிப்போகும்போது, தன் இரதத்திலே உட்கார்ந்து, ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக்கொண்டிருந்தான். ஆவியானவர்: நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்துகொள் என்று பிலிப்புடனே சொன்னார். (அப்போஸ்தலர் 8:26-29)**

தேவன் பிலிப்பிவிற்கு முதல் தடவையாக தேவதூதன் மூலமாக பேசினார். இரண்டாவது தடவை அவருடன் பரிசுத்த ஆவியானர் மூலம் பேசினார், அத்துடன் பிலிப்பு உடனடியாக பதிலளித்தார். முதல் தடவை பயன்படுத்தப்பட்ட முறை போல் இரண்டாவது தடவை தேவன் பேசும் போது தேவ தூதனின் உறுதிப்படுத்தலுக்காக அவர் காத்திருக்கவில்லை.

**தாவீது:**

தாவீது இள வயதுள்ளவனாக இருக்கையில், கோலியாத் என்னும் பெயருடைய தேவனுடைய மக்களின் எதிரியோடு யுத்தம்புரிந்தான். கோலியாத் இராட்சதனாய் இருந்த பயிற்றுவிக்கப்பட்டிருப்பினும் கூட, யுத்தத்திற்கு பாரம்பரிய ஆயுதங்களை பயன்படுத்த வேண்டாம் என தாவீதுக்கு தேவன் கூறினார். இருப்பினும் தாவீது கவனை பயன்படுத்தினார். மாபெரும் வெற்றியில் தாவீது நெற்றியில் தாக்கப்பட்டதான நன்கு வழிநடத்தப்பட்ட ஓர் குறியில் எதிரியை வீழ்த்தினார். சில வருடங்களுக்கு பிற்பாடு அபிசாய்யோடு கூட வராததினால் இஸ்பிபிநோப் என்னும் இராட்சதனால் தாவீடு கொலைசெய்யப்பட இடம் உண்டாயிற்று. கோலியாத்தை சந்திக்கும்போது கூட இருந்த தேவன், இரண்டாவது இராட்ச-தனின் போது இருக்கவில்லை என நாம் முடிவுரைக்கு வரலாமா? இல்லை. தேவன் சாதாரணமாக வித்தியாசமான முறைகளை உபயோகிக்கின்றார். தேவன் முதலாவது தடவையில் தாவீதுவின் திறமையான கவன் மூலம் உபயோகித்தார். அவர் இரண்டாவது தடவை அபிசாயின் இராணுவ திறமையை உபயோகித்தார்.

கடந்தகாலத்தை போல தேவன் உங்களோடு பேச தேர்ந்தெடுக்கவில்லையாயின், சோர்ந்து போக வேண்டாம். ஒத்த சூழ்நிலைகளில் உங்களுக்கான அவருடைய சித்தம் முன்னையதை போல் குறிப்பிட்டு இல்லாதிருக்குமாயின், குழம்பி போக வேண்டாம். தேவன் குறிப்பிட்ட தொடர்பாடல் மாதிரியில் கட்டுப்படமாட்டார். மாபெரும் சிருஷ்டிகர் மாபெரும் தொடர்பாடுபவரும் கூட. அவருடைய முறைகள் எல்லையற்றது.

## சுய பரிசோதனை

1. திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்.

..........................................................................................................................................

..........................................................................................................................................

2. இந்த பாடத்தில் தேவன் எல்லைக்குட்பட்டவர் இல்லை எனவும், ஒரே வழியில் எப்பொழு-தும் பேச மாட்டார் எனவும் உறுதிப்படுத்தும் பல வசன உதாரணங்களில் ஒன்றை தருக.

..........................................................................................................................................

3. இந்த அதிகாரத்தில் கலந்துரையாடப்பட்ட மனிதர்களோடு தேவன் பேச பயன்படும் வேதாகம முறைகள் பன்னிரண்டை பட்டியலிடுக.

..................... ..................... ..................... ..................... ..................... .....................

..................... ..................... ..................... ..................... ..................... .....................

4. கீழ்வரும் வாக்கியங்களை வாசிக்கவும். வாக்கியம் உண்மையானால், அதற்கு முன்னால் உள்ள இடைவெளியில் ச என்னும் எழுத்தை எழுதவும், வாக்கியம் தவறானால், அதற்கு முன்னால் உள்ள இடைவெளியில் பி என்னும் எழுத்தை எழுதவும்:

அ................ "மூடிய கதவை" நீங்கள் சந்தித்தால் அது தேவனுடைய சித்தத்தை நீங்கள் தவற விட்டீர்கள் என பொருட்படும்.
ஆ................ இயேசு தேவனுடைய சித்தத்தை முன்னரே அறிந்திருந்தபடியால் ஜெபிக்க வில்லை.
இ................ சூழ்நிலையில் குற்றவாளி என யோசேப்பு அறிந்து அதை மீண்டும் செய்தார்.
ஈ................ தேவனுடைய சித்தத்தின் சிறந்த அறிகுறி சூழ்நிலையாகும்.
உ................ தேவனுடைய சித்தத்திற்கு மாறாக தன்னுடைய சொந்த சித்தத்தை நிறைவேற்ற சூழ்நிலைகளை உருவாக்க யோனா முனைந்தார்.
எ................ தேவனுடைய தொடர்பாடலின் ஏனைய முறைகள் அவருடைய எழுதப்பட்ட வார்த்தையை எப்பொழுதும் ஏற்றுக்கொள்ளுகின்றது.

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. கீழ்வரும் ஜெபங்களை வழிகாட்டலுக்காக படியுங்கள்:

   சங்கீதம் 25:4
   கொலோசெயர் 1:9
   சங்கீதம் 86:11
   கொலோசெயர் 4:12
   எபேசியர் 6:18-20

2. தேவன் தம்முடைய சித்தத்தை மனிதர்களோடு தொடர்பாற்றுவார், ஆனால் சில சமயங்களில் தீர்மானங்களை மேற்கொள்ளுவதற்கு மனிதன் மிகவும் அவசரப்படுகின்றான். மிகவும் அவசரப்பட்டு, தேவனுடைய சித்தத்தை தொடர்பாடுவதற்கு சந்தர்ப்பத்தை அனுமதிக்காத மனிதர்களுடைய கிரியைகளின் உதாரணங்களை கீழ்வருவனவற்றில் படியுங்கள்:

   மோசே எகிப்தியரோடு யுத்தம் செய்தல்: யாத்திராகமம் 2

   யோசுவா கிபியோனியர்களோடு செய்த ஒப்பந்தம்: யோசுவா 9

   ஆபிரகாம் மற்றும் இஸ்மவேல்: ஆபிரகாம் வாக்குத்தத்த சந்ததிக்காக காத்திருக்கவில்லை: ஆதியாகமம் 16

3. அப்போஸ்தல புஸ்தகத்தை வாசியுங்கள். ஆரம்பகால சபையில் மனிதர்களோடு தேவன் தொடர்பாடிய வித்தியாசமான வழிகளை பட்டியல் செய்யுங்கள்.

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

## அதிகாரம் ஏழு

# இன்னும் எரியும் புதர்

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ தேவனுடைய சித்தத்தை கண்டறிவதற்கான படிமுறைகளை பட்டியலிடவும்,
- ☐ தேவனுடைய சித்தத்தின் உறுதியை எவ்வாறு கொண்டிருக்க வேண்டும் என்பதை விபரிக்கவும்,
- ☐ தேவனிடமிருந்து வழிகாட்டல்களை பெறும் மூன்று திறவுகோல்களை இனங்காணவும் முடியும்.

**திறவுகோல் வசனம்:**

> **உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள், அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார். (நீதிமொழிகள் 3:5-6)**

## அறிமுகம்

முன்னைய அதிகாரத்தில் மனிதர்களோடு கடந்தகாலத்தில் தேவன் தொடர்பாடிய வேதாகம பதிவுகளை நாம் ஆராய்ந்தோம். ஆனால், தேவன் மனிதர்களோடு இன்றும் பேசுகின்றாரா என்பதே கேள்வி ஆகும்.

அப்போஸ்தலனாகிய பவுல் சுருக்கமாக்குகின்றார்:

> **பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன்,**
>
> **இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார். இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார். (எபிரெயர் 1:1-2)**

தேவன் கடந்த காலங்களில் பல்வேறுப்பட்ட முறைகளில் பேசினார். அவர் பவுலின் காலங்களில் தொடர்ந்து மனிதர்களோடு பேசினார். தேவன் எப்பொழுதும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் தொடர்பாடுகின்றார் என்ற மாபெரும் செய்தியை பவுல் கூறினார்.

## கடந்த காலம்: எரியும் புதர்

தேவன் வேதாகம காலங்களில் அநேக முறைகளில் அவருடைய செய்தியை தொடர்பாடினார். அவர் பயன்படுத்திய ஓர் முறை யாத்திராகமத்தின் 3ம் அதிகாரத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது:

**மோசே மீதியான் தேசத்து ஆசாரியனாயிருந்த தன் மாமனாகிய எத்திரோவின் ஆடுகளை மேய்த்துவந்தான். அவன் ஆடுகளை வனாந்தரத்தின் பின்புறத்திலே ஓட்டி, தேவபர்வ-தமாகிய ஓரேப்மட்டும் வந்தான்.**

**அங்கே கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினி ஜுவாலையிலே நின்று அவனுக்குத் தரிசனமானார். அப்பொழுது அவன் உற்றுப்பார்த்-தான். முட்செடி அக்கினியால் ஜுவாலித்து எரிந்தும், அது வெந்துபோகாமல் இருந்தது.**

**அப்பொழுது மோசே: இந்த முட்செடி வெந்துபோகாதிருக்கிறது என்ன, நான் கிட்டப்போய் இந்த அற்புதகாட்சியைப் பார்ப்பேன் என்றான்.**

**அவன் பார்க்கும்படி கிட்ட வருகிறதைக் கர்த்தர் கண்டார். முட்செடியின் நடுவிலிருந்து தேவன் அவனை நோக்கி: மோசே, மோசே என்று கூப்பிட்டார். அவன்: இதோ, அடியேன் என்றான். (யாத்திராகமம் 3:1-4)**

வெந்துபோகாத முட்செடியிலிருந்து, எகிப்தின் கட்டிலிருந்து இஸ்ரவேல் தேசத்தை விடுவிக்கும் பொருட்டு மோசேயை தேவன் அழைத்தார். ஆம், கடந்த காலத்தில் நிச்சயமாக தேவன் மனிதர்-களோடு பேசினார்!

## நிகழ்காலத்தில்: புதர் இன்னும் எரிகின்றது

ஆனால் தேவன் இன்னும் அற்புதமான வழிகளில் இன்று மனிதர்களோடு பேசுகின்றாரா? பரிசுத்த ஆவியானவரின் நிரப்புதல் கொடுக்கப்படும் முன் பழைய ஏற்பாட்டு காலங்களில் இந்த மாதிரியான தொடர்பாடல்கள் வரையறுக்கப்பட்டதா?

புதர் இன்னும் எரிகின்றது! மோசேயிற்கு கொடுக்கப்பட்ட இந்த குறிப்பிட்ட மாதிரியான வழிகாட்டல்களின் அனுபவத்தை நீங்கள் பொதுவாக அனுபவிக்கவில்லை, ஆனால் பழைய ஏற்பாட்டு காலங்களில் அவர் செய்த அற்புதமான வழிகளில் மனிதர்களோடு தேவன் இன்னும் பேசுகின்றார்.

எபிரெயர் 1:1-2ல் இயேசு கிறிஸ்துவிற்கூடாக உலகத்திற்கு தேவன் தொடர்ந்து பேசுகின்றார் என பவுல் குறிப்பிடுகின்றார். இயேசுவின் வாழ்க்கை மற்றும் போதனைகளால், எழுதப்பட்ட வார்த்தைகளின் மூலம் மாத்திரம் தேவன் பேசுவதில்லை, ஆனால் இயேசு உறுதியளித்தார்:

**சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். (யோவான் 16:13)**

இயேசுவினால் பரிசுத்த ஆவியானவர் தொடர்ந்து பேசி தேவனுடைய செய்தியை மனிதர்களுக்கு தொடர்பாடுகின்றார்.

அப்போஸ்தலர் 2ல் பரிசுத்த ஆவியானவரின் வருகையிற்கு பிற்பாடு, பழைய ஏற்பாட்டு காலங்களை போல் தேவனுடைய விசேட வெளிப்படுத்தல்கள் தொடர்கின்றன. மக்கள் சொப்பனங்களை கண்டு, தரிசனங்களை கண்டு, தேவதூதர்களோடு பேசி, தேவனுடைய கேட்கக்கூடிய சத்தத்தை கேட்டு, தேவனிடமிருந்தான மற்ற அற்புதமான வெளிப்படுத்தல்களை அனுபவிக்கின்றனர்.

தேவனிடமிருந்தான அற்புதமான தொடர்பாடலானது பரிசுத்த ஆவியானவருடைய வருகையோடு நிறுத்தப்படவில்லை. பரிசுத்த ஆவியானவனர் வழிகாட்டலுக்காக புதிய திருப்பமானவை இணைக்கப் பட்டுள்ளார். இந்த திருப்பு முனைகளானது உள்ளான வழிகாட்டல்கள், மற்ற நாவுகளின் ஜெப பாஷையிற்கூடான தேவனுடைய சித்தத்தின்படியான பரிந்து பேசுதல், தேவன் பேசும் விசேட ஆவிக் குரிய வரங்கள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

வேதாகமத்தின் இறுதி புஸ்தகமாகிய வெளிப்படுத்தல், அப்போஸ்தலனாகிய யோவானுக்கு தேவன் கொடுத்த தரிசனத்தின் விரிவாக்கப்பட்ட பதிவாகும். அவருடைய இறுதிய எழுத்தின் தொடக்கத்-திலிந்து தேவன் அற்புதமான வழிகளில் மனிதனோடு பேசுகின்றார்.

தேவன் தொடர்ந்து இந்த முறைகளில் மனிதனோடு பேசுகின்றார். நவீன சபை வரலாறுகளானது தேவனிடமிருந்தான மனிதனுக்கான அநேக உடடின அற்புத தொடர்பாடல்களை பதிவு செய்துள்ளது, ஏனென்றால்...

**இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். (எபிரெயர் 13:8)**

## புதர் இல்லாவிட்டால் அங்கு என்ன உள்ளது?

ஆனால் தேவன் அற்புதமான முறைகளுக்கூடாக உங்களோடு பேச தேர்ந்தெடுக்காவிட்டால் என்ன நடைபெறும்? நீங்கள் சொப்பனம், தரிசனம் அல்லது அற்புதம் ஆகியவற்றை அனுபவிக்காவிட்டால் என்ன நடைபெறும்? கேட்ககூடியதான சத்தம் அல்லது இயற்கைக்கு மாறான தீர்க்கதரிசன வரங்கள், நாவுகள் அல்லது மொழிபெயர்ப்புகள் மூலம் அவர் உங்களோடு பேசாவிட்டால் என்ன நடைபெறும்? எரியும் புதர் இல்லாவிட்டால் என்ன நடைபெறும்?

அநேக மக்கள் தேவனிடமிருந்தான இயற்கைக்கு மாறான வெளிப்படுத்தல்களுக்காக தங்களுடைய முழு வாழ்க்கையிலும் காத்திருக்கின்றார்கள். அநேக விசுவாசிகள் தங்களுடைய வாழ்க்யை சீரழித்து, தொடர்பற்று, வல்லமையற்று, தேவனிடமிருந்து சில பொதுவல்லாத அல்லது விசேட செய்தியிற்காக காத்திருக்கின்றார்கள்.

ஆரம்பகால சபைகள் இதை செய்யவில்லை. அவர்கள் அற்புத முறைகளின் மூலம் தேவன் தேர்ந் தெடுக்க நடத்தும்போது மகிழ்ச்சியடைந்தார்கள், ஆனால் ஒவ்வொரு நாள் ஜீவியத்தில் அநேக தீர்மானங்களில் தேவதூதர்கள், சொப்பனங்கள் மற்றும் தரிசனங்களினால் வழிகாட்டப்படவில்லை.

ஆகவே, எரியும் புதர் இல்லாவிட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்? தேவனுடைய சித்தத்தை அறிவ-தற்கான ஏழு படிமுறைகள் இங்கு உள்ளது:

### 1. ஜெபியுங்கள்:

உங்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய வழிகாட்டலுக்காக ஜெபியுங்கள். தேவனுடைய சித்தத்தை செய்யும்படியாக ஒழுங்கான ஜெபத்தின் மாதிரியின் பகுதிகளை இயேசு தம்முடைய சீஷர்களுக்கு போதித்தார்:

**உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக. (மத்தேயு 6:10)**

நீங்கள் ஜெபிக்கும் போது, உங்களுக்கான தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்த உங்களுடைய வாஞ்சையை வெளிப்படுத்துங்கள். மோசே இதை செய்தார்:

> **உம்முடைய கண்களில் இப்பொழுது எனக்குக் கிருபை கிடைத்ததானால் நான் உம்மை அறிவதற்கும், உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைப்பதற்கும், உம்முடைய வழியை எனக்கு அறிவியும், இந்த ஜாதி உம்முடைய ஜனமென்று நினைத்தருளும் என்றான். (யாத்திராகமம் 33:13)**

தாவீது இதை செய்தார்:

> **கர்த்தாவே, உம்முடைய வழிகளை எனக்குத் தெரிவியும், உம்முடைய பாதைகளை எனக்குப் போதித்தருளும். (சங்கீதம் 25:4)**

சரியான தீர்மானங்களை எடுக்கும்படியாக ஞானத்தை கேளுங்கள்:

> **உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்-கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்.**
>
> **ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன், சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான்.**
>
> **அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக. (யாக்கோபு 1:5-7)**

மற்ற விசுவாசிகளின் ஜெபவிண்ணப்பங்களை கேளுங்கள். குழுவான ஜெப கூட்டங்களில் ஆவிக்குரிய வரங்களின் பயிற்சியின் மூலம் தேவன் அவருடைய சித்தத்தை கூட வெளிப்படுத்தலாம். இவ்வாறான குழு கூடுகையிலேயே ஊழிய சேவையிற்கு பவுலும், பர்னபாவும் அவர்களுடைய அழைப்பின் உறுதிப்படுத்தலை பெற்றனர்.

## 2. வேதாகமத்தை படியுங்கள்:

உங்களுக்கான சூழ்நிலைகளில் விசேட வழிகாட்டுதல்கள் கொடுக்கப்பட்டுள்ளதா என அறிய தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையில் முதன்மையாக தேடுங்கள். பிரயோகிக்ககூடிய பொதுவான வேதாகம கொள்கைகள் அல்லது பௌதீக உதாரணங்கள் அங்கு உள்ளதா என அறியுங்கள்.

வேத வசனத்தில் தேடுதல் என்பது வேதாகமத்தை ஓர் பகுதியை திறந்து கண்ணில் படும் முதலாவது வசனத்தை உங்களுக்காக எடுத்தல் என்னும் அர்த்தம் அல்ல. வேத வசனத்தில் தேடுதல் என்பது வார்த்தைகளை விபரமாக ஆராய்தலும், நீங்கள் மேற்கொள்ளவேண்டிய தீர்மானத்திற்காக அதன் கொள்கைகளை விண்ணப்பித்தலும் ஆகும். எல்லா திறந்த கதவுகளும், எல்லா சந்தர்ப்பங்களும், தேவனிடமிருந்து வருகின்றது என நீங்கள் நினைக்கும் எல்லா மேன்மையானவைகளும் தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையினால் முதலாவது பரீட்சிக்கப்படல் வேண்டும். இயேசு இந்த கொள்கைளை உபயோகித்தார். அவர் தேவனுடைய சித்தத்திற்கு மாறாக கிரியை செய்யும்படி சாத்தானால்

பரீட்சிக்கப்படும் போது அவர் "எழுதப்பட்டுள்ளது..." (மத்தேயு 4) என மறுஉத்தரவாக பதிலளித்தார். அவர் எழுதப்பட்டுள்ள தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் எல்லாவற்றையும் பரிசோதித்தார்.

நீங்கள் வசனத்தை சோதனை செய்யும்போது, வழிகாட்டலுக்காக அநேக வாக்குத்தத்தத்தை படிப்பதற்கு உறுதியாயிருங்கள். இவைகளில் சிலவற்றை நாம் இந்த அதிகாரத்திலுள்ள பகுதியாகிய "மேலதிக படிப்பினைக்கு" என்னும் பகுதியில் பட்டியலிட்டுள்ளோம். இந்த பந்தியை நீங்கள் படிக்கும்போது அது உங்கள் தேவன் பேசிய விசுவாசத்தை வளரச்செய்து அவருடைய சத்தத்தை நீங்கள் கேட்கப்பண்ண செய்யும்.

## 3. பரிசுத்த ஆவியின் உள்ளான சத்தத்தை கேளுங்கள்:

ஜெபம் மற்றும் வேத வசனத்திற்கு ஊடாக, பரிசுத்த ஆவியின் உள்ளான சத்தத்தின் மூலம் உங்களுடைய ஆவியில் அவருடைய சித்தத்தை தேவன் பேசுவார். இதை விரிவாக கடைசி அதிகாரத்தில் நாம் கலந்துரையாடுவோம். "பரிசுத்த ஆவியின் சத்தத்தின்" ஒரு பகுதி மற்ற நாவில் ஜெப பாஷை யாகும். ஓர் காரியத்தில் தேவனுடைய சித்தத்தின் படி குறித்த நிலையில் நீங்கள் இல்லாத போது, பரிசுத்த ஆவியானவரின் ஜெப பாஷையில் ஜெபியுங்கள்.

பரிசுத்த ஆவியானவர் சரியான சித்தத்தை அறிவார் அத்தோடு சித்தத்திற்கு இசைவான உங்களுடைய ஜெபத்தின் மூலமான சித்தமானது:

> **ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார். (ரோமர் 8:27)**

ஞாபகத்தில் கொள்ளுங்கள் -- இயேசு கூறினார் பரிசுத்த ஆவியானவர் "உங்களுக்கு வரப்போகும் காரியத்தை காட்டுவார்" என்பதாகும். இதன் அர்த்தமானது அவர் தேவனுடைய திட்டத்தை உங்களுக்கு வெளிப்படுத்துவார். அவர் தேவனுடைய சித்தத்தின் படி உங்களை வழிநடத்துவார்.

## 4. கிறிஸ்தவ ஆலோசனைகளை எதிர்பாருங்கள்:

நாம் கடைசி அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளப்படி, விசுவாசிகளுக்கு தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டை நெறிப்படுத்துவதற்கு கிறிஸ்தவ அலோசகர்களை தேவன் உபயோகிக்கின்றார். வேதாகமம் குறிப்பிடுகின்றது:

> **ஆலோசனையில்லாத இடத்தில் ஜனங்கள் விழுந்துபோவார்கள், அநேக ஆலோசனைக்காரர் உண்டானால் சுகம் உண்டாகும். (நீதிமொழிகள் 11:14)**

> **மதியீனனுடைய வழி அவன் பார்வைக்குச் செம்மையாயிருக்கும், ஆலோசனைக்குச் செவி கொடுக்கிறவனோ ஞானமுள்ளவன். (நீதிமொழிகள் 12:15)**

விசுவாசிகள் முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களிடம் மாத்திரமே ஆலோசனைகளை எதிர்பார்க்க வேண்டியது முக்கியமானதாகும். ஒருபோதும் மதசார்பற்ற உளவியலாளர்கள் அல்லது உளவியலை ஆலோசனையாக எதிர்பார்க்க வேண்டாம். அவர்கள் உலகபிரகாரமான ஆலோசனைகளையே கொடுப்பர். அவர்கள் "குருட்டுக்கும் குருடரான வழிகாட்டிகள்":

**குருடரான வழிகாட்டிகளே.....! (மத்தேயு 26:16)**

**துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும்... மனுஷன் பாக்கியவான்... (சங்கீதம் 1:1)**

புதிய கிறிஸ்தவர்களிடமிருந்தும் ஒருபோதும் ஆலோசனைகளை எதிர்பார்க்க வேண்டாம், ஏனென்றால் அவர்களுக்கு அனுபவமும், ஆவிக்குரிய முதிர்ச்சியும் இராது.

சில மக்கள் தங்களுடைய சொந்த கருத்தை ஏற்றுக்கொள்ளும் ஆலோசகரிடம் நம்பிக்கையை பெறும்படி மாத்திரமே செல்லுவார்கள். இது உங்களுடைய நோக்கமானால் ஆலோசனையிலிருந்து சிறு நன்மையை பெற்றுக்கொள்ளுவீர்கள். சில விசுவாசிகள் தாங்கள் பெறும் ஆலோசனைகளை ஒப்பிட அநேக ஆலாசனையாளர்களிடம் ஆலோசிப்பர். அவர்கள் ஆலோசனையாளர்களில் எத்தனை பேர் ஒருவருக்கொருவர் கருத்து கணிப்பை மேற்கொள்ளுவதற்கு கிரியையில் மேலான காரியத்தை எடுக்க தோன்றுவர். இது ஆலோசனையிற்கான நோக்கம் அல்ல. அதிமுக்கியமாக, அனைத்து மனிதர்களின் ஆலோசனைகளும் எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையோடு ஒத்துப்போக வேண்டும் என்பதை எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

## 5. சூழ்நிலைகளை ஆராயுங்கள்:

நீங்கள் மேற்கொள்ள வேண்டிய தீர்மானம் தொடர்பாக சூழ்நிலைகளை ஆராயுங்கள். இவைகள் ஜெபம், வசனங்களை படித்தல், ஆவியின் உள்ளான சத்தம் மற்றும் கிறிஸ்தவ ஆலோசனைகளுக்கு ஊடாக தேவன் தரும் வழிகாட்டலுக்கு தொடர்புடையதாக இருத்தல் வேண்டும்.

தேவனுடைய சித்தத்தை அறிதலுக்கு மாத்திரம் சூழ்நிலைகள் பயன்படகூடாது, ஆனால் அவைகள் எடுக்கப்படும் தீர்மானங்களின் கருத்தை வரையறுக்கின்றன. சிலசமயங்களில் சூழ்நிலைகள் தெரிவு-களை கட்டுப்படுத்தும் அல்லது ஜீவியத்தின் புதிய வழியிற்கான சந்தர்ப்பத்தை கொடுக்கும்.

## 6. வழியிற்காக வேதாகம திறவுகோல்களை பயன்படுத்துங்கள்:

இயற்கையான உலகத்தில் கதவுகளை திறப்புக்கள் திறக்கும். ஆவிக்குரிய உலகில், தேவன் அவருடைய சித்தத்தின் கதவை திறப்பதற்கு திறவுகோல்களை ஏற்படுத்தியுள்ளார்:

**உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள், அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார். (நீதிமொழிகள் 3:5-6)**

**முதலாவது திறவுகோல்: நம்பிக்கை.**

தேவன் உங்களிடம் என்ன கேட்கின்றார் என பயம் கொள்ள வேண்டாம். உங்களுக்கான அவருடைய திட்டம் சிறப்பானதாகும். குறிப்பாக, மனிதர்கள் அவர்களுக்காக அவருடைய ஒரே குமாரனை மரணிப்பதற்கு தந்த ஒருவரில் நம்பிக்கை கொள்ள வேண்டும். உங்களுடைய நம்பிக்கை தேவனில் இருக்க வேண்டும், மனிதர்களிடத்தில் அல்ல:

> **மனுஷன்மேல் நம்பிக்கைவைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக்கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார். (எரேமியா 17:5)**

**இரண்டாவது திறவுகோல்: உங்களுடைய சொந்த புரிந்துகொள்ளுதலில் செவிசாய்க்க வேண்டாம்.**

உங்களுடைய சொந்த மனுஷ காரணங்களில் அடிப்படையாயிருக்க வேண்டாம். இதன் அர்த்தமானது உள்ளான நியாயத்தீர்ப்பிற்கு இடமில்லை என்பது அல்ல. விளங்குதல் மற்றும் சுய அறிவின் உபயோகத்தின் கட்டளைகளால் நீதிமொழிகளின் புஸ்தகம் நிரப்பப்பட்டுள்ளது. நேரடியான நியாயத் தீர்ப்பை நீங்கள் புறக்கணிக்க வேண்டும் என தேவன் கூறவில்லை. அவர் சாதாரணமாக சொல்லு கின்றதாவது தேவனுடைய சித்தத்தை நீங்கள் எதிர்பார்க்கின்றபோது மனுஷிக காரியங்களின் மட்டும் அடிப்படையாக இருக்க வேண்டாம் என்பது தான்.

தாவீது எருசலேமிலிருந்து தேவனுடைய பெட்டியை திருப்பும்போது, அவர் தேவனிடம் வழிகாட்டலை கேட்கவில்லை. அவர் தன்னுடைய சொந்த விளங்குதலின் அடிப்படையாக இருந்து, முடிந்த அளவு அதிகம் கிரியைகளிலான வழியில் தேவனுடைய பெட்டியை நகர்த்தினார் (2 சாமுவேல் 6:1-7).

ஆனால் இது தேவனுடைய வழி அல்ல என்பதோடு நியாயத்தீர்ப்பு விழுந்தது. எருசலேமிற்கு தேவனுடைய பெட்டியை திரும்ப கொண்டுவருதலே தேவனுடைய சித்தமாயிருந்தது, ஆனால் தாவீது தன்னுடைய வழியில் தேவனுடைய சித்தத்தை மேற்கொள்ளவில்லை. இது வழிகாட்டலின் முக்கியமான கொள்கை ஆகும்.

**முன்றாவது திறவுகோல்: எல்லா வழிகளிலும் அவரை ஏற்றுக்கொள்ளுங்கள்.**

எல்லா வழிகளிலும் அவரை ஏற்றுக்கொள்ளுவதற்கு எண்ணங்கள், வசனங்கள் மற்றும் உறுதிகளில் அவரை கனப்படுத்துங்கள். உங்களுடைய வாழ்க்யைில் முதலாவது இடத்தை அவருக்கு கொடுங்கள்:

> **எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர். (கொலோசெயர் 1:18)**

கிபியோனியர்களின் ஒப்பந்தம் தொடர்பாக “தேவனுடைய வாயின் ஆலோசனையை கேட்காமல்” யோசுவா மாபெரும் தவறை செய்தார் (யோசுவா 9). அவருடைய தீர்மானமானது தேவனல்லாத ஜாதியோடு கூட்டணியமைப்பதற்கு விளைவாயிற்று, இது தேவனால் புறக்கணிக்கப்பட்ட ஒன்றாகும்.

மூன்று திறவுகோல்களானது...

-அனைத்து முழு இருதயத்தோடு தேவனில் நம்பிக்கை கொள்ளுங்கள்....
-சொந்த விளக்கத்தோடு அடிப்படையாக வேண்டாம்....
-அனைத்து வழிகளிலும் அவரை ஏற்றுக்கொள்ளுங்கள்.....

இந்த திறவுகோல்கள் கதவை திறக்கும்..... அவர் அதின் வழிகளில் நடத்துவார்.

## 7. அறிவின் வழியை தெரிந்தெடுத்துக் கொள்ளுங்கள்:

தீர்மானங்களில் விசேடமாக தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையில் அடிப்படையாயிருங்கள், நீங்கள் எப்பொழுதும் வெளிப்படுத்தப்பட்ட வார்த்தையிற்கு இசைவான தீர்மானங்களை எடுங்கள். ஜெபத்திற்கு பின், வசன படிப்பிற்கு பின், ஆவியின் சத்தத்தை கேட்டல், ஆலோசனைகளை எதிர்பார்த்தல், சூழ்நிலைகளை ஆராய்தல் ஆகிய மற்ற தீர்மானங்களில் "அறிவின் வழியின்" அடிப்படையில் தீர்மானங்களை நீங்கள் எடுக்கலாம். (ஞாபகத்தில் கொள்ளுங்கள்--தேவனிடமிருந்தான ஞானத்திற்கு நீங்கள் ஜெபித்தீர்கள். இப்பொழுது இந்த ஞானத்தின் அடிப்படையில் நீங்கள் தீர்மானம் எடுங்கள்.)

எந்த தீர்மானத்திற்கும் ஞானத்தின் வழியே ஆதாரமாயிருக்கின்றது, இது சகல வாழ்க்கை பகுதியிலும் ஆவிக்குரிய மேன்மையிற்கு மாபெரும் சந்தர்ப்பத்தை கொடுக்கும். இது ஜெபம், எழுதப்பட்ட வார்த்தை, பரிசுத்த ஆவியானவரின் உள்ளான சத்தம், கிறிஸ்தவ ஆலோசனையிற்கூடாக தேவன் வெளிப்படுத்தியவையிற்கு ஒத்திசைவான சந்தர்ப்பமாக உள்ளது.

ஞானத்தின் வழியை அறிவதற்கான இயலுமை ஆவிக்குரிய முதிர்ச்சியிற்கூடாக அதிகமாகின்றது:

> **காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்கவேண்டிய உங்களுக்குத் தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாயிருக்கிறது. நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள்.**
>
> **பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவ-னாயிருக்கிறான்.**
>
> **பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானோந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும். (எபிரெயர் 5:12-14)**

தேவனுடைய தொடர்பாடல், ஜெபம், அவருடைய எழுதப்பட்ட வார்த்தையை தியானித்தல் மூலம் ஆவிக்குரிய முதிர்ச்சி வரும்.

## தேவனுடைய சித்தத்தின் உறுதி

> **(ஆத்துமாவிலிருந்து வரும் இணக்கமான) தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் (தொடர்ந்து இடைநடுவராக கிரியை செய்வதாக) ஆளக்கடவது, இதற்கென்றே (அந்த சமாதான நிலையில்) நீங்கள் (கிறிஸ்துவின் அங்கத்துவராக) ஒரே சரீரமாக (வாழ்வ-தற்கு) அழைக்கப்பட்டீர்கள், நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள். (கொலோசெயர் 3:15)**

ஒரு நடுவர் விளையாட்டை கண்காணித்து விதிகளின்படி விளையாட்டு விளையாடப்படுகின்றதா என அறிய பொறுப்பாயுள்ள ஓர் நபராவார்.

ஆவிக்குரிய உலகில், தேவனுடைய சித்தத்தின் நடுவர் தேவனுடைய சமாதானமாகும். உங்களுடைய கிரியைகளும், தீர்மானங்களும் கண்காணிக்கப்படுகின்றது. அவைகள் தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக இருக்கும்போது, உங்களுடைய ஆவியில் சமாதானம் உங்களுக்கு இருக்கும். நீங்கள்

தடுமாறும்போதும், விரக்தியடையும்போதும் தடுமாறுவீர்கள். உங்களுடைய தீர்மானம் எடுத்தல் தொடர்பான சமாதானம் பெறும்வரை காத்திருங்கள். நடுவரிடமிருந்து சமாதானத்தின் அறிகுறி இல்லா விட்டால், ஏதோவொன்று தவறாக உள்ளது:

> **தேவன் கலகத்திற்குத் தேவனாயிராமல், சமாதானத்திற்குத் தேவனாயிருக்கிறார்... (1 கொரிந்தியர் 14:33)**

## நேரத்தின் படிமுறை

தேவனுடைய சித்தத்தின் காரியத்தில் இறுதியான ஓர் முக்கியமான கொள்கையானது நேரத்தின் படி-முறையில் தேவன் அவருடைய சித்தத்தை வெளிப்படுத்துவதை அறிதலாகும். இது ஒரு தடவையில் அனைத்தும் விபரிப்பாக உங்கள் வாழ்க்கையின் முழு திட்டத்தையும் வெளிப்படுத்த மாட்டார் என்று அர்த்தமல்ல. தேவன் உங்களோடு ஜீவிய காலத்தில் ஓர்தடவை மாத்திரம் பேச மாட்டார். ஓர் சம்பாஷனையின் அடிப்படையில் யாரொருவரோடும்கூட உறவை நீங்கள் விருத்தி செய்து கொள்ள முடியாது. உறவு தொடர்பாடுதல் செயற்பாட்டின் தொடர்ச்சியாகும். தேவன் தொடர்ந்து பேசுகின்றார், நீங்கள் அவருடைய சத்தத்தை அறியும் இயலுமையை வளர்க்கின்றீர்கள்.

தேவனுக்கு ஓர் நேரத்தின் படிமுறையில் அவருடைய சித்தத்தை வெளிப்படுத்துவதற்கு காரணம் உள்ளது. காரியத்தை முன்னெடுப்பதற்கான போதியளவு உணர்விண்மை அல்லது உங்களை அது சிந்திக்க செய்வதினால் முழு திட்டத்தையும் நீங்கள் அறிவதற்கு ஆயத்தம் இல்லாமலும் இருக்கலாம். இயேசு அவருடைய சீஷர்களுக்கு ஓர் தடவையில் கூறினார்:

> **இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். (யோவான் 16:12)**

தேவன் இஸ்ரவேலர்களிடம் கானானில் அவர் கொடுக்கும் புதிய தேசத்திற்கான பொறுப்பை மேற் கொள்ளுவாற்கான இயலுமைக்கு அவர்கள் ஆயத்தமாகும் போது அவர்களுடைய எதிரிகளை "கொஞ்சம் கொஞ்சமாக" அவர் தோற்கடிப்பார் என கூறினார்.

தேவன் அவருடைய முழு திட்டத்தையும் வெளிப்படுத்த மாட்டார், ஏனென்றால் நாம் எதிர்காலத்தை குறித்து அதிகம் கவலைப்பட முற்படுவதால் ஆகும். வேதாகமம் எச்சரிக்கின்றது:

> **ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள், நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும். (மத்தேயு 6:34)**

எதிர்காலத்தை குறித்து கவலைப்பட வேண்டாம். இன்றைய தேவைகளுக்கான தீர்மானங்களை மாத்திரம் எடுங்கள். எதிர்காலம் தேவனுடைய கட்டுப்பாட்டில் இருக்கின்றது. இதன் அர்த்தமானது எதிர் காலத்திற்கு ஞானமுள்ள திட்டங்களை நீங்கள் எடுக்கக்கூடாது என்பது அல்ல. ஆனால் நீங்கள் அதை குறித்து கவலைப்பட வேண்டாம். முக்கியமானது என்னவென்றால் இந்த நாளில் தேவன் வெளிப்படுத்திய சித்தத்திற்கு வாழுதலாகும். உங்களுடைய தின கிறிஸ்தவ நடத்தையில் அவருடைய சத்தத்தை கேட்பதற்கு படியுங்கள். அவருடைய சித்தத்தில் தினமும் நடத்தல் அவரு-டைய சித்தத்தில் நீண்ட கால நடத்தையிற்கு விளைவாகும்.

தேவன் தம்முடைய முழு திட்டத்தையும் வெளிப்படுத்த மாட்டார், ஏனென்றால் விசுவாசத்தில் நீங்கள் வாழுவதற்கு அவர் வேண்டுகின்றார். ஒருவர் எப்பாதையில் பிரவேசிக்க வேண்டும் என அறிந்திருக்கும் போது முதலாவது படிமுறையை எடுப்பது இலகுவானதாகும். தெரியாதொன்றில் விசுவாசத்தின் படி-முறையை எடுப்பது இலகுவானது அல்ல.

ஆபிரகாம் தொடர்பாக வேதாகமம் கூறுகின்றது:

> **விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான். (எபிரெயர் 11:8)**

நேரத்தின் படிமுறையில் நடத்தல் தேவனுடைய நல்ல விசுவாசத்தை கட்டியெழுப்ப முடியாது. தேவன் வெளிப்படுத்திய படி நேரத்தின் படிமுறையை எடுத்தல் துரிதமான நீங்கள் நகர முடியாது என்று அர்த்தம் அல்ல. மோசே விரைவாக செயற்பட்டு ஓர் எகிப்தியனை கொன்று போட்டான். ஆபிரகாம் தேவனுடைய திட்டத்திற்கு விரைவாக செயற்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட சந்ததியிற்காக இஸ்மவேலை தெரிவு செய்ய முற்பட்டார்.

தேவனிடம் காத்திருக்கும் முக்கியத்துவத்தை எஸ்தரின் புஸ்தகம் வலியுறுத்துகின்றது. ஆமான் என்னும் தீய மனிதனினால் அழிக்கப்படும் அபாயம் தேவனுடைய மக்களுக்கு இருந்தது. அவன் அனைத்து யூதர்களையும் அழிக்கும்படி இராஜாவிடம் கேட்டிருந்தான்.

தீங்கை குறித்து எஸ்தர் ராணி எச்சரிக்கையாயிருந்தாள். யூத மக்கள் அழிக்கப்படுவது தேவனுடைய சித்தமல்ல என அவள் அறிந்திருந்தாள், ஆனால் அவள் துரிதாக கிரியை செய்யவில்லை. தேவன் அவளுக்கு திட்டம் தரும்வரை அவள் காத்திருந்தாள் அத்தோடு இராஜாவோடு பேசுவதற்கு முன்பாக மேலும் ஒரு நாளில் அவள் காத்திருந்தாள். அந்த காத்திருக்கும் நாளில் ஓர் முக்கியமான காரியம் நடைபெற்றது. இராஜா மொர்தெகாய் என்னும் யூதன் தன்னை கொலை செய்வதான தீங்கிலிருந்து தன்னுடைய வாழ்க்கையை காப்பாற்றியதாக கண்டறிந்தான்.

இதை அறிந்த பிற்பாடு, யூதர்களுக்கு எதிரான ஆமானுடைய தீங்கை எஸ்தர் வெளிப்படுத்தினாள். ஆமானுடைய திட்டத்திற்கு எதிராக இராஜா கிரியை செய்தார், யூதர்கள் காப்பாற்றப்பட்டனர், ஆமான் தன்னுடைய தீங்கிற்காக தண்டிக்கப்பட்டான்--அனைத்தும் எஸ்தர் கிரியை செய்வதற்கு முதல் மேலும் ஒரு நாள் காத்திருந்ததால் ஆகும்.

## இன்னும் எரியும் புதர்

ஆவிக்குரிய பகுதியில், இன்னும் புதர் எரிகின்றது. தேவன் எம்மை இன்னும் வழிநடத்தி, எம்மோடு பேசுதவதற்கு வாஞ்சிக்கின்றார்:

> **என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன். (எரேமியா 33:3)**

தேவன் அவருடைய சித்தத்தை வெளிப்படுத்தி அவருடைய திட்டத்தை தொடர்பாட விரும்புகின்றார். அவர் தொடர்ந்து வழிகாட்டி வழிநடத்துகின்றார். தேவன் நீங்கள் கேட்டால் மாத்திரம் இன்னும் பேசும் தேவனாக இருக்கின்றார்.

## சுய பரிசோதனை

1. திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்.

..............................................................................................................................................................

2. தேவன் அவருடைய பூரண சித்தத்தின்படி கிரியையை ஓர் விசுவாசி செய்யும்போது அவர் கொடுக்கும் உறுதி என்ன?

..............................................................................................................................................................

3. நீதிமொழிகள் 3:5-6ல் கொடுக்கப்பட்ட தேவனுடைய சித்தத்தை அறிவதற்காக கொடுக்கப் பட்ட மூன்று திறவுகோல்கள் என்ன?

........................................ ........................................ ....................................

4. அனைத்து வழிகளிலும் “தேவனுடைய ஏற்றுக்கொள்ளுதல்” என்றால் என்ன அர்த்தம்?

..............................................................................................................................................................

5. இந்த அதிகாரத்தில் கலந்துரையாடப்பட்ட தேவனுடைய சித்தத்தை கண்டறிவதற்கான ஏழு படிமுறைகளை பட்டியலிடுக.

........................................ ........................................ ........................................

........................................ ........................................ ........................................

........................................

4. கீழ்வரும் வாக்கியங்களை வாசிக்கவும். வாக்கியம் உண்மையானால், அதற்கு முன்னால் உள்ள இடைவெளியில் ச என்னும் எழுத்தை எழுதவும், வாக்கியம் தவறானால், அதற்கு முன்னால் உள்ள இடைவெளியில் பி என்னும் எழுத்தை எழுதவும்:

அ................ தேவனுடைய சித்தத்தை அறிவதற்கு மிகச்சிறந்த முறை வேதாகமத்தை உபயோகித்து, பொதுவாக ஓர் பகுதியை திறந்து, முதலாவதாக தோன்றும் வசனத்தை உங்கள் பதிலாக எடுப்பதாகும்.

ஆ................ உங்களுடைய வாழ்க்கையில் தேவன் அவருடைய முழு திட்டத்தையும், அனைத்து விரிவாக்கத்தோடு ஒரு அற்புதமான வெளிப்படுத்தில் பொதுவாக வெளிப் படுத்துகின்றார்.

இ................ சொப்பனங்கள், தரிசனங்கள், இதையொத்த மற்ற அற்புதமான முறைகளிற்கூடாக இன்று தேவன் பேசுவதில்லை.

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. நீதிமொழிகள் 3:5-6 மற்றும் ரோமர் 12:1-2ஐ ஒப்பிடுக. ஒவ்வொரு பந்தியிலும் (செய்ய வேண்டிய காரியம்) இரண்டு நேரான கட்டளைகளும், ஓர் மறையான கட்டளையும் (செய்ய கூடாத காரியம்) காணப்படுகின்றன. அவைகளை கீழ்வரும் அட்டவணையில் நிரப்புக:

| | **நீதிமொழிகள் 3:5-6** | **ரோமர் 12:1-2** |
|---|---|---|
| நேரான கட்டளை: | | |
| மறையான கட்டளை: | | |
| நேரான கட்டளை: | | |

2. போதகர். ஜார்ஜ் முல்லர் என்பவர் இங்கிலாந்தில் அநாதை இல்லத்தை நிறுவி வழிநடத்தி, உலகத்திற்கூடாக பல்வேறுப்பட்ட மிஷனரி வேலைகளை செய்த மாபெரும் ஆவிக்குரிய தலைவர் ஆவர். அவருடைய எழுத்துக்களில், போதகர். ஜார்ஜ் முல்லர் தேவனுடைய சித்தத்தை அறிவதற்கான அவருடைய சூத்திரத்தை இவ்வாறு ஏற்படுத்தினார்:

"கொடுக்கப்பட்ட காரியம் தொடர்பாக இருதயத்தின் சொந்த சித்தம் இல்லாதிருக்கும்போது குறித்த குறிப்பை என்னுடைய இருதயத்திற்குள் எடுத்து ஆரம்பத்தை நான் எதிர்பார்ப்பேன்.

பத்தில்-ஒன்பது மக்கள் இதில் குழம்பி போனார்கள். தேவனுடைய சித்தம் எதுவாக இருப்பினும் அதை செய்யும்படியாக ஆயத்தம் எமது இருதயத்தில் ஏற்படும் போது பத்தில்-ஒன்பது மக்கள் இதில் கஷ்டப்பட்டார்கள். ஒருவர் இந்த குறிப்பில் உண்மையுள்ளவராக வரும்போது, இது பொதுவானது, ஆனால் அவருடைய சித்தத்தின் அறிவில் இது ஓர் சிறிய வழியாகும்.

இதை செய்த போது, நான் உணர்ச்சிவசப்படவோ அல்லது தனிப்பட ஈர்க்கப்படவோ இல்லை. நான் அதை செய்தால், நான் மாபெரும் ஏமாற்றத்தின் பொறுப்பாக என்னை நானே ஏற்படுத்துவேன்.

நான் தேவனுடைய ஆவியின் சித்தத்தை அல்லது அதன் தொடர்பை தேவனுடைய வசனத்தின் மூலம் தேடுவேன். ஆவியும் வசனமும் ஒன்றிணைக்கப்படல் வேண்டும். நான் வசனம் இல்லாமல் ஆவியை மட்டும் பார்ப்பேன் ஆயின், நான் எனக்கு நானே மாபெரும் ஏமாற்றத்தை திறந்து கொள்வேன். எம் அனைவரையும் பரிசுத்த ஆவியானவர் வழிநடத்தினால், அவர் அதை வசனத்தின் படி செய்வார், அத்தோடு அது அவைகளோடு ஒருபோதும் முரண்படாது.

அடுத்தது, நான் அதை தெய்வீக சூழ்நிலைகளுக்குள் எடுப்பேன். இது தேவனுடைய சித்தத்தை அவருடைய வசனம் மற்றும் ஆவியிற்கிடையிலான தொடர்பை குறிப்பாக கூட உணர்த்துகின்றன. நான் தேவனிடம் அவருடைய சித்தத்தை எனக்கு சரியாக வெளிப்படுத்தும் படியாக ஜெபித்து கேட்பேன். ஜெபம், வசனத்தை படித்தல், பிரதிபலிப்பிற்கு ஊடாக என்னுடைய சிறந்த இயலுமை மற்றும் அறிவின் படி நிதானமான நியாயத்தீர்ப்பிற்குள் வருவேன். என்னுடைய

மனம் சமாதானமாக வந்தால், இரண்டு அல்லது மூன்று தடவைகளுக்கு மேல் அதை திரும்ப திரும்ப செய்தலுக்கு வருவதோடு, அதன்படி தொடர்ந்து செய்வேன்.

முக்கியத்துவம் இல்லாத காரியங்களிலும், அதி முக்கியமான காரியங்களின் உள்ளடக்கமான மாறுதல்களிலும், நான் இந்த முறைகளை எப்பொழுதும் வல்லமையுள்ளதாக காண்பேன்."

3. தேவன் வழிகாட்டல் தொடர்பாக அவருடைய வார்த்தையில் அநேக வாக்குத்தத்ததை கொடுத்துள்ளார். கீழ்வரும் வசனங்களை படியுங்கள்:

சங்கீதம் 3:8; 5:8; 25:5,9:12; 27:11; 31:3; 32:8; 37:23; 48:14; 61:2; 73:24; 78:52,72 85:8,13 107:7; 139:10,24; 142:3; 143:10
நீதிமொழிகள் 3:6; 4:11; 8:20; 11:3,15; 16:9; 21:29; 23:19
பிரசங்கி 10:10
ஏசாயா 45:13; 58:11; 61:8
யோவான் 10:3; 16:13
எபேசியர் 5:17
கொலோசெயர் 1:9; 4:12

4. தேவனுடைய வழிகாட்டுதலுக்கான மாபெரும் உதாரணங்களின் ஒன்றானது வாக்குத்தத்த தேசத்திற்கு எகிப்திலிருந்து இஸ்ரவேல் ஜாதியை வழிநடத்தியதாகும். நீங்கள் இதை குறித்து கீழ்வரும் பகுதிகளில் வாசிக்கலாம்:

யாத்திராகமம் 13:17,18, 21:15:13
உபாகமம் 8:2,15; 29:5; 32:10;
1 நாளாகமம் 11:2
2 நாளாகமம் 25:11
2 சாமுவேல் 5:2
நெகேமியா 9:12
சங்கீதம் 77:20; 78:14,53; 80:1; 106:9; 107:7; 136:16
ஏசாயா 48:21; 63:12-14
எரேமியா 2:6,17
எரேமியா 8:9

## அதிகாரம் எட்டு

# கேள்வி கேட்கக்கூடியதான கிரியைகள்

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ "கேள்வி கேட்கக்கூடியதான கிரியைகள்" என்னும் பதத்தின் அர்த்தம் என்ன என்பதை விபரிக்கவும்,
- ☐ கேள்வி கேட்கக்கூடியதான கிரியைகளில் தீர்மானங்களை மேற்கொள்ளுவதற்கான வசனத்தின் வழிகாட்டல்களை தரவும்,
- ☐ "பலவீனமான சகோதரர்" மற்றும் "பலமான சகோதரர்"களுக்கு இடையில் வித்தியாசத்தை காணவும்,
- ☐ "பலவீனமான சகோதரர்" தொடர்பான வேதாகம வழிகாட்டல்களை தரவும்,
- ☐ விசுவாசிகளுக்கிடையிலான உடன்படிக்கையின்மையை கையாளுவதற்கு வேதாகம வழி காட்டல்களை தரவும்,
- ☐ விசுவாசிகளுக்கிடையிலான முரண்பாடுகளை தீர்ப்பதற்கு வேதாகம வழிகாட்டல்களை தரவும் முடியும்.

**திறவுகோல் வசனம்:**

> **ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள். (1 கொரிந்தியர் 10:31)**

## அறிமுகம்

கேள்வி கேட்கக்கூடியதான கிரியைகள் தொடர்பான தீர்மானங்களை எடுப்பதை இந்த அதிகாரம் கவனத்திற் கொள்ளும். இந்த பதம் வரையறுக்கப்பட்டுள்ளதோடு, கேள்வி கேட்கக்கூடியதான கிரியைகள் தொடர்பான வழிகாட்டல்களையும், பலவீனமான சகோதரர்களோடு தொடர்புபடுவதற்கும், விசுவாசிகளுக்கிடையிலான உடன்படிக்கையின்மையை கையாளுவதற்கும், முரண்பாடுகளை தீர்ப்ப-தற்குமான கலந்துரையாடல்களை உள்ளடக்கும்.

## கேள்வி கேட்கக்கூடியதான கிரியைகள்

ஒவ்வொரு கலாச்சாரங்களிலும் கேள்வி கேட்கக்கூடியதான குறிப்பிட்ட கிரியைகள் காணப்படும். இந்த கிரியைகளானது இயேசு பின்தொடருவோருக்கு சரியா அல்லது தவறா என வசனங்களில் விசேடமாக குறிப்பிடாமல் இருக்கும்.

உங்களுடைய சொந்த கலாச்சாரத்தில் குறித்த கிரியைகள் தொடர்பாக நீங்கள் இலகுவாக எண்ணலாம். ஆடம்பரம் அல்லது களியாட்டம் உள்ளடங்களான நடத்தைகளோடு அவைகள் உள்ளடக்கப்படலாம். அவைகள் நீங்கள் தேர்ந்தெடுத்த சங்கம் அல்லது அமைப்புக்களாக இருக்கலாம். இந்த கிரியை களானது நீங்கள் உண்ணும் அல்லது குடிக்கும் குறித்த பழக்கவழக்கம் அல்லது தெரிவுகளாக இருக்கலாம். எந்த நாளில் அல்லது ஓய்வு நாளிலா துதி செய்வதற்கு ஏற்ற நாள் என கேள்வியும் இருக்கலாம்.

வேதாகமத்தில் குறித்த காரியம் தொடர்பாக விசேட வழிகாட்டுதல்கள் கொடுக்கப்படாதவிடத்து கேள்வி கேட்கக்கூடியதான கிரியைகள் தொடர்பாக தேவனுடைய சித்தத்தை நீங்கள் எவ்வாறு அறிந்து கொள்ளுவீர்கள்? இந்த கேள்விகளை நீங்களே உங்களுக்கு கேளுங்கள்:

## அது தேவனை மகிமைப்படுத்துகின்றதா?

கேட்கக்கூடியதான கிரியைகள் தொடர்பாக நியாயம் தீர்ப்பதற்கு மிகவும் முக்கியமான கொள்கை யானது "அது தேவனை மகிமைப்படுத்துகின்றதா?" என்னும் கேள்வியை கேட்பதாகும்.

நீங்கள் எல்லாவற்றிலும் தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என வேதாகமம் குறிப்பிடுகின்றது:

> **ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள். (1 கொரிந்தியர் 10:31)**

> **வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள். (கொலோசெயர் 3:17)**

> **நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து, எதைச் செய்தாலும் அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல் கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள். (கொலோசெயர் 3:23-24)**

## உங்களுடைய உத்தேசம் என்ன?

இந்த கிரியைகளோடு நீங்கள் ஏன் சம்பந்தம் பட வேண்டும்? அதை செய்வதற்கான உங்களுடைய காரணம் அல்லது உத்தேசம் என்ன? நல்ல காரியம் கூட தறவான உத்தேசத்தினால் செய்யப்படலாம். உதாரணத்திற்கு. ஜெபத்திற்கான தவறான உத்தேசத்தின் நிலையை யாக்கோபு தருகின்றார்:

> **நீங்கள் விண்ணப்பம்பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமல் இருக்கிறீர்கள். (யாக்கோபு 4:3)**

ஜெபம் செய்வது பொதுவாக தவறு அல்ல ஆனால் சில விண்ணப்பத்திற்கான உத்தேசமானது சரியா-னது அல்ல. இந்த வசனத்தில் விபரிக்கப்பட்டுள்ள உத்தேசமானது இச்சைகளுக்கான வாஞ்சையை நிறைவேற்றுவதற்கான ஆசைகளாகும்.

## அது அவசியமானதா?

பவுல் சில காரியங்களானது அதிகாரத்திற்குற்பட்டதாக கொள்ளப்பட்டாலும், (தேவனுடைய எழு-தப்பட்ட வார்த்தையிற்கு துஷ்பிரயோகம் அல்ல) அவைகள் உண்மையிலேயே அவசியமானவைகளா என நீங்கள் கருத்திற் கொள்ள வேண்டும். அவர் குறிப்பிடுகின்றார்:

> **எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது. (1 கொரிந்தியர் 6:12)**

## அது ஆவிக்குரிய வளர்ச்சியை விருத்தி செய்கின்றதா?

அநேக கிரியைகள் ஆவிக்குரிய வளர்ச்சியை தடுக்கலாம். மற்ற கிரியைகள் அதிக நேரத்தை எடுத்து அவைகள் ஆவிக்குரிய வளர்ச்சியை அடைத்துப்போடுவதாக அமையலாம்:

> **வசனத்தைக் கேட்டும், உலகக்கவலைகளும், ஐசுவரியத்தின் மயக்கமும், மற்றவை-களைப்பற்றி உண்டாகிற இச்சைகளும் உட்பிரவேசித்து, வசனத்தை நெருக்கிப்போட, அதினால் பலனற்றுப்போகிறார்கள். (மாற்கு 4:18-19)**

> **முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்கிறவர்களாயிருக்கிறார்கள். கேட்டவுடனே போய், பிரபஞ்சத்திற்குரிய கவலைகளினாலும் ஐசுவரியத்தினாலும் சிற்றின்பங்களினாலும் நெருக்கப்பட்டு, பலன்கொடாதிருக்கிறார்கள். (லூக்கா 8:14)**

உங்களில் நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்: "இந்த கிரியைகள் என்னுடைய ஆவிக்குரிய விருத்-தியை தடுக்கின்றதா அல்லது விருத்தி செய்கின்றதா?"

ஆவிக்குரிய வளர்ச்சியை தடுக்கும் கிரியைகள் தேவன் உங்கள் முன் ஏற்படுத்தியுள்ள ஆவிக்குரிய நிலையை தடுப்பதற்கான அதிகம் ஏற்படுத்துகின்றது:

> **ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம். (எபிரெயர் 12:1)**

## அது நித்தியமான பழக்கவழக்கமா?

கேள்வி கேட்கக்கூடியதான கிரியைகள் தொடர்பாக கரிசனை கொள்ளும்போது, "இந்த கிரியை ஓர் பழக்க வழக்கத்திற்குள் என்னை அடிமையாக்கின்றதா?" என உங்களுக்குள் கேளுங்கள். அடிமையாக்கப்படும் பழக்கம் என்பது உங்களை கட்டுப்படுத்துவது ஒன்றாகும். அது இல்லாமல் உங்களால் முன்னோக்க முடியாது என நீங்கள் உணருவீர்கள் அத்தோடு அதை விட்டுக்கொடுப்ப-தற்கும் கஷ்டப்படுவீாகள்.

அடிமையாக்கப்படும் பழக்கவழக்கத்தை குறித்து பவுல் குறிப்பிடுகின்றார்:

> **எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் நான் ஒன்றிற்கும் அடிமைப் படமாட்டேன்..... (1 கொரிந்தியர் 6:12)**

எல்லா கிரியைகளும் பௌதீகரீதியாக, மனரீதியான, ஆவிக்குரியரீதியான அல்லது பழக்கவழக்கத்தினால் தவிர்க்க கூடிய நேரத்தின் பெறுமதியினால் அடிமையாக்கப்படும்.

## அது உடன்படிக்கை பண்ணப்பட்டதா?

"ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது?" என 2 கொரிந்தியர் 6:14ல் பவுல் கேட்கின்றார்.

கேள்வி கேட்கக்கூடியதான கிரியைகள் ஆவிக்குரிய உடன்படிக்கையை கவனத்தில் கொள்ளுகின்றதா? உலகத்தின் கிரியையில் நீங்கள் தொடர்பாய் இருக்கின்றீர்களா அல்லது இந்த காரியங்களை செய்வதின் ஊடாக அதன் தகுதியை ஏற்றுக்கொள்ளுகின்றீர்களா? வேதாகமம் கட்டளையிடுகின்றது:

> **ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். (2 கொரிந்தியர் 6:17)**

## அது சோதனையிற்கு வழி நடத்துகின்றதா?

"எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல்" என்று எம்மை ஜெபிக்கும்படி இயேசு போதித்தார். கேள்வி கேட்கக்கூடியதான கிரியைகளில் சர்வசாதாரணமாக உங்களை சோதனையிற்கு இடம் கொடுப்பீர்களாயின், இந்த ஜெபத்தை ஜெபிப்பது உபயோகம் அற்றது. வேதாகமம் கூறுகின்றது:

> **சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக, தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல.**
>
> **அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்.**
>
> **பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும். (யாக்கோபு 1:13-15)**

விசுவாசத்தின் மாதிரியிலிருந்து சோதனையானது வித்தியாசமானது. ஓர் விசுவாசி கடினமான சூழ்நிலைகளுக்கு ஊடாக தன்னுடைய சொந்த தவறு இல்லாது முகங்கொடுக்கும்போது விசுவாசத்தின் மாதிரி ஏற்படுகின்றது. சூழ்நிலையானது தேவனுடைய தனது விசுவாசத்தை முயற்சிக்கும். தேவன் மாதிரிகளை உங்கள் விசுவாசம் பலப்படுத்துவதற்காக அனுமதித்து ஆவிக்குரிய முதிர்ச்சியை கொண்டு வருகின்றார்.

ஆனால் தேவன் மனிதனை சோதிப்பவர் அல்ல. சோதனை என்பது தவறு செய்வதற்கான வாஞ்சை ஆகும். உங்களுடைய சிந்தைகளை நீங்கள் கட்டுப்பாடு பண்ணாதிருந்து கிரியை செய்யும்போது அல்லது சாத்தான் தீய காரியங்களை செய்யும்படி இணங்க வைக்கும்போது சோதனை வருகின்றது. நீங்கள் சோதனையிற்கு இடங்கொடுத்தால், இச்சையின் விளைவால் பாவம் ஏற்படும், பாவத்தின் விளைவால் ஆவிக்குரிய மரணம் ஏற்படும்.

## அது தீய தோற்றத்தை தருமா?

நீங்கள் கருத்திற்கொள்ளும் கிரியைகள் மற்றவர்களுக்கு தீய தோற்றத்தை கொடுக்குமா? வேதாகமம் கட்டளையிடுகின்றது:

> **பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்.**
> **(1 தெசலோனிக்கேயர் 5:22)**

## அது உங்களுடைய மனச்சாட்சியை துஷ்பிரயோகப்படுத்துகின்றதா?

கேள்வி கேட்கக்கூடியதான கிரியைகள் தொடர்பாக தீர்மானங்களை மேற்கொள்ளும்போது, நீங்கள் சரியாக செய்யும் தெரிவுகளை முழுமையாக நம்பிக்கை கொள்ள வேண்டும். புதிய ஏற்பாட்டு காலத்தில் விசுவாசிகள் இன்னும் இறைச்சியானது பழைய ஏற்பாட்டு பிரமாணங்களுக்கு அமைய பலிக்காக உபயோகப்பட்டிருப்பினும் கூட அதை புசிப்பது சரியா அல்லது தவறா என ஏற்றுக்கொள்ளாது இருந்தார்கள். இந்த பலியானது இயேசு தன்னுடைய ஜீவனை இறுதியாகவும், பாவத்திற்கான பூரண பலியாகவும் தருவதற்கு முன் மனிதனுடைய பரிகாரத்திற்காக உபயோகிக்கப்பட்டது. இறைச்சி பலியிற்காக உபயோகப்படுத்தப்படுவதினால் இறைச்சி புசிப்பதற்கு எதிரான பிரமாணம் இருந்தது. பவுல் இந்த கேள்வி சம்பந்தமாக எழுதுகின்றார்:

> **ஒருவன் சமுசயப்படுகிறவனாய்ப் புசித்தால், அவன் விசுவாசமில்லாமல் புசிக்கிறபடியினால், ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுகிறான். விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே. (ரோமர் 14:23)**

நீங்கள் சரியாக செய்யும் காரியங்களில் கேள்விகேட்கக்கூடிய வகைகளில் முழுமையாக அறிவுறுத்துவதே கொள்கையாகும். நீங்கள் சந்தேகமாயிருந்தால், குறித்த கிரியைகள் சம்பந்தமாக உங்களுக்கு அது பாவமாக மாறும்.

## அது மற்றவர்களை எவ்வாறு பாதிக்கும்?

கேள்வி கேட்கக்கூடியதான கிரியைகள் சம்பந்தமாக இறுதியான வழிகாட்டலுக்கு இது வழிநடத்தும். இந்த செயற்பாடு மற்றவர்களுடைய தாக்கத்திற்கு எவ்வாறு சம்பந்தப்படும்? இது மற்றவர்களை எவ்வாறு உத்தேசிக்கும்? உத்தேசம் என்பது அறிவுறுத்தல், கட்டுதல் அல்லது ஆவியில் முன்னேற்றுதல் ஆகும். வேதாகமம் குறிப்பிடுகின்றது:

> **ஆனபடியால் சமாதானத்துக்கடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்திவிருத்தி உண்டாக்கத்தக்கவைகளையும் நாடக்கடவோம். (ரோமர் 14:19)**

இந்த நடவடிக்கை மற்றவர்களில் ஆவிக்குரிய அபிவிருத்தியில் நேராக வழியில் பங்களிப்பு செய்கின்றதா? பவுல் எழுதுகின்றார்:

> **எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது. எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் பக்திவிருத்தியை உண்டாக்காது. (1 கொரிந்தியர் 10:23)**

நீங்கள் சம்பந்தப்படும் சில கிரியைகளானது மற்ற விசுவாசிகளுக்கு அவர்களுடைய ஆவிக்குரிய நடத்தையை தடுக்கும். மீண்டும், இறைச்சியை உண்பது குறித்து பேசுகையில் பவுல் எழுதுகின்றார்:

> **ஆதலால் போஜனம் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்கினால், நான் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்காதபடிக்கு, என்றைக்கும் மாம்சம் புசியாதிருப்பேன். (1 கொரிந்தியர் 8:13)**

இறைச்சியை உண்பது தவறு என்று பவுல் கொள்ளவில்லை. ஆனால் பலவீனமான சகோதரரை

தேவனில் தடுக்குமாயிருந்தால் அவர் அதை உண்பதில்லை என்கின்றார். பலவீனமான சகோதரர் எனப்படும் விசுவாசியானவர், பலவீனமான விசுவாசம், அறிவு அல்லது பலமுள்ள சகோதரரின் உதாரணத்தினால் மனச்சாட்சியினால் தாக்கப்படுபவர் ஆவர். அவர் தன்னுடைய மனச்சாட்சியிற்கு எதிராக பாவத்தில் உள்வாங்கப்படலாம், அத்தோடு அவருடைய ஆவிக்குரிய செயற்பாடானது தடுக்கப்படும்.

பலமுள்ள விசுவாசி என்பவர், குறித்த பகுதிகளிலுள்ள சுதந்திரத்தின் அவருடைய விளங்குதல், அவருடைய நம்பிக்கையின் பலம், நல்ல மனச்சாட்சியோடான பொறுப்பின் பலம் ஆகியவற்றை கொண்டவர் ஆவர். அவர் மற்றவர்களுடைய வித்தியாசமான கருத்துக்களினால் உள்வாங்கப்பட மாட்டார்.

பலமுள்ள சகோதரரின் ஏதாவது கிரியைகள் பொதுவாக தவறுகளை அனுமதிக்குமாயின், அது பலவீனமுள்ள சகோதரரின் மனச்சாட்சியிற்கு எதிரான பாவத்திற்கோ அல்லது அவனுடைய ஆவிக்குரிய செயற்பாட்டை தடுப்பதற்கோ செல்வாக்கு செலுத்தலாம். பவுல் எழுதுகின்றார்:

> **மாம்சம் புசிக்கிறதும், மதுபானம் பண்ணுகிறதும், மற்றெதையாகிலும் செய்கிறதும், உன் சகோதரன் இடறுகிறதற்காவது, தவறுகிறதற்காவது பலவீனப்படுகிறதற்காவது ஏதுவாயிருந்தால், அவைகளில் ஒன்றையும் செய்யாமலிருப்பதே நன்மையாயிருக்கும். (ரோமர் 14:21)**

## சுருக்கம்: கேள்வி கேட்கக்கூடியதான கிரியைகளில் தீர்மானங்களை மேற்கொள்ளுதல்

கேள்வி கேட்கக்கூடியதான கிரியைகளில் தீர்மானங்களை மேற்கொள்ளுதல் குறித்து வேதாக வழிகாட்டல்களின் சுருக்கம் கீழ்வரும் அட்டவணையில் கொண்டுள்ளது.

| உங்களில் நீங்கள் கேளுங்கள் | வேதாகம வசனம் |
|---|---|
| அது தேவனை மகிமைப்படுத்துகின்றதா? | 1 கொரிந்தியர் 10:31; கொலோசெயர் 3:17,23 |
| உங்களுடைய உத்தேசம் என்ன? | யாக்கோபு 4:3 |
| அது அவசியமானதா? | 1 கொரிந்தியர் 6:12 |
| அது ஆவிக்குரிய வளர்ச்சியை விருத்தி செய்கின்றதா? | மாற்கு 4:18,19; லூக்கா 8:14; எபிரெயர் 12:1 |
| அது நித்தியமான பழக்கவழக்கமா? | 1 கொரிந்தியர் 6:12 |
| அது உடன்படிக்கை பண்ணப்பட்டதா? | 2 கொரிந்தியர் 6:17 |
| அது சோதனையிற்கு வழி நடத்துகின்றதா? | யாக்கோபு 1:13-15 |
| அது தீய தோற்றத்தை தருமா? | 1 தெசலோனிக்கேயர் 5:22 |
| அது உங்களுடைய மனச்சாட்சியை துஷ்பிரயோகப்படுத்துகின்றதா? | ரோமர் 14:23 |
| அது மற்றவர்களை எவ்வாறு பாதிக்கும்? | ரோமர் 14:19,21; 1 கொரிந்தியர் 8:13; 10:23 |

## விசுவாசிகள் எப்பொழுது வேறுபாடடைகின்றனர்

ரோமர் 14:1 லிருந்து 15:2 வரை படியுங்கள். இந்த வசனங்கள் விசுவாசிகள் வித்தியாசமான

எண்ணங்களை கொண்டிருப்பர் என வெளிப்படுத்துகின்றது. தேவனுடைய வார்த்தைகளில் சரியா அல்லது தவறா என குறிப்பிட்டு சம்பந்தப்படாத கேள்வி கேட்கக்கூடியதான கிரியைகளில் மேலாக கூட குறித்த வித்தியாசங்கள் எழலாம்.

நாம் ஒருவருக்கொருவர் நேசித்து, வசனங்களை தேடுவதை தொடர்ந்தால் குறித்த வித்தியாசங்களில் தீமை விளைவாயிருக்க மாட்டாது என இந்த பந்திகள் விபரிக்கின்றன. ரோமர் 14 தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தைகளில் விசுவாசிகளுக்கிடையிலான விசேடமாக குறிப்பிடப்படாத காரியங்களில் தொடர்பாக கீழ்வரும் வழிகாட்டலை தருகின்றது:

## கட்டளைகளிலான காரியங்கள் மற்றும் சுதந்திரத்திற்கு இடையிலான வேறுபாடு:

ரோமர் 14:14லானது கட்டளைகளிலான காரியங்கள் மற்றும் சுதந்திரத்திற்கு இடையிலான வேறுபாட்டில் விசுவாசிகளுக்கு இடையிலான வேறுபாடு முக்கியமானது என குறிப்பிடுகின்றது. சுதந்திரத்திற்கு இடையிலான காரியத்தில் கரிசனை செலுத்துவது தேவனுடைய வார்த்தையில் விசேடமாக தொடர்பு படுவது அல்ல, பவுல் எழுதுகின்றார்:

> **ஒரு பொருளும் தன்னிலே தீட்டுள்ளதல்லவென்று கர்த்தராகிய இயேசுவுக்குள் அறிந்து நிச்சயித்திருக்கிறேன், ஒருபொருளைத் தீட்டுள்ளதென்று எண்ணிக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு அது தீட்டுள்ளதாயிருக்கும். (ரோமர் 14:14)**

தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையில் பதிவுசெய்யப்பட்டுள்ள கட்டளைகளிலான காரியங்களில், நாம் அனைத்திலும் ஒரே மாதிரியில் உறுதி செய்தல் வேண்டும். மற்ற காரியங்களில், சுதந்திரத்திற்கான தெரிவு பரீட்சிக்கப்படலாம்.

## உங்களுக்கான சொந்த தீர்ப்பை ஏற்படுத்துங்கள்:

கேள்வி கேட்கக்கூடியதான கிரியைகள் தொடர்பாக உங்களுடைய சொந்த தீர்ப்பை நீங்கள் ஏற்படுத்த வேண்டும். பரிசுத்த நாட்களை கவனம்செலுத்துவது தொடர்பாக பவுல் எழுதுகின்றார்:

> **அன்றியும், ஒருவன் ஒருநாளை மற்றொருநாளிலும் விசேஷமாக எண்ணுகிறான். வேறொருவன் எல்லா நாட்களையும் சரியாக எண்ணுகிறான். அவனவன் தன்தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாயிருக்கக்கடவன். (ரோமர் 14:5)**

கேள்வி கேட்கக்கூடியதான கிரியைகளில் உங்களுடைய சொந்த தீர்ப்பை நீங்கள் அறிய உதவும் பொருட்டு இந்த அதிகாரத்தில் முன்னைய பகுதியில் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களை பயன்படுத்துங்கள்.

## மற்றவர்களை அவர்களுடைய தீர்ப்பை அறியும்படியாக சுதந்திரத்தை கொடுங்கள்:

மற்றவர்கள் உங்களில் வித்தியாசமாக இருந்தால், கேள்வி கேட்கக்கூடியதான கிரியைகளில் அவர்களுடைய சொந்த தீர்ப்பை அறியும்படியாக சுதந்திரத்தை கொடுங்கள்:

**இப்படியிருக்க, நீ உன் சகோதரனைக் குற்றவாளியென்று தீர்க்கிறதென்ன? நீ உன் சகோதரனை அற்பமாய் எண்ணுகிறதென்ன? இப்படியிருக்க, நாம் இனிமேல் ஒருவரை யொருவர் குற்றவாளிகளென்று தீர்க்காதிருப்போமாக. (ரோமர் 14:10 மற்றும் 13)**

## அன்பினால் உரிமையை வரையறுங்கள்:

ரோமர் 14:13-15:2ன் அடிப்படை செய்தியானது கிறிஸ்தவ உரிமையானது அன்பினால் வரையறுக்கப்பட வேண்டும் என்பதாகும்:

**நம்மில் ஒவ்வொருவனும் பிறனுடைய பக்திவிருத்திக்கேதுவான நன்மையுண்டாகும்படி அவனுக்குப் பிரியமாய் நடக்கக்கடவன். (ரோமர் 15:2)**

நீங்கள் மற்ற விசுவாசிகளை அதிகம் கவனிக்க வேண்டும், ஆகவே அவர்களில் அன்பினால் உங்கள் ஞடைய சொந்த நடத்தையை வரையறுக்க முடியும். நீங்கள் மற்ற விசுவாசிகளை அதிகம் நேசிக்க வேண்டும், நீங்கள் ஒன்றும் செய்யாதிருந்தால் அவர்களை ஆவிக்குரிய ரீதியில் தள்ளாட செய்யும்:

**ஒருவனும் தன் சகோதரனுக்கு முன்பாகத் தடுக்கலையும் இடறலையும் போடலாகாதென்றே தீர்மானித்துக்கொள்ளுங்கள். (ரோமர் 14:13)**

## எல்லா முரண்பாடுகளையும் தீருங்கள்:

ஓர் சகோதரன் மற்ற விசுவாசிகளால் முரண்பாடடையும்போது, மத்தேயு 18:15-17 இந்த முரண்பாடுகளை தீர்ப்பதற்கான வேதாகம சூத்திரத்தை தருகின்றது.

**உன் சகோதரன் உனக்கு. விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து, அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய்.**

**அவன் செவிகொடாமற்போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ.**

**அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், அதைச் சபைக்குத் தெரியப்படுத்து. சபைக்கும் செவிகொடாதிருப்பானானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப்போலவும் ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக. (மத்தேயு 18:15-17)**

ஓர் சகோதரன் முரண்பாடடையும்போது நீங்கள் தொடர வேண்டிய படிமுறைகள்:

1. அவரிடம் தனிப்பட்ட ரீதியில் சென்று காரியத்தை தீருங்கள். மற்றவர்களுக்கான முரண்பாடுகளை குறித்து பேச வேண்டாம். உங்களோடு முரண்பட்டவரோடு நேரடியாக சென்று காரியத்தை தீர்க்க முயற்சி செய்யுங்கள். ஒன்றாக தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையில் தேடி, ஜெபியுங்கள்.

2. அவர் உங்களை கேட்கவில்லையாயின், ஒன்று அல்லது இரண்டு சாட்சிகளை கொண்டு

மீண்டும் முயற்சியுங்கள். சாட்சிகளானது பாரபட்சமல்லாத விசுவாசிகளாக இருக்க வேண்டும். சபையிலுள்ள வயதுசென்றோர் அல்லது தலைவர்கள் நல்ல தெரிவுகளாகும். சாட்சிகளை எடுத்து உங்களுடைய சகோதரரிடத்தில் சென்று மீண்டும் கலந்துரையாடி, ஜெபித்து, பிரச்சனைகளை தீர்க்கும்படியாக ஒன்றாக வசனத்தை தேடுங்கள்.

3. முழு சரீர சபையிற்கு முன்னாலும் காரியத்தை எடுங்கள். சாட்சியோடு உங்களுடைய சகோதரரரிடத்தில் சென்ற பின், அவர் இன்னும் காரியத்தை தீர்ப்பதற்கு மறுத்தால், முழு சரீர சபையிற்கு முன்னால் காரியத்தை எடுங்கள். இது சரியான நேரத்தில் செய்யப்பட வேண்டும். இது ஒழுங்கான சபை ஆராதனையில் அல்லது அவிசுவாசிகள் உள்ள சமயத்தில் செய்யப்படல் கூடாது. காரியத்தை கேட்ட பின், சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டு, பிரச்சனை தீர்க்கப்படல் வேண்டும். இல்லையாயின், முரன்பாடுடையவர் புறஜாதிகளையும் போலும், அவிசுவாசகளையும் போலும் கிரியை செய்பவர் ஆவர்.

## சுருக்கம்: விசுவாசி எப்பொழுது வித்தியாசப்படுவர்

கேள்வி கேட்கக்கூடியதான கிரியைகள் தொடர்பான வித்தியாசத்தில் விசுவாசி இருக்கும்போது தொடர வேண்டிய வசனத்தின் வழிகாட்டலின் சுருக்கத்தை கீழ்வரும் அட்டவணை தொடர்கின்றது:

**விசுவாசி எப்பொழுது வித்தியாசப்படுவர்**
ரோமர் 14:15:2 மற்றும் மத்தேயு 18:15-17

கட்டளைகளிலான காரியங்கள் மற்றும் சுதந்திரத்திற்கு இடையிலான வேறுபாடு.
உங்களுக்கான சொந்த தீர்ப்பை ஏற்படுத்துங்கள்.
மற்றவர்களை அவர்களுடைய தீர்ப்பை அறியும்படியாக சுதந்திரத்தை கொடுங்கள்.
அன்பினால் உரிமையை வரையறுங்கள்.
எல்லா முரண்பாடுகளையும் தீருங்கள்.

## சுய பரிசோதனை

1. திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்.

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

2. "கேள்வி கேட்கக்கூடியதான கிரியைகள்" தொடர்பான பதத்தின் அர்த்தம் என்ன?

.....................................................................................................................................................

3. கேள்வி கேட்கக்கூடியதான கிரியைகள் தொடர்பாக இந்த பாடத்தில் தரப்பட்ட வேதாகம வழிகாட்டல்கள் பத்தை பட்டியலிடுக.

........................... ........................... ........................... ........................... ...........................

........................... ........................... ........................... ........................... ...........................

4. "பலவீனமான சகோதரர்" என்னும் பதத்தின் அர்த்தம் என்ன?

.....................................................................................................................................................

5. "பலமுள்ள சகோதரர்" என்னும் பதத்தின் அர்த்தம் என்ன?

.....................................................................................................................................................

6. விசுவாசிகளுக்கிடையிலான முரண்பாடுகளை கையாள்வதற்கான வேதாகம வழிகாட்டல்கள் ஐந்தை பட்டியலிடுக:

..................................................... .....................................................

..................................................... .....................................................

.....................................................

6. நீங்கள் மற்ற விசுவாசிகளினால் முரண்பாடடையும்போது எடுக்கவேண்டிய மூன்று படி முறைகள் என்ன?

........................... ........................... ...........................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. உங்களுடைய சொந்த வாழ்வை ஜெபத்துடன் பரீட்சிக்க. கேள்வி கேட்கக்கூடியதான கிரியைகள் தொடர்பாக நீங்கள் தற்போது சம்பந்தப்படும் அல்லது கரிசனைப்படுபவற்றின் பட்டியலை செய்க.

   கீழ்வரும் அட்டவணையில் சுருக்கமாக்கப்பட்டுள்ள இந்த அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ள வேதாகம வழிகாட்டல்களின் இந்த ஒவ்வொரு பதங்களையும் பரீட்சிக்க:

### கேள்வி கேட்கக்கூடியதான கிரியைகளில் தீர்மானங்களை மேற்கொள்ளுதல்

| **உங்களில் நீங்கள் கேளுங்கள்** | **வேதாகம வசனம்** |
|---|---|
| அது தேவனை மகிமைப்படுத்துகின்றதா? | 1 கொரிந்தியர் 10:31; கொலோசெயர் 3:17,23 |
| உங்களுடைய உத்தேசம் என்ன? | யாக்கோபு 4:3 |
| அது அவசியமானதா? | 1 கொரிந்தியர் 6:12 |
| அது ஆவிக்குரிய வளர்ச்சியை விருத்தி செய்கின்றதா? | மாற்கு 4:18,19; லூக்கா 8:14; எபிரெயர் 12:1 |
| அது நித்தியமான பழக்கவழக்கமா? | 1 கொரிந்தியர் 6:12 |
| அது உடன்படிக்கை பண்ணப்பட்டதா? | 2 கொரிந்தியர் 6:17 |
| அது சோதனையிற்கு வழி நடத்துகின்றதா? | யாக்கோபு 1:13-15 |
| அது தீய தோற்றத்தை தருமா? | 1 தெசலோனிக்கேயர் 5:22 |
| அது உங்களுடைய மனச்சாட்சியை துஷ்பிரயோகப்படுத்துகின்றதா? | ரோமர் 14:23 |
| அது மற்றவர்களை எவ்வாறு பாதிக்கும்? | ரோமர் 14:19,21; 1 கொரிந்தியர் 8:13; 10:23 |

### அதிகாரம் ஒன்பது

# தீர்மானம் மேற்கொள்வதற்கான வேதாகமத்தின் மாதிரி

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்,
- மாதிரியிற்கான குறிக்கோளை விளக்கவும்,
- தீர்மானம் மேற்கொள்வதற்கான மாதிரியின் பெறுமதியை விபரிக்கவும்,
- ஞானமுள்ள தேர்வுகளை நீங்கள் மேற்கொள்ள உதவும் பொருட்டு தீர்மானங்களை மேற் கொள்ளுவதற்கு வேதாக மாதிரியை உபயோகிக்க முடியும்.

**திறவுகோல் வசனம்:**

> **மனுஷருடைய இருதயம் அவனுடைய வழியை யோசிக்கும், அவனுடைய நடைகளை உறுதிப்படுத்துகிறவரோ கர்த்தர். (நீதிமொழிகள் 16:9)**

## அறிமுகம்

இந்த அதிகாரம் தீர்மானம் மேற்கொள்ளுவதற்கான வேதாகம மாதிரியை கொடுக்கும். மாதிரி என்பது ஏதொவொன்றிற்கான உதாரணம் ஆகும். அதன் குறிக்கோளானது நீங்கள் தொடருவதற்கு உதாரணத்தை கொடுப்பதாகும். ஓர் தீர்மானம் என்பது தெரிவாகும். உண்மையான வாழ்க்கை சூழ்நிலைக்கான பதிலை நீங்கள் அறிந்து கொள்ளுவதோடு, நீங்கள் எடுக்க வேண்டிய கிரியைகளை தீர்மானிக்க வேண்டும். இது தீர்மானம் மேற்கொள்ளுவது என அழைக்கப்படும். தீர்மானங்களை மேற்கொள்ளும்போது தொடருவதற்கான உதாரணத்தை தீர்மானத்தின் மாதிரி உருவாக்கி கொடுக்கும். வாழ்க்கை என்பது தேர்ந்தெடுப்பதற்கும், தீர்மானிப்பதற்குமான முடிவற்ற பல பகுதிகளாகும். தீர்மானம் மேற்கொள்ளுதல் பொறுப்பு வாய்ந்ததாகும். தீர்மானம் மேற்கொள்ளுவதற்கு தொடர்ந்து மறுத்தலானதும் கூட ஓர் தீர்மானம் ஆகும்.

தேவனுடைய சித்தத்தோடு ஞானமுள்ள தேர்வுகளை நீங்கள் செய்ய உதவும் பொருட்டு இந்த அதிகாரமானது வேதாகம மாதிரியை கொடுக்கின்றது:

> **மனுஷருடைய இருதயம் அவனுடைய வழியை யோசிக்கும், அவனுடைய நடைகளை உறுதிப்படுத்துகிறவரோ கர்த்தர். (நீதிமொழிகள் 16:9)**

## மாதிரி

தொடர்ந்துவரும் பக்கத்தில் தீர்மானம் மேற்கொள்ளுவதற்கான வேதாகம மாதிரியை படியுங்கள். அட்டவணையானது கடந்த அதிகாரத்தில் நீங்கள் கற்றவற்றை சுருக்கமாக்கும். பின் இந்த அதிகாரத்திலுள்ள மீதியானது தீர்மானத்திற்கான மாதிரியை செயற்படுத்தும்.

## தீர்மானம் மேற்கொள்ளுவதற்கான வேதாகம மாதிரி

பிரச்சனை, கேள்வி அல்லது எதிர்பார்க்கப்படும் வாழ்க்கை சூழ்நிலையிற்கான வழிகாட்டல்களை இனம்காணுங்கள்.

அது வேதாகமத்தின் விசேட கட்டளைகள், பொதுவான கொள்கைகள் அல்லது உதாரணங்களினால் தொடர்புபடுகின்றதா?

**ஆம்** → **அட்டவணை 1**

**இல்லை** → **அட்டவணை 2** / **அட்டவணை 3**

**அட்டவணை 1**

வேதாக கட்டளை, கொள்கை மற்றும் உதாரணங்களின் அடிப்படையில் தீர்மானங் களை மேற்கொள்ளுதல்

**அட்டவணை 2**

இது கேள்வி கேட்கக்கூடியதான கிரியைகளா? இந்த கேள்வியிற்கான பதிலை தீர்மானத்திற்கு அடிப்படையில் செய்க:

அது தேவனை மகிமைப்படுத்துகின்றதா?

உங்களுடைய உத்தேசம் என்ன?

அது அவசியமானதா?

அது ஆவிக்குரிய வளர்ச்சியை விருத்தி செய்கின்றதா?

அது நித்தியமான பழக்கவழக்கமா?

அது உடன்படிக்கை பண்ணப்பட்டதா?

அது சோதனையிற்கு வழி நடத்துகின்றதா?

அது தீய தோற்றத்தை தருமா?

அது உங்களுடைய மனச்சாட்சியை துஷ்பிர யோகப்படுத்துகின்றதா?

அது மற்றவர்களை எவ்வாறு பாதிக்கும்?

ஜெபித்து, தீர்மானம் ஒன்றை மேற் கொள்ளுங்கள்.

**அட்டவணை 3**

இது வாழ்க்கை சூழ்நிலையா?
இந்த படிமுறையுடன் செயற்படுத்துங்கள்:

ஜெபியுங்கள்

வசனங்களை படியுங்கள்

பரிசுத்த ஆவியானவரை மற்றும் விசேட வழிகாட்டல் கொடுக்கப்பட்டால் கவனியுங்கள்
கிறிஸ்தவ ஆலோசனைகளை எதிர்பாருங்கள்

சூழ்நிலைகளை ஆய்வுக்குட்படுத்துங்கள்

வழிகாட்டலுக்கு வேதாகம திறவுகோல்களை பயன்படுத்துங்கள்
தீர்மானங்களை மேற்கொள்ளுங்கள்

**சமாதானத்தின் நடுவரை பரிசோதியுங்கள்.**

**சமாதானத்தின் நடுவரை பரிசோதியுங்கள்**

உங்களிடம் சமாதானம் இல்லாவிட்டால், மாதிரியை உபயோகித்து தேவனை தேடுவதை தொடருங்கள்.

## மாதிரியை உபயோகப்படுத்தல்

தீர்மானம் மேற்கொள்ளுதலின் மாதிரியின் முதல் படிமுறையானது பிரச்சனைகள், கேள்விகள் அல்லது எதிர்பார்க்கப்பட்ட வழிகாட்டலுக்கான வாழ்க்கை சூழ்நிலையை இனங்காணுவதாகும். அடுத்தது, கட்டளைகள், உதாரணங்கள் அல்லது பொதுவான கொள்கைகளில் பிரச்சனை சம்பந்தப்படுகின்றதா என பார்ப்பதற்கு தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையில் தேடுங்கள்.

### ஆம்:

பதில் "ஆம்" என்றால் "அது தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையோடு தொடர்புபடுகின்றது", பின் இந்த எழுதப்பட்ட வெளிப்படுத்தலின் பிரகாரம் தீர்மானங்களை மேற்கொள்ளுங்கள். (மாதிரியின் அட்டவணை 1ஐ பாருங்கள்). உங்களுடைய தீர்மானங்கள் வசனங்களுடன் ஒத்துப்போகின்றதா என உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

### இல்லை:

பதில் "இல்லை" என்றால், அட்டவணை 1 மற்றும் 2ன் மாதிரியின் கீழ் தீர்மானம் மேற்கொள்ளுதவதற்கு செயற்படுத்துங்கள்.

இங்கு நீங்கள் வேதாகமத்தோடு தொடர்புபடாததற்கான சூழ்நிலைகளின் இரண்டு தேர்வுகளை கண்டறிவீர்கள். நீங்கள் தீர்மானம் மேற்கொள்ளுவதானது கேள்வி கேட்கக்கூடியதான கிரியைகளில் அல்லது உண்மையான வாழ்க்கை சூழ்நிலைகளில் உள்ளடங்குகின்றதா என அறிந்து கொள்ள வேண்டும்.

### கேள்வி கேட்கக்கூடியதான கிரியைகள்:

கேள்வி கேட்கக்கூடியதான கிரியைகள் என்பது சரியா அல்லது தவறா என வசனங்களோடு தொடர்புபடாத ஒன்றாகும். அது பொழுதுபோக்குகளின் தெரிவு அல்லது களியாட்ட நடவடிக்கைகள், ஓர் பழக்க வழக்கம், உணவு அல்லது பானங்களின் அனுமதிகள், ஆடைகளின் நடை அல்லது குறித்த நாளில் எதை தொழுது கொள்ளுவது போன்றவற்றை உள்ளடக்கலாம்.

நீங்கள் முகங்கொடுக்கும் ஓர் தீர்மானம் கேள்வி கேட்கக்கூடியதான கிரியைகளில் உள்ளடக்குமா-னால், மாதிரி அட்டவணை 2ன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள கேள்விகளை உங்களுக்கு நீங்களே கேளுங்கள். இந்த கேள்வியிற்கான சூழ்நிலைகளில் வழிகாட்டியிற்கான வேதாகம கொள்கைகள் அதிகாரம் எட்டில் கலந்துரையாடப்பட்டுள்ளன. இந்த ஒவ்வொரு கேள்விக்கும் பதிலளித்து ஜெபியுங்கள். பின் மாதிரியின் கேள்வியின் உங்கள் விடையிற்கு அடிப்படையில் உங்கள் தீர்மானங்களை எடுங்கள்.

### வாழ்க்கை சூழ்நிலைகள்:

திருமணம், ஊழியம், உத்தியோகம், வதிவிடம், சபையை தேர்ந்தெடுத்தல் போன்றவை சம்பந்தமாக தீர்மானங்களை வாழ்க்கை சூழ்நிலைகள் உள்ளடக்குவதோடு, இது எல்லையற்றதாகும். இது உங்கள் எதிர்கால ஜீவியத்தை பாரிய வழியில் தாக்கத்தை ஏற்படுத்த கூடிய தெரிவுகளாகும்.

வாழ்க்கை காரியங்களுக்கான தீர்மானங்களில், தீர்மானம் மேற்கொள்ளுதலின் மாதிரியில் வலது

பக்கத்திலுள்ள அட்டவணை 3ன் கீழுள்ளவற்றை செயற்படுத்துங்கள். முதலாவது தீர்மானத்தை குறித்து ஜெபியுங்கள். உங்கள் வாழ்க்கையில் தேவனிடம் அவருடைய சித்தத்தை செயற்படுத்துமாறு கேளுங்கள். அவரிடம் சரியான தீர்மானம் எடுக்கும்படியாக ஞானத்தை கேளுங்கள். சரியான தீர்மானம் மேற்கொள்ளுவதற்கான வழிகாட்டலுக்கு அவரிடம் துதியுங்கள். மற்றவர்களை உங்களோடு ஜெபிக்கும்படியாக கேளுங்கள். வசனங்களை படித்து, அவற்றை படிக்கும்போது எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையில் வழிகாட்டியாக கொடுக்கப்பட்டுள்ள வாக்குறுதிகளை பெறுங்கள்.

உங்களுடைய இருதயத்தில் தேவனுடைய சித்தத்தை பரிசுத்த ஆவியானவர் பேசும்போது அவருடைய உள்ளான சத்தத்தை கேளுங்கள். தேவன் தேர்ந்தெடுத்து அனுப்பும் இயற்கையிற்கு மாறான வெளிப்படுத்தல்களை ஏற்றுக்கொள்ளுங்கள். கனவுகள், சொப்பனங்கள், தேவதூதர்கள், தேவனிடமிருந்தான கேட்கக்கூடியதான சத்தம் அல்லது தேவனுடைய வார்த்தையோடு ஒத்திசையும் வேறு விசேட வகையிலான வழிகாட்டிகளாக இது உள்ளடக்கலாம்.

கிறிஸ்தவ ஆலோசனைகளை எதிர்பாருங்கள். தீர்மானங்களை தாக்கப்படுத்தும் சூழ்நிலைகளை ஆய்வுக்குட்படுத்துங்கள். கடைசி அதிகாரத்தில் நீங்கள் கற்ற வழிகாட்டிக்கான வேதாக திறவு கோல்களை பயன்படுத்துங்கள். (இவைகள் நீதிமொழிகள் 3:5-6ல் காணப்படுகின்றன). இந்த முறைகளின் ஒப்பந்தங்களின் அடிப்படையில், ஓர் தீர்மானத்தை மேற்கொள்ளுங்கள்.

## சமாதானத்தின் நடுவர்

வேதாகம கட்டளைகள், கொள்கைகள், அல்லது உதாரணங்கள், ஆகியவையினால் விசேடமாக தொடர்புபடாத தீர்மானங்களில், உங்கள் வழிகாட்டி சமாதானத்தின் நடுவர் ஆகும். கேள்வி கேட்கக்கூடியதான கிரியைகளில் அல்லது வாழ்க்கை சூழ்நிலைகளில் ஓர் தீர்மானங்களை நீங்கள் மேற்கொள்ளும்போது உங்கள் இருதயங்களில் சமாதானம் இல்லாதிருந்தால், மாதிரியின் படிமுறைகளை உபயோகித்து தேவனை தொடர்ந்து எதிர்பாருங்கள். உங்களுடைய தெரிவுகளை உறுதிப்படுத்தும் தேவனுடைய சமாதானத்தை கொண்டிருக்கும்வரை இறுதி தீர்மானத்தை எடுக்காதீர்கள்.

எப்பொழுதும் அவசரபட வேண்டாம்:

> **கர்த்தருக்குக் காத்திரு, அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார், திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு. (சங்கீதம் 27:14)**
>
> **என் ஆத்துமாவே, தேவனையே நோக்கி அமர்ந்திரு, நான் நம்புகிறது அவராலே வரும். (சங்கீதம் 62:5)**
>
> **கர்த்தரை நோக்கி அமர்ந்து, அவருக்குக் காத்திரு.... (சங்கீதம் 37:7)**
>
> **கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள், அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள். (ஏசாயா 40:31)**

சவுல் அவசரப்பட்டு தீர்மானத்தை எடுத்தான், அது ராஜ்யத்தை விலைகிரயம் செலுத்தவைக்கப் பட்டது. இதை குறித்து 1 சாமுவேல் 13ல் நீங்கள் வாசிக்கலாம். நெகேமியா தேவனுடைய வழி காட்டுதலுக்காக சரியான நேரம் வரை காத்திருந்து, ராஜ்யத்தை மீள்கட்டுவதற்காக ஓர் பகுதியாளர் ஆகினார். அவருடைய கதையை நெகேமியா புஸ்தகத்தில் நீங்கள் வாசிக்கலாம்.

## சுய பரிசோதனை

1. திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்.

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

2. மாதிரியின் குறிக்கோள் என்ன?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

3. தீர்மானம் மேற்கொள்ளுவதற்கான மாதிரி என்ன?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

பிரச்சனைகள், கேள்விகள் அல்லது உங்களுக்கு வழிகாட்டல் தேவையான வாழ்க்கை சூழ்நிலைகளில் குறித்து நீங்கள் தீர்மானம் மேற்கொள்ளுவதற்கு உதவும் பொருட்டு இந்த அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ள வேதாகம மாதிரியை உபயோகியுங்கள்

## அதிகாரம் பத்து

# முயற்சித்தலும் தோல்வியடைதலும்?

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ தேவனுடைய பூரண சித்தத்தின் தோல்வியை மேற்கொண்ட வேதாகம மனிதர்களை இனங் காணவும்,
- ☐ தேவனுடைய சித்தத்தை தவறி வாழ்க்கையை தோல்வியில் முடித்த வேதாகம மனிதர்களை இனங் காணவும்,
- ☐ நீங்கள் தோல்வியடையும்போது தேவனுடைய சித்தத்திற்கு திரும்புதலுக்கான வழிகாட்டி-களை பட்டியலிடவும் முடியும்.

**திறவுகோல் வசனம்:**

> **ஆ, என் ஜனம் எனக்குச் செவிகொடுத்து, இஸ்ரவேல் என் வழிகளில் நடந்தால் நலமாயிருக்கும்! (சங்கீதம் 81:13)**

## அறிமுகம்

இந்த பாடத்தில் தேவன் அவருடைய சித்தத்தை மனிதர்களோடு தொடர்பாடுவதற்கு பல வழிகளில் பேசுகின்றார் என நீங்கள் கற்றீர்கள். ஆனால் நீங்கள் தேவனுடைய சித்தத்தை அறிய தோல்வி-யடையும்போது என்ன நடைபெறுகின்றது? பொதுவாக அவருடைய சத்தத்தை அறிந்துகொண்டே கீழ்ப்படியாமல் இருக்கின்றீர்கள். நீங்கள் பொதுவாக அவருடைய வழியை தவற விடுகின்றீர்கள் அல்லது வேதாக கொள்கைகளை தவறாக விளங்குகின்றீர்கள். அவருடைய வழிகாட்டுல் இன்றி நீங்கள் வேகமாக கிரியை செய்யலாம். நீங்கள் முயற்சித்து தோல்வியடையும்போது என்ன செய்ய வேண்டும்?

## தோல்வியடைந்து வெற்றி கொண்டோர்

வேதாகமமானது தமது வாழ்வில் ஒரு கட்டத்தில் தேவனுடைய சித்தத்தையும், அவருடைய சத்தத்தையும் கேட்க தவறிய மாபெரும் தலைவர்களின் அநேக உதாரணங்களை கொண்டுள்ளது. இன்னும், தோல்வியடைந்த இந்த மனிதர்கள் மாபெரும் வெற்றி அடைந்தார்கள்.

**ஆபிரகாம்:** அவர் கொல்லப்படலாம் என்னும் அச்சம் காரணமாக தனது மனைவியாகிய சாராளை குறித்து பொய் கூறினான். அவள் அவனிடமிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டாள். இன்னும் அவர் விசுவாசமுள்ள மனிதன் என்றும், தேவனுடைய நண்பர் எனவும் அழைக்கப்பட்டார்.

**மோசே:** தேவன் வழிகாட்டியபடி பாறையுடன் பேசுவதற்கு பதிலாக அதை அடித்து தண்ணீரை வரவழைத்தான். இன்னும் மோசேயை போல் இன்னொரு மாபெரும் தீர்க்கதரிசி ஒருபோதும் ஏற்பட வில்லை என வேதாகமம் குறிப்பிடுகின்றது.

**தாவீது:** அவர் மற்றவருடைய மனைவியுடன் விபச்சாரம் புரிந்தார், பின் தனது பாவத்தை மறைக்க அந்த மனிதனை கொன்று போட்டார். இன்னும் அவர் மாபெரும் ராஜாவாக இருந்ததோடு தேவனுடைய சொந்த இருதயத்திற்கு அடுத்த மனிதன் எனவும் அழைக்கப்பட்டார்.

**யோனா:** நினிவேயில் போதிக்கும்படி இந்த மனிதனை தேவன் அழைத்த போது எதிர்திசையில் அவர் சென்றார். பிற்பாடு வரலாற்றில் மாபெரும் அறுவடைக்காக அவர் போதித்தார். முழு நகரமும் மனந்திரும்பியது.

**பேதுரு:** அவர் இயேசுவை மறுதலித்தார், ஆனால் பிற்பாடு ஆரம்ப சபையில் மாபெரும் தலைவராக வந்தார்.

## தோல்வியடைந்து தோல்வியடைந்தோர்

வேதாகமமானது தேவனுடைய சித்தத்தை தவறி தமது வாழ்க்கையை தோல்வியில் முடித்தோரை குறித்த அநேக மனிதர்களின் உதாரணங்களை கூட கொண்டுள்ளது.

**சிம்சோன்:** இஸ்ரவேல் ஜாதியில் இவர் முக்கியமான நியாயாதிபதியாக இருந்தார். அவருக்கு தேவனிடமிருந்து மாபெரும் பௌதீக பலம் கொடுக்கப்பட்டிருந்தது. அவர் பெலிஸ்திய எதிரிகளிடமிருந்து இஸ்ரவேலை விடுவிக்க தொடங்கினார். ஆனால் புறஜாதி ஸ்திரியினுடைய தொடர்பாடல் காரணமாக, எதிரியினால் சிறைப்பிடிக்கப்பட்டபோது கொல்லப்பட்டார்.

**உசியா:** தேவனுடைய பார்வைக்கு சரியானதையே இந்த ராஜா உண்மையாக செய்தார். தேவன் அவரை வாய்க்க செய்தார். ஆனால் உசியா தேவாலயத்தில் பிரவேசிப்பதிலான பாவம் செய்து, ஆசாரியர்களுக்கு மாத்திரம் அனுமதித்த காரியத்தை செய்தார். அவர் குஷ்டரோகத்தினால் பீடிக்கப்பட்டு மரித்தார்.

**சவுல்:** முதலாவது இஸ்ரவேலின் ராஜாவாகிய, சவுல் மக்களால் கணப்படுத்தப்பட்டிருந்தார். அவர் மேல் தேவனுடைய ஆவி தங்கியிருந்தது. கீழ்படியாமை காரணமாக, சவுல் தேவனால் புறக்கணிக்க பட்டு, அவருடைய நோக்கத்தை நிறைவேற்ற வேறொரு ராஜா தேர்ந்தெடுக்கப்பட்டார். சவுலுடைய வாழ்கையானது தோல்வி, கிருபையின்மை, தற்கொலையினால் முடிவுற்றது.

**ஏலி:** உண்மையிலேயே தேவனுடைய வீட்டில் மாபெரும் ஆசாரியனாயிருந்தார், கீழ்ப்படியாமை காரணமாக கிருபையின்றி அவரும் அவருடைய குமாரர்களும் மரித்தார்கள்.

**யூதாஸ்:** யூதார் இயேசுவோடு அவருடைய பூலோக ஊழியத்திலிருந்து ஓர் சீஷன் ஆவார். அவர் இயேசுவின் மாபெரும் அற்புதங்களுக்கு சாட்சியாயிருந்து அவருடைய போதனைகளை கேட்டார். இன்னும் அவர் இயேசுவை புறக்கணித்து, தன்னுடைய சொந்த வாழ்க்கையை தற்கொலையால் முடித்துக்கொண்டார்.

## வித்தியாசத்தை மேற்கொண்டது என்ன?

நாம் பல வேதாகம மனிதர்களின் தமது வாழ்க்கையில் குறிப்பிட்ட பகுதியில் தேவனுடைய சித்தத்தை அறிய தோல்வியுற்ற உதாரணங்களை பட்டியல்படுத்தினோம். இதில் சில மனிதர்கள்

தோல்வியிலிருந்து மீட்கப்பட்டு, தேவனுடைய மாபெரும் மனிதர்களாக சென்றார்கள். மற்றவர்கள் தங்களுடைய வழிகளில் ஒருபோதும் திரும்பவில்லை. அவர்களுடைய வாழ்க்கையானது தோல்வியில் முடிவடைந்தது. வித்தியாசத்தை மேற்கொண்டது என்ன?

இந்த கேள்வியிற்கு பதிலளிக்க, தாவீது மற்றும் சவுல் ஆகிய இஸ்ரவேலின் இரண்டு இராஜாக்களின் வாழ்க்கையை மிகவும் விரிவாக நாம் பரீட்சிப்போம். முதலாவது, தேவனுடைய சித்தத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட தாவீதினுடைய கதையை 2 சாமுவேல் 11-12ல் வாசியுங்கள். பின் சவுலின் தோல்வியின் கதையை 1 சாமுவேல் 15ம் அதிகாரத்தில் வாசியுங்கள். சவுலை விட தாவீதினுடைய தவறு மாபெரும் அதிகமாக தோன்றுகின்றது. சவுல் சாதாரணமாக தேவன் செய்ய வேண்டாம் என அவருக்கு கூறிய மந்தைகளை கொண்டு வந்தார்.

தாவீது அடுத்த மனிதருடைய மனைவியோடு விபச்சாரம் புரித்தார். அவள் கர்ப்பவதியானபோது தன்னுடைய பாவத்தை மறைக்க அவளுடைய புருஷனை கொன்று போட்டார். சவுல் தேவனால் ராஜாவாக புறக்கணிக்கப்பட்டார், இன்னும் தாவீது அரியனையிலேயே இருந்தார் அத்தோடு தேவனுடைய இருதயத்திற்கு அடுத்த மனிதன் எனவும் அழைக்கப்பட்டார். ஏன் ஒரு மனிதனுடைய வாழ்க்கை தோல்வியில் முடிந்ததோடு மற்றவருடைய எதிர்காலம் வெற்றிகரமாக சென்றது?

தீர்க்கதரிசியாகிய சாமுவேல் சவுலை அவர் பாவத்தை கூறியபோது, சவுல் கூறினார்....

> **அப்பொழுது சவுல் சாமுவேலை நோக்கி: நான் கர்த்தருடைய கட்டளையையும் உம்முடைய வார்த்தைகளையும் மீறினதினாலே பாவஞ்செய்தேன், நான் ஜனங்களுக்குப் பயந்து, அவர்கள் சொல்லைக் கேட்டேன்.**
>
> **அதற்கு அவன்: நான் பாவஞ்செய்தேன், இப்போது என் ஜனத்தின் மூப்பருக்கு முன்பாகவும், இஸ்ரவேலுக்கு முன்பாகவும் நீர் என்னைக் கனம்பண்ணி, நான் உம்முடைய தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொள்ளும்படிக்கு, என்னோடேகூடத் திரும்பி வாரும் என்றான். (1 சாமுவேல் 15:24-30)**

சவுல் அவருடைய பாவத்தினால் பிடிப்பட்டார், அத்தோடு அவரும் ஒத்துக்கொண்டார். அவர் மன்னிப்பு கேட்டார், பாவத்திற்கு மன்னிப்பு கேட்டல் மாத்திரம் போதாது. துக்கம் மனந்திரும்புதலுக்கு நேராக நடத்தும்:

> **தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது, லௌகிக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது. (2 கொரிந்தியர் 7:10)**

சவுல் தனது தோல்வியை ஒத்துக்கொண்டார், ஆனால் அவர் தனது தோல்வியை மற்ற மக்களோடு ஒத்துப்போக செய்தார். அவர் மற்ற தலைவர்களுக்கு முன்னால் சாமுவேலை கனம்பண்ண வேண்டினார், ஆகவே அவர் கிருபையற்று இருக்கலாம். அவர் தான் இன்னும் ஆவிக்குரிய மனிதன் என்று மக்களுக்கு காட்டுவதற்கு சாமுவேலோடு தேவனுக்கு துதி செய்ய வேண்டினார்.

சவுல் ஒருபோதும் தனது தவறை தேவனுக்கு அறிக்கை செய்யவில்லை, மனந்திரும்பவில்லை, மன்னிப்பு கேட்கவில்லை. அவர் தனது கிரியைகளுக்கான தனிப்பட்ட பொறுப்பை ஏற்க மறுத்தார்.

தேவன் மனந்திரும்புதலை வேண்டும்போது அவர் தேவனுக்கு துதியை செலுத்தினார். சவுல் தேவனுடனான தனது உறவை விட மக்கள் மத்தியில் தனது கீர்த்தியிற்கு அதிகம் கவனம் செலுத்தினார். இதன் காரணமாக, சாமுவேல் சவுலிடம் கூறினார்:

> **அப்பொழுது சாமுவேல் அவனை நோக்கி: கர்த்தர் இன்று உம்மிடத்திலிருந்த இஸ்ரவேலின் ராஜ்யத்தைக் கிழித்துப்போட்டு, உம்மைப் பார்க்கிலும் உத்தமனாயிருக்கிற உம்முடைய தோழனுக்கு அதைக் கொடுத்தார். (1 சாமுவேல் 15:28)**

ராஜ்யமானது சவுலிடமிருந்து எடுக்கப்பட்டு தாவீதிற்கு கொடுக்கப்பட்டது.

தீர்க்கதரிசியாகிய நாத்தான் தாவீதிற்கு அவனுடைய பாவத்தை அறிக்கை செய்தபோது, தாவீது உடனடியாக ஏற்றுக்கொண்டார்:

> **நான் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்தேன் என்றான். (2 சாமுவேல் 12:13)**

அவர் மற்றவர்களை சாட்ட முயற்சிக்கவில்லை. அவர் பத்சேபாளை சாடவில்லை. அவர் தனது தோல்வியை ஒத்துக்கொண்டு, தாழ்மையுடன் தேவனுக்கு முன்பாக மனந்திரும்பினார்.

தாவீதின் மாபெரும் மனந்திரும்புதலுக்கான ஜெபம் சங்கீதம் 51ல் பதிவுசெய்யப்பட்டுள்ளது. உங்களுடைய வேதாகமத்தில் இந்த முழு சங்கீதத்தையும் வாசியுங்கள். தாவீது தனது பாவத்தை ஏற்றுக் கொண்டு மன்னிப்பை கேட்டான்:

> **என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன், என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது.**
>
> **தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து, உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன்,**
>
> **தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும். (சங்கீதம் 51ன் ஓர் பகுதி)**

சவுலும் தாவீதுமாகிய இருவரும் தவறான தெரிவுகளை செய்தார்கள். அவருடைய தவறை அறிக்கை யிடும்போது, தாவீது மனந்திரும்பி, வழியை மாற்றிக்கொண்டார். சவுல் செய்யவில்லை. அவர் தேவனுடைய சித்தத்திற்கு தூரமாயிருந்து, தன்னுடைய வாழ்க்கையை தோல்வி, தற்கொலையினால் முடித்துக்கொண்டார்.

## முயற்சித்தலும் தோல்வியடைதலும்

நீங்கள் தேவனுடைய சித்தத்தை தவறவிடும்போது, தேவனுடைய சித்தத்திற்கு மீள திரும்புவதற்கு உங்களை இயலுமைப்படுத்தும் வேதாகம வழிகாட்டல்கள் உள்ளன. இந்த வழிகாட்டல்களை காட்டுவதற்கு நாம் யோனாவின் உதாரணத்தை உபயோகிப்போம். இந்த பாடத்தை செயல்படுத்துவதற்கு முன்னர் உங்களுடைய வேதாகமத்தில் யோனாவினுடைய புத்தகத்தை வாசியுங்கள்.

யோனா பாவமுள்ள ஜாதியான நினிவேயிற்கு சென்று மனந்திரும்புதலை பிரசங்கிக்கும்படி தேவனால் கட்டளையிடப்பட்டிருந்தார். தேவனுக்கு கீழ்ப்படிவதை பார்க்கிலும், எதிர்திசையில் அவர் செயற் படுத்தினார். யோனா தேவனுடைய சித்தத்திற்கு மீள திரும்ப இந்த படிமுறைகளை மேற்கொண்டார்.

## உங்களுடைய தோல்விகளை உணருங்கள்:

யோனா தான் தேவனுடைய சித்தத்திற்கு வெளியே இருப்பதாக அறிக்கையிடுவதற்கு கடலில் மாபெரும் புயல் ஏற்பட்டது. (யோனா 1:2) உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்: தேவனுடைய சித்தத்தை நீங்கள் தவற விடும்போது உங்களுக்கு அறியத்தரும் வழிகள் தேவனிடம் உள்ளன!

தேவனுடைய சித்தத்தை நீங்கள தவறவிட்டதாக உணருவதற்கு நீங்கள் எவ்வளவு நீண்ட காலமாக தோல்வியடைகின்றீர்களோ, அவருடைய சித்தத்திற்கு நீங்கள் ஒருபோதும் மீள திரும்ப முடியாது. தோல்வி ஏற்படுவதிலிருந்து உங்களை தவிர்ப்பவையிற்கு நீங்கள் எந்தவித காரணத்தையும் கொடுக்க வேண்டாம். இங்கு சில பொதுவானதொன்று காணப்படுகின்றது:

“மக்கள் என்னில் நம்பிக்கையை இழப்பர்.”
“நான் தோல்விகளை அனுமதித்தால், நான் தவறென அது அனுமதிக்கும்.”
“நான் ஏற்கனவே தோல்வியடைந்தவன். நான் விட்டுக்கொடுக்க வேண்டும்.”
“எனக்கு அதிகம் கால தாமதமாகிவிட்டது.”
“நான் ஒரு தவறான உதாரணமாவேன், ஆகவே நான் அமைதியாக இருத்தல் வேண்டும்.”
“சரியான காரியத்தை ஒருபோதும் பெறாமல் இருப்பதற்கு தேவனுடைய சித்தத்திற்கு அதிகம் வெளியில் நான் இருக்கின்றேன்.”
“நான் தேவனுடைய சித்தத்தை மீண்டும் கண்டறியமுடியுமா என எனக்கு தெரியவில்லை.”

## உங்களுடைய பாவத்திலிருந்து மனந்திரும்புங்கள்:

யோனா 2ம் அதிகாரத்தில் யோனாவின் மாபெரும் மனந்திரும்புதலுக்கான ஜெபம் பதிவு செய்யப் பட்டுள்ளது. யோனா தனது பாவத்தை தேவனுக்கு முன்பாக ஏற்றுக்கொண்டு, மனந்திரும்பி, மன்னிப்பை கேட்டான். நீங்கள் தேவனுடைய சித்தத்தை தவற விடும்போது, மனந்திரும்புதலோடு தேவனுக்கு முன்பாக வாருங்கள், உங்களை மன்னிக்கும்படி தேவனிடம் கேளுங்கள். உங்களை நீங்களே மன்னிப்பதற்கு கூட உறுதியாயிருங்கள்! மற்றவர்களுடைய ஜீவியத்தை தாக்காத வரைக்கும் பகிரங்கமாக மனந்திரும்புதல் கேட்க அவசியம் இல்லை, அத்தோடு நீங்கள் அவர்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டியது அவசியமாகும். தேவனுக்கு முன்பாக மனந்திரும்ப வேண்டியது அவசியமாகும்.

## ஆரம்ப புள்ளியை அறிந்து கொள்ளுங்கள்:

ஜெபம், எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தை, மற்றும் பரிசுத்த ஆவியானவரின் வழிக்காட்டலுக்கு ஊடாக நீங்கள் தவறிய தேவனுடைய சித்தத்தின் புள்ளியை அறிந்து கொள்ளுங்கள். யோனாவி-னுடைய சந்தர்ப்பத்தில், நினிவேயிற்கான எதிர்திசையிலிருந்து அவன் செல்லுவதற்கான சந்தர்ப்த்-திலிருந்து தேவனுடைய சித்தத்திற்கு அவன் வெளியேற தொடங்கியதான உணர்ந்தான்.

## தவறை திருத்துவதற்கு திரும்புங்கள்:

வெளியேறிய புள்ளியிற்கு திரும்பி, முடியுமானால் தவறை திருத்துங்கள். யோனா அவன் தீர்மானித்த நினிவேயிற்கான எதிர்திசையிற்கு தலைப்பட தொடங்கியதிலிருந்து, அவனுடைய தோல்வியை உணர ஆரம்பித்தான். அவர் நினிவேயிற்கு சென்றார். அவர் தன்னுடைய தவறை திருத்தினார் (யோனா 3:3).

சில சமயங்களில் மனந்திரும்புவதற்கு தவறை திருத்துவதை தவிர ஒன்றும் செய்யவேண்டியதில்லை. நாம் கலந்துரையாடிய தாவீதின் உதாரணத்தில், பத்சேபாளோடு மேற்கொள்ளப்பட்ட அவனுடைய பாவத்தை குறித்து அவனால் ஒன்றும் செய்ய முடியாது. தவறானது ஏற்கனவே செய்யப்பட்டு விட்டது. அவரால் சரிசெய்ய மனந்திரும்புவதை தவிர வேறொன்றும் செய்ய முடியாது. எவ்வாறாயினும், சரியான கிரியைகளை நீங்கள் எடுப்பதற்கான சூழ்நிலைகளில், அது செய்யப்படல் வேண்டும்.

## வெளிப்படுத்தல்... தேவனிடம் எதிர்பார்த்து புதிய திசையிற்கேற்ப கிரியை செய்யுங்கள்:

உங்களுடைய தோல்வியை நீங்கள் ஏற்றுக்கொண்ட பின், மன்னிப்பை கேட்டு, ஆரம்ப புள்ளியை அறிந்து, முடியுமான ஏதாவது தவறுகளை திருத்தி, புதிய திசையிற்காக தேவனிடம் எதிர்பாருங்கள். தேவனுடைய சத்தத்தை கேட்பதற்கான எந்தவிதமான தடைகளையும் அகற்றுங்கள். இவைகள் பாவத்தின் கலகம், சுய சித்தம் மற்றும் தவறான குறிக்கோள்களை உள்ளடக்கும். ஜெபித்தல் மற்றும் எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையை படிப்பதினூடாக தேவனுடைய சத்தத்தை கேட்ப-தற்கான உங்கள் ஆவிக்குரிய காதை தொடர்ந்து பயிற்றுவியுங்கள். தேவனுடைய புதிய வழியிற்காக யோனா எதிர்பார்க்கும்போது, தேவன் அவனோடு இரண்டாம்தரம் மீண்டும் “எழுந்து... நினிவேக்குப் போ”கும்படியாக பேசினார். (யோனா 3:1-2). இம்முறை யோனா தேவனுடைய சத்தத்திற்கு கீழ்ப்ப-டிந்தார். அவன் நினிவேயிற்கு சென்று தேவனுடைய செய்தியை பிரசங்கித்தார். அவர் வரலாற்றில் மாபெரும் அறுவடையை அனுபவித்தார். முழு நகரமும் மனந்திரும்பியது (யோனா 3ம் அதிகாரம்).

யோனாவை போன்ற அநேக மனிதர்களை கொண்ட கதைகளை வேதாகமம் கொண்டுள்ளது. இந்த நபர்கள் தோல்வியடைந்தனர் ஆனால் அவர்கள் தோல்வியை ஏற்றுக்கொண்டு மன்னிப்பை கேட்டனர். அவர்கள் அதை செய்தபோது, தேவன் அவர்களை எப்பொழுதும் மன்னித்து புதிய வழி காட்டலுக்கான திசையை ஏற்படுத்தினார். அவர் அதே காரியத்தை உங்களுக்கும் செய்வார்! தேவன் உங்களுடைய கடந்தகால பதிவை பார்க்கமாட்டார். நீங்கள் இருப்பதைப்போலவே அவர் உங்களை பார்க்க மாட்டார். நீங்கள் தேவனுடைய சத்தத்திற்கு கீழ்ப்படிந்து நடந்தால் உங்களை போன்றே மற்ற மனிதர்களையும் பார்க்கின்றார்.

### சுருக்கம்

தேவனுடைய சித்தத்தை நீங்கள் தவறும் போது பின்பற்றவேண்டிய வேதாகம ஆலோசனைகளின் சுருக்கத்தை கீழ்வரும் அட்டவணை கொண்டுள்ளது.

**நீங்கள் தேவனுடைய சித்தத்தை தவற விடும்போது…**

உங்களுடைய தோல்விகளை உணருங்கள்:

உங்களுடைய பாவத்திலிருந்து மனந்திரும்புங்கள்:

ஆரம்ப புள்ளியை அறிந்து கொள்ளுங்கள்:

தவறை திருத்துவதற்கு திரும்புங்கள்:

வெளிப்படுத்தல்… தேவனிடம் எதிர்பார்த்து புதிய திசையிற்கேற்ப கிரியை செய்யுங்கள்:

## சுய பரிசோதனை

1. திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்.

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

2. தோல்விகளை மேற்கொண்டு தேவனுடைய பூரண சித்தத்திற்கு திரும்பிய மாபெரும் மனிதர்களின் மூன்று வேதாகம உதாரணங்களை இனங்காணுங்கள்.

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

3. தேவனுடைய சித்தத்தை தவறவிட்டு வாழ்க்கையை தோல்வியில் முடித்த மனிதர்களின் மூன்று வேதாகம உதாரணங்களை இனங்காணுங்கள்.

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

4. தேவனுடைய சித்தத்திற்கு நீங்கள் தோல்வியடையும்போது மீள திரும்புதவதற்கான ஐந்து வழிகாட்டல்களை பட்டியலிடுங்கள்:

........................................................................ ........................................................................

........................................................................ ........................................................................

........................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. லூக்கா 15:11-32ல் தனது தகப்பனை விட்டு பிற நாட்டில் வாழ சென்ற இளவயது மனிதனின் கதையை இயேசு கூறினார். இந்த கதையை குறிப்பாக தனது தகப்பனின் வீட்டிற்கு மகனின் வருகையை கூறும் பகுதியை கவனமாக படியுங்கள். இந்த பாடத்தில் கலந்துரையாடப்பட்ட தோல்விகளை திருத்துவதற்கான வழிகாட்டல்களை அவன் பின்பற்றினான் என நீங்கள் கண்டு கொள்ளுவீர்கள்.

2. தேவனுடைய சித்தத்தை தமது வாழ்வில் சில புள்ளிகளில் தவறவிட்ட மனிதர்களை குறித்து கீழ்வரும் உதாரணங்களில் படியுங்கள். அவர்களுடைய தோல்வியை திருத்துவது என்ன? அவர்கள் அவர்களுடைய தோல்வியிலிருந்து வெற்றியிற்கு எவ்வாறு திரும்பினார்கள்? அவர்களுடைய தோல்வியை திருத்தாதது என்ன? அதன் விளைவு என்ன?

| | |
|---|---|
| ஆபிரகாம்: | ஆதியாகமம் 20-21 |
| மோசே: | யாத்திராகமம்; அப்போஸ்தலர் 7:20-44ஐயும் பார்க்க |
| பிலேயாம்: | எண்ணாகமம் 22 |
| உசியா: | 2 நாளாகமம் 26 |
| சிம்சோன்: | நியாயாதிபதிகள் 13-16 |
| தாவீது: | 2 சாமுவேல் 11-12; சங்கீதம் 51. |
| சவுல்: | 1 சாமுவேல் 8-15 |
| யோனா: | யோனாவின் புத்தகம் |
| பேதுரு: | மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான், அப்போஸ்தலர் |
| யோவான், மாற்கு: | அப்போஸ்தலர் 12:12, 25; 15:39; 2 தீமோத்தேயு 4:11 |

தேவனுடைய வார்த்தையின் உங்களுடைய சொந்த படிப்பிலிருந்து இந்த பட்டியலில் மற்ற உதாரணங்களை நீங்கள் சேர்த்துக் கொள்ளலாம்.

3. தேவனுடைய சித்தத்தை குறித்து இரண்டு முக்கியமான உவமைகளை இயேசு கூறினார். லூக்கா 12:42-48 மற்றும் மத்தேயு 21:28-32 ஆகியவற்றை படித்து நீங்கள் கற்றவற்றை சுருக்கமாக்குக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

## அதிகாரம் பதினொன்று

# தேவனுடைய சித்தமும் துன்பப்படுதலும்

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ துன்பப்படுதலுக்கான ஐந்து காரணங்களை இனங்காணவும்,
- ☐ துன்பத்தை ஏற்படுத்தக்கூடிய தேவனுடைய சித்தத்தை உணரவும்,
- ☐ தேவனுடைய சித்தத்தினாலும், சித்தமின்மையாலும் ஏற்படும் துன்பத்திற்கிடையில் வேறுபாடு கண்டறியவும்,
- ☐ தேவனுடைய சித்தத்தில் துன்பப்படுவதிலாலான நேரான நன்மைகளை பட்டியலிடவும் முடியும்.

**திறவுகோல் வசனம்:**

> **ஆகையால் தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மைசெய்கிறவர்களாய்த் தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக் கொடுக்கக்கடவர்கள். (1 பேதுரு 4:19)**

## அறிமுகம்

நீங்கள் தேவனுடைய சத்தத்தை கேட்டீர்கள். நீங்கள் வழிகாட்டலை எதிர்பார்த்தீர்கள், அது கிடைத்தது, அத்தோடு தேவன் குறித்து காண்பித்தப்படி வாழ்க்கை பாதையை நீங்கள் அமைத்து கொண்டீர்கள். ஆனால் இந்த தீர்மானத்திற்கு அமைய நீங்கள் பிரச்சினைகளை அனுபவிக்கின்றீர்கள். நீங்கள் பயணிக்கும் "தேவனுடைய சித்தத்தின்" இந்த புதிய பாதையிற்கு அப்பாலல்லாது இப் பிரச்சினைகள் தோன்றுகின்றன.

நீங்கள் தேவனுடைய சத்தத்தை உண்மையிலேயே கேட்டீர்களா அல்லது நீங்கள் தவறு ஒன்றை செய்தீர்களா? இந்த கடினமான அனுபவங்கள் தேவனுடைய சித்தத்தில் வாழாத உங்களுக்கு தேவனிடமிருந்தான அடையாளமா? தேவனுடைய சித்தத்திற்குள் நீதிமானாக வாழும் ஒருவருக்கு துன்பம் வருவதற்கு தேவன் அனுமதிக்கின்றாரா?

இயேசு பூலோகத்திலிருந்து அவர் சிலுவையில் முகங்கொடுக்கப்போகும் துன்பத்தை குறித்து பேசிய போது, அவருடைய அநேக சீஷர்கள் அவரை கைவிட்டனர் (யோவான் 6:55-66). அவர்கள் மேசியா வல்லமையினாலும், மகிமையினாலும் ஆளுவார் என எதிர்பார்த்தனர். மாறாக, அவர் துன்புறுத்தலையே பேசினார். அவர்களால் விளங்கிக்கொள்ள முடியவில்லை, ஆகவே அவர்கள் தூரத்திற்கு திரும்பினார்கள்.

தேவனுடைய சித்தத்திற்கு தொடர்பான துன்புறுத்தலை நீங்கள் விளங்கிக்கொள்ள முடியாவிட்டால், கடிமான சூழ்நிலைகளை நீங்கள் முகங்கொடுக்கும்போது இயேசுவை பின்தொடருவதிலிருந்து கூட நீங்கள் திரும்ப முடியும். தேவன் துன்புறுத்தல்களை உண்டாக்கவில்லை. அது உண்மையாகவே மனிதர்களின் பாவத்திற்கூடாக உலகத்திற்குள் பிரவேசித்தது (ஆதியாகமம் 3). ஆனால் தேவனால் தீமைகளுக்கு நாடுபவற்றை எடுத்து, அவருடைய நோக்கத்தை நிறைவேற்ற அதை நல்லதாக பயன்படுத்த முடியும்.

## துன்புறுத்தலுக்கான காரணங்கள்

துன்புறுத்தல், பிரச்சினைகள் மற்றும் இடுக்கண் குறித்து கூறுவதற்கு அதிகமானவற்றை வேதாகமம் கொண்டுள்ளது. அதன் போதகத்தை சுருக்கமாக்குவதற்கு, விசுவாசிகளுடைய வாழ்க்கையில் துன்புறுத்தலானது ஐந்து வழிகளில் வரலாம் என நாம் கண்டறிந்துள்ளோம்:

### உங்களை சுற்றியுள்ள மற்றவர்கள்:

உங்களை சுற்றியுள்ள மற்றவர்களால் கூட துன்புறுத்தல் வரலாம். யோசேப்பு இந்த வகையான துன்புறுத்தலுக்கு உதாரணமாக உள்ளார். அவனில் சொந்த தவறு இல்லாதிருப்பினும் கூட, அவனுடைய சகோதரர்களால் எகிப்திற்கு விற்கப்பட்டார், போத்திபாரின் மனைவியால் தவறாக சிறையில் அடைக்கப்பட்டார், சிறையில் அவரால் உதவியடைந்தோரால் மறக்கப்பட்டார்.

ஆனால் அவனுடைய பிரதிபலிப்பை கவனியுங்கள், யோசேப்பு கூறினார்...

> **என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப்போட்டதினால், நீங்கள் சஞ்சலப்படவேண்டாம், அது உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம். ஜீவரட்சணை செய்யும்படிக்குத் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார். பெரிய ரட்சிப்பினால் உங்களை உயிரோடே காப்பதற்காகவும் தேவன் என்னை உங்களுக்கு முன்னமே அனுப்பினார். (ஆதியாகமம் 45:5,7)**

### வாழ்க்கையின் சூழ்நிலைகள்:

துன்பம் வரும் இரண்டாவது வழி வாழ்க்கையின் சூழ்நிலைகளாகும். இது வேதாகமத்தில் பதியப்பட்டுள்ள ரூத் புத்தகத்தில், நகோமியின் உதாரணத்தினால் காட்டப்பட்டுள்ளது, அவள் தனது கணவன் மற்றும் பிள்ளைகளின் மரணத்தை அனுபவித்திருந்தாள்.

இயேசு திரும்பி இறுதி எதிரியான மரணத்தை பிடிக்கும்வரை மரணம் வாழ்க்கையின் ஒரு பகுதியாகும். மனிதனின் உண்மையான பாவத்திற்கூடாகவும் நாம் அனைவரும் முகங்கொடுக்கும் இயற்கையிலான சூழ்நிலைகளுக்கூடாகவும் மரணம் வந்தது, ஏனென்றால் “அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபட்டிருக்கின்றது” (எபிரெயர் 9:27).

### உங்களுடைய ஊழியம்:

துன்புறுத்தலுக்கான மூன்றாவது காரணமானது தேவனுக்கான உங்களுடைய ஊழியம் ஆகும். புதிய ஏற்பாடு துன்புறுத்தல்களானது தேவனுடைய நாமத்தினிமித்தம் (அப்போஸ்தலர் 9:16), கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு (பிலிப்பியர் 1:29), தேவனுடைய ராஜ்யத்தினிமித்தம் (2 தெசலோனிக்கேயர் 1:5), சுவிசேஷத்தினிமித்தம் (2 தீமோத்தேயு 1:11-12), மனசாட்சியினிமித்தம் (1 பேதுரு 2:19-20; 3:17), நீதியினிமித்தம் (1 பேதுரு 3:14), கிறிஸ்தவனினான நிமித்தம் (1 பேதுரு 4:15-16) மற்றும் தேவனுடைய சித்தத்தின்படி வருகின்றது என பேசுகின்றது.

ஊழியத்தின் விளைவிலான துன்புறுத்தலுக்கு உதாரணமாக அப்போஸ்தலனாகிய பவுல் உள்ளார். தோல்வியின் அடையாளமாக அல்லது விசுவாசமின்மைக்கானதென துன்புறுத்தலை சில மக்கள்

பார்க்கின்றனர். இது உண்மையாயின், அப்போஸ்தலனாகிய பவுல் விசுவாசமின்மையாக இருந்து சபை வரலாற்றில் மாபெரும் தோல்வி ஏற்பட்டிருக்க வேண்டும்.

பவுல் ஆசியாவில் தாங்கள் இருக்கும்போது வாழ்க்கையை குறித்து நம்பிக்கையற்றிருக்கும் போது பூரணமாக கஷ்டப்பட்டதாக கூறுகின்றார் (2 கொரிந்தியர் 1:8). சமாதானத்தையும் செல்வத்தையும் தவிர விசுவாசிகளுக்கு வாக்குப்பண்ணும் குதுகலமூட்டும் சுவிசேஷகரைவிட வித்தியாசமான தோற்றத்தை அவர் முன்வைத்தார். பவுல் தேவனுடைய ஊழியத்திற்கு முதலாவதாக அழைக்கப்பட்ட போது தேவனுடைய நாமத்தினிமித்தம் துன்பப்படவேண்டுமென "மாபெரும் காரியங்கள்" அவருக்கு கொடுக்கப்பட்டது (அப்போஸ்தலர் 9:16).

துன்புறுத்தல் குறித்தான பவுலின் பிரதிபலிப்பானது "கிறிஸ்துவிற்காக சிலதை வெற்றியடைய அனைத்து காரியங்களையும் இழப்பதற்கு" சகிக்கின்றார். அவர் விசுவாசிகளுக்கு எழுதினார் "ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்குமாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது" (பிலிப்பியர் 1:29).

பவுல் மாத்திரம் ஊழியத்திற்கு துன்பப்படவில்லை. புதிய ஏற்பாட்டு காலங்களில் முழு சபைகளும் துன்பப்பட்டது (அப்போஸ்தலர் 8). எபிரெயர் 11ம் அதிகாரமானது அவர்கள் தாங்கிய கடினமான உபத்திரவங்களின் சில கதைகளை பதிவு செய்துள்ளது. இந்த அநேக விசுவாச மனிதர்கள் தேவனுடைய வல்லமையால் விடுவிக்கப்பட்டார்கள். சிறைச்சாலை கதவுகள் திறந்து அவர்கள் வெளியே நடந்தார்கள். அவர்கள் சூளைகளில் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டார்கள் ஆனால் அக்கினியினால் தாக்கம் செய்யப்படவில்லை.

ஆனால் இந்த விசுவாசிகளில், விசுவாசத்தின் மனிதர்கள் என அழைக்கப்பட்ட சிலர், விடுதலையை பெற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் சுவிசேஷத்தின் சாட்சியினால் சிறைக்குட்பட்டு, காயப்படுத்தப்பட்டு, வாதை அனுபவித்து, இரத்த சாட்சிகளாய் கூட ஆனார்கள். (எபிரெயர் 11:36-40). நாம் விசுவாச வாழ்க்கையில் நோக்கமாக கொண்டுள்ளோம் ஆனால் இறக்கும் விசுவாசத்திலும் தேவன் அவருடைய வல்லமையை வெளிப்படுத்துகின்றார். இந்த விசுவாசமானது வல்லமையான விடுதலை வெளிப்படும்போது நல்ல நேரங்களில் மாத்திரம் அல்ல, தவறான நேரங்களில் உண்மையாக நிற்கும்.

## சாத்தானுடைய நேரடியான நடவடிக்கை:

சாத்தானுடைய நேரடியான நடவடிக்கையின் விளைவாகவும் உங்களுடைய வாழ்க்கையில் துன்புறுத்தல் பிரவேசிக்கலாம். இதற்கான ஆதாரம் யோபுவினுடைய கதையாகும். இந்த புத்தகமானது "நீதிமான் ஏன் துன்புறுத்தல் அடைகின்றான்?" என்னும் கேள்வியோடு போராடுகின்றது.

யோபு நீதிமானாகிய மனிதன் என தேவன் சாட்சி பகர்கின்றார் (யோபு 1-2). யோபு அவனுடைய நண்பர்கள் உரிமைகோரியதைப்போன்று பாவத்தினால் துன்புறவில்லை. அவர்கள் யோபு மனந்திரும்பினால் அவனுடைய சூழ்நிலைகள் மாறுமென விசுவாசித்தார்கள். இந்த நண்பர்கள் அவர்களுடைய தனிப்பட்ட அனுபவத்தை கொண்டு பூலோக காரியங்களை உருவாக்க முயற்சித்தார்கள். இது தேவன் பேதுருவை சிறைச்சாலையிலிருந்து விடுவித்தமையால் உங்களுக்கும் அதே காரியத்தை செய்வார் என அதேகாரியத்தை கூறுவதற்கு ஒத்ததாகும். இது உண்மையல்ல. அநேகர் தமது மாபெரும் விசுவாசத்தினாலும், பாவமற்ற வாழ்க்கையினாலும் சிறைச்சாலையில் இரத்த சாட்சியாக மாறினர்.

நாம் மற்றவர்களுடைய துன்புறுத்தலை காணும்போது நாம் அவர்களை பாவத்தினால், விசுவாச மின்மையால், அல்லது அவிசுவாசத்தினால் குற்றம்சாட்டாதப்படிக்கு அவதானமாக இருத்தல் வேண்டும். வேதாகமமானது பாவமுள்ள மனிதன் கசப்பான அறுவடையை மாம்சீக தவறுதலின் விதைப்பின் மூலம் அறுப்பான் என போதிக்கின்றது (கலாத்தியர் 6:8). ஆனால் அப்பாவித்தனமாக துன்புறப்படுதலை விபரிக்க விதைப்பையும், அறுப்பையும் பயன்படுத்த முடியாது.

யோபு தான் செய்த எந்த காரியத்தினாலும் துன்பப்படவில்லை. அவன் நீதியுள்ள மனிதனாக இருந்-தான். இது யோபைகுறித்த தேவனுடைய சாட்சியும். யோபின் தனக்குத்தானேயான சாட்சியும், மற்ற மனிதர்களுக்கு முன் அவனுடைய கீர்த்தியுமாய் இருக்கின்றது. ஆவிக்குரிய உலகின் பின்புல காட்சி-களே யோபுவினுடைய துன்புறுத்தலுக்கு உண்மையான காரணமாக இருந்தது. யோபுவினுடைய இருதயம், மனம், விசுவாசத்தின் மேல் ஆவிக்குரிய போராட்டம் நடைபெற்று கொண்டிருக்கின்றது.

உங்களுக்கு மேலாக ஆவிக்குரிய உலகில் யுத்தம் நடைபெற்று கொண்டிருக்கின்றது. அந்த யுத்தமானது இந்த இயற்கையான சூழ்நிலைகளில் நீங்கள் அனுபவிக்கும் கடினமான சூழ்நிலைகளுக்கு ஊடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. யோபுவினுடைய துன்புறுத்தலில் முக்கியமான உண்மையின் காரியமானது தேவனுடைய அறிவில்லாமல் விசுவாசிகளுடைய வாழ்வில் ஒன்றும் உட்பிரவேசிக்க முடியாது. தேவன் உங்களுக்கான துன்புறுத்தலின் காரணமல்ல. அது சாத்தானால் ஏற்படுத்தப் படுகின்றது, ஆனால் அதன் அளவுகள் தேவனால் ஏற்படுத்தப்படுகின்றன.

## உங்களுடைய சொந்த பாவம்:

உங்களுடைய வாழ்க்கையில் துன்புறுத்தல் பிரவேசிக்கும் ஐந்தாவது வழிமுறை உங்களுடைய சொந்த பாவமாகும். இந்த துன்புறுத்தலுக்கு யோனா ஓர் உதாரணமாக உள்ளார். தேவனுக்கு கீழ்ப்படியாமல் நினிவேயிற்கு சென்று மனந்திரும்புதலை பிரசங்கிக்கும்படிக்கு எதிர்திசையில் யோனா தலைப்பட்டான். அவர் கடலில் பாரிய புயலை அனுபவித்து தன்னுடைய சொந்த பாவத்தின் காரண-மாக மீன் வயிற்றிற்குள்ளாக முடித்துக்கொண்டார் (யோனா 1-2).

தேவனுக்கு முன்பாக உங்கள் இருதயத்தை பரிசோதித்து உங்கள் வழிகளை கவனம் செலுத்து வற்கு துன்புறுத்தலானது எப்பொழுதும் அழைப்பாகவே கருதப்படல் வேண்டும். யோனாவைப்போல் உங்களுடைய சொந்த பாவத்தின் காரணமாக நீங்கள் துன்பப்படலாம். வேதாகமமானது தேவனுடைய வார்த்தையிற்கு கீழ்ப்படியாமல் ஜீவிப்பவர்களுக்கு தேவன் சிட்சிக்கின்றார் என வெளிப்படுத்துகின்றது. சிட்சை என்பது ஒழுக்கம், கண்டித்தல் மற்றும் திருத்துதல் என அர்த்தப்படும்:

> **எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும், ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும். (எபிரெயர் 12:11)**

தேவன் உங்களை திருத்துவதற்கும், உங்களுடைய ஜீவியத்தில் அவருடைய சித்தத்தை மீள கொண்டு வருவதற்கும் துன்புறுத்தலை உபயோகிக்கின்றார்:

> **நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழி தப்பி நடந்தேன், இப்பொழுதோ உம்முடைய வார்த்தையைக் காத்து நடக்கிறேன்.**

**நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது, அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக் கொள்ளுகிறேன்.**

**கர்த்தாவே, உமது நியாயத்தீர்ப்புகள் நீதியுள்ளதென்றும், உண்மையின்படி என்னை உபத்திரவப்படுத்தினீரென்றும் அறிவேன். (சங்கீதம் 119:67,71,75)**

## துன்புறுத்தலுக்கு நேரான சரியான குறிக்கோள்

ஆனால் தேவனுடைய சித்தத்திற்கு வெளியே இருப்பதற்கான அடையாளமாக துன்புறுத்தல் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. வேதாகமமானது "நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும்" என அறிக்கையிடுகின்றது (சங்கீதம் 34:19). நீங்கள் உங்களுடைய சொந்த பாவம் இல்லாமல் அப்பாவியாக துன்புறுத்தலை அனுபவிக்கும்போது, துன்புறுத்தலுக்கு நேரான சரியான குறிக்கோளை நீங்கள் கொண்டிருக்க வேண்டும். உங்களுடைய ஆவியின் உண்மை பரிசோதனையானது துன்பத்தின் நாளில் நீங்கள் எவ்வாறு பிரதிபலிக்கின்றீர்கள் என்பதாகும்:

**ஆபத்துக்காலத்தில் நீ சோர்ந்து போவாயானால், உன் பெலன் குறுகினது. (நீதிமொழிகள் 24:10)**

விசுவாசி என்ற வகையில் தேவனுடைய சித்தத்திற்குள் நீங்கள் துன்புறும்போது நீங்கள் குறிக் கோளை கொண்டிருக்க வேண்டும் என வேதாகமம் விபரிக்கின்றது. நீங்கள் வெட்கப்படல் கூடாது:

**ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன். (1 பேதுரு 4:16)**

நீங்கள் உங்கள் ஆத்துமாவை (உங்களுடைய துன்புறுத்தலில்) தேவனுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும், அவர் உங்களுக்கான அனைத்து காரியங்களிலும் நன்மைக்காக கிரியை செய்வார் என அறிந்து கொள்ளுங்கள்:

**ஆகையால் தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மைசெய்கிறவர்களாய்த் தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக் கொடுக்கக்கடவர்கள். (1 பேதுரு 4:19)**

தேவனுடைய சித்தத்தின்படி நீங்கள் துன்பப்படும்போது நீங்கள் சந்தோஷப்படல் வேண்டும்:

**அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப் போய்... (அப்போஸ்தலர் 5:41)**

நீங்கள்

**நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள், உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள், ஜெபத்திலே உறுதியாய்த்தரித்திருங்கள். (ரோமர் 12:12)**

**எங்கள் கைகளினாலே வேலைசெய்து, பாடுபடுகிறோம், வையப்பட்டு, ஆசீர்வதிக்கிறோம். துன்பப்பட்டு, சகிக்கிறோம். (1 கொரிந்தியர் 4:12)**

**இந்த ஊழியம் குற்றப்படாதபடிக்கு, நாங்கள் யாதொன்றிலும் இடறல் உண்டாக்காமல், எவ்விதத்தினாலேயும், எங்களைத் தேவஊழியக்காரராக விளங்கப்பண்ணுகிறோம். (2 கொரிந்தியர் 6:4)**

**தேவ வல்லமைக்கேற்றபடி சுவிசேஷத்திற்காக என்னோடேகூடத் தீங்கநுபவி. (2 தீமோத்தேயு 1:8)**

**இப்படிப்பட்ட உபத்திரவங்களைச் சகிக்க நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே. (1 தெசலோனிக்கேயர் 3:3)**

**நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று. (2 தீமோத்தேயு 4:5)**

நீங்கள் துன்பத்தை அனுபவிக்கும்போது அது பயங்கரமானதென எண்ணக்கூடாது:

**பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள். (1 பேதுரு 4:12-13)**

நீங்கள் போர்வீரர்களைப்போல் சகித்துக்கொள்ள வேண்டும்:

**நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவி. (2 தீமோத்தேயு 2:3)**

2 கொரிந்தியர் 4:9ல் துன்புறுத்தலை குறித்தான சரியான குறிக்கோளை பவுல் சுருக்கப்படுத்துகின்றார்:

**எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது.**

**மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது.**

**ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள். (2 கொரிந்தியர் 4:16-18)**

பவுல் சேவகரைப்போல் துன்புறுத்தலை காண்கின்றார். அவர் பிரச்சனைகளுக்கு பதிலாக அதன் நித்திய நன்மைகளில் எமது கண்களை நாம் வைக்கும்போது அது கிரியை செய்கின்றது என கூறுகின்றார்.

## துன்புறுத்தலுக்கான நேராக காரணங்கள்

தேவனுடைய சித்தத்தின்படியான துன்புறுத்தலுக்கு நேராக காரணங்கள் சில இங்குள்ளன:

### உங்களுடைய விசுவாசம் பரீட்சிக்கப்பட்டது:

ஆவிக்குரிய உலகிலுள்ள அனைத்தும் விசுவாசத்திற்கு அடிப்படையாக உள்ளது. இதனாலேயே உங்களுடைய விசுவாசத்தின் பலனானது பரீட்சிக்கப்படல் வேண்டும்:

> **அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும், அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும். (1 பேதுரு 1:7)**

இயேசு ஜெபித்ததைபோல் நீங்கள் ஜெபித்து, கசப்பின் பாத்திரத்தை கடந்து செல்லும்படி தேவனுக்கு அனுமதித்தும், அது கடந்துசெல்லாதிருந்தால் இது விசுவாசத்திற்கான பரீட்சிப்பாகும். மாறாக, அதன் துன்புறுத்தலை ஆழமாக பருகும்படி நீங்கள் அனுமதிக்கப்படுகின்றீர்கள். ஆனால் விசுவாசமானது எமது ஜெபமானது கேட்கப்படாதது அன்று என கற்றுத்தரும் ஏனென்றால் நாம் வேண்டும் வழிகளில் அவைகள் கேட்கப்படுவதில்லை.

### நீங்கள் மற்றவர்களை தேற்ற வேண்டும்:

> **நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம்.**
>
> **தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப் படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல்செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல்செய்கிறவர். (2 கொரிந்தியர் 1:3-4)**

நீங்கள் மற்றவர்களோடு தேவனுடைய ஆறுதலை பகிரும்போது நீங்கள்....

> **ஆகையினால், நெகிழ்ந்த கைகளையும் தளர்ந்த முழங்கால்களையும் நீங்கள் திரும்ப நிமிர்த்தி, முடமாயிருக்கிறது பிசகிப்போகாமல் சொஸ்தமாகும்படிக்கு, உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள். (எபிரெயர் 12:12-13)**

### உங்களுடைய சொந்த சுயத்தை நம்ப கூடாதென நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும்:

பவுல் ஆசியாவில் தனது துன்புறுத்தலின் நோக்கத்தை பேசினார்:

> **ஆகையால் சகோதரரே, ஆசியாவில் எங்களுக்கு நேரிட்ட உபத்திரவத்தை நீங்கள்**

**அறியாதிருக்க எங்களுக்கு மனதில்லை. என்னவெனில், பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக, எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று.**

**நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கை யாயிருக்கத்தக்கதாக, மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந் தோம். (2 கொரிந்தியர் 1:8-9)**

நீங்கள் அதை அறிந்துகொள்ள வருவீர்கள்....

**இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயி ருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கி றோம். (2 கொரிந்தியர் 4:7)**

## நேராக தகுதியானது அபிவிருத்தி செய்யப்படும்:

**அதுமாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும், உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம். (ரோமர் 5:3-4)**

**தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவராக. (1 பேதுரு 5:10)**

இந்த தரமானது உங்களுக்கான தேவனுடைய நோக்கத்தை கொண்ட இயேசுவினுடைய தோற்றத்தை உங்களில் உறுதிப்படுத்தும் (ரோமர் 8:28-29; எபிரெயர் 2:10,18)

## தேவனுடைய கிரியையானது எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது:

பிறப்பிலிருந்தே குருடனான ஒரு மனிதனை சீஷர்கள் கண்டபோது, அவனுடைய நிலையிற்கு யார் பொறுப்பு என அவர்கள் கேட்டார்கள். அது அவனுடைய உறவினர்களுடைய பாவமா அல்லது அந்த மனிதனுடைய பாவமா? இயேசு பதிலளித்தார்:

**அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவ-னுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான். (யோவான் 9:3)**

## தேவனுடைய வல்லமையானது பூரணமானது:

**அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும், பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீ னங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன். (2 கொரிந்தியர் 12:9)**

## அதில் திடமானமில்லாதவை அகன்றுப்போகும்:

துன்புறுத்தலின் விளைவானது உங்கள் வாழ்க்கையில் திடமானமில்லாதவை எல்லாம் அகன்றுப் போகும். நீங்கள் மக்கள், நிகழ்ச்சிகள் அல்லது பொருட்களிலான காரியங்களில் தங்கியிப்பதை நிறுத்திக் கொள்ளுகின்றீர்கள், ஏனென்றால் இவைகளெல்லாம் உங்களுடைய தேவையான நேரங்களில் தோல்வியடைவதிலாகும்.

தேவன் அனுமதிக்கின்றார்....

> **அசையாதவைகள் நிலைத்திருக்கத்தக்கதாக, அசைவுள்ளவைகள் உண்டாக்கப் பட்டவைகள்போல மாறிப்போம் என்பதைக் குறிக்கிறது. (எபிரெயர் 12:26-27)**

வாழ்க்கையின் கடினமான வேளைகளில், தேவனிலும் அவருடைய வார்த்தையிலும் கட்டப்படாதவைகள் அனைத்தும் தளம்பும் (சங்கீதம் 119:89 மற்றும் மத்தேயு 7:24-27).

## உங்களுடைய நோக்கம் மாறுகின்றது:

நீங்கள் துன்புறுத்தலை அனுபவிக்கும்போது உங்களுடைய காரியங்களிலும், தாக்கங்களிலும் கவனத்தை செலுத்துகின்றீர்கள். உங்களுடைய வாழ்க்கையில் இருக்கும் பயங்கரமான தாக்கங்களையும், கடினமான சூழ்நிலை காரியங்களிலும் நீங்கள் கவனம் செலுத்துகின்றீர்கள். தேவன் தற்காலிகமானதிலிருந்து நிதந்திரமானவற்றிற்கு உங்கள் நோக்கத்தை மாற்றும்படி வேண்டுகின்றார்:

> **மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகைள நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது.**
>
> **ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள். (2 கொரிந்தியர் 4:17-18)**
>
> **பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்,**
>
> **கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள். (1 பேதுரு 4:12-13)**
>
> **அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம். (2 தீமோத்தேயு 2:12)**

## பழைய இயற்கையிலான சுபாவம் மாற்றமடைகின்றது:

மோவாப்பிய ஜாதியிற்கு தேவன் கூறினார்:

**மோவாப் தன் சிறுவயதுமுதல் சுகமாய் வாழ்ந்தது. அது ஒரு பாத்திரத்திலிருந்து மறு பாத்திரத்தில் வார்க்கப்படாமலும், அதின் வண்டல்களின்மேல் அசையாமலும் இருந்தது. அது சிறையிருப்புக்குப் போனதில்லை, ஆதலால் அதின் ருசி அதில் நிலைத்திருந்தது. அதின் வாசனை வேறுபடவில்லை. (எரேமியா 48:11)**

மோவாப்பியர் துன்புறுத்தலுக்கான ஊற்றுதலை அனுபவியாதிருந்து, அதையொத்த நல்ல ரசத்தை விருத்திசெய்ய அவசியமானவற்றிற்கு குழப்பமாயிருந்ததால், தேசமானது மாற்றப்படவில்லை. மோவாப் சௌக்கியமாயிருந்து தேசமானது அபிவிருத்தியடையாது செல்வசெருக்கில் அமைந்திருந்தாதல், ஆவியில் முதிர்ச்சியடையவில்லை. ஆகவே ஒரு மாற்றமும் அங்கு இருக்கவில்லை. அவனுடைய சொந்த வாசனை அவனுக்கு மீதியாயிருந்தது.

துன்புறுத்தலானது உங்களுடைய பழைய சுய இயல்பை விடுவிக்கும். நீங்கள் கலக்கமடைந்து, துன்பப்பட்டு, ஊற்றப்பட்டுவிட்டால், உங்களுடைய ஆவிக்குரிய வாசனையானது சிற்றின்பத்திலிருந்து ஆவிக்குரிய ரீதியாக மாறிவிடும்.

## தேவன் உங்களுக்கு ஊழியத்தை ஆயத்தம் செய்கின்றார்:

நீங்கள் தேவனால் உபயோகப்படுத்தப்படல் வேண்டும். இயேசுவைப்போல் இருக்க வாஞ்சிக்க வேண்டும். அவருடைய உபயோகத்திற்கு தெரிந்தெடுக்கப்பட்ட பாத்திரமாக இருத்தல் வேண்டும். தேவன் துன்பத்திற்கூடாக உங்கள் ஜெபத்திற்கு பதில் தருகின்றார்:

**இதோ, உன்னைப் புடமிட்டேன், ஆனாலும் வெள்ளியைப்போலல்ல, உபத்திரவத்தின் குகையிலே உன்னைத் தெரிந்துகொண்டேன். (ஏசாயா 48:10)**

தேவனுடைய பிள்ளையிற்கான அழைப்பிற்கு அப்பாலிருந்து தேவனால் தேர்ந்தெடுப்பதற்கு நீங்கள் நகர்தல் உபத்திரவத்திற்கூடாக ஆகும். தேவனுடைய சித்தப்படியான உபத்திரவமானது இயற்கை யான உலகில் சூளையில் புடமிடப்படும் உலோகத்தைப்போன்று அவருடைய பயன்பாட்டிற்காக உங்களை வனைகின்றார்.

## நீங்கள் கிறிஸ்துவோடு ஆளுகை செய்ய ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளீர்கள்:

**அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம். (2 தீமோத்தேயு 2:12)**

## துன்பப்படுத்தல் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை கொண்டுவரும்:

இயேசு சொன்னார்:

**நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், பரலோகராஜ்யம் அவர்களுடையது.**

**என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்.**

**சந்தோஷப்பட்டு, களிகூருங்கள், பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே. (மத்தேயு 5:10-12)**

## நீங்கள் துன்பத்தினூடாக கீழ்ப்படிதலை படிக்கின்றீர்கள்:

**அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு.. (எபிரெயர் 5:8)**

## துன்புறுத்தல் தேவனுடைய வார்த்தையை உங்களினுள் பரீட்சிக்கும்:

**கர்த்தருடைய சொற்கள் மண் குகையில் ஏழுதரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக் கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது. (சங்கீதம் 12:6)**

## துன்புறுத்தல் உங்களை தாழ்மைப்படுத்தும்:

**உன்னுடைய பின்நாட்களில் உனக்கு நன்மை செய்யும்பொருட்டு, உன்னைச் சிறுமைப் படுத்தி, உன்னைச் சோதித்து, கொள்ளிவாய்ச் சர்ப்பங்களும் தேள்களும், தண்ணீரில்லாத வறட்சியுமுள்ள பயங்கரமான பெரிய வனாந்தரவழியாய் உன்னை அழைத்துவந்தவரும், உனக்காகப் பாறையான கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படப்பண்ணினவரும்,**

**உன் பிதாக்கள் அறியாத மன்னாவினால் வனாந்தரத்திலே உன்னைப் போஷித்து வந்தவருமான உன் தேவனாகிய கர்த்தரை நீ மறவாமலும்... (உபாகமம் 8:15-16)**

## துன்புறுத்தல் உங்களை விசாலமுண்டாக்கும்:

இதன் அர்த்தமானது நீங்கள் ஆவிக்குரிய ரீதியில் முதிர்ச்சியடைவீர்கள்:

**நெருக்கத்தில் இருந்த எனக்கு விசாலமுண்டாக்கினீர்... (சங்கீதம் 4:1)**

## தேவனை தனிப்பட்ட ரீதியில் நன்கு அறிவீர்கள்:

துன்பத்திற்கூடான அடிப்படையில் தேவனை அதிகம் அறிவதற்கு நீங்கள் வருவீர்கள். துன்பத்தை அதிகம் அனுபவித்த யோபு இந்த உண்மையை கற்று கூறியதாவது...

**என் காதினால் உம்மைக்குறித்துக் கேள்விப்பட்டேன். இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது.**

**ஆகையால் நான் என்னை அருவருத்து, தூளிலும் சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப் படுகிறேன் என்றான். (யோபு 42:5-6)**

எம் சிலருக்கு தேவனை இரண்டாவது பட்சமாகத்தான் தெரியும். நீங்கள் வாழ்க்கையின்

ஆசீர்வாதத்தை அனுபவிக்கும்போது, தேவன் தேவைக்கு மாறாக ஆடம்பர தன்மையுள்ளவராக கூட இருக்கின்றார். ஆனால் நீங்கள் உண்மையில் ஒரு தேவையுள்ளவராக இருக்கும்போது, தேவன் அவசியமுள்ளவராக மாறுகின்றார். யோபு தேவனை துன்பத்திற்கூடாக அதிகம் நெருங்கியவராக வந்தார். துன்பத்திற்கு முன்னதாக அவர், தேவனை கல்வியின் மூலமாக அறிந்திருந்தார். பிற்பாடு, அவர் அவரை அனுபவத்திற்கூடாக அறிந்திருந்தார்.

பவுல் இதற்கொத்ததான வாஞ்சையை வெளிப்படுத்தி அவர் கூறியதாவது:

> **இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற் குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியா-கும்படிக்கும்.. (பிலிப்பியர் 3:10)**

அநேக துன்புறுத்தல்களின் நெருக்கத்திற்கூடாக தேவனுடைய உயிர்த்தெழுதலின் வல்லமையை மாத்திரம் நீங்கள் அறிந்து கொள்ள வருவீர்கள்.

அவனுடைய அனுபவத்தின் மூலம், தன்னுடைய துன்புறுத்தலின் காரணத்தை யோபு தேவனிடம் கேட்டான். தேவனிடம் கேள்வி கேட்பது தவறல்ல. இயேசு அனைத்து மானிடர்களின் பாவத்திற்காக மரிப்பதற்கு இந்த உலகில் வரும்போது அதன் நோக்கத்தை அறிந்திருந்தார். துன்புறுத்தலிலான அவருடைய நேரத்திலும் கூட “என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்?” என அவர் கதறினார். இதுவே கேள்வி கேட்பதற்கான முக்கியத்துவத்தை தொடருகின்றது. இயேசுவினுடைய அடுத்த வார்த்தையானது, “உமது கையில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்” என்பதாகும்.

கேள்வியிற்கு மாறாக யோபுவின் பிரதிபலித்தலானது...

> **அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன். (யோபு 13:15)**
>
> **என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன்.**
>
> **இந்த என் தோல்முதலானவை அழுகிப்போனபின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன். (யோபு 19:25-26)**

அனைத்து கேள்விகளும் முடிந்த பிற்பாடு, சொல்லழுத்தமானது “என்னை” என்பதிலிருந்து “நான்” ற்கு மாறுதல் வேண்டும். நீங்கள் உங்களுடைய துன்புறுத்தலை அதனுடைய எல்லா பதிலளிக்கப்படாத கேள்வியோடும், தேவனுடைய கரத்தில் அர்ப்பணிக்க வேண்டும்.

> **உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, (நீதிமொழிகள் 3:5)**

தேவன் உங்களுடைய துன்புறுத்தலில் சில நோக்கங்களை வெளிப்படுத்தலாம், ஆனால் அதை நீங்கள் முழுமையாக ஒருபோதும் முழுமையாக விளங்கிக்கொள்ள முடியாது.

**காரியத்தை மறைப்பது தேவனுக்கு மேன்மை... (நீதிமொழிகள் 25:2)**

**மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள், வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள். (உபாகமம் 29:29)**

தேவனுக்கே மாத்திரம் உரிதான சில ரகசியமான காரியங்கள் காணப்படுகின்றன. யோபைப்போல உங்களுடைய துன்புறுத்தலின் அனைத்து நோக்கத்தையும் நீங்கள் ஒருபோதும் விளங்கிக்கொள்ள முடியாது:

**கர்த்தராலே மனுஷருடைய நடைகள் வாய்க்கும். ஆகையால் மனுஷன் தன் வழியை அறிந்துகொள்வதெப்படி? (நீதிமொழிகள் 20:24)**

தேவன் இறுதியாக யோபுடன் பேசும்போது, யோபுவினால் விபரிக்க முடியாத இயற்கையிலான பல உதாரணங்களை அவர் பயன்படுத்தினார். தேவன் இயற்கையான உலகத்தில் யோபுவினால் பார்ப்பவற்றை விளங்கிக்கொள்ள முடியாதிருக்கும்போது, ஆவிக்குரிய உலகில் பார்க்க முடியாதவற்றை அவனால் விளங்கிக்கொள்ள முடியாது என யோபுவிற்கு வலியுறுத்தினார்.

யோபு தேவனை முகங்கொடுக்கும்போது, துன்புறுத்தலிற்கான அவனுடைய கேள்வி குறித்து பதில் பெற்றுக்கொள்ளாதிருத்தல் ஓர் பெரிதான காரியமல்ல. அவர் ஒரு போதும் கட்டுப்படாமலும், மனித காரணங்களால் இம்சிக்கப்படாமலும் இருக்கவில்லை. அவர் பதில்களில்லாமல், விசுவாசத்தினால் கேள்விகளை மறு உத்தரவாக வைத்தார்.

நீங்கள் தேவனை துன்புறுத்தல் மூலம் நெருக்கமாக அறிந்துகொள்ள வரும்போது, உங்களை உண்மையாகவே நீங்கள் பார்க்கின்றீர்கள். நீங்கள் தேவனை இரண்டாம்தரமாக அறியவில்லை. வாதங்களினாலும், கலந்துரையாடல்களினாலும் செய்யமுடியாதவற்றை முகமுகமாக தேவனோடு சந்திக்கும்போது செய்ய முடியும்.

யோபு தேவனுக்கு முன்பாக நிற்கும்போது, அவனுக்கு புதியதாக பதில்கள் இல்லை. துன்புறுத்தலை குறித்தான அவனுக்கு புதிய காரணிகள் கொடுக்கப்படவில்லை. ஆனால் அவன் விசுவாசத்தினால் கேள்விகளை முன்வைத்தான். யோபு நேரடியாக தேவனுடைய பிரசன்னத்தில் இருந்தார், அந்த அனுபவம் கேள்விகள் அல்லது சந்தேகத்திற்கு எந்தவித இடத்தையும் கொடுக்கவில்லை.

## வாழ்க்கையின் புயல்

துன்புறுத்தலானது சிலவேளைகளில் இயற்கையிலான புயல்களோடு ஒப்பிடப்படுகின்றது. நீங்கள் துன்பப்படும்போது, ஆவியில் பேசும் புயலை நீங்கள் அனுபவிக்கின்றீர்கள். இந்த புயலானது உங்களை ஆவிக்குரிய ரீதியில் மனரீதியில், பௌதீகரீதியில், பொருட்ரீதியில் அல்லது உணர்வு ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

வேதாகமமானது இயேசுவின் சீடர்கள் அனுபவித்த புயலை கூறுகின்றது. உங்களுடைய

வேதாகமத்தில் மாற்கு 4:35-41ல் இந்த கதையை வாசியுங்கள். இந்த புயலானது சாத்தானுடைய தாக்குதலாகும். இயேசு சீடர்களுக்கு மற்ற கரையிற்கு செல்லும்படியாக கூறினார். இயேசு அவர்களோடு படகில் இருந்தார். கதிரேனா நாட்டில் அற்புதமான காரியங்கள் செய்யப்படவிருப்பதால் கரையை அடைவதை தடுப்பதற்கு சாத்தான் முயற்சித்தான் (மாற்கு 5). இயேசு புயலிற்கு மேலான அதிகாரத்தை எடுத்தார். அவர் எதிரியினுடைய வல்லமையை உடைத்தார். கடலிற்கு அமைதி திரும்பியது, அவர்கள் தடையில்லாமல் பயணத்தை தொடர்ந்தார்கள்.

சாத்தானுடைய புயல் என்பது உங்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதிலிருந்து உங்களை தடுக்க முயற்சிக்கும் ஏதோவொன்றாகும். இது உங்களுடைய கீழ்ப்படியாமையால் விளைந்த துன்புறுத்தல் அல்ல. மாறாக இவ்விதமான துன்புறுத்தல் தேவனுடைய சித்தத்தின் படி ஏற்படுகின்றது. தேவன் உங்களை அவருடைய திட்டத்தின்படி எந்த காரியத்தையும் தடுக்க விடமாட்டார். நீங்கள் இந்த வகையான புயலை சந்திக்கும்போது, எதிரியின் மேலான அதிகாரத்தில் பயிற்சியில் எடுங்கள். இயேசு சாத்தானுடைய எல்லா வல்லமையிற்கும் மேலாக உங்களுக்கு அதிகாரத்தை கொடுத்துள்ளார்.

வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள இயற்கை புயலிலான மற்ற இரண்டு கதைகளும் பாவத்திற்கான தண்டனை மற்றும் தேவனுடைய சித்தப்படியான துன்புறுத்தல் என துன்புறுத்துதலை குறித்து காட்டுகின்றது. யோனாவின் கதையையும், யோனா அதிகாரம் 1ல் புயலை குறித்தும் வாசியுங்கள். பவுலையும் புயலை குறித்தான கதையையும் அப்போஸ்தலர் 27ல் வாசியுங்கள். பின் கீழ்கண்ட அட்டவணையை படியுங்கள்:

| **யோனா** | **பவுல்** |
|---|---|
| யோனா தன்னைத்தானே புயலில் போடுவித்தார் | பவுல் தன்னுடைய சொந்த தவறு இல்லாவிட்டாலும் அதற்குள் இருந்தார் |
| அவர் பயணிப்பதற்காக கட்டணத்தை செலுத்தினார். | பயணத்திலிருக்கும் போது அதை தவிர்க்க முயற்சித்தார் |
| புயலுக்கு அவரே காரணமாய் இருந்தார் | அவர் பங்காளியாயிருந்தார், காரணமாயிருக்கவில்லை |
| புயலின்போது யோனா தூங்கினார் | பவுல் உபவாசித்து ஜெபித்தார் |
| யோனாவிடம் தேவனுடைய ஆசீர்வாதம் இருக்கவில்லை | தேவனுடைய ஆசீர்வாதம் பவுலில் இருந்தது |
| கப்பலோட்டி பயமடைந்தார் | கப்பலோட்டி நன்மையானவராக இருந்தார் |
| பாதுகாக்கப்பட:<br>யோனா கப்பலிலிருந்து வெளியேற்றப்படல் வேண்டும் | பாதுகாக்கப்பட:<br>அனைவரும் கப்பலில் காத்திருக்க வேண்டும் |

தேவனுடைய சித்தத்திற்கு வெளியேயிருந்து புயலை அனுபவித்தல் மற்றும் தேவனுடைய சித்தப்படி வாழ்க்கையின் புயலுக்கூடாக செல்லுதல் ஆகியவற்றிற்கிடையில் வேறுபாடு உண்டு. தேவனுடைய சித்தத்திற்கு வெளியேயிருந்து புயலில் நீங்கள் செல்லும்போது, அது நீங்களே உருவாக்கிய சூழ் நிலையாகும். உதாரணத்திற்கு, இரட்சிக்கப்படாத நபர் ஒருவரை ஒரு விசுவாசி திருமணம் செய்தல் துன்புறுத்தலை அனுபவிப்பர் ஏனென்றால் அவர்கள் ஆவிக்குரிய கொள்கையை துஷ்பிரயோகம் செய்துள்ளனர்.

நீங்கள் ஒரு புயலை உருவாக்கும்போது, நீங்கள் தேவனுடைய சித்தத்தை வீணடிக்கின்றீர்கள், அத்தோடு அவருடைய கட்டளைகளை கீழ்படியாமல் போகின்றீர்கள். அத்தோடு உங்களுடைய சூழ்நிலைகளில் மிக முக்கிய பொறுப்பு இல்லாதிருக்கின்றீர்கள். உங்களை சுற்றி அதிகமாக புயல் எழும்பும் போது ஆவிக்குரிய ரீதியில் நீங்கள் தூங்குகின்றீர்கள். தேவனுடைய சித்தம் உங்களில் இல்லை, உங்களை சுற்றியுள்ளவர்கள் பயமடைகின்றார்கள். இது சாத்தானால் தாக்கப்படும் புயல் அல்ல. இது உங்களை நேசிக்கும் தேவனிடமிருந்தான தண்டனை ஆகும், அவர் அவருடைய சித்தத்தின் உறுதிப்படுத்தலுக்கு நீங்கள் மீள வர வாஞ்சிக்கின்றார். நீங்கள் "எதிரியிற்கு மேலான வல்லமையின்" வாக்குறுதியை அறிக்கையிடலாம், ஆனால் அது சூழ்நிலையை மாற்றாது.

தேவனுடைய சத்தத்திற்கு கீழ்ப்படியாத விளைவாயிருக்கும் ஓர் துன்புறுத்தலின் புயலை நீங்கள் அறியும்போது, அங்கு ஓர் தீர்வு உண்டு. தேவனிடமிருந்து மன்னிப்பை கேளுங்கள்!

ஆனால் நீங்கள் தேவனுடைய சித்தப்படி துன்பப்படும்போது, சூழ்நிலையானது வித்தியாசமாகும். உங்களுடைய சொந்த பாவமோ அல்லது தவறோ இல்லாதிருந்து நீங்கள் துன்பப்படுகின்றீர்கள். பிரச்சனையிற்கு மாறாக உங்களை சுற்றியுள்ள பிரச்சனைகளுக்கு தீர்வு நீங்களேயாகும். பவுலை போன்று நீங்கள் ஆவிக்குரிய தலைமையை பெற்றுக்கொள்ளலாம் ஏனென்றால் தேவனுடைய ஆசீர்வாதம் உங்களில் உண்டு. நீங்கள் மற்றவர்களுக்கு ஆறுதல்களை கொடுக்கலாம் ஏனென்றால் பிரச்சனைகளுக்கு பதிலாக புயலுக்கான தீர்வு நீங்களேயாகும். நீங்கள் கப்பலிலிருந்து வெளியே-றவோ அல்லது பிரச்சனையிலிருந்து ஓடவோ தேவையில்லை. தேவனுடைய சித்தத்தின்படியான இந்த வகையான துன்புறுத்தல்களுக்கு நீங்கள் "கப்பலில்" இருக்க வேண்டியது அவசியமாகின்றது.

## துன்புறுத்தல் எதிர்பார்க்கப்பட வேண்டியதாகும்

நீங்கள் தேவனுடைய சித்தப்படி துன்புறுத்தலை எதிர்கொள்ளும்போது, நீங்கள் தனிமையல்ல என உணர்ந்துகொள்ள வேண்டும்:

> **உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிற தென்று அறிந்திருக்கிறீர்களே. (1 பேதுரு 5:9)**

வாழ்க்கையிலுள்ள புயல்களானது மத்தேயு 7:27-27ல் உள்ள இரண்டு வீடுகளின் உவமையில் காட்டப் பட்டுள்ளப்படி நிச்சயமற்றவையும், கட்டுப்படுத்த முடியாதவையுமாகும். தேவனுடைய வசனத்திற்கு மேல் தங்களுடைய வாழ்க்கையை கட்டியவர்களுக்கும் அவ்வாறு கட்டாதவர்களுக்கும் மேலும் புயல் வருகின்றது. மனிதனுடைய ஜீவியத்தின் அஸ்திபாரமே புயலிலிருந்து வெளியேறுவதற்கான சித்தத்தை தீர்மானிக்கும்.

துன்புறுத்தலானது தேவனுடைய சித்தத்திற்கு ஒருபகுதியாக எதிர்பார்க்கப்படல் வேண்டும்:

**அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள். (2 தீமோத்தேயு 3:12)**

**ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்குமாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது. (பிலிப்பியர் 1:29)**

**நீங்கள் தேவனுடைய ராஜ்யத்தினிமித்தம் பாடு அநுபவிக்கிறவர்களாயிருக்க, அந்த ராஜ்யத்திற்கு நீங்கள் பாத்திரரென்றெண்ணப்படும்படிக்கு... (2 தெசலோனிக்கேயர் 1:5)**

**நமக்கு உபத்திரவம் வருமென்று நாங்கள் உங்களிடத்திலிருந்தபோது, உங்களுக்கு முன்னறிவித்தோம். அப்படியே வந்து நேரிட்டதென்றும் அறிந்திருக்கிறீர்கள். (1 தெசலோனிக்கேயர் 3:4)**

**அப்பொழுது, உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக்கொடுத்து, உங்களைக் கொலை செய்வார்கள், என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள். (மத்தேயு 24:9)**

**இவைகளெல்லாம் நடப்பதற்கு முன்னே என் நாமத்தினிமித்தம், அவர்கள் உங்களைப் பிடித்து, ஜெபஆலயங்களுக்கும் சிறைச்சாலைகளுக்கும் ஒப்புக்கொடுத்து, ராஜாக்கள் முன்பாகவும் அதிபதிகள் முன்பாகவும் உங்களை இழுத்துத் துன்பப்படுத்துவார்கள். (லூக்கா 21:12)**

**ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள்... (யோவான் 15:20)**

ஆரம்ப கால சபைகளில் நிறுவப்பட்ட தொடர்ந்துவரும் திட்டமிடுதலின் பகுதியானது விசுவாசிகள் துன்பம் அனுபவிக்கும்போதான போதனையாகும். இன்று இது அநேக சபைகளில் தவறவிடப்பட்டுள்ளது:

**சீஷருடைய மனதைத் திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்திசொல்லி, நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டுமென்று சொன்னார்கள். (அப்போஸ்தலர் 14:22)**

இயேசுவை பின்பற்றும்படியான அழைப்பானது புறக்கணிக்கப்படுதலும், துன்பப்படுதலும் ஆகும்:

**தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல. (மத்தேயு 10:38)**

**அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். (மத்தேயு 16:24)**

**ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன். (மாற்கு 8:34)**

**பின்பு சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றிவா என்றார். (மாற்கு 10:21)**

**ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன். (லூக்கா 9:23)**

**தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான். (லூக்கா 14:27)**

தேவனுடைய சித்தத்தின்படி துன்புறுத்தலை அனுபவித்த சுவாரஸ்யமான மனிதனுடைய கதை பழைய ஏற்பாட்டில் உள்ளது. அது எலியாவினுடைய கதையாகும். எலியா இஸ்ரவேலுக்கு தீர்க்கதரிசனம் உரைக்கும்போது அனைத்து வகையான துன்பத்தையும் அனுபவித்தார். ஆனால் நாம் 1 இராஜாக்கள் 17ம் அதிகாரத்திலுள்ள குறிப்பிட்ட கதையை மாத்திரம் நோக்குவோம். இந்த பாடத்தை தொடருவதற்கு முன்னர் உங்களுடைய வேதாகமத்தில் இந்த கதையை வாசியுங்கள்.

தேவன் முதலாவது எலியாவை கேரீத் ஆற்றண்டையில் வழிநடத்தியபோது, அவருக்கு அற்புதமானவைகளை ஏற்படுத்தினார். காகம் அவனை போஷிக்க வந்தது, தேசமானது வறட்சியையும் பஞ்சத்தையும் அனுபவிக்கும் நேரத்தில் ஆறு நல்ல நீரை கொடுத்தது. ஆனால் இச்சம்பவத்தில், ஆறு வற்றிப்போயிற்று. ஆறு வற்றும் என தேவன் அறிந்திருந்தபோதும் எலியாவை ஏன் அங்கு அனுப்பினார்?

தேவனுடைய சித்தமானது சிலசமயங்களில் வறண்ட ஆற்றை உள்ளடக்கும். ஆனால் நாம் குறித்த கஷ்டங்களை அனுபவிக்கும்போது அது நாம் தேவனுடைய சித்தத்தை தவறவிட்டோம் என அர்த்தம் ஆகாது. எலியா தேவனுடைய சித்தத்தை தவற விடவில்லை. தேவன் எலியாவை கேரீத் ஆற்றண்டைக்கு வலிநடத்தினார். அவர் அதன் தண்ணீரை அனுபவித்தார். அவனுடைய தேவைகள் சந்திக்கப்பட்டன. அவன் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டார். ஆனால் நேரத்தின் படி நகரும்போது, தேவன் ஆற்றை வற்ற செய்தார். இது எலியாவை ஓர் நோக்கத்தை கொள்ள செய்தது.

தேவன் வாழ்க்கையில் உங்களை “கேரீத் ஆற்றண்டைக்கு வழிநடத்துகின்றார். நீங்கள் அவருடைய வழிகாட்டலின் திசையின் சத்தத்தை கேட்டுள்ளீர்கள். அவர் உங்களுடைய ஆற்றை ஆசீர்வதித்துள்ளார். உங்களுடைய தேவைகள் சந்திக்கப்பட்டு, தேவனுடைய ஆசீர்வாத்தில் நீங்கள் மகிழ்வீர்கள். ஆனால் பிற்பாடு ஆறு வற்றிப்போகலாம். நீங்கள் தொடர்ச்சியான தேவனுடைய வல்லமையின் ஊற்றை அனுபவியாமல் போகலாம். மக்கள் உங்களுக்கு எதிராக மாறலாம். தலைவர்கள் உங்களுடைய ஆற்றை தடுத்து, அதன் ஊற்றை நிறுத்தியிருக்கலாம். எந்தோவொரு காரணத்தினால், உங்களுடைய ஆறு வற்றிப்போகலாம்.

ஆறு வற்றிப்போகும் நேரத்தில் நீங்கள் இரண்டில் ஒரு காரியத்தை செய்யலாம்:

1. நீங்கள் வெறுமையாய் ஆவியில் அமர்ந்திருந்துபேசி, உங்களுடைய தோல்வியை குறித்து கூறலாம். நீங்கள் உங்களுடைய இறுதி ஜீவியத்தை ஏன் இவ்வாறு நடைபெறுகின்றது என

ஆச்சரியப்பட்டு கழித்து, வரண்டுபோன சூழ்நிலையிற்கு மேலாக அழலாம். தேவனுடைய வழிநடத்துதலை குறித்து நீங்கள் கேள்வி கேட்கலாம். அவர் உங்களை இங்கு முதல்-தர இடத்தில் கொண்டு வந்தாரா? அவர் ஆறு வற்றப்போகின்றதை அறிந்திருந்தாரானால், ஏன் இவர் இங்கு உங்களை அழைத்து வந்தார்? நீங்கள் தேவனுடைய சித்தத்தை தவற விட்டீர்களா? அல்லது....

2. இந்த ஆற்றுக்கு தேவன் உங்களை நிச்சயமாக கொண்டுவந்திருக்கின்றார் என நீங்கள் உணரும்போது, அவர் உங்களை அவருடைய புதிய தீர்மானத்தின் சித்தத்தின்படி இப்பொழுது உங்களை நகர்த்த ஆயத்தமுள்ளவராக இருக்கின்றார். அவர் வறண்ட ஆற்றிற்கூடாக உங்களுடைய கவனத்தை ஈர்க்கின்றார்.

அறு வற்றாமல் இருந்தால்.. கடினமான நேரங்களை தேவன் அனுமதிக்காமல் இருந்தால்.... அவர் ஒருபோதும் எம்மை ஈர்க்க மாட்டார். எலியாவைப்போல, நாம் இருக்கும் இடத்திலேயே ஏற்படுத்திக் கொள்ளுவதோடு, புதிய காரியங்களுக்கு ஒருபோதும் நகர மாட்டோம். எமது ஆற்றின் பாதுகாப்பிற்கு பின்புலனாகவே ஒருபோதும் இருக்க மாட்டோம். வற்றும் ஆறுகளானது மாபெரும் காரியங்களுக்கு கூடாக நடத்தும். கேரீத் அனுபவத்திற்கு முன்னர் எலியா தனிப்பட்டவர்களிடம் மாத்திரம் ஊழியம் செய்தார். இந்த விசுவாச கட்டமைப்பிற்கு பின்னர், எலியா ஜாதிகளுக்கு ஊழியம் செய்தார். அவர் கர்மேல் மலையிற்கு மேலாக நின்று, தேவனே உண்மையான மற்றும் உயிருள்ள தேவன் என விக்கிரக ஜாதியிற்கு முன்னால் அறிக்கை விடுத்தார்.

நீங்கள் வறண்ட நதியை அனுமதிக்கும்போது, உங்களுடைய விசுவாசம் விழாது. நீங்களே தேவ-னுடைய புதிய வெளிப்படுத்தல்களை பெறும் கருவியாக இருக்கின்றீர்கள். வறண்டுபோன ஆற்றின் மேல் கேள்விகளை கேட்க வேண்டாம். அடுத்த தேவனுடைய திட்டத்தின் பகுதியிற்குள் நகருங்கள்.

## சுய பரிசோதனை

1. திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்.

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

2. விசுவாசிகளுடைய வாழ்வில் துன்பம் பிரவேசிக்கக்கூடியதான வழிகள் ஐந்து என்ன?

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

3. தேவனுடைய சித்தத்தின்படி துன்புறுத்தலின் மூன்று நேர் நன்மைகளை பட்டியலிடுங்கள்.

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

4. விசுவாசிகள் துன்புறுத்தலை அனுபவிக்கும்போது நேரான மூன்று குறிக்கோள்களை பட்டியலிடுங்கள்:

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

5. கீழ்வரும் வாக்கியங்களை வாசிக்கவும். வாக்கியம் உண்மையானால், அதற்கு முன்னால் உள்ள இடைவெளியில் ச என்னும் எழுத்தை எழுதவும், வாக்கியம் தவறானால், அதற்கு முன்னால் உள்ள இடைவெளியில் பி என்னும் எழுத்தை எழுதவும்:

அ................. நீங்கள் துன்புறுவது ஒருபோதும் தேவனுடைய சித்தமாயிராது.

ஆ................ நீங்கள் துன்பத்தை சந்தித்தால் தேவனுடைய சித்தத்திற்கு வெளியே இருக்கின்றீர்கள் என அர்த்தமாகும்.

இ................. பவுல் கடலில் புயலில் அனுபவித்தவை அவர் தேவனுடைய சித்தத்திற்கு வெளியே இருந்தமையாலாகும்.

ஈ.................. நீங்கள் தேவனுடைய சித்தத்திற்கு வெளியே துன்புறும்போது உங்களுடைய சொந்த பிரச்சனையிற்கு கீழ்ப்படியாமையினால் நீங்களே காரணம் ஆகின்றீர்கள்.

உ............... தேவன் உங்களை நேசித்து அவருடைய சித்தத்தின் உறுதிப்படுத்தலுக்கு உங்களை மீள வரவழைப்பதற்கு வாஞ்சிப்பதால் உங்களை கண்டிக்கின்றார்.

ஊ.............. எலியா தேவனுடைய சித்தத்தின்படி கேரீத் ஆற்றிற்கு சென்றிருந்தால், ஆறு ஒருபோதும் வரண்டு போகாது.

எ.............. தேவன் சிலசமயங்களில் வேதனைகளிற்கூடாக உங்கள் கவனத்தை ஈர்க்கின்றார் ஏனென்றால் அவர் உங்களை புதிய வழிகாட்டலில் நடத்த வேண்டுகின்றார்.

ஏ................ துன்மார்க்கர் மாத்திரமே துன்பத்தை அனுபவிப்பதாக வேதாகமம் போதிக்கின்றது.

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. துன்பத்தின் பொருளை நோக்கப்படுத்தும் 1 பேதுருவின் புத்தகத்தை படியுங்கள். இந்த நிருபத்திலிருந்து துன்பத்தை குறித்து நீங்கள் கற்றவை என்ன:

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

2. துன்புறுத்தலை குறித்தான வசனங்களை பின்வருவனவற்றில் படியுங்கள்:

**கடினம்:**

2 தீமோத்தேயு 2:3

**உபத்திரவம்:**

அப்போஸ்தலர் 14:20; ரோமர் 5:3; 12:12; 1 தெசலோனிக்கேயர் 3:4; 2 தெசலோனிக்கேயர் 1:4

**துன்புறுத்தல்:**

மத்தேயு 5:10-12, 44; 13:21; மாற்கு 4:17; லூக்கா 11:49; 21:12; யோவான் 15:20; 1 கொரிந்தியர் 4:12; 2 கொரிந்தியர் 4:9; அப்போஸ்தலர் 8:1; 11:19; 13:50; 2 தீமோத்தேயு 3:12; ரோமர் 8:35; கலாத்தியர் 6:12

**துன்பப்படல்:**

1 பேதுரு 5:10; பிலிப்பியர் 1:29; 3:8; 4:12; 2 கொரிந்தியர் 1:6; 2 தீமோத்தேயு 2:12; 3:12; கலாத்தியர் 5:11; 6:12; அப்போஸ்தலர் 9:16; 1 தெசலோனிக்கேயர் 3:4; 2 தெசலோனிக்கேயர் 1:5

**தாக்குதல்:**

சங்கீதம் 34:19; 119:67,71,75; மத்தேயு 24:9; அப்போஸ்தலர் 20:23; 2 கொரிந்தியர் 2:4; 4:17; 6:4; 1 தெசலோனிக்கேயர் 3:3; 2 தீமோத்தேயு 1:8; 3:11; 4:5; 2 கொரிந்தியர் 1:6; யாக்கோபு 5:10; எபிரெயர் 10:32-33 மற்றும் அதிகாரம் 11

## அதிகாரம் பதின்ரெண்டு

# வெளிப்படுத்தலின் ஆறு படிமுறைகள்

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ தேவனுடைய திட்டத்தின் வெளிப்படுத்தலின் ஆறு படிமுறைகளை பட்டியலிடவும்,
- ☐ இந்த மாதிரியின் வேதாகம உதாரணங்களை இனங்காணவும் முடியும்.

**திறவுகோல் வசனம்:**

> **நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும். (ஏசாயா 30:21)**

## அறிமுகம்

இந்த பாடத்திலே தேவனுடைய சத்தத்தை அறிதலை குறித்து நீங்கள் அதிகம் கற்றீர்கள். தேவனுடைய சத்தத்தை கேட்பதற்கான முன்நிபந்தனைகளை நீங்கள் கற்றீர்கள். நீங்கள் தேவனுடைய சித்தத்தின் அர்த்தத்தையும், மாதிரியையும், தேவன் மனிதர்களோடு தொடர்பாடும் வழிகளையும் கற்றீர்கள்.

நீங்கள் கேள்விக்கேட்கக்கூடியதான கிரியைகள் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளுவதற்கு வேதாகமம் அல்லாத வழிகளில் ஆலோசனைகளை எதிர்பார்த்து வழிகாட்டலை பெற எச்சரிக்கப் பட்டுள்ளீர்கள். தீர்மானம் மேற்கொள்ளுவதற்கான வேதாகம மாதிரியை நீங்கள் கற்று, தோல்வி அடையும்போது என்ன செய்ய வேண்டும் என கற்றீர்கள். தேவனுடைய சித்தத்திற்கு தொடர்பான துன்புறுத்தல் குறித்து கூட நீங்கள் கற்றீர்கள்.

இந்த இறுதி அதிகாரமானது தேவனுடைய திட்டத்தின் வெளிப்படுத்தலை நீங்கள் கடப்பதற்கூடான ஐந்து படிமுறைகளை கொடுக்கும். தேவனுடைய சித்தத்தின்படி நீங்கள் நடப்பதற்கு கற்றுக் கொள்ளும் போது இந்த படிமுறைகளை அனுபவிப்பீர்கள்.

## வெளிப்படுத்தலின் அறிவு

குழப்பமும், தவறான திசையிலுள்ள உலகில், தேவன் தமது பின்பற்றுவோருக்கு வெளிப்படுத்தலின் அறிவை வாக்குப்பண்ணியுள்ளார். இதன் அர்த்தமானது வாழ்க்கை சூழ்நிலைகளுக்கான அறிவு, ஞானம், தெய்வீக திட்டங்களை அவர் வெளிப்படுத்துவார் என்பதாகும்:

> **நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும். (ஏசாயா 30:21)**

தேவன் ஒரு திட்டத்தை வெளிப்படுத்தும்போது, வெளிப்படுத்தலை அபிவிருத்திசெய்யும்படி நீங்கள் கடக்கும் ஆறு படிமுறைகள் உள்ளது. இந்த படிமுறைகளின் சம்பவங்களானது லூக்கா 1:26-47ல் உள்ளது. இந்த பாடத்தின் இறுதியை தொடர்வதற்கு முன்னர் இந்த பந்தியை வாசியுங்கள். இந்த வசனங்களானது மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவின் தாயாக வருவதற்கு மரியாளுக்கு தேவன் கொடுத்த வெளிப்படுத்தலை பதிவு செய்துள்ளது.

அந்த கதையில் மரியாளுக்கு தேவன் வெளிப்படுத்திய திட்டத்தை அவள் கடக்க ஆறு படிமுறைகள் இருந்தன. இந்த படிமுறைகளானது மனிதனுக்கு தேவன் வெளிப்படுத்திய எந்தவொரு திட்டத்தையும் அவதானிக்கலாம். இந்த படிமுறைகளே உங்களுடைய வாழ்க்கையில் அவருடைய அறிவின் திட்டத்தின் வெளிப்படுத்தலை பெற நீங்கள் கடக்க வேண்டியது ஆகும்.

## படிமுறை ஒன்று: கலங்குதல்

> **அவள் இருந்த வீட்டில் தேவதூதன் பிரவேசித்து... அவளோ அவனைக் கண்டு, அவன் வார்த்தையினால் கலங்கி, இந்த வாழ்த்துதல் எப்படிப்பட்டதோ என்று சிந்தித்துக் கொண்டிருந்தாள். (லூக்கா 1:28-29)**

மரியாளுக்கு தேவதூதன் தோன்றும்போது, அவள் ஆவியில் கலங்கினாள். எப்பொழுதெல்லாம் தேவன் புதிய வழிகாட்டலை தரும்போது, நீங்கள் கலங்குதலை கூட அனுபவிக்கலாம். அவர் உங்க-ளுடைய கவனத்தை ஈர்க்கும்படியாக வாழ்க்கையின் சூழ்நிலைகளில் கஷ்டங்களை உங்களுக்கு அனுமதிக்கின்றார்.

உங்களுடைய சுற்றியுள்ள சூழ்நிலைகளில் தடுமாறும் கேள்விகள் இருக்கின்றன. நீங்கள் குழப்பத்திற்குள் இருந்து, உங்களை வாழ்க்கையை தடுமாறும் காரியங்கள் ஏன் ஏற்படுகின்றது என விளங்காது இருக்கின்றீர்கள். தேவன் உங்களுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகின்றார். நீங்கள் சந்தோஷமாகவும் தற்போதைய சூழ்நிலையில் கருத்தாகவும் இருந்தால், புதிய வழிகாட்டலுக்காக அவரை நீங்கள் தேட மாட்டீர்கள்.

## படிமுறை இரண்டு: வெளிப்படுத்தல்

> **தேவதூதன் அவளை நோக்கி: மரியாளே, பயப்படாதே, நீ தேவனிடத்தில் கிருபைபெற்றாய்.**
>
> **இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. (லூக்கா 1:30-31)**

தேவன் கலங்குதலுக்கூடாக உங்களுடைய அவதானத்தை பெறும்போது, அவர் உங்களுக்கான அவருடைய சித்தத்தை வெளிப்படுத்துவார். வெளிப்படுத்தலின் இரண்டாவது படிமுறை இதுவே:

> **என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன். (எரேமியா 33:3)**

ஓர் கலங்குதலின் ஆவியானது மரியாளை தேவனை அவருடைய திட்டத்தின் வெளிப்படுத்தலை அவதானிக்க வைத்தது. அவள் மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவின் தாயாக வேண்டும்.

## படிமுறை மூன்று: தயக்கம்

> **அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி: இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள். (லூக்கா 1:34)**

இந்த பெரிதான வெளிப்படுத்தலை மரியாள் ஏற்க தயங்கினாள். அவள் “இது எப்படியாகும்?” என கேள்வி கேட்டாள்.

தேவன் உங்களுடைய வாழ்க்கையில் புதிய வழிகாட்டலை வெளிப்படுத்தும்போது நீங்கள் கூட தயங்குகின்றீர்கள். நீங்கள் தகுதியானவர் அல்ல என உணருகின்றீர்கள். நீங்கள் விசுவாசத்தை எடுப்பதற்கான மாபெரும் படிமுறை என உணருகின்றீர்கள். நீங்கள் திட்டம் கிரியைசெய்ய முடியாத தொடர்புள்ள காரியங்களை எண்ணுகின்றீர்கள். நீங்கள் தயங்கி தேவனை கேள்வி கேட்கின்றீர்கள்.

தயங்குதலின்போது இரண்டு விதமான படிமுறையின் காரியங்கள் நடைபெறுகின்றன:

-உங்களுடைய கேள்விகள், காரணங்கள் மற்றும் விட்டுக்கொடுத்தலை முன்வைக்கின்றீர்கள்.
-தேவன் இவைகளை அவருடைய திட்டத்தின் விபரிப்பாக பதில் தருகின்றார்.

சில மக்கள் மற்றவர்களை விட அதிகமாக தயங்குகின்றார்கள். சில மக்கள் வருட கணக்கில் தயங்குதலின் படிமுறையிற்கு செல்லுகின்றார்கள். அவர்கள் தேவனால் தரப்பட்ட வெளிப்படுத்தலை ஏற்றுக்கொள்ளாதிருப்பதற்கான காரணத்தையும் விட்டுக்கொடுத்தலையும் எண்ணுகின்றார்கள். ஆனால் நீங்கள் தயங்குதலிற்குள் நகராமல் இருந்தால், நீங்கள் ஒருபோதும் தேவனுடைய வெளிப்படுத்தலின் நிறைவேறுதலை காண மாட்டீர்கள்.

## படிமுயை நான்கு: ஒப்படைத்தல்

> **அதற்கு மரியாள்: இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள்.... (லூக்கா 1:38)**

மரியாள் தயங்குதலிலிருந்து தேவனுடைய திட்டத்திற்கு ஒப்புக்கொடுக்க உடனடியாக நகர்ந்தாள். இதன் அர்த்தமானது தேவனுடைய திட்டத்திற்கு தனது சித்தத்தை விட்டுவிட்டாள். அவள் தனது சொந்த திட்டங்களையும் வாஞ்சைகளையும் விட்டுக்கொடுத்து தனது வாழ்விற்கான தேவனுடைய புதிய வழிகாட்டல்களை ஏற்றுக்கொண்டாள்.

## படிமுறை ஐந்து: உறுதிப்படுத்தல்

> **விசுவாசித்தவளே பாக்கியவதி, கர்த்தராலே அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும் என்றாள். (லூக்கா 1:45)**

உறுதிப்படுத்தலின் படிமுறையில், தேவன் அவருடைய திட்டத்தை உறுதிப்படுத்துகின்றார். மரியாள் கர்ப்பவதியாகி, வெளிப்படுத்தலானது அவளது சொந்த சரீரத்தில் உறுதிப்படுத்தியது. நீங்கள் உங்களுடைய சொந்த சித்தத்திற்கு விலகி, தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட திட்டத்திற்குள் நகர்ந்தால், அந்த திட்டத்தை உறுதிப்படுத்த நீங்கள் அதிக காலம் செலவழிக்க தேவையில்லை.

## படிமுறை ஆறு: புகழ்ச்சி

**அப்பொழுது மரியாள்: என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது. (லூக்கா 1:46)**

தேவனுடைய திட்டத்தில் அநேகர் சந்தோஷப்படுகின்றார்கள். லூக்கா 1:46-55ல் தேவனுக்கான அவளுடைய முழுமையான புகழ்ச்சியை வாசியுங்கள். உங்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய சித்தத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ளும்போது, அது எப்பொழுதும் மகிழ்ச்சியை கொண்டுவரும். அதன் விளைவு தேவனை மகிமைப்படுத்தலாகும்.

இந்த பாடத்தில் நீங்கள் கற்ற பிரகாரம், தேவனுடைய திட்டத்தை பின்தொடர்தலானது பிரச்சனைகள் இன்றி நீங்கள் இருக்கின்றீர்கள் என அர்த்தம் ஆகாது. இயற்கையான உலகில், மரியாளுக்கு உண்மையாள பிரச்சனைகள் இருந்தன. அவள் திருமணம் ஆகாமல் கர்ப்பம் தரித்தாள். ஆனால் தேவனுடைய திட்டமானது அது உள்ளடக்கும் எந்தவித தற்காலிக பிரச்சினைகளை விட பெரியது ஆகும். இறுதியில், அது எப்பொழுதும் மகிழ்ச்சியையும், தேவனாகிய இயேசு கிறிஸ்துவின் மகிமை-யையும் கொண்டுவரும்.

## இறுதியான வசனம் - அவருடைய சத்தத்தை கேளுங்கள்

இந்த பாடத்தில் தேவனுடைய சத்தத்தை அறிவதற்கான வழிகாட்டல்களை நீங்கள் பெற்றுள்ளீர்கள். இந்த சத்தத்தை நீங்கள் கேட்கும்போது, அவருடைய வாக்குத்தத்தத்தை ஞாபகத்தில் கொள்ளுங்கள்:

> **நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார், அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே. (எரேமியா 29:11)**

தேவன் மரணம் வரைக்கும் உங்களை தொடர்ந்தும் நடத்துவார்:

> **இந்தத் தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன், மரண பரியந்தம் நம்மை நடத்துவார். (சங்கீதம் 48:14)**

அவருடைய வழிநடத்துதல் புதிய வானத்திலும் பூமியிலும் தொடரும்:

> **சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார். தேவன்தாமே இவர்களுடைய கண்ணீரையாவையும் துடைப்பார் என்றான். (வெளிப்படுத்தல் 7:17)**

தேவன் அமைதியாக இருப்பவர் அல்ல. நீங்கள் கேட்டால், அவருடைய சத்தம் அனைத்து சத்தங்களுக்கும் மேலாக கேட்கப்படும், பூமியின் அனைத்து சத்தத்திற்கும்மேலாக அறிக்கை செய்யப்படும். தேவன் பேசுவதோடு, அவருடைய சத்தத்தை நீங்கள் அறிந்து கொள்ளலாம்:

> **நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணின சமாதானத்தின் தேவன்,**
>
> **இயேசுகிறிஸ்துவைக்கொண்டு தமக்குமுன்பாகப் பிரியமானதை உங்களில் நடப்பித்து, நீங்கள் தம்முடைய சித்தத்தின்படிசெய்ய உங்களைச் சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களாக்குவாராக. அவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென். (எபிரெயர் 13:20-21)**

## சுய பரிசோதனை

1. திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்.

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

2. தேவனுடைய திட்டம் வெளிப்படுத்தப்படும் ஆறு படிமுறைகளை பட்டியலிடுக.

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

வெளிப்படுத்தலின் ஆறு படிமுறைகளின் மாதிரியை மோசே மற்றும் கிதியோனின் வாழ்வில் படியுங்கள்:

| | |
|---|---|
| **மோசே:** | **யாத்திராகமம் 1-15** |
| கலங்குதல்: | எகிப்தில் அனுபவித்தல் (எகிப்தியனை கொன்றுபோடுதல்) |
| வெளிப்படுத்தல்: | எரியும் புதர் |
| தயங்குதல்: | மனிதனுடைய திக்குவாய் |
| ஒப்புவித்தல்: | செல்லுவதற்கு தீர்மானித்தல் |
| உறுதிப்படுத்தல்: | பார்வோனுக்கு முன்னதான அற்புதங்கள் |
| புகழ்ச்சி: | செங்கடலை கடந்த பின்னரான மகிழ்ச்சி |

| | |
|---|---|
| **கிதியோன்:** | **நியாயாதிபதிகள் 6** |
| கலங்குதல்: | ஆலையை போரடித்தல்: 13ம் வசனத்தில் உள்ளப்படி கலங்குதல் |
| வெளிப்படுத்தல்: | வசனம் 12 மற்றும் 14ல் தூதன் தோன்றுதல் |
| தயங்குதல்: | “எளிய குடும்பம், நான் எல்லாரிலும் சிறியவன்” வசனம் 15 |
| ஒப்புவித்தல்: | வசனம் 17 |
| உறுதிப்படுத்தல்: | அடையாளத்தை கேட்டல் “வசனம் 17 முதல் 23 வரை” |
| புகழ்ச்சி: | வசனம் 24. பலிபீடத்தை கட்டி தேவனை மகிமைப்படுத்தல். |

தேவனுடைய வசனத்தில் இந்த மாதிரியில் வேறு உதாரணங்களை உங்களால் கண்டுகொள்ள முடியுமா?

# சுய பரீட்சைக்கான விடைகள்

## அதிகாரம் ஒன்று

1. என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது, நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது. (யோவான் 10:27)

2. தேவனுடைய வார்த்தையாகிய "ரேமா"வானது விசேட தேவைகளை சந்திக்கும்பொருட்டு தொடர்புபடும் ஜீவனை தரும் வார்த்தையாகும். இது எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தை, கூட்டம், ஆவிக்குரிய வரங்கள் அல்லது உங்களுடைய ஆவியின் உள்ளான சத்தத்திற்கூடாக வருகின்றது.

3. தேவனுடைய வார்த்தையாகிய "லோகோஸ்"சானது பரிசுத்த வேதாகமத்தில் உள்ள எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையாகும். அதிலிருந்து எதையும் சேர்க்கவோ அல்லது எடுக்கவோ முடியாது.

4. நீங்கள் அவருடைய சத்தத்தை கேட்க வந்தால், அவர் உங்களில் பேசும் அவருடைய சித்தத்தை நீங்கள் அறிந்து கொள்ளுவீர்கள்.

5. எபிரெயர் 3:7 அல்லது 15.

6. உங்களுடைய வாழ்க்கையில் பொதுவான தேவனுடைய திட்டமானது ஞானமுள்ள தேர்வுகளை எடுப்பதற்கு வழிகாட்டவும், வாழ்க்கை சூழ்நிலைகளுக்கு திசை காட்டுவதற்கும் ஆகும்.

7. அது எப்பொழுதும் "லோகோசை" அல்லது பரிசுத்த வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள எழுதப்பட்ட தேவனுடைய வசனத்தை ஏற்றுக்கொள்ளுகின்றது.

8. பாவம்.

9. கேட்பவராக, செய்பவராக

## அதிகாரம் இரண்டு:

1. அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரிய-முமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன், இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.

   நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். (ரோமர் 12:1-2)

2. முன் நிபந்தனை என்பது ஒரு காரியத்தை செய்வதற்கு முன்னர் நீங்கள் செய்ய வேண்டிய சில காரியமாகும்.

3. மறுபடியும் பிறத்தலின் அனுபவம், பரிசுத்த ஆவியாவர் வாசம் செய்தல், ஆவிக்குரிய முதிர்ச்சி, மாற்றமடைதல்

4. வழிநடத்துதல். பரிசுத்த ஆவியானவர் உங்களுடைய உள்ளான ஆவியில் தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்த பேசுவார்.

5. உங்களுடைய பாவத்தை அறிக்கையிட்டு, மன்னிப்பு கேட்டு, இயேசு உங்களுக்கு மரித்தார் என விசுவாசியுங்கள்.

6. நீங்கள் தேவனுடைய சத்தத்தை அறிந்துகொள்ள வருவதற்கு அவருடன் தனிப்பட்ட உறவு இருத்தல் வேண்டும்.

7. அதன் அர்த்தமானது ஆவியில் வளர, ஆவிக்குரிய உலகின் சார்ந்த காரியங்களில் முதிர்ச்சியை பெறுவதாகும்.

8. தேவனாகிய இயேசு கிறிஸ்துவிற்கு பிற்பாடு இது வேறொரு மாதிரியாக மாற்றமடைதல்

9. இந்த வாக்கியம் உண்மையானது. ரோமர் 12:1-2ஐ பார்க்க.

## அதிகாரம் மூன்று:

1. என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்-திலிருந்திறங்கிவந்தேன். (யோவான் 6:38)

2. அன்பு.

3. அதிகாரம் மூன்றில் பட்டியல்படுத்தப்பட்ட காரணங்களை ஆராய்க.

4. ஒருவர் கொண்டிருக்கும் வல்லமையை அறிதல் அல்லது தேர்ந்தெடுத்தல்

5. ஆளுகை (புளூலீமா), தனிப்பட்ட (தெலீமா), நீதி

6. சுய சித்தம், சாத்தானுடைய சித்தம், தேவனுடைய சித்தம்

7. அ. பிழை; ஆ. சரி; இ. பிழை; ஈ. சரி; உ. பிழை

## அதிகாரம் நான்கு:

1. கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன். (எரேமியா 10:23)

2. மனப்பான்மைகள் என்பது மற்றவர்களை போல் செய்தல் அல்லது சமப்படுத்தல் அல்லது

சிறந்து விளங்குவதற்கான வாஞ்சை ஆகும். இது பொறாமையின் ஓர் வடிவத்திலிருந்தும், பகைமையின் ஆவியிலிருந்தும் கிளையெடுக்கின்றது.

3. அ. பிழை; ஆ. பிழை; இ. பிழை; ஈ. சரி; உ. பிழை; ஊ. எ. சரி; ஏ. சரி; ஐ. சரி

## அதிகாரம் ஐந்து:

1. தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார். மேலும் கிறிஸ்துவின்மேல் முன்னே நம்பிக்கையாயிருந்த நாங்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கும்படிக்கு, தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே, நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்துகொள்ளப்பட்டோம். (எபேசியர் 1:10-12)

2. இந்த அதிகாரத்தில் கலந்துரையாடப்பட்ட தேவனுடைய சித்தத்தின் இரண்டு பிரிவுகளானது எழுதப்பட்ட வசனத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது மற்றையது எழுதப்பட்ட வசனத்தில் அது வெளிப்படுத்தப்படவில்லை:

3. இந்த தீர்மானத்தோடு பிரயோகிக்க கூடிய கொள்கையானது 2 கொரிந்தியர் 6:14-15ல் காணப் படுகின்றது. விசுவாசிகள் அவிசுவாசிகளோடு பிணைக்கப்படுதல் கூடாது.

4. தேவன் அவருடைய சித்தத்தை நீங்கள் அறிய வேண்டுகின்றார்.
தேவனுடைய சித்தமானது திட்டமிடப்பட்டுள்ளது.
தேவனுடைய திட்டமானது தனிப்பட்டதாயும், தனிப்பட்டவர்களுக்காகவும் உள்ளது.
தேவனுடைய திட்டம் செயற்பாட்டு நிலையில் உள்ளது.
தேவனுடைய திட்டம் மனிதனுடையதான வழிகள் அல்ல.
தேவனுடைய சித்தம் நல்லது:

5. பிழை

6. அட்டவணை அ

7. பரிபூரணமுமான சித்தம், நன்மையான சித்தம், சித்தத்தை ஏற்றுக்கொள்ளுதல், தேவனுடைய சித்தத்தின் வெளிப்பக்கம்:

## அதிகாரம் ஆறு:

1. ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ளுங்கள். (எபேசியர் 5:17)

2. பின்வருவனவற்றில் எதாவதொன்றை உபயோகிக்கலாம்: மோசேயும் பாறையும்; எலியா மலையில் இருத்தல்; பிலிப்பு அவனது சமாரியாவிற்கான பயணம்; தாவீது தனது இரண்டு இராட்சதர்களுடன் சம்பந்தப்படுதல்.

3. எழுதப்பட்ட வார்த்தை
ஜெபம்
ஆலோசனையாளர்கள்
சூழ்நிலைகள்
திறந்த மற்றும் மூடிய கதவுகள்
தேவதூதர்கள்
அற்புதங்கள்
சொப்பனங்கள்
தரிசனம்
கேட்கக்கூடியதான சத்தம்
பரிசுத்த ஆவியானவரின் உள்ளான சத்தம்
பரிசுத்த ஆவியானவரின் வரங்கள்

4. அ. பிழை; ஆ.பிழை; இ. பிழை; ஈ. பிழை; உ. சரி; ஊ. சரி;

## அதிகாரம் ஏழு:

1. உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கைய-ாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள், அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார். (நீதிமொழிகள் 3:5-6)

2. சமாதானம்.

3. நீதிமொழிகள் 3:5-6ஐ பாருங்கள்

4. எண்ணம், வசனம், உறுதியில் தேவனை பிரதிபலிக்க. உங்களுடைய வாழ்க்கையில் அவருக்கு முதல் இடத்தை கொடுக்க.

5. ஜெபியுங்கள்.
வேதாகமத்தை படியுங்கள்.
பரிசுத்த ஆவியின் உள்ளான சத்தத்தை கேளுங்கள்.
கிறிஸ்தவ ஆலோசனைகளை எதிர்பாருங்கள்.
சூழ்நிலைகளை ஆராயுங்கள்.
வழியிற்காக வேதாகம திறவுகோல்களை பயன்படுத்துங்கள்.
அறிவின் வழியை தெரிந்தெடுத்துக் கொள்ளுங்கள்.

6. அ. பிழை; ஆ. பிழை; இ. பிழை;

## அதிகாரம் எட்டு:

1. ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவ-னுடைய மகிமைக்கென்று செய்யுங்கள். (1 கொரிந்தியர் 10:31)

2. கேள்வி கேட்கக்கூடியதான கிரியைகள் என்பது சரியா அல்லது தவறா என வசனங்களில் விசேடமாக குறிப்பிடாமல் இருக்கும் கிரியைகள் அல்லது நடவடிக்கைகள் ஆகும்.

3. அது தேவனை மகிமைப்படுத்துகின்றதா?

உங்களுடைய உத்தேசம் என்ன?
அது அவசியமானதா?
அது ஆவிக்குரிய வளர்ச்சியை விருத்தி செய்கின்றதா?
அது நித்தியமான பழக்கவழக்கமா?
அது உடன்படிக்கை பண்ணப்பட்டதா?
அது சோதனையிற்கு வழி நடத்துகின்றதா?
அது தீய தோற்றத்தை தருமா?
அது உங்களுடைய மனச்சாட்சியை துஷ்பிரயோகப்படுத்துகின்றதா?
அது மற்றவர்களை எவ்வாறு பாதிக்கும்?

4. பலவீனமான சகோதரர் எனப்படும் விசுவாசியானவர், பலவீனமான விசுவாசம், அறிவு அல்லது பலமுள்ள சகோதரரின் உதாரணத்தினால் மனச்சாட்சியினால் தாக்கப்படுபவர் ஆவர். அவர் தன்னுடைய மனச்சாட்சியிற்கு எதிராக பாவத்தில் உள்வாங்கப்படலாம், அத்தோடு அவருடைய ஆவிக்குரிய செயற்பாடானது தடுக்கப்படும்.

5. பலமுள்ள விசுவாசி என்பவர், குறித்த பகுதிகளிலுள்ள சுதந்திரத்தின் அவருடைய விளங்குதல், அவருடைய நம்பிக்கையின் பலம், நல்ல மனச்சாட்சியோடான பொறுப்பின் பலம் ஆகியவற்றை கொண்டவர் ஆவர். அவர் மற்றவர்களுடைய வித்தியாசமான கருத்துக்களினால் உள்வாங்கப் படமாட்டார்.

6. கட்டளைகளிலான காரியங்கள் மற்றும் சுதந்திரத்திற்கு இடையிலான வேறுபாடு.
உங்களுக்கான சொந்த தீர்ப்பை ஏற்படுத்துங்கள்.
மற்றவர்களை அவர்களுடைய தீர்ப்பை அறியும்படியாக சுதந்திரத்தை கொடுங்கள்.
அன்பினால் உரிமையை வரையறுங்கள்.
எல்லா முரண்பாடுகளையும் தீருங்கள்.

7. அவரிடம் தனிப்பட்ட ரீதியில் செல்லுங்கள். அது தீர்க்கப்படாவிடத்து....
ஒன்று அல்லது இரண்டு சாட்சிகளை உங்களை கொண்டு மீண்டும் அவரிடம் செல்லுங்கள். அது தீர்க்கப்படாவிடத்து....
சபையிற்கு முன்னால் காரியத்தை எடுத்து செல்லுங்கள்.

## அதிகாரம் ஒன்பது:

1. மனுஷருடைய இருதயம் அவனுடைய வழியை யோசிக்கும், அவனுடைய நடைகளை உறுதிப் படுத்துகிறவரோ கர்த்தர். (நீதிமொழிகள் 16:9)

2. நீங்கள் தொடருவதற்கான உதாரணத்தை மாதிரி கொடுக்கும்.

3. தெரிவுகளை மேற்கொள்ளும்போது தொடர்வதற்கான உதாரணமானது தீர்மானம் மேற் கொள்ளுவதற்கான மாதிரி ஆகும்.

## அதிகாரம் பத்து:

1. ஆ, என் ஜனம் எனக்குச் செவிகொடுத்து, இஸ்ரவேல் என் வழிகளில் நடந்தால் நலமாயிருக்கும்! (சங்கீதம் 81:13)

2. இதை குறித்து மீண்டும் அதிகாரம் பத்தில் படியங்கள்.

3. இதை குறித்து மீண்டும் அதிகாரம் பத்தில் படியங்கள்.

4. உங்களுடைய தோல்விகளை உணருங்கள்.
மனந்திரும்புங்கள்.
ஆரம்ப புள்ளியை அறிந்து கொள்ளுங்கள்.
தவறை திருத்துவதற்கு திரும்புங்கள்.
வெளிப்படுத்தல்: தேவனிடம் எதிர்பார்த்து புதிய திசையிற்கேற்ப கிரியை செய்யுங்கள்.

## அதிகாரம் பதினொன்று:

1. ஆகையால் தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மைசெய்கிறவர்களாய்த் தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுக்கக் கடவர்கள். (1 பேதுரு 4:19)

2. உங்களை சுற்றியுள்ள மற்றவர்கள்.
வாழ்க்கையின் சூழ்நிலைகள்.
உங்களுடைய ஊழியம்.
சாத்தானுடைய நேரடியான நடவடிக்கை.
உங்களுடைய சொந்த பாவம்.

3. அதிகாரம் பதினொன்றில் கலந்துரையாடப்பட்ட துன்புறுத்தலின் நன்மைகளை பாருங்கள்.

4. அதிகாரம் பதினொன்றில் கலந்துரையாடப்பட்ட துன்புறுத்தலை நோக்கியதான குறிக்கோள்களை பாருங்கள்.

5. அ. பிழை; ஆ. பிழை; இ. பிழை; ஈ. சரி; உ. சரி; ஊ. பிழை; எ. சரி; ஏ. பிழை;

## அதிகாரம் பதின்ரெண்டு:

1. நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நட-வுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும். (ஏசாயா 30:21)

2. கலங்குதல், வெளிப்படுத்தல், தயக்கம், ஒப்படைத்தல், உறுதிப்படுத்தல், புகழ்ச்சி